# இலங்கைச் சரித்திரமும்
# உலக சரித்திரமும்

1,500-ம் ஆண்டு தொடக்கம் இக்காலம் வரை

சி. பா. த. வகுப்புக்கேற்றது

## முதலாம் பாகம்

# இலங்கைச் சரித்திரம்

நூலாசிரியர்:

எஸ். எவ். டி சில்வா

அரசினர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அதிபர்

1952

# இலங்கைச் சரித்திரமும்
# உலக சரித்திரமும்

**1,500-ம் ஆண்டு தொடக்கம் இக்காலம் வரை**

*சி. பா. த. வகுப்புக்கேற்றது*

## முதலாம் பாகம்
## இலங்கைச் சரித்திரம்

*நூலாசிரியர் :*

**எஸ். எவ். டி. சில்வா**

*அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர்.*

*பிரசுரம் :*

ஸ்ரீ லங்கா பப்ளிஷிங் கொம்பெனி

111, டாம் தெரு, கொழும்பு.

முதற் பதிப்பு ஜனவரி, 1952

சகல உரிமைகளும் பிரசுரிப்பவர்களுக்கே

# பொருளடக்கம்.


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1,500-ம் ஆண்டில் இலங்கை | 1 – 8 |
| 2. | போர்த்துக்கீஸர் காலம் 1597-1616 | 8 – 49 |
| | போர்த்துக்கல்லின் வளர்ச்சி | |
| | கோட்டை இராச்சியத்துடன் போர்த்துக்கீஸர் நட்பு | |
| | கோட்டை இராச்சியத்துக்குப் போர்த்துக்கீஸர் உரிமை | |
| | போர்த்துக்கீஸர் பரிபாலனமும் அதன் பலாபலன்களும் | |
| 3. | டச்சுக்காலம் 1656-1796 | 51 – 102 |
| | இலங்கையும் டச்சுக்காரரும் | |
| | டச்சுப்பரிபாலனமும் அதன் பலாபலன்களும் | |
| | நீதி பரிபாலனம் | |
| | கண்டி இராச்சியம் | |
| 4. | பிரிட்டிஷார் காலம் 1796-1948 | 103 - 127 |
| | பிரிட்டிஷ் பரிபாலனத்தில் இலங்கை ஒன்று பட்டமை | |
| | இரட்டை ஆட்சிக் காலம் | |
| | மெயிற்லன்ட் | |
| 5. | இக்கால இலங்கை | 128 – 223 |
| | கோல்புறூக் விசாரணை | |
| | இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி | |
| | இலங்கையின் அரசியல் அபிவிருத்தி | |
| | இக்கால இலங்கையின் சமுதாய க்ஷேமாபிவிருத்தி | |

# பகுதி 1

# இலங்கை

## அதிகாரம் 1.

## 1500-ம் ஆண்டில் இலங்கை.

மிகப் பழைய காலம் தொட்டுச் சீருஞ் சிறப்பும் பெற்று நமது இலங்கா துவீபம் மிளிர்ந்தது என்பதை நாம் சரித்திர வாயிலாக அறிந்துள்ளோம். ஆனால் இச்சீரும் சிறப்பும் கி. பி. 1500-ம் ஆண்டளவில் மங்கி முடிவெய்தலாயிற்று. ஓர் விளக்கு அவியமுன் சிறிது நேரம் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதுபோல், இலங்கையும் தனது பெற்றியை இழக்குமுன் **6-ம் பராக்கிரமபாகு**வின் பரிபாலனத்திற் சில காலம் சீர்சிறப்புடன் பொலிந்தது. கோட்டை இராஜதானியாக விளங்கி அதிவல்லமையடைந்திருந்த காலத்தில் இவ்வரசன் தொன்மை போல இலங்கை முழுவதையும் தனது அரசுக்குக் கீழ் கொண்டு வந்தான். இவனுடைய பரிபாலன காலத்தைச் சிங்கள காவியத்தின் பொற்காலம் என்றும் கூறலாம். கலை வளர்ச்சியில் மாத்திரமன்றி வேறு துறைகளிலும் இலங்கை அபிவிருத்தி எய்தி அயல் நாடுகளின் நன்மதிப்பையும் ஈட்டியது. கறுவா ஏற்றிச் சென்ற ஓர்

இலங்கைக் கப்பலை விஜய நகரப் பிரதானி ஒருவன் கைப் பற்றியதை யறிந்த பராக்கிரமபாகு மன்னன் ஓர் படையை அனுப்பி விஜய நகரத்தின் துறைமுகமாகிய அதிராம்பேட்டையைத் தாக்கி இலங்கையின் மானத்தைக் காப்பாற்றினான். ஆகவே, உள்நாட்டு விவகாரங்களிலாக, வெளிநாட்டு விவகாரங்களிலாக, கோட்டையை ஆண்ட இவ்வரசன் தனது அதிகாரத்தையும் வல்லமையையும் நிலைநாட்டிக் கீர்த்தியுடன் விளங்கினான். ஆனால் அவன் இறக்க எல்லாம் குழப்பத்தில் முடிந்தது. அவனுக்குப் பின் சிம்மாசனம் ஏறிய அவனது பேரனை **சப்புமால் குமரையன்** என்பவன் கொன்று ஆறாம் **புவனேகவாகு** என்னும் பெயருடன் இராச்சியத்தை நிர்வகித்தான். இவன் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்புப் பிள்ளை. சப்புமால் குமரையன் இப்படியாக வஞ்சித்து இராச்சியத்தைக் கைப்பற்றிய போதிலும் இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளமுடியவில்லை கந்தஉடரட்டை, கோட்டை இராச்சியத்திலிருந்து விலகி **விக்கிரமபாகு** என்பவனின் கீழ் ஓர் தனி இராச்சியமாக அமைக்கப்படலாயிற்று. கண்டி நகரம் இவ்விராச்சியத்தின் இராஜதானியாக விளங்கியது. ஓர் சிறிய பிரதேசத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கண்டி இராச்சியம் காலகதியில் மாத்தளைப் பகுதியையும் வளைவைக்கும் திருக்கோணமலைக்குமிடையில் உள்ள பிரதேசத்தையும் சுவீகரித்துத் தனக்குள் அடக்கிக்கொண்டது.

கோட்டை அரசர்களுக்கு அடங்கிக் கிடந்த வடபகுதித் தமிழரும் இக்காலத்தில் தம் சுதந்திரத்தை மீளவும் பெற்றுக் கொண்டனர். இது நிகழ்ந்தது கி. பி. 1478 ம் ஆண்டில்: அதாவது **பரராஜசேகரன்** யாழ்ப்பாண அரசனைச் சிம்மாசனம் இவர்ந்தபோதென்க. ஆகவே இது



வரை கூறியவற்றில் இருந்து கி. பி. 1505-ம் ஆண்டளவில் இலங்கையிலே மூன்று இராச்சியங்கள் தனித் தனியாக இருந்தனவென்பது பெறப்படும். இவ்விராச்சியங்கள் தனியாக இருந்ததோடு அமையாது ஒன்றுக்கொன்று எதிரிடையாகவும் கருமம் ஆற்றின. வடக்கே **யாழ்ப்பாண அரசன்**; மத்திய தென்கிழக்குப் பகுதிகளில் **கண்டி அரசன்**; மேற்கு, தென் மேற்குப் பகுதியில் **கோட்டை அரசன்**; இவ்வாறாக இம்மூன்று அரசர்களும் எதிரிடையாகத் தனித்தனி இராச்சியம் அமைத்துப் பரிபாலித்த காலத்திலே போர்த்துக்கீஸர் இலங்கையில் இறங்கினர். ஒன்றாக இருந்த இலங்கை சிறு சிறு பாகங்களாகப் பிரிந்து சுதந்திரமாகத் தனித் தனி அரசியல் நடத்தியமையால் அதன் வலிமை குன்றியது. அதன் பயனாகப் போர்த்துக்கீஸர் தமது ஆதிக்கத்தை இலங்கையிற் செலுத்தி இந்நாட்டைக் கைப்பற்றி ஈற்றில் தமக்குக் கீழ் கொண்டுவர முடிந்தது.

இன்னும் மேலே காட்டப்பட்ட மூன்று இராச்சியங்களில் ஒன்றாவது பொருளாதாரத் துறையில் வலிமை பெற்று இருக்கவில்லை. தென்மேற்குப் பகுதியில் இருந்த கோட்டை இராச்சியப் பிரதேசம் நெல் விளைவுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. எனவே அதன் மனித பலத்தை, அநுராதபுரம் இராசதானியாக இருந்த காலத்து அல்லது பொலன்னறுவை இராசதானியாக விளங்கிய காலத்துப் பலத்துடன் கிஞ்சித்தேனும் ஒப்பிட முடியாது. முந்திய இராச்சியங்கள் வேளாண்மை மூலமே தமது அரசிறையை ஈட்டிக்கொண்டன. ஆனால் கோட்டை இராச்சியத்தின் வருமானம் அந்நிய **வர்த்தகம்** மூலமே கிடைத்தது. கறுவா இரத்தினக் கற்கள், பாக்கு, மிளகு என்னும் இன்னோரன்னவற்றை விற்பதன் மூலமே கோட்டை இராச்சியம் தனக்கு வேண்டிய

வருமானத்தை ஈட்டியது. இப்பொருட்களை வாங்குபவர்கள் இந்திய அல்லது முஸ்லிம் வர்த்தகர்கள். எனவே இந்த **அந்நியர்க**ளின் செல்வாக்கு மேற்கிலும், தெற்கிலும் பலமாக இருந்தது. ஏன்? கோட்டை இராஜதானியின் துறைமுகமாகிய கொலந்தோட்டை நகரத்தில் அந்நியர்களே அதிகமாக இருந்து, அவர்களின் செல்வாக்கே மிக வாக இருந்தது என்று கூறினாலும் மிகையாகாது. இவ்வாறு ஏற்கெனவே இருந்த அந்நியக் குழுவினருடன், போர்த்துக்கீஸரின் வருகை இன்னோர் குழுவைச் சேர்த்து விட்டது.

கண்டி இராச்சியமும் பொருளாதாரத் துறையில் மிகவும் பெலவீனமுற்றிருந்தது. இங்கே நெல்லே பிரதான உணவுத் தானியம். ஊவா, தும்பரை, ஹேவஹெத்த ஆதியாம் உஷ்ணவலயப் பிரதேசங்களில் தான் நெல்லை விளைவிக்கலாம். ஆனால் இவை மேட்டுப் பிரதேசங்களாதலின் அங்கே நெல் விளைவுக்கேற்ற சமபூமிஅதிகம் இருக்கவில்லை. இதன் பயனாக ஒரு அளவுக்குத்தான் உணவுப் பொருள் மக்களுக்குக் கிடைக்க முடிந்தது. மெய்வருத்தம் பாராக் கடும் உழைப்பினாலும் மிக உயர்ந்த தொழில் நுட்பத்தாலும் மலைச் சரிவுகளில் உள்ள மேடுபள்ளங்களை மட்டமாக்கி அவற்றில் ஒருவாறு மலைநாட்டு மக்கள் நெல் விளைவித்து வந்தனர் தம்பங்கடவையிலும் வளவை கங்கைக் கரையிலும் இருந்த பரந்த வெளி நிலங்கள் காடாகின; அத்துடன் அங்கிருந்த நீர்ப்பாசனக் குளங்களும் ஏனைய சாதனங்களும் இலமடைந்துவிட இப்பகுதியிலே நெல் விளைவு நாசமானது. மட்டக்களப்புப் பகுதி, கிருவப்பற்று என்னும் இடங்களில் மாத்திரமே வேளாண்மை - அதாவது நெல் விளைத்தல்—ஓரளவுக்கேனும் இயங்கி வரலாயிற்று.



யாழ்ப்பாண இராச்சியத்துக்கு, யாழ்ப்பாணக் குடாநாடே பிரதான தளமாக இருந்தது இங்கேயும் மக்கள் ஓயாது கஷ்டப்பட்டு உழைத்தே தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேட வேண்டியவராயினர். யாழ்ப்பாண இராச்சியத்து எல்லையிற் காடடர்ந்த வன்னிப் பகுதி சுதந்திரமுள்ள சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது

போர்த்துக்கீஸர் இலங்கைக்கு வரவிருந்த காலத்தில் இந்நாடானது அரசியல் விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும் மிகவும் க்ஷீண நிலையை எய்தியிருந்தது. இவ்வாறாக ஏற்கெனவே இருக்கும் கேவல நிலைமை போதாதென்றுபோலும், போர்த்துக்கீஸர் இந்நாட்டிற் கால் வைத்த அதே சமயத்தில் ஜனங்களுக்கிடையே ஒற்றுமை குலைந்து பரஸ்பரம் வேற்றுமையும் பகையும் நிலவின.

கோட்டையை ஆண்ட **எட்டாவது வீரபராக்கிரம பாகு**வின் காலத்திலே இராஜதானியிற் சமாதானம் நிலவவில்லை. அவனுக்கும் அவனுடைய சுற்றத்தவர்களுக்குமிடையே பெரும் பகையுண்டாகி அது ஈற்றில் உள்நாட்டுச் சண்டையாக முடிந்தது. ஈற்றில் அவன் **1509**-ம் ஆண்டில் இறக்க **ஒன்பதாவது பராக்கிரமபாகு** கோட்டைக்கு அரசனானான். இவனுக்குப் பின் **ஏழாவது விஜயபாகு** **1518** ம் ஆண்டில் அரசனானான். விஜயபாகு கள்ளிக்கோட்டை ஸாமோரினுடைய துணையைக் கொண்டு படை எடுத்து, கொழும்பிலே போர்த்துக்கீஸர் கட்டியிருந்த கோட்டையைத் தாக்கினான். இதில் அவன் முறியடிக்கப்பட்டான். பின்னர், **1521-ம்** ஆண்டில் **ஏழாவது புவனேகவாகு** இவனைக் கொன்று தானே அரசனானான். புவனேகவாகுவுக்கு **மாயதுன்னை, றைகம்,**

பண்டாரன் என்னும் இரு சகோதரர் இருந்தனர். மாயாதுன்னை சீதவாக்கைக்கு அரசனானான். இப்போது சப்பிரகமுவ மாகாணம் என வழங்கப்படும் பிரதேசமே அக்காலத்திற் சீதவாக்கை இராச்சியமாக இருந்தது என்று கூறலாம். இலங்கையின் மேற்குப் பகுதியில் துறைமுகங்களை ஒழிந்த ஏனைய பகுதிகளை றைகம்பண்டாரன் ஆண்டுவந்தான். காலி, கழுத்துறைப் பகுதிகள் இவனது இராச்சியத்தில் அடங்கியனவாகும். றைகம என்னும் பட்டினமே இம்மேற்குப் பகுதி இராச்சியத்தின் தலைநகரமாகவும் இராஜதானியாகவும் விளங்கியது. மலைநாடும், யாழ்ப்பாண இராச்சியமும் சுதந்திர அரசுகளாகத் தனித்தனி விளங்கின. தென்மேற்குப் பகுதி கோட்டை அரசனையே தனது அரசன் எனக் கொண்டு அவனுக்கு அடங்கியிருந்தது.

இலங்கையின் பெரும்பாகம் இவ்வாறாக மூன்று சகோதரர்களது பரிபாலனத்தில் இருந்தபோதிலும் சமாதானம் என்பது அதிக காலத்துக்கு நிலவவில்லை. கோட்டை அரசருக்கும் சீதவாக்கை அரசர்க்குமிடையே கொடிய பகை மூண்டது. நாடாசையே அதற்குக் காரணம் எனலாம். புவனேகவாகுவுக்கு ஆண் சந்ததியில்லை. அவனுடைய மகள் வீதிய பண்டாரன் என்பவனை விவாகம் செய்து அவ்விருவருக்குமாகப் பிறந்த தர்மபாலன் என்னும் குழந்தையே கோட்டை இராச்சியத்துக்கு உரிமைக்காரனாக இருந்தான். இது சீதவாக்கையை ஆண்ட மாயாதுன்னைக்குப் பிடிக்கவில்லை. தன் தமயனாகிய புவனேகவாகுவுக்கு ஆண் சந்ததியில்லாதபடியால் தானே கோட்டைக்கும் அரசனாக வேண்டுமன்றித் தர்மபாலனுக்கு உரிமையில்லையென்று அவன் வாதாடினான். இலங்கை முழுவதற்கும் தானே அரசனாகவேண்டும்



என்ற அவாவுடன் இருந்த அவன் தனது அவாவைப் பூர்த்தியாக்க, கள்ளிக்கோட்டை ஸாமோரினின் படைத்துணையை நாடினான். தனது தம்பியின் செயலை அறிந்த புவனேகவாகு தாமதமின்றிப் போர்த்துக்கீஸரின் உதவியை நாடினான். இங்ஙனம் கோட்டையையும் சீதவாக்கையையும் ஆண்ட இந்த இரண்டு சகோதரர்களுக்குள்ளே ஏற்பட்ட எதிரிடையினாலும் பகைமையினாலும் இலங்கையிற் போர்த்துக்கீஸரின் செல்வாக்கு ஓங்குவதற்கு வழி பிறக்கலாயிற்று. 1537-ம் ஆண்டிற் போர்த்துக்கீஸரின் கடற்படை ஸாமோரினின் கடற்படையை இராமேஸ்வரத்துக்கப்பால் நாசம் செய்து வெற்றி மாலை சூடியது. இதன் பயனாக, போர்த்துக்கீஸரின் வலிமையும் நாளடைவில் இலங்கையில் விருத்தியாகி, அவர்களுக்கு எதிரிகளே இல்லாது போயினர். 1540-ம் ஆண்டிலே புவனேகவர்கு தன் பௌத்திரன் தர்மபாலனுக்குக் கோட்டைச் சிம்மாதனம் கிடைக்கச் செய்வதற்கு ஓர் நவீன முறையைக் கையாண்டான். கோட்டை இராச்சியத்துக்கு முறையான உரித்தாளி தர்மபாலனே யென்று போர்த்துக்கீஸ அரசன் பிரகடனப்படுத்தி அவனை அரசனாக்கவேண்டுமென்ற ஓர் மனுவுடன் ஓர் இராஜரீகத் தூதுக்கோஷ்டியைப் போர்த்துக்கலுக்கு அனுப்பினான். போர்த்துகீஸ அரசன் புவனேகவாகுவின் வேண்டுகோளை அங்கீகரித்து தர்மபாலனே கோட்டை இராச்சியத்தின் முறையான அரசன் எனப் பிரகடனப்படுத்தினான். ஆனால் உண்மையைக் கூறுமிடத்துப் பெயரளவில்தான் தார்மபாலன் முடிசூட்டப்பட்டானேயன்றி, அவன் அரசாண்ட இராச்சியம் போர்த்துக்கலுக்கு அடங்கிய சிற்றரசாகவே கருதப்பட்டது. போர்த்துக்கீஸ அரசன் தான் செய்த உதவிக்காக, கிறிஸ்தவ

குருமார் இலங்கைக்கு வந்து வேத போதனை புரிய அநு மதிக்கப்படல் வேண்டும் என்று கோரி அவ்வநுமதியை யும் பெற்ருன். அதன் காரணமாக இலங்கைக்கு வந்த குருமாரில் பிரான்சிஸ்க சபைக் குருமாரே முதலாவதாக வந்தவர்களாவர்.


## அதிகாரம் 2

## போர்த்துகீஸர் காலம் 1597-1616

## போர்த்துக்கல்லின் வளர்ச்சி.

போர்த்துக்கீஸர் இலங்கையிலே கோட்டை அரச ஞன புவனேகவாகுவின் துணைவராகத் தம்மை ஆக்கிக் கொண்டனர் என்று முந்திய அதிகாரத்திற் படித்தோம். பூமியின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள இவர்கள் கீழைத் தேசங்களுக்கு எப்படி வந்தார்கள், இலங்கையில் கோட்டை இராச்சியத்தின் துணைவராகத் தம்மை எப்படி நிலைநாட்டினுர்கள் என்பதை இவ்வதிகாரத்தில் ஒருவாறு ஆராய்வோம்

12-ம் நூற்ருண்டு தொடக்கம் 15-ம் நூற்ருண்டு வரை ஐரோப்பாவிலே, வியாபார வர்த்தகத் துறைகளிற் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதுவரை ஐரோப்பிய சாதியினர் ஐரோப்பாவுக்குள்ளேயே தமது வியாபார, வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டனர். ஆனல் மேலே சொல்லிய மூன்று நூற்ருண்டுக் காலத்தில் நிகழ்ந்த சில இயக்கங்கள் ஐரோப்பியர் தமது வர்த்தகத்தை ஐரோப்




போர்த்துக்கீஸரதும், டச்சுக்காரரதும் பிரதேசங்கள்.

பாவுக்கப்பாலும் கொண்டு சென்று நடத்துவதற்கு அபி விருத்தி செய்கிறார்கள் என்பதைக் காட்டியன. உரோம சக்ராதிபத்திய வீழ்ச்சிக்குப்பின் ஐரோப்பா சில காலம் அலங்கோல நிலையை அடைந்தது. மிலேச்சரது படையெடுப்பால் அக்கண்டத்தின் பொருள் வளம் குன்றியது. தங்கள் தங்கள் தேசத்திலே அமைதி, ஒழுங்கு, சட்டம் என்பவற்றை நிலைநாட்டுவதிலும் பொருள் வளத்தைச் சீராக்குவதிலும் ஐரோப்பியச் சாதியார் உரோம இராச்சிய வீழ்ச்சிக் காலத்திலிருந்து 12-வது நூற்றுண்டுவரை ஈடுபட்டிருந்தனர். நாங்கள் சிலுவைப் போர்களைப் பற்றிப் படித்திருக்கிறோம் அல்லவா? தன் இலட்சியத்தைப் பூர்த்தி செய்வதற்கு யுத்தம் செய்யத்தானும் பின் வாங்காது, வாள் எடுத்து, கத்தி ஏந்தி, இலட்சிய பூர்த்திக்காகப் பாடுபடக்கூடிய ஓர் கிறிஸ்தவ சமுதாயம் ஐரோப்பாவிலே கடைசியில் உதயமாகிவிட்டது என்பதற்கான உற்பாதமே இச்சிலுவைப் போர்கள் என்க. மங்கோலியர் மிகப் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட ஓர் சாம்ராஜ்யத்தைத் தாபித்த காலத்தில் கிறிஸ்தவ வர்த்தகரும், குருமாரும் மத்திய ஆசியாவுக்கூடாகச் சென்று கிழக்கேயுள்ள சீனாவை அடைந்தனர். மங்கோலியர் வர்த்தக விருத்தியை விரும்பி அந்நியரை வரவேற்றனர். இதன் காரணமாக ஐரோப்பிய வர்த்தகமானது கிழக்குப் பிரதேசங்களுடன் **தரைமார்க்கமாகவே** வெகுகாலம் நடந்துவந்தது. ஆனால் மங்கோலியர்-அவர்களிலும் விசேஷமாக மேற்கு ஆசியப் பிரதேசங்களை ஆண்ட மங்கோலியர்-இஸ்லாமிய மதத்தைத்தழுவி முஸ்லிம்களானதும், கிறிஸ்தவர்களான ஐரோப்பியர் இவ்வாறு தரை மார்க்கமாக வருவதைத் தடுத்தனர். கிழக்கு நாடுகளுடன் வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டுவதற்குச் சாதனமாக இருந்த



தரைப்பாதை அடைக்கப்பட்டதைக் கண்டு ஐரோப்பியச் சாதியினர் தாம் செய்த முயற்சியைக் கைவிடவில்லை. தரைமார்க்கம் அடைக்கப்பட்டாலும், 'திரைகடல் ஓடியும் திரவியம் தேட'வேண்டும் என்று அவர்கள் அவாவுற்று, **கடற்பாதைமூலம்** கிழக்கு நாடுகளை அடையலாமோ என்பதை ஆராய்ந்து, அப்படியான ஓர் பாதையைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக முனைந்தனர். ஆபிரிக்காவின் தென்முனைக்குத் தெற்கேயுள்ள கடற்பாதை மூலம் இந்திய சமுத்திரத்தை அடையலாம் என்ற நம்பிக்கை அக்காலத்திலே போர்த்துக்கீஸருக்கு இருந்தது. அவர்களின் தலைசிறந்த மாலுமியான **ஹென்றி** என்பவன் தனது ஆராய்ச்சிகளின்மூலம் இந்த நம்பிக்கையை ஊட்டினான். இதன் பயனாக **டயஸ்** என்பவன் நல்நம்பிக்கை முனையைக் கடந்து செல்லும் பாதையைக் கண்டுபிடித்தான். ஆனால் இந்தியக் கரையை அடைவதற்கு இப்"பாதை"யை உபயோகித்தவன் **வாஸ்கோ டி காமா** என்னும் மாலுமியே. இது நிகழ்ந்தது 1498-ம் ஆண்டில். போர்த்துக்கீஸருக்கு அக்காலத்திலே தக்க தலைவர்கள் இருந்தபடியினாலும் எதற்குமஞ்சாத் துணிவு மனப்பான்மை யிருந்தமையாலும், வல்லமை பொருந்திய கடல் ஆதிக்கம் இருந்ததனாலும் இந்திய சமுத்திரப்பாதை வழியாக நடந்த வர்த்தகத்தைத் தமது அதிகாரத்துக்குட்கொண்டு வந்து, அச் சமுத்திரத்தில் அவர்கள் தனியாட்சி புரிய முடிந்தது. படிப்படியாகப் போர்த்துக்கீஸர் முஸ்லிம்களின் கடல் ஆதிக்கத்தைக் கெடுத்தனர். 1506-ம் ஆண்டளவில் அவர்கள் கிழக்காபிரிக்க சுல்தான்களின்-அதாவது ஆபிரிக்காவில் சோபல, மொஸாம்பிக், மொம்பாஸா என்னும் இடங்களை ஆண்ட சுல்தான்களின் - அதிகாரத்தையும் செல்வாக்கையும் இந்து சமுத்திரத்தில் நாசமாக்கினர்.

இதன்பின்னர் 1510-ம் ஆண்டிலே போர்த்துக்கீஸர் இந்தியாவில் கோவைத் துறைமுகத்தைக் கைப்பற்றினர். பின்னர் செங்கடல் மூலமாகவும் பாரசீகக் குடா மூலமாகவும் ஐரோப்பாவுக்குப் போகும் பாதைகளை "அடைக்க" வேண்டிய அவசியம் போர்த்துக்கீஸருக்கு ஏற்பட்டது. 1515 ம் ஆண்டில் ஏடன், ஓர்மஸ் என்னும் துறைமுகங்களைக் கைப்பற்றி ஐரோப்பாவுக்கு முஸ்லிம் வர்த்தகர் செல்ல உதவியாயிருந்த கடற்பாதைகளை அடைத்துவிட்டனர். இவ்வளவுடன் அவர்கள் நிற்காது மலாக்காத்தீவினைக் கைப்பற்றி மலாக்கா நீரிணைமூலம் வாசனைத் திரவியங்களுக்குப் பேர்போன கிழக்கிந்தியத் தீவுகளுக்கு மற்றும் சாகியத்தினர் போகாதபடியும் தடுத்தனர். இவ்வளவு எல்லாம் செய்தாலும் கீழைத்தேய வர்த்தகத்தின்மீது பூரணமான ஆதிக்கம் செலுத்துவதற்கு இந்திய சமுத்திரத்தில் உள்ள இன்னோர் கேந்திர ஸ்தானத்தையும் கைப்பற்ற வேண்டும் என்பதைப் போர்த்துக்கீஸர் கண்டனர். இலங்கையைத் தமது ஆதிக்கத்துக்குட்கொண்டு வராவிட்டால் இந்து சமுத்திரத்தின்மீது தங்களுக்குள்ள ஆதிக்கமும் வல்லமையும் பூரணமாகாவென்பதை அவர்கள் உணர்ந்து அத் தீவைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். இலங்கைமீது படையெடுத்து அதனை வெற்றிகொண்டு கைப்பற்றி அரசியலிருக்கையைக் கோவையில் இருந்து இலங்கைக்கு மாற்றிவிட வேண்டுமென்று போர்த்துக்கீஸ அரசன் கட்டளை யிட்டுவிட்டான்.

புராதனகால பினீஷியரைப்போல, போர்த்துக்கீஸரும் கரையோரப் பகுதிகளிலும் கேந்திர ஸ்தானங்களிலுமே அதிக கவனம் செலுத்தி அவற்றில் தமது அதிகாரத்தை நிலைநாட்டினர். ஆகவே அவர்களுடைய அதிகாரம் நிலை பெறுதற்கு நல்நம்பிக்கைமுனை, ஏடன், ஓர்மஸ், இலங்கை, மலாக்கா என்னும் இடங்களைத் தமதாக வைத்துக்கொண்டிருத்தல் அவர்களுக்கு இன்றியமையாததாக விருந்தது. இந்த இடங்களைத் தம்மிலும் மேம்பட்ட கடல் வலிமைகொண்ட இன்னோர் வல்லரசு கைப்பற்றியதும் போர்த்துக்கீஸரின் ஏகாதிபத்தியம் நிலையிழந்து மறைந்தது.



போர்த்துக்கீஸரின் கிழக்கு ஏகாதிபத்தியத்தைப் பரிபாலித்து நிருவகிப்பதற்கு ஓர் **இராஜப்பிரதிநிதி** நியமிக்கப்பட்டார். இவரை **வைசிராய்** என்று ஆங்கிலத்தில் வழங்குவர். போர்த்துக்கீஸ இராஜப்பிரதிநிதியின் தலைமைக் காரியாலயம் கோவையில் இருந்தது. திடபுத்தியும், எடுத்த காரியத்தைச் சாதிக்கும் வன்மையும், நிருவாகத் திறமையும் கொண்டிருந்த இராஜப் பிரதிநிதிகள் ஒருவர் பின் ஒருவராகப் பரிபாலனப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தம் தேசத்துக்காகப் பாடுபட்டபடியினால் போர்த்துக்கீஸரின் அதிகாரம் நல்நம்பிக்கை முனையிலிருந்து கிழக்கிந்தியத் தீவுகள்வரை அதி தீவிரமாகப் பரவியது. பிரான்சிஸ்கோ டி அல்மெய்தா (1505-1509), அல்புக்கூர்க்கே (1509-1515) வாஸ்கோ டி காமா (1515-1524) என்பவர்கள் இவ்வாறான சிறந்த இராஜப்பிரதிநிதிகளிற் சிலராவர். கிழக்கே போர்த்துக்கீஸ ஏகாதிபத்தியத்துக்கு அத்திவாரம் இட்டவர்கள் இவர்களே எனச் சொல்லலாம்.

போர்த்துக்கீஸ ஏகாதிபத்தியத்தில் நடந்த சகல வர்த்தக வியாபாரத் தொழில்களும் போர்த்துக்கீஸ அரசருக்கே உரியதாகச் சொந்தமாக இருந்தன. அவற்றின் ஏகபோக உரிமை அவருக்கே இருந்தது. ஆனால்

அரசரானவர் தனது வர்த்தக உரிமைகளைக் காலத்துக்குக் காலம் விற்றுவிடுவார். அரசனின் ஏகாதிபத்தியத்தின் ஏதாவதோர் பகுதியில் வியாபாரம் செய்ய வேண்டும் என ஒருவர் விரும்பினால், அவர் ஓர் தொகைப் பணத்தை ரொக்கமாக அரசனுக்குக் கொடுத்துவிட்டு அப்பகுதியின் வியாபார உரிமையைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த முறையினால் அரசனுக்கு வேண்டிய பணம் ரொக்கமாகக் கிடைத்தது என்பது உண்மை. ஆனால் இவ்வியாபார உரிமையைப் பெற்றவர்கள் கொள்ளை இலாபம் பெறுவதற்காகக் குடியேற்ற நாடுகளைச் சூறையாடி அந்நாட்டு மக்களுக்குத் தீங்கு விளைக்கவும் இம்முறை சாதனமாக இருந்தது.

சிலுவைப் போர்களின் பயனாக கிறிஸ்தவ மதத்தை உலகெல்லாம் பரப்பவேண்டும் என்ற ஓர் கிளர்ச்சி ஐரோப்பாவில் எழலாயிற்று. இக்கிளர்ச்சிக்குப் போர்த்துக்கீஸரும் ஆளாகி, கீழைத் தேயங்களில் உள்ள "அஞ்ஞானி"களை மனந் திருப்பிக் கிறிஸ்தவ மதத்துக்குக் கொண்டுவர முனைந்தனர். போர்த்துக்கல் அரசர்களும் இவ்விஷயத்தில் ஊக்கமுடையராய் மனந் திருப்பும் வேலையில் ஈடுபட்ட ஸ்தாபனங்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து ஊக்கமூட்டினர். இத்தொண்டில் பிரான்சிஸ்க சபையினர்தான் முதன்முதலாக ஈடுபட்டுப் பணியாற்றினர். ஆனால் யேசுச் சபையினர் வெகு சீக்கிரத்தில் தாமே அந்தச் சுவிசேஷ பணியை மேற்கொண்டு கீழைநாடுகளில் மதப் பிரசாரம் புரிந்தனர். அவர்களில் அர்ச். பிரான்சிஸ் சவேரியார் சிரேட்டம் பெற்றவர். இன்றும் கீழைத் தேயத்தினர் அவரை மறக்காது இருக்கின்றனர். அவருடைய பூதவுடம்பு இப்போதும் கோவையில் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துப் போற்றப்பட்டு



வருகிறது. இன்று கீழைத்தேயங்களில் உரோமன் கத்தோலிக்க ஜன சமூகங்கள் பெருந்தொகையில் இருப்பதற்கு அர்ச். சவேரியாரின் சுவிசேஷத் தொண்டே காரணம் என்று கூறினும் பொருந்தும்.

### கோட்டை இராச்சியத்துடன் போர்த்துக்கீஸர் நட்பு. 1540 – 1597

கோட்டையிலும் சீதவாக்கையிலும் அரசுபுரிந்த சகோதரர்க்கிடையே நிகழ்ந்த எதிரிடை, பகைமையைப் பற்றியும்; அவை காரணமாகக் கோட்டை அரசன் போர்த்துக்கீஸரின் உதவியை நாடி அதனைப் பெற்றதைப் பற்றியும் ஏற்கெனவே கூறியுள்ளோம். கோட்டை இராச்சியத்தின் விவகாரங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைத் தான் நேரே அறிவதற்காகப் போர்த்துக்கீஸ இராஜப்பிரதிநிதி 1550-ம் ஆண்டில் கோட்டைக்கு விஜயம் செய்தான். இது புவனேகவாகுவுக்கும் அவன் மருமகன் விதியபண்டாரனுக்கும் பிடிக்கவில்லை. போர்த்துக்கீஸர் தமது உதவிக்குவந்த காரணம் என்ன என்பதையும், அவ்வுதவியின் பயன் என்ன என்பதையும் அவ்விருவரும் அன்றே முதன் முதலாக உணர்ந்தனர். 1551ம் ஆண்டில் புவனேகவாகு கொலைசெய்யப்பட அவனது பௌத்திரனாகிய **தர்மபாலன்** என்னும் பாலகன் அரசனாக வந்தான். தர்மபாலன் பெயரளவில் மாத்திரமே அரசனாகவிருந்தான். அவன் போர்த்துக்கீஸரின் கைப்பிள்ளையாகநின்று அவர்கள் ஏவியபடி செய்துவந்தான். போர்த்துக்கீஸர் சீதவாக்கையை மீண்டும் பலமாகத் தாக்கி அதன் தலைநகரத்தை நாசமாக்கினர். சீதவாக்கையில் மாத்திரமன்றி ஏனைய பாகங்களிலும் போர்த்துக்கீஸரின் ஆதிக்கம் மேலோங்கியது. 1560ம் ஆண்டிலே அவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றிகொண்டு, மன்னார்,

ஊர்காவற்றுறை ஆகிய கேந்திரஸ்தானங்களைத் தமதாக்கினர்.

1557ம் ஆண்டில் தர்மபாலன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவி **டொன் ஜுவான் தர்ம பாலன்** என்று நாமகரணம் சூட்டப்பெற்றான். இதனால் விளைந்த பலன்கள் பல. தமது சமயத்தைப் பாதுகாத்து இரட்சித்து வருபவன் தமது அரசனே என்று இதுவரை எண்ணி நம்பிவந்த சிங்களப் பௌத்த மக்கள், தமக்கு மன்னனாக வந்த தர்மபாலன் இவ்வாறு ஓர் அந்நியமதத்தைத் தழுவியதைக் கண்டு திகைத்தனர். தான் பிறந்து வளர்ந்த மதத்தைக் கைவிட்டு இன்னோர் அந்நிய சாகியத்தாரின் மதத்தைத் தமது அரசன் கைக்கொண்டு அவர்களுக்குநண்பன் ஆகிவிட்டானே என்று அவர்கள் வெகுண்டனர். இப்படியாக அவர்கள் திகைப்பும், வெருட்சியும் அடைந்திருந்த நேரத்தில் தர்மபாலன் "எரியும் கொள்ளியை ஏறத்தள்ளுவது" போன்ற ஓர் கருமத்தைச் செய்தான். பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமாக இதுவரையிருந்த நிலங்களைத் தான் புதிதாகக் கைக்கொண்ட சமயத்தின் மீதுள்ள அபிமானத்தால், அவன் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு மாற்றிவிட்டான். இச்செயல்களால் சிங்களப் பௌத்தர்களது வெறுப்பையும், பௌத்த குருமாரது பகையையும் அவன் தேடிக்கொண்டான். அவன் சொந்தப் பிரஜைகளே அவனைக் கைவிட்டனர்; அவர்கள் மத்தியில் அவன் கேவலம் ஓர் அந்நியனைப் போலவே இருந்தான். கத்தோலிக்க குருமாரது ஒத்துழைப்பும் ஆதரவுமல்லாது அவனது சொந்த ஜனங்களது ஆதரவோ ஒத்துழைப்போ அவனுக்கு இருக்கவில்லை. எது எப்படியிருந்தபோதிலும் கத்தோலிக்க குருமார் மாத்திரம், அவனுக்கு என்றும் இணைபிரியாத நண்பர்களாகவிருந்து உதவிபுரிந்தனர்.



கோட்டை இராச்சியத்தின் நிலைமை இப்படியாக, சீதவாக்கைக்கு நல்லகாலம் பிறந்தது. கோட்டை இராச்சிய மன்னன் அந்நிய சமயமாகிய கிறிஸ்தவ மதத்தைத் தழுவினபடியால் சிங்களப் பௌத்தர்கள் சீதவாக்கை மன்னனையே தம் மதப் பாதுகாப்புக்கு நாடினர். அந்நியரின் அதிகாரத்தை இலங்கையிலிருந்து விரட்டிக் கலைப்பதற்கு அவனையே சிங்களப் பௌத்த மக்கள் எதிர்பார்த்தனர். அப்போது சீதவாக்கையை அரசுபுரிந்தவன் **முதலாவது இராஜசிங்கன்**. அவன் ஓர் வீரத் தலைவன். அவன் தலைமையில் சீதவாக்கை இராச்சியம் பராக்கிரமம் வாய்ந்ததாக விளங்கி, கோட்டை இராச்சியத்தின் அதிகாரத்தை வெகுவாகக் குறைத்தது. **1562ம் ஆண்டில் முல்லேரியா** என்னும் இடத்தில் போர்த்துக்கீசருக்கும் சீதவாக்கைச் சேனைகளுக்குமிடையே கொடிய யுத்தம் ஒன்று நிகழ, அதில் போர்த்துக்கீசர் முதன் முதலாக முறியடிக்கப்பட்டனர். போர்த்துக்கீசரை வெற்றிகண்ட சீதவாக்கைப் படைகள் கோட்டையை முற்றுகையிட்டன. இந்த முற்றுகையைப் போர்த்துக்கீசப் படைகள் வீரத்துடன் சமாளித்து நகரத்தைப் பாதுகாத்தன. ஆனாற் போர்த்துக்கீசர் ஓர் விஷயத்தை நன்கு உணர்ந்தனர். கோட்டை நகரமோ துறைமுகத்துக்கு அப்பால் உள்ளது; முற்றுகையைப் பலகாலத்துக்குச் சமாளிக்கவேண்டுமானால் போதிய தரைப்படை இருத்தல் வேண்டும்; அப்படியான படை அவர்களுக்கு இல்லை; ஏதும் உதவிப்படை வரவேண்டுமானால் அது கடல்மூலம்தான் வரவேண்டும்: ஆகவே கோட்டை நகரத்தைத் தொடர்ந்து பாதுகாத்து முற்றுகைக்கு ஆளாவதால் பயன் இல்லை என்பதை அவர்கள்

உணர்ந்து நகரத்தை நாசமாக்கிவிட்டு, துரதிர்ஷ்டசாலியாய், மனச்சந்துஷ்டி யிழந்து இருந்த தர்மபாலனையும் தம்முடன் கொண்டு கொழும்பை அடைந்தனர். அங்கே அந்தப் பாலிய அரசன் தனது எஜமானராற் பட்ட அவமானங்களுக்கு ஓர் கணக்கில்லை. கடைசியில் அவன் 1597ம் ஆண்டில் இறந்தான்.

இராஜசிங்கன் பெரும்படைகளைத் திரட்டி 1578-ம் ஆண்டில் கொழும்பு நகரை முற்றுகையிட்டான். 22 மாதமாக இவனின் முற்றுகை நீடித்தது. இவ்வளவு நீடித்த காலத்திலும் பலவிதமான இன்னல்கள் நிகழ்ந்தும் கொழும்பு நகரம் வீழ்ச்சியடையவில்லை. ஈற்றில் கோவையிலிருந்து உதவி வர அதனைத் தடுக்க இராஜசிங்கனால் முடியவில்லை. அதற்குக் காரணம் அவனிடம் கடற்படை இல்லாதிருந்தமையே என்க. எனவே, அவன் கொழும்பு முற்றுகையைக் கைவிட்டு, கந்தஉட ரட்டை மீது தன் கவனத்தைத் திருப்பினான். அவ்விராச்சியத்தைத் தனது இராச்சியத்துடன் இணைத்தான். தோல்வியடைந்த கந்தஉட ரட்டை அரசன் திருக்கோணமலைக்கு ஓடி அங்கே இறந்தான். அவன் இறக்கமுன் தனது மருமகனே தனக்கு உரித்தாளியாகிக் கந்தஉட ரட்டையைப் பரிபாலிக்க வேண்டும் என்று பிரகடனப் படுத்தினான். இம் மருமகன்தான் பின்னர் ஞானஸ்நானம் பெற்று **டோன் பிலிப்பு** என்னும் பெயர் சூட்டப்பட்டவன். இது இப்படியிருக்க, கண்டி அரசனின் பராயமற்ற மகளும் பகைவருக்கஞ்சிப் போர்த்துக்கீஸரிடம் அடைக்கலம் புகுந்தாள். போர்த்துக்கீஸர் அவளைச் சகல இராஜ மரியாதைகளுடனும் பேணி வளர்த்து, ஞானஸ்நானம் செய்வித்து, **டோனா கதெரினா** என்னும் கிறிஸ்தவநாமம் சூட்டினார்கள்.



இஃதிவ்வாறாக, இராஜசிங்கன் கொழும்பு, வடபகுதி என்பவற்றை ஒழிந்த ஏனைய இலங்கை முழுவதுக்கும் அரசனானான். 1587-ம் ஆண்டில் அவன் மீண்டும் கொழும்பை முற்றுகையிட்டான். நகரின்மீது தாக்கிய அவன் படைகளின் கவனத்தை வேறு வழிகளில் திருப்பி அவற்றின் தாக்குதல் வேகத்தைக் குறைப்பதற்காகப் போர்த்துக்கீஸர் ஓர் தந்திரத்தைக் கையாண்டனர். அவர்கள் கோனப்பு பண்டாரன் என்பவனை ஓர் சேனையுடன் கண்டிக்கு அனுப்பி, இறந்த கண்டி அரசனின் மருமகனாகிய **டோன் பிலிப்புவை** அரசனாக்கும்படி பணித்தனர். கோனப்பு பண்டாரன் ஓர் அஞ்சாத வீரன். அவன் தந்தையை இராஜசிங்கன் சதிக் குற்றம் காட்டிக் கொலை செய்தவன். இதன்பயனாகக் கோனப்பு பண்டாரன் போர்த்துக்கீஸரை அடைந்து ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்தவனாகி **டோன் ஜுவான் கோனப்பு பண்டாரன்** என்னும் பெயரைப் பெற்றான். போர்த்துக்கீஸரின் சொற்படி அவர்களின் படையுடன் கண்டியை அடைந்த கோனப்பு பண்டாரன் தான் சென்ற கருமத்தை முடித்து டொன் பிலிப்புவைக் கண்டி அரசனாக்கினான். ஆனால், சிம்மாசனம் ஏறிய டொன் பிலிப்பு திடீரென ஒருநாள் இறந்துவிட, டொன் ஜுவான் கோனப்பு பண்டாரன் தன்னுடன் வந்த போர்த்துக்கீஸருக்கெதிராகக் கிளம்பி கன்னொருவா என்னுமிடத்தில் அவர்களை அதம்செய்தான். இதன்பின் தானே கண்டி அரசன் என அவன் பிரகடனப்படுத்தி முதலாம் **விமலதர்ம சூரியன்** எனத் தனது பெயரையும் மாற்றிக் கொண்டான். இது நிகழ்ந்தது 1591-ம் ஆண்டில். கோனப்பு பண்டாரன் செய்த சூழ்ச்சியை அறிந்த இராஜசிங்கன் தன் படைகளுடன்சென்று 1592-ம் ஆண்டில் கண்டியைத் தாக்கினான். ஆனால் விமலதர்ம சூரியன் (கோனப்பு பண்டாரன்) படைகள் இராஜசிங்கன் படைகளை முறிய

டித்தன. இந்த யுத்தத்தில் அடைந்த ஊறுகாரணமாக இராஜசிங்கன் 1593 ம் ஆண்டு இறந்தான். அவன் மரணமடைய, போர்த்துக்கீஸர் சீதவாக்கை இராச்சியத்தைக் கைப்பற்றி ஏற்கெனவே தமக்கிருந்த பாகத்துடன் சேர்த்துக்கொண்டனர். இராஜசிங்கன் மரணத்துடன் சீதவாக்கை இராச்சியமும் வீழ்ச்சியடைந்தது.

இலங்கையின் வட பாகத்திலும் போர்த்துக்கீஸர் வெற்றிமாலை சூடினர். 1591-ம் ஆண்டில் தம்மைத் தாக்கிய யாழ்ப்பாண அரசனைப் போர்த்துக்கீஸர் போரில் வென்று, கொன்று அவனுடைய மகனைத் தமக்குத் திறையளிக்கும் ஓர் சிற்றரசனாக முடிசூட்டினர். இவ்வரசனை மரணத்திலிருந்தும் காப்பாற்றியவன் **சிமாவோ பின்ஹாவோ** என்னும் பெயருடைய போர்த்துக்கீஸ அதிகாரியாவன். இவன்பின்னர் சப்பிரகமத்துத் திஸாவையானான். இவ்வதிகாரி யாழ்ப்பாண இளவரசனைக் காப்பாற்றும் பாவனையில் ஓர் மதிற் கல்லிற் பொறிக்கப்பட்டுள்ள சித்திரம் ஒன்றை இன்றும் இரத்தினபுரியில் உள்ள ஸமன் தேவாலயத்திற் காணலாம்.

இவ்வாறாகப் போர்த்துக்கீஸர் இலங்கையின் வட பகுதிக்கும், தென்மேற்குப் பகுதிக்கும் எஜமானராகினர். அவர்கள் முழு இலங்கைக்கும் அதிகாரிகளாவதற்கு இடைஞ்சலாக விமலதர்ம சூரியன் இருந்தான். ஆகவே "**கண்டியின் மதத் துரோகி**[1]" என்று ஓர் போர்த்துக்கீஸ ஆசிரியரால் இகழ்ந்து கூறப்பட்ட இவ் விமலதர்ம சூரியனைத் தக்கவாறு தண்டிக்க வேண்டுமென்று போர்த்துக்கீஸர் திட்டம் வகுத்தனர். 1594-ம் ஆண்டில், "வெற்றிமாலை சூடும் வீரன்" என்று புகழப்பட்ட **லோப்பஸ் டி சௌஸா** என்னும் போர்த்துக்கீஸ சேனாதிபதி ஓர் பெரும் சைனியத்து

1 Apostate of Candia



டன் கண்டிக்குச் சென்றான். முந்திய கண்டி அரசனின் புத்திரியாய்க் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய டோனா கதெரினாவையும், டி சௌஸா தன் சேனையுடன் கொண்டு சென்றான். விமலதர்ம சூரியனை வென்று கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி அதில் டோனா கதெரினாவை அரசியாக முடிசூட்ட வேண்டுமென்பதே அவனது நோக்கம். விமலதர்ம சூரியன் தன் இராச்சியத்தின்மீது படையெடுத்துவந்த போர்த்துக்கீஸரை எதிர்க்கவில்லை. அவன் தலை நகரத்தில் இருந்து உணவுப்பொருள்கள் யாவற்றையும் எரித்துவிட்டு நகரைவிட்டுப் புறப்பட்டு மலைப்பகுதிகளுக்குப்போய் ஒதுங்கியிருந்தான். போர்த்துக்கீஸர் கண்டிக்குள் நுழைந்தனர். ஆனால், அங்கே அவர்கள் உண்ண உணவில்லை. பட்டினியால் வாடிய அவர்கள் திரும்பி வெளியேற வேண்டியேற்பட்டது. உடன்சென்ற சிங்களப் போர் வீரரும் இந்தச் சமயத்தில் போர்த்துக்கீஸரை விட்டு அகன்றனர். இதுவே வாய்த்த தருணம் என்பதைக் கண்ட விமலதர்ம சூரியன் தான் கரந்திருந்த மலைப் பகுதிகளில் இருந்து சேனைகளுடன் போர்த்துக்கீஸர் மத்தியிற் புகுந்து, அவர்களிற் பலரை ஹதம்செய்து, டி சௌஸாவையும் டோனா கதெரினாவையும் சிறைப்படுத்தினான். இது நிகழ்ந்தது **கன்னொருவா** என்னும் இடத்தில். விமலதர்ம சூரியனிடம் சிறைப்பட்ட போர்த்துக்கீஸ சேனாதிபதி யுத்த களத்தில் அடைந்த ஊறுகாரணமாகச் சில நாட்களில் இறந்துவிட்டான். டோனா கதெரினாவை விமலதர்ம சூரியன் மணந்து தனது பட்டத்தரசியாக்கினான். பழைய கண்டி அரசனின் புதல்வியாகிய அவளை மணந்துகொண்டமையினாற் கண்டி இராச்சியத்துக்கு அரசனாக அவனுக்கிருந்த உரிமை இன்னும் உறுதியானது. கன்னொருவா யுத்த அநர்த்தத்தைக் கோவையில் உள்ள போர்த்துக்கீஸ அதிகாரிகள் கேள்வியுற்றதும் கண்டி அரசனைத் தண்

டித்துப் பழிக்குப் பழி வாங்குவதற்குப் புதிய படைகளை அனுப்பினர். இப் படைகளுக்கு "வெற்றிமாலை சூடும் வீர" சேனாதிபதியாக **அசவிடோ** என்னும் சிறந்த வீரனை நியமித்து அனுப்பினர். இப்படியிருக்க, டி சௌஸாவின் போர்த்துக்கீஸப் படைகள் கன்னொருவா யுத்த களத்தில் அடைந்த படுதோல்வியைக் கேள்வியுற்று, சீதவாக்கைச் சிங்களர் தாமும் போர்த்துக்கீஸருக் கெதிராகக் கிளம்பினர். எனவே அசவிடோ முதலில் அவர்களை நோக்கித் தனது படைகளை இட்டுச்சென்று அவர்களை யுத்தத்தில் வென்று றுவான்வலை, மெனிக்கடவரை என்னும் இடங்களிற் கோட்டைகளை நிருமாணித்தான். அடுத்த வருஷமும் (1595) சீதவாக்கையில் உள்ளவர்கள் **டொமிங்கோஸ் கோறியா** என்பவனின் தலைமையிற் கிளம்பிக் கலகம்செய்தனர். தர்மபாலனும் அவனுடைய போர்த்துக்கீஸ நண்பர்களும் அக் கலகத்தை நிர்வகிக்க மாட்டாது கொழும்புக்கு ஓடினர். ஆனால், 1596-ம் ஆண்டில் போர்த்துக்கீஸருக்குக் கோவையில் இருந்து படைத்துணை கிடைத்ததின் பயனாகச் சீதவாக்கைக் கலகம் அடக்கப்பட்டது.

**கோட்டை இராச்சியத்துக்குப் போர்த்துக்கீஸர் உரிமை.**

1597ம் ஆண்டில் தர்யபாலன் இறந்தான். தனக்குப்பின் தனது இராச்சியத்தைப் போர்த்துக்கீஸ அரசனே பரிபாலிக்க வேண்டுமென்று இவன் ஓர் மரண சாதனம் எழுதிவைத்திருந்தான். **கேயிரோஸ்**[1] என்னும் போர்த்துக்கீஸ குரவரின் கூற்றுப்படி கிறிஸ்தவ சமயத்தை வளர்க்கும் நோக்கமாகவே தர்மபாலன் இப்படியான ஓர் நன்கொடையைப் போர்த்துக்கல் அரசனுக்கு எழுதிவைத்தான் என்று தெரிகிறது. தர்மபாலன் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவன். தனது இராச்சியத்தைப் போர்த்

1 Queyroz



துக்கல் அரசனுக்கு நன்கொடையாக அளித்தாற் கிறிஸ்தவ சமயம் குன்றாது வளரும், முன்போலவே அரசனது அபிமானமும், பாதுகாப்பும் அதற்குக் கிடைத்துவரும் என்று அவன் நம்பினான் என்பர்.

தர்மபாலன் எழுதிய நன்கொடைச் சாதனத்தில் இன்னோர் அம்சமும் காணப்பட்டது. அதாவது கோட்டையை ஆண்ட அரசர்களே இலங்கை முழுவதுக்கும் அரசர் என்று உறுதிவாசகம் செய்யப்பட்டிருந்ததே என்க. ஆகவே இச் சாதனத்தின் பிரகாரம், போர்த்துக்கல் அரசன் கோட்டை அரசனுக்கு உரிமைக்காரனாக வந்ததும் இலங்கை முழுவதுக்கும் அவன் அரசு உரிமை பாராட்ட இடம் அளிக்கப்பட்டது.

போர்த்துக்கீஸ அரசாங்கத்தின் **பிரதிநிதியாக இலங்கையில் இருந்த பிரதம சேனாதிபதி (கப்ரின் ஜெனரல்)** 1597-ம் ஆண்டில் தனது ஆணைக்குள் அடங்கிய பிரதானிகள் சமாஜம் ஒன்றை மல்வானை என்னும் இடத்திற் கூட்டினான். இதற்குமுன், போர்த்துக்கீஸ அரசனே இலங்கைக்கும் அரசன் என்ற பிரகடனம் கொழும்பு நகரத்திற் சகல மரியாதைகளுடனும் வைபவங்களுடனும் செய்யப்பட, சிங்கள இராச குடும்பத்தினர் புதிய அரசனுக்கு விசுவாசப் பிரமாணம் செய்துகொடுத்தனர். அரச குடும்பத்தினர் மாத்திரம் இவ்வாறு விசுவாசப் பிரமாணம் செய்தாற் போதாது, சிங்களப் பிரதானிகளும் இப் பிரமாணத்தைச் செய்து போர்த்துக்கல் அரசனைத் தமது அரசனாகக்கொள்ளச் செய்யவேண்டும் என்பதற்காகவே மல்வானைச் சமாஜம் கூட்டப்பட்டது. இச் சமாஜத்துக்குச் சமுகம் அளிக்கும்படி ஒவ்வொரு கோரளையிலுமிருந்து இரண்டு பிரதானிகள் அழைக்கப்பட்டனர். சமாஜத்தில் தர்மபாலன் செய்த நன்கொடைச் சாதனம் வாசித்து

விளக்கப்பட்டது. அதன்பின் போர்த்துக்கல் நாட்டுச் சட்டப்படி இந்நாட்டைப் பரிபாலிக்க வேண்டுமா? அல்லது இத்தீவுச் சட்டத்தின்படியே பரிபாலிக்கவேண்டுமா என்று பிரதிநிதிகளாக விருந்த பிரதானிகள் கேட்கப்பட்டனர். இந் நாட்டுச் சட்டத்தின்படியே பரிபாலனம் நடைபெறவேண்டும் எனப் பிரதானிகள் விரும்பினர். பிரதம சேனாதிபதி அதற்கு இணங்கினான். ஆனால் பழைய சட்டங்களுக்கு விதிவிலக்காக, கிறிஸ்தவ சமயத்தைப் போதிக்கவும் பிரசாரம் செய்யவும் பரிபூரண சுதந்திரம் இருக்கவேண்டும் என்பதைச் சேனாதிபதி எடுத்துக்காட்டினான். இவ்வாறாக மல்வானைச் சமாஜத்தில் ஏற்பட்ட உடன்பாட்டையே மல்வானை உடன்படிக்கை என்று சரித்திர ஆசிரியர் கூறுவர்.

போர்த்துக்கீஸ அரசர்கள் இப்படியாகக் கோட்டை மன்னரின் உரிமைக்காரராகி அவ்விராச்சியத்தைத் தமதாக்கினர். யாழ்ப்பாண இராச்சியம் ஏற்கெனவே பணிந்துவிட்டது. எனவே, கண்டி இராச்சியம் ஒன்றுதான் போர்த்துக்கீஸரை இலங்கையில் எதிர்த்து, இலங்கை முழுவதுக்கும் அவர்களை அதிகாரிகளாக்காமல் தடுத்து வந்தது. கண்டியைத் தாக்கி அதனையும் கைப்பற்றவேண்டும் என்ற ஆசை போர்த்துக்கீஸருக்கு வளரலாயிற்று. அதற்குப்பல காரணங்கள் இருந்தன. முதலாவது, "கண்டியின் மதத்துரோகி" என்று போர்த்துக்கீஸரால் தூஷிக்கப்பட்ட விமலதர்மன் அவ்விராச்சியத்தைப் பரிபாலித்தான். அவனைத் தக்கவாறு தண்டித்து அரச பீடத்திலிருந்தும் அவனை நீக்கிவிடவேண்டும் என்று போர்த்துக்கீஸர் துடித்தனர். இரண்டாவது, தர்மபாலன் எழுதிவைத்த சாதனத்தின்படி கண்டி இராச்சியம் உட்பட இலங்கை முழுவதும் தமக்கே உரிய



தென்றும் விமலதர்ம சூரியன் அவ்விராச்சியத்தை முறை தவறி அபகரித்தபடியினால் அவனை விரட்டித் துரத்த வேண்டுமென்றும் கருதினர்.

கண்டியைத் தாக்குவதற்கு அசவிடோ பல ஆயத்தங்களைச் செய்தான். அலவை, சீதவாக்கை, மெனிக்கடவரை, அற்றப்பிற்றியா என்னும் இடங்களில் அவன் பல எல்லைப்புற அரண்களை அமைத்துக் கண்டியைத் தாக்குவற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில் ஒல்லாந்து தேசத்திலிருந்து யாரோ டச்சுத் தூதுவர் கண்டிக்கு விஜயம் செய்திருப்பதாக அவன் கேள்வியுற்று, விமலதர்மனுக்கு டச்சு உதவி கிடைக்கு முன்னரேயே தான் அந் நகரத்தைத் தாக்கினால்தான் தனக்கு வெற்றி கிட்டும் என்று தீர்மானித்து மெனிக்கடவரையில் இருந்து ஓர் சேனையை இட்டுச்சென்றான் இச் சேனை 1603-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வலனையை அடைந்தது. போர்த்துக்கீஸரை எதிர்த்து விமலதர்மன் போர் செய்யாது மறைந்தான். நகரம் நிர்மானுஷ்யமாகக் காணப்பட்டது. போர்த்துக்கீஸருக்கு அங்கே உணவுச் சௌகரியங்களோ ஏனைய வசதிகளோ அகப்படவில்லை. இப்படியான நிலைமையில், அவர்களுடன் சென்ற சிங்களப்படைகள் வழக்கம்போல விட்டு விலகின. செய்வதின்னதென்றறியாது திகைத்த போர்த்துக்கீஸர் பின்வாங்கினர். இப்படியான சந்தர்ப்பத்தையே விமலதர்ம சூரியன் எதிர்பார்த்து நின்றான். பின்வாங்கிச் சென்ற போர்த்துக்கீஸ சேனை வலனையை அடைந்ததும், விமலதர்ம சூரியனின் படைகள் நாலு பக்கமும் சுற்றி வளைத்துப் போர்செய்து நாசமாக்கின. போர்த்துக்கீஸரில் அசவிடோவும் சிலரும் தப்பியோடினர். இவ்வாறு தப்பிய சேனா வீரருடன் அசவிடோ கொழும்பை அடைந்தான். அடுத்த

ஆண்டில் விமலதர்மன் இறந்தான். அவனிடம் பல குறைகள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. அப்படி இருந்தும் தன் தாய் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற அரும் பாடுபட்ட வீர புருஷன் அவன் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவன் எதற்கும் அஞ்சாது, முகமன் பாராது, நடுநின்று நீதிவழங்கிய மன்னன். போர் வித்தையைப் போர்த்துக்கேசரிடம் இருந்து கற்ற அவன் அவ் வித்தையில் அவர்களையும் மிஞ்சிப் பலமுறை அவர்களைப் புறமுதுகிட்டோடும்படி செய்தான். ஐரோப்பிய பழக்க வழக்கங்களை அவன் நன்றாக அறிந்திருந்தான். போர்த்துக்கேச பாஷையிலும் அவனுக்கு நல்ல பரிச்சயம் இருந்தது. அவனைப்பற்றிப் போர்த்துக்கேச குருவான கேயிரோஸ் என்பவர் எழுதியனவற்றை ஈண்டுக்குறிப்பிடுதல் பொருத்தமுடைத்தாகும். அவர் எழுதியதாவது :—

"கண்டியின் இராஜத் துரோகியிடம் இருந்து எதனையும் எதிர்பார்க்கலாம். அவன் இன்ன நேரத்தில் இன்னதைத்தான் செய்வானென்று திட்டமாக நாம் சொல்லமுடியாது. அங்கலட்சணமும், திடகாத்திரமும் கொண்ட நெட்டையான சரீரம் உடையவன். பெருமையும், செருக்கும் கொண்டவன்; நுண்ணிய புத்தியும் திண்ணிய பகுத்தறிவும், எண்ணித் துணியும் ஆற்றலும் பெற்றவன். போர்த் தந்திரத்தில் நிகரற்றவன். பராக்கிரமத்தில் அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் அவன் இராச்சியத்தில் இல்லை. எந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் மனத்திடத்தைக் கைவிடாது எடுத்த கருமத்தை நிறைவேற்றும் பெற்றியன்."

"கண்டியின் மதத்துரோகி" என்று விமலதர்மனைக் கூறிய ஓர் அந்நிய நாட்டுக் குருவானவரே இவ்வளவாக அவனைச் சிலாகித்துக் கூறுவதில் இருந்து அவனது பெருமை விளங்கும்.



விமலதர்மன் கண்டிக்கு அரசனாகியதும், தான் இது வரை அனுட்டித்துவந்த கிறிஸ்தவ சமயத்தைப் புறக்கணித்துப் பௌத்த சமயத்தைத் தழுவினான். அச் சமயத்தைத் தான் தழுவியதோடு மாத்திரம் நிற்காது அது செழித்து வளருவதற்கான மார்க்கங்களையும் தேடினான். புத்தரது தந்தத்தை வைத்துப் பூசிப்பதற்காக இரண்டு அடுக்குள்ள ஓர் ஆலயத்தை அவன் கட்டிக்கொடுத்தான். உப ஸம்பாதக் கிரியைகளைக் கண்டியில் நடத்துவிப்பதற்கு அரக்கனில் இருந்து பௌத்த குருமாரை வரவழைத்து, அக் கிரியைகளை 1603-ம் ஆண்டில் கெற்றம்பையில் செய்வித்தான்.

விமலதர்மன் இறந்தபின் செனரத்* கண்டி அரசனாகி 1604-ம் ஆண்டு தொடக்கம் 1635-ம் ஆண்டு வரை அவ் விராச்சியத்தைப் பரிபாலித்தான். அவன் ஒரு கலைவாணன்; நல் ஒழுக்கங்களுடையவன்; சமாதானத்தை விரும்புபவன்; ஆனால், போர்த்துக்கேசர் இலங்கையின் மற்றப் பாகங்களை வைத்துக் கண்டி இராச்சியத்தையும் கைப்பற்ற முனைந்திருக்கையில் இவனுக்குச் சமாதானம் ஏது? போர்த்துக்கேச சேனாதிபதி அசவிடோ கண்டியைக் கைப்பற்றுவதில் கண்ணுங் கருத்துமா யிருந்து அதன் மீது படையெடுத்து எதிர்ப்பட்டதை யெல்லாம் ஈவிரக்கமின்றி நாசம் செய்தான். 1611-ம் ஆண்டில் அவனது படைகள் கண்டிக்குள் நுழைந்து அந் நகரத்துக்குத் தீ மூட்டி அனர்த்தம் விளைத்தன. இதற்கு மூன்று வருஷங்களுக்குப் பின், அதாவது 1614-ம் ஆண்டில், அசவிடோ இலங்கையை விட்டு கோவை இராஜப் பிரதிநிதியாகச் சென்றான். அப்படி மாறிப்போகும்போதும் அவன் கண்டி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று போர்த்துக்கேசருக்குக் கட்டளையிட்டான். இதன் பய

* இவனை செனரதன் என்றும் சிலர் வழங்குவர்

றாக விளைந்தது, குரோதமேயன்றி வேறொன்றுமில்லை. அப்போது இருந்த நிலைமையை கேயிரோஸ் குருவானவர் பின்வரும் கருத்துப்பட எடுத்துக்காட்டியிருக்கிறார் :—

"எங்கு பார்த்தாலும் கொள்ளைகளும் கொடுமைகளும், பழிக்கஞ்சாச் செயல்களுமே தாண்டவமாடின. இப்படியான அக்கிரமங்கள்தான் எதிரிகளுக்கு ரோசத்தைக் கிளப்பி அதிக வலிமையைக் கொடுத்தன. இவ்வாறான கொடிய அக்கிரமங்களைச் சிங்கள மக்களுக்கு இழைத்து அவர்கள் மனதைப் புண்படுத்தியிருக்காவிட்டால் அவர்கள் போர்த்துக்கீஸர் மீது இவ்வளவு வெறுப்பும் பகைமையும் கொண்டிருக்கமாட்டார்கள். அத்துமீறிப் பலாத்காரமாகக் கற்பழித்தல், மிதமிஞ்சிய தூர்த்தத்தனம் என்பவற்றைப் போர்த்துக்கீஸ வீரர் செய்துவந்தமையினால் அவர்கள் பெயரைக் கேட்டவுடனேயே சிங்களமக்கள் அருவருப்பும் துவேஷமும் கொண்டனர். புராதனமும் பெருமையும் படைத்த சிங்களச் சாதியத்தார் இப்படியான ஈவிரக்கமற்றவர்களின் கொடுமைகளுக்காளாவதிலும் பார்க்கக் கொடும் புலி வாழ் காடுகளிலும், மலைகளிலும் சென்று வசித்துத் தம் வாணாளைக் கழிப்பர்."

அசவிடோவுக்குப் பின் 'டி மெனசெஸ்'[1] என்பவன் இலங்கையின் (கப்ரின் ஜெனரலாக) பிரதம சேனாதிபதியாக வந்தான். 1614-ம் ஆண்டில் இவனும் பதவியை விட்டு விலக ஹோமெம்[2] என்பவன் பிரதம சேனாதிபதியாகக் கடமை யேற்றான். அக் காலத்தில் இலங்கையில் இருந்த போர்த்துக்கீஸ இராணுவ வீரர் கட்டுக்கடங்காதவர்களாய் வெறிநாய்கள் போலத் திரிந்து ஊரவரை இம்சித்து வந்தனர். கோவையில் இருந்த போர்த்துக்கீஸ இராஜப்பிரதிநிதிக்கு இக் கேவல நிலைமை நல்லாக விளங்

1 De Meneses, 2 Homem



கியது. எனவே சேனையைத் திருத்தியமைத்து கண்டி இராச்சியத்துடன் போர் தொடுக்கும்படி அவன் கட்டளையிட்டுத் தூண்டினான். அதற்கிணங்கப் போரும் தொடுக்கப்பட்டது. அது சாதாரண யுத்தம் அன்று: சர்வ நாச யுத்தமாகக் காட்சியளித்தது. 14 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண்களையும் கண்டவுடன் கொல்ல வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது. இவை மாத்திரமல்ல: கண்டி இராச்சியத்தின் வர்த்தகத்தைக் கெடுப்பதற்காகவும், வெளியில் இருந்து ஏதும் படை உதவி வருவதைத் தடுப்பதற்காகவும் புத்தளம், கொட்டியாரம், மட்டக்களப்பு ஆதியாம் துறைமுகங்களையும் போர்த்துக்கீஸர் அடைத்துவிட்டனர். கண்டி அரசன் செனரத் செய்வதின்னதென்றறியாது திகைத்தான். நிராதரவாக அவனும் அவன் பிரஜைகளும் தவித்தனர். இவ்வளவு கொடுமைகளும் போதாவென்று போலும், போர்த்துக்கீஸர் 1615-ம் ஆண்டில் கண்டி இராச்சியத்துக்குச் சேர்ந்த பகுதிகளை அடிக்குமேல் அடி அடித்தவாறு ஒன்றுக்கு மூன்றுமுறை சர்வநாசம் செய்தனர். காட்டுமிராண்டித்தனமான இவ்வக்கிரமச் செயல்கள் அதிகரிக்க அதிகரிக்க போர்த்துக்கீஸ வீரர்களிடையே கொடுமையும் அக்கிரமமும் ஓங்கின. சட்டம், ஒழுங்கு என்பவற்றை அவர்கள் கவனியாதவராய்த் தமது அக்கிரமங்களை முழு வேகத்துடன் செய்தனர். இதன் பயனாகப் போர்த்துக்கீஸ சேனை ஒழுங்குக் கமையாததாய், சிங்கள நாடுகளைக் கொள்ளையடித்து அகப்பட்டதைச் சூறையாடும் கொள்ளைக் கூட்டத்தினரைக் கொண்டதாக விருந்தது என்றும் கூறலாம்.

1618-ம் ஆண்டில் **கோன்ஸ்ரன்ரைன் டி ஸா**[1] என்பவன் போர்த்துக்கீஸ பிரதம சேனாதிபதியாக இலங்கைக்கு வந்தான். இவன் ஓர் சிறந்த போர் வீரன். ஒழுக்கத்திலும்

1 Constantine De Saa

மேம்பட்டவன். போர்த்துக்கீஸ சேனையைத் திருத்தி அமைத்துச் சேனா வீரரால் சிங்கள மக்களுக்குக் கெடுதிகள் நேருவதைத் தடுக்க அவன் நிச்சயித்து அதற்கான கருமங்களில் துரிதமாக ஈடுபட்டான். இதன் பயனாகச் சிங்கள மக்கள் முன் எந்தப் போர்த்துக்கீஸ சேனாதிபதிக்கும் செலுத்தாத மரியாதையைப் பெற்றதோடு அமையாது, அவர்களின் நல்லெண்ணத்தையும் அன்பையும் அவன் பெற்றான்.

கலுகங்கைப் பள்ளத்தாக்கு வழியாகக் கண்டி இராச்சியத்தைக் கண்காணிப்பதற்காக சப்பிரகமத்தில் ஓர் கோட்டையைக் கட்ட டிஸா தொடங்கினான். அத்துடன் காலியிலும் ஓர் கோட்டையை அமைத்தான். இதற்கிடையில் யாழ்ப்பாண இராச்சியத்தில் குழப்பங்கள் நிகழ அவற்றை அடக்கி, அங்கிருந்த **சங்கிலி** அரசனைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கி கோவைக்கனுப்பினான். சங்கிலி யரசன் கோவையிற் சிரச்சேதம் செய்யப்பட்டான். இதன் பின் டி ஸா யாழ்ப்பாணத்தில் ஓர் கோட்டையையும் கட்டி முடித்தான்.

இப்படியாகப் போர்த்துக்கீஸர் தமது அரண்களை இலங்கையிற் பலப்படுத்துகையில் இன்னோர் ஐரோப்பிய சாகியத்தார் இலங்கைக்கு வந்தனர். **ஒல்லாந்தர்** எனவும் வழங்கப்படும் **டச்சுக்காரர்** ஏற்கெனவே இலங்கைக்கு வந்து கண்டி அரசனைக் கண்டு கொண்டாடினர். அவர்களுக்குப் பின் **தேனிய கிழக்கிந்தியக் கொம்பனி**[1]யார் இலங்கைக்கு விஜயம்செய்து தம் செல்வாக்கை நிலைநாட்ட முயன்றனர். **பொஸ்கோவர்**[2] என்ற டச்சுக்காரன் 1615-ம் ஆண்டில் கண்டிக்கு விஜயம்செய்து செனரத் அரசனைச் சந்தித்தபின் அவனுக்குப் படைத்துணை புரியும்படி பட்டேவியாவில் இருந்த டச்சு அதிகாரிகளைத்

1. Danish East India Company, 2. Boschouwer



தூண்டினான். ஆனாற், சில காலத்தில் அவன் டச்சு அதிகாரிகளுடன் பிணக்குற்று டென்மார்க் தேசம் சென்று, இலங்கையில் கண்டி மன்னனுக்கு உதவிதேட அம் மன்னனால் அனுப்பப்பட்ட இராஜரீகத் தூதுவன் தானே என்று கூறினான். தேனிய அரசாங்கம் பொஸ்கோவர் கூறியதை நம்பி ஓவ கீட்[1] என்பவனின் தலைமையில் ஓர் கடற்படையை இலங்கைக்கு அனுப்பியது. உடன் வந்த பொஸ்கோவர் நடுவழியில் இறந்துவிட, ஓவ கீட் தனது படைகளுடன் இலங்கையில் இறங்கிக் கண்டியை அடைந்து செனரத் அரசனைச் சந்தித்தான். அப்போதுதான் ஓவ கீட்டிற்கு பொஸ்கோவர் தான் கண்டி யரசனின் தூதுவன் என்று சொன்ன பொய்யுரை வெளியானது. பொஸ்கோவர் தேனிய அரசாங்கத்துக்குத் தன்னைத் தூதுவனாகக் காட்டிய பத்திரங்களில் கண்டி அரசனின் கையொப்பத்தைக் கள்ளமாக இட்டுச் சென்றது ஓவ கீட்டுக்குப் புலப்பட்டது. எது எப்படியிருந்த போதிலும் தேனிய உதவி தனக்கு வேண்டியதில்லை என்றும், தனக்கும் தேனியருக்கும் எவ்வித உறவும் வேண்டியதில்லை என்றும் செனரத் தெரிவித்துவிட, ஓவ கீட் ஏமாற்றமடைந்து வந்த வழியைப் பார்த்துத் திரும்பி விட்டான்.

1620 ம் ஆண்டில் டி ஸா இலங்கைப் பிரதம சேனாதிபதிப் பதவியை விட்டு விலகினான். ஆயினும், 3 வருஷம் கழித்து, அதாவது 1623-ம் ஆண்டில், மீண்டும் வந்து இலங்கையில் டச்சுக்காரர் மிதிக்காமல் இருப்பதற்கான சகல முயற்சிகளையும் செய்தான். இதன் பொருட்டு அவன் திருக்கோணமலையிலும், மட்டக்களப்பிலும் பலமான கோட்டைகளைக் கட்டி கிழக்குக் கரையோரங்களை அரண் செய்தான். போர்த்துக்கீஸ அதிகாரிகள் தம்

1. Ove Giedde

சொந்த வருவாய் கருதிக் கண்டி அரசனுக்கு ஆயுதங்கள் விற்றுவருதையும் அவன் கண்டுபிடித்து அது நடவாதபடி தடுத்தான். போர்த்துக்கீஸரின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் இருந்த சோனகரையும் கலைத்தான். இச்சோனகரைக் கீழ் மாகாணத்தில், விசேஷமாக மட்டக்களப்புக்குத் தெற்கே, குடியேற்றியவன் கண்டி மன்னன். சோனகர் தம் ஜீவனோபாயத்தின் பொருட்டு நெல் விளைவிப்பதில் ஈடுபட்டு வந்தனர்.

*1627*-ம் ஆண்டிலும், *1628*-ம் ஆண்டிலும் கண்டி இராச்சியத்துக்கு எதிரான யுத்தத்தை டி ஸா தொடக்கினான். அவன் கண்டிமீது படை எடுத்து தலை நகரைத் தீக்கிரையாக்கிய போதிலும், அம்பதென்ன என்னும் இடத்தில் போர்த்துக்கீஸ படைகள் செனரத்தின் குமாரன் இராஜசிங்கனால் முறியடிக்கப்பட்டுப் பின்வாங்கின.

*1630*-ம் ஆண்டில் டி ஸா மீண்டும் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்தான். இப் படையெடுப்பு அவனது அழிவு காலத்துக்கே ஏதுவாக இருந்தது எனலாம். டி ஸாவுக்கு அடங்கியிருந்த சிங்களப் பிரதானிகளுக்குத் தானும் போர்த்துக்கீஸரின் கொடுமைகள் சகிக்க முடியவில்லை. எனவே, எப்படியாவது அவர்களின் ஆட்சிக்கு ஓர் முடிவுகாண அவர்கள் இரகசியமாகச் சதி செய்து சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். கண்டி இராச்சியத்தை நோக்கிப் படையெடுத்துச் சென்ற டி ஸா வதுளையை அடைந்து பட்டினத்தைத் தீக்கிரையாக்கினான். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த சிங்கள வீரர் முன்னேற்பாட்டின்படி போர்த்துக்கீஸ படையைவிட்டு அகன்று கண்டி அரசன் படையைச் சேர்ந்தனர். அப்போதுதான் தானும், தன் வீரரும் ஓர் பொறிக்



குள் அகப்பட்டதை டி ஸா கண்டு தென்பகுதிக் கரையை நாடித் தன் படைகளை இட்டுச்சென்றான். ஆனால், **ரன்டெனிவெல** என்னும் இடத்தைப் போர்த்துக்கீஸர் அடைந்ததும் கண்டி யரசனின் படைகள் அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு நிர்மூலமாக்கி வெற்றிமாலை சூடின. இதில் டி ஸாவும் தனது உயிரை இழந்தான். இது நிகழ்ந்தது *1630*-ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் *24*ந் திகதியிலாகும். இப் படுதோல்வி போர்த்துக்கீஸருக்குப் பல விதங்களாலும் கெடுதிகளை விளைத்தது. அவர்களுக்கு அடங்கியிருந்த பகுதிகள் ஒவ்வொன்றாக இழக்கப்பட, கொழும்பு மாத்திரமே அவர்களுக்கு அடங்கியதாக இருந்தது.

*1635*-ம் ஆண்டு செனரத் இறக்க அவன் புதல்வன் இராஜசிங்கன், **இரண்டாவது இராஜசிங்கன்** என்னும் பெயருடன் கண்டிக்கு அரசனானான். போர்த்துக்கீஸரை இலங்கையிலிருந்தும் கலைக்கவேண்டும் என்ற குறிக்கோளை அவன்கொண்டு அதன்பொருட்டு டச்சுக்காரரின் உதவியையும், நட்பையும் நாட நிச்சயித்தான். திருக்கோணமலையில் அல்லது மட்டக்களப்பில் ஓர் கோட்டை கட்டிக் கொடுப்பதோடு தான் போர்த்துக்கீஸருக்கு எதிராகச் செய்யும் போரில் தனக்கு உதவியளிப்பதற்கான ஓர் கடற் படைக்கு வேண்டிய செலவுகளைத் தருவதாகவும் அவன் டச்சுக்காரரைக் கேட்டான். போர்த்துக்கீஸரைத் துரத்திவிட்டு அவர்கள் வகித்த ஸ்தானத்தைத் தாமே வகிக்கச் சமயம் நோக்கியிருந்த டச்சுக்காரருக்கு இராஜசிங்கனின் கோரிக்கை வாய்ப்பாக இருந்தமையினால் அவர்கள் அதற்கு இணங்கச் சித்தமாயிருந்தனர். டச்சுக்காரருக்கும் கண்டியரசனுக்குமிடையில் இப்படியான ஓர் கூட்டுறவு ஏற்பட்டால் தமக்கு அபாயம் சூழும் என்பதை உணர்ந்த போர்த்துக்கீஸர் கண்டியைத் தாக்

கும்படி **டி மெல்லோ கஸ்ரோ**[1] என்பவனின் தலைமையில் ஓர் படையை 1638-ம் ஆண்டில் அனுப்பினர். கண்டி அரசனின் படைகள் போர்த்துக்கீஸ படைகளைக் கன்னொருவையிற் சந்தித்துப் போரிட்டு வெற்றி கண்டன. இந்த யுத்தத்தில் டி மெல்லோ கஸ்ரோவும் மாண்டான். இத் தோல்வியின் பயனாகப் போர்த்துக்கீஸருக்கு விரோதமாகக் கீழ் நாடுகளில் உள்ளார் கலகம் செய்தனர். இதுவரை அவர்களுக்கு அடங்கி நடந்தவர்கள் இப்போது பகைவராக இரகசியமாகவும், பரகசியமாகவும் கிளம்பினர். தொகுத்துக் கூறுங்கால், கீழ் நாட்டிற் போர்த்துக்கீஸருக்கு உற்ற நண்பர்களாக, விசுவாசமுள்ளவர்களாக இருந்தவர்களின் தொகை அருகிவந்து ஈற்றில் ஒரு சிலரே அவ்வாறு இருக்கும் நிலை ஏற்பட்டது.

1638-ம் ஆண்டில் இரண்டாவது இராஜசிங்கனுக்கும் டச்சுக்காரருக்கு மிடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கான வசதிகளை டச்சுக்காரருக்கு இலவசமாகச் செய்து கொடுக்கவும், அவர்களுக்கு எதிரிகளாயுள்ளார் வியாபாரம் செய்வதைத் தடுக்கவும் இராஜசிங்கன் சம்மதித்தான். போர்த்துக்கீஸரை இலங்கையில் இருந்து துரத்துவதில் தனக்கு டச்சுக்காரரால் உதவப்படும் துணைப் படைக்கு வேண்டிய செலவையும் தானே கொடுப்பதற்கு இணங்கினான். இவ்வாறு செய்யப்பட்ட உடன்படிக்கை விதிகளில் ஒன்று பின்னர் விவாதத்துக் கேதுவாகிப் பிணக்கைக் கொண்டுவந்தது. போர்த்துக்கீஸரிடம் இருந்து கைப்பற்றும் கோட்டைகளை அரசன் இடிக்காவிட்டால் அவற்றுள் டச்சு இராணுவம் இருக்கவேண்டும் என்பதே அவ்விதி. அரசனுக்கு நன்குதெரிந்த போர்த்துக்கீஸ பாஷையில் எழுதப்பட்ட பிரதியில் இந்த விதி

1. De Mello Castro



இருக்க, அதற்குச் சம்மதித்து அரசன் கையொப்பமிட்டது விந்தையானது. ஆனால், டச்சுப் பாஷையில் எழுதப்பட்ட பிரதியில் இவ்விதி காணப்படவில்லை என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

டச்சுக்காரரின் தாக்குதல் காரணமாகப் போர்த்துக்கீஸ கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ச்சியுற்றன. போர்த்துக்கல்லின் கடற்படைகளையும் டச்சுக்காரர் வெற்றிகொண்டு அழித்தனர். எனவே, போர்த்துக்கீஸ ஆட்சி முடிவு காலம் இப்பவோ பின்னையோ என்ற சஞ்சலமான நிலை எய்தியது.

இதுவரை ஸ்பானிய சாம்ராஜ்யத்தின் ஓர் பகுதியாகவே போர்த்துக்கல் இருந்து வந்தது. ஆனால் 1642-ம் ஆண்டில், இவ்வுறவைப் போர்த்துக்கல் நீக்கி ஸ்பானிய சாம்ராஜ்யத்திலிருந்தும் விலகி ஓர் 10 வருஷச் சமாதான உடன் படிக்கையை ஒல்லாந்து நாட்டுடன் செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையின் பயனாக டச்சுக்காரர் இராஜசிங்கனைக் கைவிட்டு, போர்த்துக்கீஸருடன் இன்னோர் உடன் படிக்கை செய்து அவர்களிடம் இருந்து சப்த கோரளை (நீர் கொழும்பு) யையும், வெந்தோட்டை ஆற்றுக்குத் தென் பாகத்தில் இருந்த பகுதியையும் பெற்றுத் தமதாக்கினர். தன்னை இவ்வளவு தூரம் டச்சுக்காரர் ஏமாற்றிவிட்டார்கள் என்பதை உணர்ந்த இராஜசிங்கன் அவர்கள்மீது பகைமை பாராட்டி வந்தான்.

போர்த்துக்கீஸருக்கும், டச்சுக்காரருக்கும் இடையே 1642-ம் ஆண்டு ஏற்பட்ட 10 வருடச் சமாதான உடன்படிக்கைக் காலம் 1652-ம் ஆண்டு முடிவடைய இவ்விரு சாகியத்தார்க்கு மிடையே மீண்டும்போர் மூண்டது. **வான் கோவன்ஸ்**[1] என்னும் டச்சுக் கடற்படைத் தலைவன்

1. Van Goens

போர்த்துக்கீஸர் படை ஒன்றினை முறியடித்தான். இதன் பயனாக இலங்கையில் இருந்த டச்சுத் தரைப் படைகளுக்குத் துணைப் படைகள் அனுப்ப முடிந்தது. காலி, கழுத்துறை, மொரட்டுவ, நீர்கொழும்பு என்னும் இடங்களை டச்சுக்காரர் போர்த்துக்கீஸரிடம் இருந்து கைப்பற்றி, ஈற்றில் கொழும்பு நகரை 1655-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 1656-ம் ஆண்டு மே மாதம் வரை முற்றுகையிட்டனர். போர்த்துக்கீஸர் மிகுந்த வீரத்துடன் போரிட்டுக் கொழும்பைப் பாதுக்காக்கச் சங்கற்பம் செய்தனர். ஆனால், அவர்களுக்கிடையே நோய், உணவுப் பஞ்சம் என்பன பரவிப் புலர் இறக்க நேரிட்டது. இனியும் நிர்வகிக்க முடியாது என்பதை அவர்கள் கடைசியாக உணர்ந்து டச்சுக்காரருக்குச் சரணாகதியடைந்தனர். டச்சுக்காரர் தோல்வியுற்ற தம் பகைவரைச் சகல யுத்த மரியாதைகளுடனும் வெளியேறச் செய்து, கொழும்பு நகரத்துட் புகுந்து வெற்றிக்கு அறிகுறியாகத் தமது கொடியை ஆரோகணித்தனர். இவ்வாறாகப் போர்த்துக்கீஸர் ஆட்சி இலங்கையில் முடிவெய்தியது.

இலங்கையைப் பரிபாலித்த தன்மையில் போர்த்துக்கீஸர் அநுகூலமடையவில்லை. அவர்களின் ஆட்சி மக்களுக்கு நன்மை விளைக்கவில்லை. தாம் வைத்ததே சட்டம் என்றும், பிரஜைகளாயினோர் தமக்கு அடங்கிக் கேவலம் அடிமைகள்போல உழலவேண்டும் என்றும் அவர்கள் நினைத்துப்போலும், கொடிய—ஈவிரக்கம் காட்டாத சட்டங்களை விதித்து, சமரசத்தையும் சமாதானத்தையும் அடிப்படையாகக்கொள்ளாத சர்வாதிகார ஆட்சியினையே கைக்கொண்டதால் சனங்கள் அவ்வாட்சிமீது அருவருப்பும் துவேஷமும் கொண்டனர். எனவே, அவர்கள் போர்த்துக்கீஸரிடத்து உண்மையான விசுவாசம் பாராட்டி நடக்கவில்லை. இதனால்தான் போர்த்துக்கீஸப் படைகள் கண்டி யுத்தங்களில் தோல்வியடைய, ஏனைய இடங்களில் உள்ளவர்களும் போர்த்துக்கீஸருக்கு எதிராக எப்போதும் கிளம்பினர். போர்த்துக்கீஸர் இலங்கைமீது கொடுங்கோலாட்சி செய்தமை ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை; எனவே அவர்களுக்குத் தக்க தண்டனையளித்து அவர்களுக்கு ஓர் கற்பனை யூட்டுதற் பொருட்டே இலங்கையை அவர்களிடம் இருந்து பறித்தார் என்று போர்த்துக்கீஸ குரவரான கேயிரோஸ் என்பவரே எழுதியிருக்கிறார் என்றால் இவ்விஷயமாக வேறு கூற என்ன இருக்கிறது? கேயிரோஸ் சுவாமியார் இதுபற்றி எழுதியமை கூர்ந்து நோக்கற்பாலது; அவர் கூறுவதாவது :—

"போர்த்துக்கீஸர் இழைத்த அநீதி, பலாத்காரம் பிழைகள் என்பவற்றை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இப்படியான கொடுமைகளை அவர்கள் இழைத்ததாலேயே ஆண்டவன் இவ்வாறு அவர்களைத் தண்டித்திருக்கிறார். அத் தண்டனை நீதியானது. யுத்த காலத்திலாக, சமாதான காலத்திலாக துர் அதிர்ஷ்டசாலிகளாகிய சிங்கள மக்களின் நிலைமை ஒரே விதமாகவே இருந்தது. பகிரங்கமான போர் கண்டி அரசனுக்கோ வேறும் கலகக்காரருக்கோ எதிராக இருந்தாலும் ஓர் இரகசியமான யுத்தம் சுதேசக் குடிகளுக்கு எதிராகச் செய்யப்பட்டு வந்தது. இலங்கையிலே யுத்தம் அடிக்கடி நிகழ்ந்து தொடர்ந்து நடந்துவந்த படியினால் இக் குடியானவர்கள் சாதாரண பகைவர்போலவே மதிக்கப்பட்டு வந்தனர் என்றும் சமாதானம் நிலவிய காலம் எனப்பட்ட காலத்திலும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கப்படவில்லை என்றும் திடமாகக் கூறலாம்".

தர்மபாலன் தனது இராச்சியத்தைப் போர்த்துக்கீஸ மன்னனுக்கு நன்கொடையாகக் கையளித்தபோது நாட்டுச் சட்டங்களின் படிக்கே இவ்விலங்கையைப் பரிபாலிக்கப் போர்த்துக்கீஸர் உடன்பட்டனர். இவ்விஷயமாக அவர்கள் என்ன செய்தனர் என்பதைக் கேயிரோஸ் சுவாமியார் பின்வரும் கருத்துப்பட வெளிப்படையாகக் கூறுகிறுர் :—

"இந் நாட்டின் சட்டங்கள் என்ன? மக்கள் கைக்கொள்ளும் பாரம்பரிய வழக்கங்கள் என்ன? என்று அறியப் போர்த்துக்கீஸர் எப்போதாவது சிரத்தைகொள்ளவில்லை. இச் சட்டங்களையும், வழக்கங்களையும் எழுதி அவற்றை எல்லாரும் அறிந்துகொள்ளற் பொருட்டுப் பிரசுரிக்கவும் இல்லை. அதிகாரிகளாயுள்ளார் தமது மனம் போனபடி செய்ய அநுமதிக்கப்பட்டனர். பேராசையும், சுயநலமும் கொண்டுள்ள ஒரு சிலர் யுத்தத்தைக் காரணமாகக் கொண்டும், இன்னும் ஒரு சிலர் தாம் கிராமங்களை வாடகைக்குப் பெற்றவர்கள் என்ற காரணத்தைக்கொண்டும், வேறும் சிலர் அரசிறையோ (போர்த்துக்கீஸ) அரசருக்குச் செய்யவேண்டிய ஊழியத்தையோ காரணமாகக்கொண்டும் குடியானவர்களை வருத்தினர். நாம் வெற்றிகண்ட ஏனைய நாடுகளில் இவர்களைப் போன்ற பொல்லாத கள்வர்கள் இருக்கவில்லை. இவர்கள் பேராசை பிடித்த சுயநலப் புலிகள்; தமது பேராசையைப் பூர்த்தி செய்வதற்கு எதுவேண்டுமோ அதனைச் சட்டமாகப் பிரயோகித்தனர்."

மேலே காட்டிய வாக்கியத்தை எழுதியவர் பட்சபாதமற்ற ஓர் போர்த்துக்கீஸ சரித்திர வாசிரியர். அவருடைய கூற்றிலிருந்தே போர்த்துக்கீஸரிடம் சிங்கள மக்கள் விசுவாசத்துடன் நடக்காத காரணம் பெறப்படும்.



போர்த்துக்கீஸர் இவ்வாருகக் கருமம் ஆற்றி, நல்லாட்சிக்கு மூலாதாரமாக இருக்கவேண்டிய பிரஜா விசுவாசத்தை இழந்தமையினுல், அவர்களது ஆட்சி நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்க ஏது இருக்கவில்லை. எப்போதோ ஓர் காலத்தில் அழிந்தொழியவேண்டிய ஆட்சியாக அது இருந்தது.


கண்டி இராச்சியத்துடன் செய்த யுத்தங்களினுலும் போர்த்துக்கீஸ அதிகாரமும், செல்வாக்கும், செல்வமும் சிதையலாயின. ஆனுல், கடற்படை வலிமையை அவர்கள் இழந்ததே அவர்களின் கடைசி நாசத்துக்குக் காரணமாக இருந்தது. போர்த்துக்கீஸ சாம்ராஜ்யம் கடற்படை வலிமையையே ஆதாரமாகக் கொண்டிருந்தது. எனவே, அவ்வலிமை குன்றிக் கெட சாம்ராஜ்யமும் அழிந்து ஒழிந்தது.

## போர்த்துக்கீஸ பரிபாலனமும், அதன் பலாபலன்களும்.

வடக்கே யாழ்ப்பாணம், மன்னுர் என்னும் இரு இடங்களிலும், மேற்கே கரையோரப் பகுதிகளிலும் தென்மேற்கில் கொழும்பு, காலி, நீர்கொழும்பு சப்பிரகம், சீதவாக்கை, மெனிக்கடவரை போன்ற கோட்டைகள் அடுத்த பகுதிகளிலும் போர்த்துக்கீஸர் ஆட்சி வலுப்பெற்றிருந்தது. அக் காலத்தில் போர்த்துக்கீஸர் வசமாக இலங்கையில் இருந்த பகுதிகள் பரிபாலன வசதியின் பொருட்டுப் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தன :

**1. மாத்தறை திஸாவனி :** கொழும்புக்குத் தெற்கிலிருந்து இருவப்பற்று மேற்குவரையுள்ள கரையோரப் பகுதியை இது கொண்டது.

**2. நாலுகோறளைத் திஸாவனி :** இப்போது கேகாலைப் பகுதியில் இருக்கும் இடத்தை இது கொண்டது.




போர்த்துக்கீஸ மாகாணங்கள்.



**3. சப்தகோரளைத் திஸாவனி:** இப்போது வடமேல் மாகாணமாயுள்ள பகுதி இதில் அடங்கியது.

**4. சப்பிரகமுவத் திஸாவனி:** இப்போது இரத்தினபுரிப் பகுதியாயிருப்பது இத்திஸாவனியில் அடங்கியது.

**5. யாழ்ப்பாணமும் மன்னரும்:** மேலே கூறப்பட்ட திஸாவனிகள் போர்த்துக்கீஸ அதிகாரிகளின் பரிபாலனத்தில் விடப்பெற்றன. சிங்களப் பகுதிகள் பிற்காலத்தில் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது அம் மாகாணங்களுக்கும் திஸாவனி என்றே பெயரிட்டார்கள். "கவர்ண்மென்ட் ஏஜென்ட்" எனப்படும் **மாகாணாதிபதிகளை** இப்போதும் சிங்கள நாட்டுப்புற மக்கள் "திஸாவை ஹாமுத்துருவ" என்று வழங்கிவருவதும் ஈண்டு நோக்கற்பாலது. போர்த்துக்கீஸ திஸாவைகளில் சப்பிரகமுவத் திஸாவையாக விருந்த சிமாவோ பின்ஹாவோ என்பவன் நீதிமானாக இருந்து பிரக்கியாதிபெற்றவன். போர்த்துக்கீஸரின் சப்பிரகம்கோட்டை ஒருகாலத்தில் இருந்து, இப்போது இரத்தினபுரி என்று வழங்கப்படும் இடத்தில் உள்ள ஸமன் தேவாலயத்திலே அவன் ஞாபகார்த்த மதிற்கல்லு ஒன்று இன்னும் உண்டு. பின்ஹாவோ போர்த்துக்கீஸனாக இருந்தபோதிலும் உயர்குலச் சிங்களப் பெண் ஒருத்தியை விவாகம் செய்து இலங்கையிலேயே இறந்தான். யாழ்ப்பாணத்துக்கு எதிராகப் போர்த்துக்கீஸர் நடத்திய போரிலும், அசவிடோவின் தலைமையில் கண்டிக்கெதிராக நடந்த போரிலும் இவன் பங்குபற்றிப் பிரபல்யம் அடைந்தவன்.

யாழ்ப்பாண இராச்சியத்தின்மீது பகைவர் படை எடுக்காமல் இருப்பதற்கு யாழ்ப்பாணம், மன்னார் என்ற

இரு இடங்களும் பாதுகாப்புடன் இருக்கவேண்டும என்பதற்காக "கப்ரின் மேஜர்" ஒருவனின் பொறுப்பில் அவை விடப்பட்டன.

மத்திய அரசாங்கம் உயர்ந்த இராணுவ அதிகாரியின் பொறுப்பில் இருந்தது. ஆரம்பத்திலிருந்தே போர்த்துக்கீஸ ஆட்சி இலங்கையில் இராணுவ ஆட்சியாக இருந்தது. அடிக்கடி யுத்தங்கள் நிகழ்ந்ததால் அந்த இராணுவ ஆட்சி இறுதிக்காலம்வரை தொடர்ந்து நடைபெற்றது. இலங்கையில் போர்த்துக்கீஸருக்குரிய பகுதிகள் முழுவதையும் பரிபாலித்த பிரதான அதிகாரி "**கப்ரின் ஜெனரல்**" என அழைக்கப்பட்டான். இவனுக்கு மேலதிகாரியாக இருந்தவன் கோவை இராஜப்பிரதிநிதியே யாவன். கோவை இராஜப் பிரதிநிதி இடும் கட்டளைகளை நிறைவேற்றவேண்டியவன் இலங்கை "கப்ரின் ஜெனரல்". இவனது உத்தியோக வாசஸ்தானம் கொழும்புக் கணித்தாகவுள்ள மல்வானை என்னும் இடத்தில் இருந்தது. நிதி விஷயமான பரிபாலனத்திலும், நீதி பரிபாலனத்திலும் கப்ரின் ஜெனரலுக்கு உதவிசெய்ய இரு உயர்தர அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். நிதி விஷயமான அதிகாரியை "**வெடோர் டி வாஸென்டா**[1]" என்றும் நீதி பரிபாலன அதிகாரியை "**ஓவிடோர்**[2]" என்றும் போர்த்துக்கீஸ பாஷையிற் கூறினர். தமிழில் முறையே நிதி அதிகாரி என்றும் நீதி அதிகாரி என்றும் அவர்களைக் கூறலாம்.

கொழும்பை "**கமரு**[3]" என்று போர்த்துக்கீஸ பாஷையில் வழங்கப்பட்ட ஓர் **பட்டின சங்கம்** பரிபாலித்தது. அந்நகரத்துக்குள் 1500 வீனைரும், 900 உயர்குலப் போர்த்துக்கீஸக் குடும்பத்தினரும் வாழ்ந்தனர். பல கிறிஸ்தவ தேவாலயங்களும், கன்னிகாஸ்திரி மடங்களும், வறியவர்

1. Vedor de Fazenda, 2. Ouvidor, 3. Camera



களைப் போஷிக்கும் விடுதி ஒன்றும், ஆஸ்பத்திரி ஒன்றும் அங்கே இருந்தன. இப்போது கோட்டைப் பகுதியில் கான்மணிக்கூண்டுக் கோபுரம் இருக்கும் இடத்திலே ஓர் யேசு சபைக் கல்லூரியும் இருந்தது. மாகாண அரசியற் பரிபாலனம் அநேகமாகப் பழைய சிங்கள முறையையே ஒட்டியிருந்தது. ஒவ்வோர் மாகாணத்துத் திஸாவையும் தன் தன் பகுதியில் ஊர்ப் பரிபாலனம், நீதி பரிபாலனம் என்பவற்றை ஆற்றுவதோடு இராணுவ சம்பந்தமான கடமைகளையும் ஆற்றவேண்டியவனா யிருந்தான். அரசனுக்குச் சேரவேண்டிய அரசிறையைச் சேகரித்தல், ஊரவர்களுக் கிடையே நிகழும் வியாச்சியங்களை விசாரணைசெய்து தீர்த்தல், உள்ளூரில் மானிய முறையிற் சேர்க்கப்படும் குடிபடைகளைப் போருக்கு இட்டுச் செல்லல் என்பன ஒவ்வோர் திஸாவையின் கடமையாக இருந்தன. திஸாவைகளுக்குக் கீழ் **கோரளைகள்** இருந்தனர். இவர்களுக்கும் திஸாவைகளுக்கு இருந்த கடமைகள் போன்ற கடமைகள் உண்டு. கோரளைகளுக்குக் கீழ் **அத்துக்கோரளை**மார், விதானைமார், **சிறு தலைமைக்காரர்** என்பவர்கள் இருந்தனர். கோரளைமார், அத்துக்கோரளைமார் என்பவர்கள் அநேகமாகப் போர்த்துக்கீஸராகவே இருந்தனர். விதானைமாராகவும் அவர்கள் இருந்ததுண்டு. சிறு தலைமைக்காரராகச் சிங்களவர் இருந்து போர்த்துக்கீஸருக்குச் சேவை செய்தனர்.

அரசிறை பல விதங்களாற் சேகரிக்கப்பட்டது. கோட்டை அரசனின் உரிமைக்காரன் என்ற நியதியில் போர்த்துக்கீஸ அரசனுக்கே நிலம் முழுவதும் சொந்தமாயிருந்தது. அந் நிலத்தின் பொருட்டு ஊரவர் தானியமாக இறை செலுத்தவேண்டும், அல்லது இராஜகாரிய ஊழியம் செய்யவேண்டும். போர்த்துக்கீஸ அரசர்கள்

தமது பரிபாலனத்தில் உள்ள கிராமங்களை **"பொரி ரோஸ்[1]"** என்று போர்த்துக்கீஸ பாஷையில் வழங்கப்பட்ட **குத்தகைக்காரருக்குக்** குத்தகையாகக் கொடுத்துவிடுவர். இக் குத்தகைக்காரர் தமது சொந்த ஆதாயம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கிராம நிலையங்களில் இருந்து எவ்வளவை வசூலிக்க முடியுமோ அவ்வளவையும் வசூலித்து கிராம மக்களைக்கொண்டு எந்த நேரமும் துன்புறுத்தி ஊழியம் செய்வித்தனர். இப்படியான அரசிறையை விட இரத்தினங்கள், முத்துக்கள், கறுவா, பாக்கு, மிளகு, யானை என்பவற்றை விற்பதற்குப் போர்த்துக்கீஸ அரசருக்கு மாத்திரமே இருந்த ஏகபோக உரிமையாலும் பெருந் தொகையான வருமானம் கிடைத்தது. இதனைவிட **பூதல்வரி** (மரலபடா[1])யினாலும் போர்த்துக்கீஸர் வருவாய் பெற்றனர். பூதல்வரியினால் இடைஞ்சற் பட்டவர்கள் கிறிஸ்தவர்களல்லாதோர். அவர்கள் தமக்குக் கிடைக்கும் ஆதனத்தின் பெறுமதியில் மூன்றில் ஒரு பங்கை வரியாக அரசாங்கத்துக்கு இறுக்கவேண்டும் என விதிக்கப்பட்டனர். நீதித் தலங்களில் விதிக்கப்படும் அபராதப் பணம் இன்னோர் வித வருமானமாக இருந்தது. இப் பணங்கள் எல்லாம் மேலே கூறிய வெடோர்டி வாஸன்டா என்னும் நிதிஅதிகாரியின் பரிபாலனத்தில் இருந்த அரசாங்கத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டன.

மாகாண நீதிபரிபாலனத்தை அவ்வம் மாகாணத்துத் திஸாவைமார் செய்துவந்தனர். அத்துடன் ஒளவிடோர் என்ற நீதிபரிபாலன அதிகாரி நீதிபரிபாலனம் செய்தற்பொருட்டு வருடம் ஒரு முறை மாகாணங்களுக்கு விஜயம் செய்வர். 'மரலபடா' என்ற பூதல் வரியைச் சேகரிக்கும் நோக்கமாகவும், வழக்குகளை விசாரணை செய்யும் நோக்கமாகவுமே ஒளவிடோர் இவ்வாறு மாகாணங்களுக்கு விஜயம் செய்வர். மத்தியகால ஐரோப்பாவில் விசாரணைக்கு வரும் எதிரிகளுக்குச் சித்திரவதை செய்து அவர்களிடம் இருந்து உண்மை அறியும் முறை இருந்தது. இந்த முறையையே போர்த்துக்கீஸரும் நீதிபரிபாலன விஷயத்தில் இங்கு அநுட்டித்தனர்.

1 Foreyros. 1 Marala Badda



இலங்கையிற் போர்த்துக்கீஸ அதிகாரம் அநுகூலம் அடையவில்லை. அரசாங்கம் எப்போதும் கடனாளியாகவே இருந்தது என்று கேயிரோஸ் சுவாமியார் எழுதியிருக்கிறார். இப்படியான கேவல நிலைமைக்குப் பிரதான காரணம், வெடோர்டி வாஸென்டா, ஒளவிடோர் என்னும் அதிகாரிகள் உட்படச் சகல உத்தியோகத்தரும் தம் **சுயநலம் கருதிக் கருமம் ஆற்றியமையே** என்க. போர்த்துக்கீஸ உத்தியோகத்தரான சுயநலமிகள் கிறிஸ்தவ திருச்சபைக்குச் சேரவேண்டிய வருவாயைத்தானும் அபகரித்துத் தமதாக்கினர். இப்படியெல்லாம் செய்தாலும் பொதுஜனங்களைக் கண்ணியமான முறையிற் பரிபாலித்தனரோ என்றால் அதுவும் இல்லை. ஊரவர்கள் போர்த்துக்கீஸ ஆட்சியை வெறுத்தனர். தேசத்துச் சட்டங்களைப் பேணிஅவற்றின் பிரகாரம் பரிபாலிக்க மல்வானை உடன்படிக்கையில் வாக்குறுதி செய்த போர்த்துக்கீஸ அதிகாரிகள் அச் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. ஊரவர்கள் வெறுப்புக் கொண்டதற்கு இது ஓர் காரணமாகும். மானியமுறை நடைபெறும் தேசத்திலே ஒவ்வொரு பிரஜையும் இறுக்க வேண்டிய தானியம் இவ்வளவு, செய்யவேண்டிய ஊழியம் இவ்வளவு என்பது பாரம்பரிய வழக்கத்தின்படி விதிக்கப்பட்டிருப்பது. அவ்வாறு விதிக்கப்பட்டதற்கு மேலாக அறவிட அரசாங்கம் துணியாது. ஆனால் போர்த்துக்கீஸர்

பாரம்பரிய வழக்க முறைகளைக் கைவிட்டு ஊரவர்களிடம் இருந்து எவ்வளவு அறவிட முடியுமோ அவ்வளவையும் ஈவு இரக்கமின்றி அறவிட்டனர். அரசிறையை அறவிடுவதில் போர்த்துக்கீஸ அதிகாரிகள் சர்வாதிகாரிகள்போலக் கருமம் ஆற்றினர். அவர்கள் தம் மனம்போன போக்கின்படி இவ்விஷயத்திற் கருமம் ஆற்றுவதே சர்வசாதாரணமாக இருந்தது. சுருங்கக் கூறுங்கால் அரசிறையை அறவிடும் விஷயத்தில் அவர்கள் கேவலம் கொள்ளைக் கூட்டத்தினர்போல தயவு தாட்சண்யமின்றி அகப்பட்டதைச் சுருட்டுவதில் மாத்திரமே கண்ணும் கருத்துமாயிருந்தனர். சர்வம் கொள்ளை மயமாகவே அக்காலத்தில் அவர்களின் உத்தியோகக் கருமம் விளங்கியது என்று கூறினால் அது மிகையாகாது. திருட்டின் பொருட்டே அவர்கள் இலங்கைக்கு வந்தவிதமாக அவர்கள் நடந்துகொண்டனர்.

பொருளாதார விஷயமாக இவ்வாறு நாசத்தனமான பரிபாலனத்தை நடத்தியதோடு போர்த்துக்கீஸர் நின்றுவிடவில்லை. அவர்கள் தயவு தாட்சண்யமற்றவராய், பழி பாவத்துக் கஞ்சாதவராய், கேவலம் மிருகத்தனமான கொடுங்கோலாட்சி புரிந்தமையினால் பிரஜைகளது துவேஷத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டனர். ஹிந்துக்களையும் பௌத்தர்களையும் அவர்கள் வெறுப்புடன் நோக்கி அவர்களை அஞ்ஞானிகள் என்றும், கல்லையும் செம்பையும், இரும்பையும், மரத்தையும் வணங்குபவர்கள் என்றும் கேலி செய்து மதவெறி கொண்டிருந்தனர்.

போர்த்துக்கீஸர் இப்படியான கொடுங்கோலராக இருந்தும், இன்றைய இலங்கையின் அம்சங்களாக விளங்கும் சிலவற்றை விட்டுப்போயிருக்கிறார்கள் தான். "அஞ்ஞானிகளை" மனந் திருப்பவந்த போர்த்துக்கீஸ குருமாரின் முயற்சியால் ரோமன் கத்தோலிக்க சமயம் நன்கு விருத்தியானது. இன்று இலங்கையிலே பல்லாயிரக் கணக்கான கத்தோலிக்கர் பெருகியிருப்பதற்கு இவர்களின் முயற்சியே காரணம். கத்தோலிக்க குருமார் போர்த்துக்கீஸ அதிகாரிகளின் கொடுங்கோலாட்சியை அக்காலத்தில் எதிர்த்து நின்றனர். கேயிரோஸ் சுவாமியார் என்ற குருவானவர் தமது நூலில் எவ்வாறு போர்த்துக்கீஸ ஆட்சியை ஆணித்தரமாகக் கண்டித்திருக்கிறார் என்பது அந்நூலை வாசிப்பவர்க்கு நன்கு விளங்கும். போர்த்துக்கீஸ குருமார் தம் கட்டளைகளில்[1] உள்ள கத்தோலிக்கப் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக ஒவ்வோர் கட்டளையிலும் பாடசாலைகளை ஏற்படுத்தி "அஞ்ஞானிகளை" மனந்திருப்பத் தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் செய்தனர். சிங்களத்திலும் தமிழிலும் ஓர் நவ இலக்கியம் தோன்றவும் அவர்கள் துணையாக இருந்தனர். கத்தோலிக்க மத சம்பந்தமான இலக்கியமே அது. **வாஸ்,**[2] **கொன்ஸால்வஸ்**[3] என்ற இரு குருமாரும் இயற்றிய கத்தோலிக்க மத சம்பந்தமான சிங்கள நூல்கள் இன்றும் கத்தோலிக்கரால் உச்சிமேல் வைத்துப் போற்றப்படுகின்றன. கொழும்பிலே யேசுச் சபையார் ஓர் உயர்தர கலாசாலையை வைத்து நடத்தினர். ஆரம்பப் பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவு என்னும் முப்பிரிவுகளை அக்கலாசாலை கொண்டிருந்தது. ஆரம்பப் பிரிவில் வாசிப்பு, எழுத்து, எண், சிங்களம், லத்தீன் என்பன போதிக்கப்பட்டன. சிரேஷ்ட பிரிவில் இலக்கணம், காவியம், மனித தத்துவம் என்பனவும் அதிசிரேஷ்ட பிரிவில் ஒழுக்க ஞானமும் போதிக்கப்பட்டன. இக்கலாசாலை

1 கோயிற்பற்று எனவும் கூறுப. 2 Father Vaz; 3 Father Goncalvez

யில் லத்தீன் பாஷை படித்துப் பாண்டித்தியம் பெற்றவர்தான் அழகியவண்ணன் என்ற பிரபல சிங்களக் கவிஞர். இக்கலாசாலை தன்னிடம் கல்விகற்ற மாணவர்களைச் சிலாகித்து அப்பாடசாலையின் அறிக்கை ஒன்று பின்வரும் கருத்துப்படக் கூறுகிறது:- "இலங்கை மாணவர்கள் தமக்கு ஊட்டப்படும் பாடங்களைச் சுலபத்திற் கிரகிக்கும் சக்தியும் புத்திக் கூர்மையும் உள்ளவர்கள். ஐரோப்பியர் ஒரு வருஷகாலம் படித்து லத்தீன், ஞான நூல்கள், விஞ்ஞான சாத்திரம் என்பவற்றிற் பெறும் அறிவைப் பார்க்கிலும் கூடிய அறிவை இம்மாணவர்கள் ஆறே ஆறு மாதத்தில் குறித்த அதே பாடங்களைப் படித்துப் பெற்றுவிடுகிறார்கள்." கொழும்புக் கலாசாலையில் 150 மாணவர்கள் படித்தனர். அதற்கு வேண்டிய வருவாய் மொரட்டுவ, கோகிலவத்தை, முன்னேஸ்வரம் என்னும் இடங்களில் இருந்து பெறப்பட்டது. கத்தோலிக்க குருமார்கள் மத சம்பந்தமான, தத்துவார்த்த நாடகங்களையும் தோற்றுவித்து கம்மல, மாதம்பை, சிலாபம் என்னும் இடங்களில் நடிப்பித்துக் காட்டினர். சமுதாய வாழ்க்கையிலும், சிங்களர் தமது எஜமானரான போர்த்துக்கீஸரின் பழக்க வழக்கங்கள் சிலவற்றைக் கையாண்டனர். கரையோரப் பகுதிகளில் வசித்த பலர் போர்த்துக்கீஸரின் உடைகளைத் தாமும் கைக்கொள்ளத் தொடங்கினர். இப்போது சிங்களத்திலும் தமிழிலும் வழங்கி வரும் "தொப்பி," "கமிசை," "சப்பாத்து," "அலவாங்கு" என்பன போன்ற சொற்கள் போர்த்துக்கீஸச் சொற்களே. இன்னும் சில சுதேசிகளானவர்கள் பெரேரா, சில்வா, றொட்றிகோ, அல்மெய்தா, சல்காது முதலாம் போர்த்துக்கீஸ பெயர்களைத் தமக்கு இட்டுக்கொண்டனர்.



## வினாக்கள்.

1. கிழக்கு நாடுகளில் போர்த்துக்கீஸரின் செல்வாக்கு அபிவிருத்தியடைந்தமையைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுக?


2. போர்த்துக்கீஸர் இலங்கையை அடையும் காலத்திலே இந்நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பதை விபரித்துக்கூறுக?

3.] கோட்டை இராச்சியத்துக்குப் போர்த்துக்கீஸ மன்னர் எவ்வாறு, ஏன், உரிமைக்காரர் ஆயினர் என்பதை விளக்குக?

4. கண்டி இராச்சியத்துக்கு விரோதமாகப் போர்த்துக்கீஸர் போர் தொடுத்த காரணம் என்ன? அவர்கள் ஏன் அநுகூலமடையவில்லை?

5. இலங்கையில் போர்த்துக்கீஸ பரிபாலனத்தைப் பற்றி ஓர் கட்டுரை எழுதுக: அப்பரிபாலனம் அநுகூலமடையவில்லை என்று நீர் கருதுகிறீரா? அப்படிக் கருதுவதற்குக் காரணம் என்ன?

6. போர்த்துக்கீஸ பரிபாலனத்தினால் இலங்கை அடைந்த நிரந்தரமான பெறுபேறுகள் எவை எவை என்று நீர் கருதுகிறீர்?




ஒல்லாந்த பிரதேசங்களும் கண்டி மாகாணங்களும்



## அதிகாரம் 3.

## டச்சுக்காலம் 1656-1796

ஐரோப்பாவில் ஒல்லாந்து தேசத்தைப் பள்ள நாடுகள் அல்லது தாழ்ந்த பிரதேசம் என்பர். ஸ்பானிய சாம்ராஜ்யத்தின் ஓர் பகுதியாக ஒல்லாந்து ஓர் காலத்தில் விளங்கி அச்சாம்ராஜ்யத்தின் செல்வ வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணமாக இருந்தது. சிறந்த வினைத் தொழில்களுக்கும் வர்த்தகப் பொருள்களுக்கும் பேர் போன பல நகரங்களை ஒல்லாந்து கொண்டதாய் ஸ்பானிய சாம்ராஜ்யத்தின் செல்வத்துக்கு ஹிருதய ஸ்தானமாக மிளிர்ந்தது. ஒல்லாந்து, பெல்ஜியம் என்ற இரண்டு தேசங்களையும் நெதர்லன்ட்ஸ் என்று ஆங்கிலத்தில் வழங்குவதுண்டு.

ஸ்பானிய அரசனுயிருந்த பிலிப் என்பவனின் கொடுங்கோன்மையைச் சகிக்காது ஒல்லாந்த மக்கள் அவனுக்கு எதிராகக் கலகம் விளைத்தனர். இவனுடைய தந்தையின் காலத்தில் ஒல்லாந்து தேச மாகாணங்கள் ஒல்லாந்தப் பிரபுக்களால் ஆளப்பட்டன. தம்மவரே தம்மைப் பரிபாலித்தபடியால் ஒல்லாந்து மக்கள் திருப்தியுடன் வாழ்ந்தனர். ஆனல் பிலிப் என்பவன் சக்கரவர்த்தியாக வந்ததும் டச்சுப் பிரபுக்களை அதிகார பதவிகளில் இருந்து நீக்கி அவர்களுடைய இடத்துக்கு ஸ்பானியரைத் தனது பிரதிநிதிகளாக நியமிக்க விரும்பினன். ஒல்லாந்து தேசத்தினரை டச்சுக்காரர் என்று சாதாரணமாகக் கூறுவர். பிலிப்பின் செயல் டச்சுக்காரரிடையே மனக்கொதிப்பை உண்டாக்கியது. ஸ்பானியர்க்கு விரோதமான மனப்பான்மை அவர்களிடையே

வளரலாயிற்று. இன்னும் சமய விஷயமாகவும் ஸ்பானியருக்கும் டச்சுக்காரர்க்குமிடையே விரோத மனப்பான்மை இருந்தது. டச்சுக்காரர் **கல்வினிஸ்ற்**[1] கொள்கை பூண்ட புரொட்டெஸ்தாந்த கிறிஸ்தவர். ஸ்பானியர் கத்தோலிக்கர். இவ்விரு சாராரும் மத விஷயமாகக் கீரியும் பாம்பும் போன்ற தொடர்பைப் பரஸ்பரம் கொண்டிருந்தனர். புரொட்டெஸ்தாந்த டச்சுக்காரர் மதத் துரோகிகள், மதத் துவேஷிகள் என்பது ஸ்பானிய அரசன் பிலிப்பின் சித்தாந்தம். எனவே அவர்களை அடக்கித் தக்கவாறு தண்டிக்க வேண்டும் என்று அவன் அவாக்கொண்டு புரொட்டெஸ்தாந்த மதத்தினர்க்குச் சொல்லொணாக் கொடுமைகள் விளைத்தான். மிதமிஞ்சிய வரிகளை விதித்தான். இவை காரணமாக டச்சுக்காரர் கொதித்தெழ இரு சாரார்க்குமிடையே கோரமான யுத்தம் ஒன்று மூண்டது. அல்வா கோமகன்[2] போன்ற ஸ்பானியச் சேனாதிபதிகள் தம் படைகளைத் திறமையுடன் நடத்தினர். அவர்கள் எவ்வளவு திறமையான போர்வீரராக இருந்தனரோ, மக்களை வருத்தும் கொடிய கிராதத்தன்மையிலும் அவ்வளவு நிட்டூரராக இருந்தனர். டச்சுக்காரரோ எதுதான் நிகழ்ந்தபோதிலும் தோல்வியடைவதில்லை என்ற வைரங் கொண்டவர்களாய் ஒறேஞ்சு வம்சத்து வில்லியம்[3] என்பவனின் தலைமையில் சளைக்காது போரை விடாது நடத்தினர். நெதர்லாந்து தேசம் கடல் மட்டத்துக்குக் கீழானது என்றும், கடல் நீர் நாட்டுக்குள் பிரவாகித்துச் சேதம் விளைக்காதபடி ஆங்காங்கே அணைக்கட்டுக்கள் நிறுவப்பெற்றன என்றும் நீங்கள் ஏற்கெனவே படித்திருப்பீர்கள். மேலே சொல்லியவாறு ஸ்பானியர் படை எடுத்த காலத்தில் டச்சுக்காரர் தம்

1 Calvinists. 2 Duke of Alva. 3 William of Orange.



பகைவர்க்குப் பணிவதிலும் பார்க்கக் கடல் நீர் உள் வந்து நாட்டை அழித்து விடட்டும் என்று அந்த அணைக் கட்டுகளை உடைத்து விடுவர். இப்படியாகச் செய்து அவர்கள் தம் பகைவரை விரட்டித் துரத்தினர். நெதர்லாந்து தேசத்தின் வடபகுதி மாகாணங்கள் தமது சுதந்திரத்தை ஈட்டுவதில் இரண்டு விஷயங்கள் முக்கிய காரணமாக இருந்தன: ஒன்று வில்லியம் என்பவனின் அபார தலைமைத் திறன்; மற்றது டச்சுக்காரரின் அஞ்சாமை. இன்னும் அவர்களுக்கிருந்த கடல் ஆதிக்கமும் இங்கிலாந்தின் நட்பும் டச்சுக்காரரின் வெற்றிக்குக் காரணங்களாகவும் ஓரளவுக்கு இருந்தன.

1584-ம் ஆண்டில் ஒறேஞ்சு வம்சத்து வில்லியம் ஓர் கொலைபாதகனால் கொல்லப்பட்டான். ஸ்பானிய அரசன் பிலிப்பின் ஏவுதலினாலேயே இச் சதிக் கொலை நடந்தது. வில்லியத்தின் மரணத்தினால் டச்சுக்காரர் சோர்வடைந்து ஸ்பானியருக்குப் பணியவில்லை. வில்லியத்தின் மகனான நாஸன்நாட்டு மொறிஸ்[1] என்பவன் தனது தந்தை தாங்கிய தலைமைப் பதவியைத் தாங்கி தனது மக்களது சுதந்திரத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் வெகு வீரத்துடன் ஈடுபட்டான். இவன் ஓர் வீர புருஷன். அத்துடன் திறமைமிக்க சேனாதிபதியுமாவன். எனவே அவன் ஸ்பானியாவின் சேனைகளைத் துவம்சம் செய்து வெற்றிமாலை சூடினான். 1588-ம் ஆண்டிலே ஆர்மடா[2] என்னும் ஸ்பானிய கப்பற்படை இங்கிலாந்தினால் முறியடிக்கப்பட்டுச் சின்னாபின்னமானது. இதன் பயனாக ஸ்பானியாவின் முதுகெலும்பே முறிந்துவிட்டது எனலாம். அத்துடன் அதன் கடல் வர்த்தகத்தை டச்

1 Maurice of Nassen. 2 Armada

சுக் கப்பல்கள் கெடுக்க அதன் செல்வப் பலமும் குன்றியது. இன்னோரன்ன காரணங்களினால் இரு பகுதியார்க்குமிடையே போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று 1609-ம் ஆண்டில் ஏற்பட்டது. இதன்பின் 1648-ம் ஆண்டில் டச்சுக்காரர் தமக்கென ஓர் சுதந்திர இராச்சியத்தை ஏற்படுத்திக்கொண்டனர்.

17-ம் நூற்றாண்டை, டச்சுக்காரரின் பொற்காலம் என்று கூறினும் பொருந்தும். அந்தக் காலத்திலே ஒல்லாந்து அகில உலகத்திலும் தனது வர்த்தகத்தைப் பெருக்கிச் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கியது. பொருட் செல்வத்துடன் மாத்திரமின்றி கலைச் செல்வமும் அங்கே பொலிந்தது. சிறந்த ஆத்ம ஞானிகளும், தெளிந்த எழுத்தாளர்களும், பொலிந்த ஓவியர்களும் அக்காலத்தில் அங்கே மிளிர்ந்து பொருட் செல்வத்தோடு அழியாக் கலைச்செல்வத்தையும் அள்ளிஅள்ளிக்கொடுத்தனர். அகில உலகமும் பிரசித்திவாய்ந்த சட்ட அறிஞர் குரோற்றியஸ்,[1] விஞ்ஞானி ஹைஜென்ஸ்,[2] ஆத்ம ஞானி டி கார்ட்டெஸ்,[3] என்பவர்கள் இக்காலத்தவரே. றெம்பிராண்ட்ற்,[4] ஹால்ஸ்,[5] வான்கோயன்,[6] ஹொபேமா[7] என்னும் ஓவியர்கள் இக்காலத்திற் பொலிந்து டச்சு ஓவியக் கலைக்குப் புத்துயிர் கொடுத்தது மாத்திரமன்றி ஓர் சிறந்த நவமான ஓவியக் கலையையும் சிருஷ்டி செய்தனர். இந்த இலங்கையுடன் சம்பந்தப்பட்ட அளவில்தான் நாம் டச்சுக்காரரைப்பற்றி இப்போது அறிய வேண்டுமாதலால் அவர்களின் சொந்த நாட்டிற் கலை, செல்வம் என்பவற்றின் வளர்ச்சியைப்பற்றி அதிகம் குறிப்பிட வேண்டியதில்லை. நிற்க,

1 Grotius
2 Huyghens
3 De Cartes
4 Rembrandt
5 Hals
6 Van Goyen
7 Hobbema



1588-ம் ஆண்டு வரையுள்ள அந்தக் காலத்தில்தானும் அம்ஸ்ரர்டாம் பட்டினம் கப்பல் வர்த்தகத்துக்கு ஓர் மத்திய நிலையமாக விளங்கியது. அத்துறைமுகப் பட்டினத்தில் மூன்று தினங்களுக்கிடையில் 800 தொடக்கம் 900 கப்பல்கள்வரை போவதும் வருவதுமாயிருக்கும். கீழைத்தேயங்களுடன் வர்த்தகம் செய்வதற்கென வர்த்தகக் கம்பெனிகள் பல நிறுவப்பட்டன. 1598-ம் ஆண்டில், ஹௌற்மன்[1] என்பவனின் தலைமையில் ஓர் கப்பற்படை கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றது. அக் கப்பற்படையில் இருந்த ஸ்பில்பேர்ஜென்[2] என்பவன் 1601-ம் ஆண்டு விமலதர்மனைச் சந்தித்தான். கிழக்குப் பிரதேசங்களில் வர்த்தகம் செய்வதற்காக டச்சுக் குடியரசு 1601-ம் ஆண்டிலே ஓர் சாசனத்தை[3] வழங்கியது. அதன்பயனாக ஓர் கம்பெனி ஸ்தாபிதமாயது. அது பதினேழு நிர்வாகிகளைக் கொண்டதாய், வர்த்தகம் செய்யும் தேசங்களுடன் ஒப்பந்தங்கள் இயற்றவும், அங்கே கோட்டைகள் கட்டவும், சேனைகள் திரட்டவும் அதிகாரம் கொண்டதாய் இருந்தது. இத்தகைய அதிகாரங்களை அது கொண்டதாய் இருந்தாலும், அவ்வதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் உரிமை டச்சு இராச்சியத்தின் நிர்வாக மன்றமாகிய ஸ்ரேற்ஸ் ஜெனரல்[4] என்னும் சபைக்கே உரியதாய் இருந்தது. இக்கம்பெனிக்கு வேண்டிய மூலதனத்தின் ஓர் பகுதியாக டச்சு அரசாங்கம் 25,000 பவுண்கள் உதவியது. இவ்விதமாகவே உலகப் பிரசித்திபெற்ற டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி உருவாயது. வேயர்விக்[5] என்ற கடல் தளபதியின் தலைமையிலே 1602-ம் ஆண்டில் ஓர் பாரிய கப்பற்

1 Houtman
2 Spilbergen
3 Charter
4 States General
5 Waerwyck

படை கிழக்கு நோக்கிப் புறப்பட்டது. அதில் இருந்த உதவிக் கடற்படைத்தளபதியான ஸீபெல் டி வீர்ற்[1] என்பவன் இலங்கைக்கும் விஜயம் செய்தான்.

ஸீபெல் டி வீர்ற் ஜாவாத்தீவில் உள்ள பன்ரம் என்னும் இடத்தையே டச்சுக்காரரின் கீழைப் பிரதேசத் தொழிற்சாலை நிலையமாக நியமித்து, சீயம், சீனா என்னும் தேசங்களுக்கும் விஜயம் செய்துவிட்டுத் தனது பாரிய கப்பற் படையுடன் தாய்நாடு மீண்டான். இவ்வாறாக அவன் கீழைப் பிரதேசங்களைச் சுற்றி விஜயம் செய்தமை டச்சுக்காரரின் வியாபார அநுகூலத்துக்கு வாய்ப்பாக இருந்தது. 1604-ம் ஆண்டிலே வான் டெர் ஹேஜன்[2] என்பவன் மொலுக்காஸ், ரைடர் என்னும் இடங்களைக் கைப்பற்றி அம்போய்னாவில் ஓர் "தொழிற்சாலை"யை நிறுவினான். இதன்பின் நிகழ்ந்த இரண்டு பெரிய கடல் யுத்தங்களில் போர்த்துக்கீஸர் சின்னாபின்னப்படுத்தப்பட, அவர்கள் தம் வர்த்தக வலியிழந்து டச்சுக்காரர்க்கு எதிராக நிர்வகிக்க மாட்டாது புறங்காட்டினர். இதன் பயனாக அவர்களின் வர்த்தக எதிரிடை டச்சுக்காரர்க்கு இல்லாமற்போனது. 1606-ம் ஆண்டில் மலாக்காவுக்கப்பால் நிகழ்ந்த கடற்போரில் போர்த்துக்கீஸ கடற்படை மற்றிலீப்[3] என்னும் டச்சுக்காரனால் தோற்கடிக்கப்பட்டது. 1607-ம் ஆண்டில் அவிலா[4] என்பவனின் தலைமையில் இருந்த ஓர் போர்த்துக்கீஸ கப்பற்படை ஜிப்ரால்ற்றருக்கப்பால் ஹீன்ஸ்கேர்க்[5] என்னும் டச்சுத் தளபதியால் தோற்கடிக்கப்பட்டது. இவ்வாறாகப் போர்த்துக்கீஸர் அடிக்கடி முறியடிக்கப்பட்டதால் டச்சுக்காரர் தம்மை எதிர்க்க யாருமின்றிச் சமுத்திரங்

1 Seebald de Weert
2 Van der Hagen
3 Matelief
4 Avila
5 Heenskirk



களில் நடமாடித் தம் வர்த்தகத்தைப் பெருக்கி வந்தனர். வர்த்தகப் பெருக்கம் காரணமாக டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி அமோக ஆதாயத்தை ஈட்டியது. 1606 ம் ஆண்டில் 100க்கு 60 விகிதம் ஆதாயம் சம்பாதித்த அக்கம்பெனி 1609-ம் ஆண்டில் 100க்கு 325 விகித ஆதாயம் ஈட்டியதென்றால் டச்சு வர்த்தகம் அபிவிருத்தியடைந்ததைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

இதன்பின் டச்சுக்காரர் தமது கீழைத்தேய வியாபாரத்தை ஒழுங்கான முறையில் அமைத்தார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைக் காரியாலயமாக முதலில் ஜாவாத் தீவில் உள்ள பன்ரம் நகரத்தையும், பின்னர் பட்டேவியாவையும் கொண்டனர். தமது பரிபாலனத்துக்குள் அடங்கிய கிழக்குப் பிரதேசங்களைப் பரிபாலிக்க ஓர் மகா தேசாதிபதியை அவர்கள் நியமித்து, அவர்க்கு ஆலோசனை கூற ஏழு தேசாதிபதிகள் கொண்ட ஓர் சபையையும் அமைத்துக் கொடுத்தனர். கம்பெனிக்கு மிகச் சிறந்த டச்சுக்காரர் மகா தேசாதிபதிகளாக வாய்த்தனர். அவர்களில் ஒருவனான கோவன்[1] என்பவன் ரேர்ணேற், ரிடோர், அம்போய்னா பண்டாத் தீவுகள் என்பவற்றில் "தொழிற்சாலை"களை 1614-ம் ஆண்டில் நிறுவினான். 1620-ம் ஆண்டில் அவன் ஜாவாத் தீவைக் கைப்பற்றி ஒழுங்கான முறையில் வாசனைத் திரவியங்கள் உற்பத்தியாக்குவித்தான். 1623-ம் ஆண்டில் கார்ப்பென்ரர்[2] என்ற மாலுமி போர்மோஸாத் தீவுக்கு விஜயம் செய்து, பின்னர் அதனைக் கைப்பற்றிவிட்டு, நியூகினியாவுக்குள்ளும் போய்ப் புதிய இடங்களைக் கண்டுபிடித்தான். அந்தோனி வான் டீமன்[3] என்பான் இன்னோர்

1 Koen
2 Carpenter
3 Antony Van Dieman

பிரசித்திபெற்ற டச்சு மகா தேசாதிபதி. இவன் 1636ம் ஆண்டு தொடக்கம் 1645 ம் ஆண்டுவரை மகா தேசாதிபதியாகக் கடமையாற்றி வர்த்தக அபிவிருத்திக்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்வித்ததுமன்றி புதுப் புது இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு டச்சு மாலுமிகளுக்கு உற்சாகம் ஊட்டி உதவி புரிந்தான். இவனுடைய பரிபாலன காலத்தில்தான் அபெல் தஸ்மன்[1] என்னும் டச்சு மாலுமி, இப்போதும் தஸ்மானியா என்று வழங்கப்படும் தீவையும், ஆஸ்திரேலியாவின் கீழ், தென் கரைப் பகுதியையும், நியூஸீலந்து தீவுகளையும் கண்டுபிடித்தான். டீமன்னுடைய பரிபாலன காலத்தில்தான் டச்சுக்காரர் இலங்கையைக் கைப்பற்ற வழிகோலினர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது

கடல் அதிகாரம், கடல் தளங்கள் என்பவற்றையே டச்சுக்காரரின் வர்த்தக சாம்ராஜ்யம் ஆதாரமாகக் கொண்டிருந்தது ஆகவே உலகின் பிரதான கடல் தளங்களை அவர்கள் கைப்பற்றி அவற்றைத் தமது அதிகாரத்துள் வைத்திருந்தனர். ரீபெக்[2] என்பவனின் தலைமையில் நன்னம்பிக்கைமுனையில் அவர்கள் 1652 ம் ஆண்டிற் குடியேறி அதனைத் தமதாக்கினர். கிழக்குப் பிரதேசங்களுக்குப் போவதற்கான தங்குமடமாக இது அமைந்திருந்தது: இன்னும் அவர்களுக்கு வேண்டிய புதிதான தூய உணவும் போதிய தண்ணீரும் அங்கே கிடைத்தன. அங்கிருந்து டச்சுக் கப்பல்கள் வடகிழக்குத் திசையை நோக்கிப் புறப்பட்டு மொரிஷஸ் தீவையடைந்து அதனையும் கைப்பற்றின. இத்துறைமுகத்திலிருந்து கொழும்பு அல்லது காலிக்கு வந்து அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்று மலாக்கா வழியாக பட்டேவியாவை அடையலாம்.

1 Abel Tasman   2 Ribeck



## இலங்கையும் டச்சுக்காரரும்.

1602-ம் ஆண்டில் ஸ்பில் பேர்ஜென், விமலதர்ம சூரியனைக் கண்டியிற் சந்தித்தான். இதன்பின் டி வீர்ற் என்பவன் கண்டிக்கு விஜயம் செய்தான். ஆனால் அவன் கண்டியில் அடைந்த முடிவு பரிதாபகரமானது. அரசனைச் சந்திக்கச் சென்ற அவன் மிதமிஞ்சிய குடிவெறியினால் அரசனை வைதான். இதனாற் கோபங்கொண்ட அரசன் அவனையும் அவனுடன் சென்றவர்களையும் கொலை செய்வித்தான். "மதுபானியானவன் நீசன்: நீங்கள் சமாதானத்தை விழையின் சமாதானமாயிருப்போம்: அதனை விடுத்து யுத்தத்தைத்தான் நீங்கள் விரும்பினால் அதற்கு நான் தயார்" என்று இவ்விஷயமாகக் கண்டியரசன் கூறினான்.

டச்சுக்காரர் தனக்கு உதவி செய்யவேண்டும் என்றும் அவ்வுதவிக்குப் பிரதியுபகாரமாக மட்டக்களப்பிலாயினும் கொட்டியாரத்திலாயினும் தான் அவர்களுக்கு ஓர் கோட்டை கட்டித்தருவதாயும் 1636-ம் ஆண்டில் இராஜசிங்கன் கேட்டான். தங்கள் வியாபார விருத்திக்கும், செல்வாக்கு வளர்ச்சிக்கும் இலங்கை இன்றியமையாதது என்பதை நன்குணர்ந்த டீமன் மகாதேசாதிபதி வெஸ்ரர்வொல்ட்[1] என்னும் கடல் தளபதியை உடனே இலங்கைக்குப் போகும்படி பணித்தான். வெஸ்ரர்வொல்ட் தனது உதவித் தளபதியாகிய கொஸ்ரர்[2] என்பவனை ஓர் கடற்படையுடன் அனுப்ப, பின்னவன் திருக்கோணமலையை அடைந்தான். சிறிது நாட்களில் வெஸ்ரர் வொல்டும் திருக்கோணமலைக்கு வந்து அப்போது கரையோரப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய போர்த்

1 Westerwold   2 Coster

துக்கீஸரைத் தாக்கி திருக்கோணமலையையும், மட்டக் களப்பையும் தன்னிடம் ஒப்படைக்கச் செய்தான். இது நிகழ்ந்தது 1638-ம் ஆண்டு மே மாதத்திலாகும். இதன் பின் வெஸ்ரர் வொல்ட், இரண்டாவது இராஜசிங்கனுடன் ஓர் சமாதான உடன்படிக்கை செய்தான். அவ்வுடன்படிக்கையின் பிரதான பகுதிகள் வருமாறு:-

(அ) "கறுவா வியாபாரத்தில் ஏகபோக உரிமை டச்சுக்காரர்க்கு இருக்க வேண்டும். "மாட்சிமை தங்கிய அரசர், இலங்கையில் தமது ஆளுகைக்குட்பட்ட பிரதேசமனைத்திலும் நாம் வியாபார வர்த்தகத்தை ஸ்தாபித்து அதனைச் சுவாதீனமாக நடாத்த எங்களுக்குப் பூரணமான அநுமதியளிக்கிறார்: எம்மையொழிந்த வேறெவர்க்காவது கறுவா, மிளகு, மெழுகு, யானைத் தந்தம் முதலாயினவற்றை மன்னரின் பிரஜைகள் விற்க அனுமதிக்கப்படார். எல்லாப் பொருள்களையும் கட்டுப்பாடில்லாமல் ஏற்றுமதி செய்ய எமக்கு அநுமதியுண்டு."

(ஆ) "யுத்தம் செய்ததனால் ஏற்பட்ட செலவுகளையும், பாதுகாப்பின் பொருட்டு ஏற்படும் வருடாந்தச் செலவுகளையும் கொடுக்க மாட்சிமை தங்கிய இலங்கை மன்னர் சம்மதிக்கிறார். மேலே சொல்லிய செலவுகளை கறுவா, மிளகு, ஏலம் அவுரி, மெழுகு, அரிசி முதலியனவற்றை எமக்கு விற்பதால் வரும் பணத்தில் இருந்து சரிப்படுத்த வேண்டும்."

(இ) "இனிமேல் போர்த்துக்கீஸர் தாக்காதபடி பாதுகாத்துக்கொள்வதற்காக, கைப்பற்றப்படும் கோட்டை கொத்தளங்களில் (டச்சு) அதிகாரிகளும் போர் வீரரும் இருந்து அரண் செய்தல் வேண்டும்." இந்தப் பகுதி பின்னர் பெரும் பிணக்கை உண்டாக்கியது,



இரண்டாவது இராஜசிங்கன் கையொப்பமிட்ட போர்த்துக்கீஸ பாஷைப் பிரதியில், அரசன் இடிக்க விரும்பாத கோட்டைகளில் டச்சுக்காரர் தமது இராணுவத்தை வைத்து அரண் செய்யலாம் என்று இருந்தது. ஆனால் இது டச்சுப்பாஷைப் பிரதியில் இல்லை.

1642-ம் ஆண்டில் போர்த்துக்கல் ஸ்பெயினிலிருந்தும் பிரிந்து ஒல்லாந்து தேசத்துடன் 10 வருஷ காலத்துக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்தது. இதனால் டச்சுக்காரர்க்கு சப்த கோரளைகளும், வெந்தோட்டை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள மாத்தறைத் திஸாவனியும் போர்த்துக்கீஸரிடம் இருந்து கிடைத்தன. இது இராஜசிங்கனுக்குச் சொல்லொணா ஆத்திரத்தையும் பொல்லாத கோபத்தையும் ஊட்டியது. சப்த கோரளைகளிலுமிருந்து டச்சுக்காரர் நீங்கவேண்டும் என்று அவன் வற்புறுத்தினான். எனவே டச்சுக்காரரின் தேசாதிபதியாக விருந்த தைசூன்[1] என்பவன் 1645.ம் ஆண்டில் இராஜசிங்கனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். அந்தப் போரினால் டச்சுக்காரர் எவ்விதமான பயனும் பெறவில்லை. 1646 ம் ஆண்டில் வான் டெர் ஸ்ரேல்[2] என்ற டச்சு சேனாதிபதியும் அவன் வீரரும் இராஜசிங்கனது படைகளினாற் கொலை செய்யப்பட்டனர். இராஜசிங்கனுடன் பொருதுவதாற் பயனில்லை என்பதையுணர்ந்த மாற்ஸயிக்கர்[3] என்பான் 1649-ம் ஆண்டில் அரசனுடன் ஓர் உடன்படிக்கை செய்தான். அதன்படி இதுவரை டச்சுக்காரர் கறுவா வர்த்தகம் விஷயமாக அநுபவித்துவந்த ஏகபோக உரிமை நீக்கப்படலாயிற்று. இன்னும் போர்த்துக்கீஸரிடம் இருந்து கைப்பற்றிய

1 Thyszoon 2 Van der Stael 3 Maatzuyker

கோட்டைகளை இராஜசிங்கன் இடிக்க விரும்பாவிட்டால் மாத்திரமே டச்சுக்காரர் அவற்றை வைத்திருக்கலாம் என்றும் அவ்வுடன்படிக்கையில் விதிக்கப்பட்டது. இப்படியான ஓர் உடன்படிக்கை ஏற்பட்டும் இராஜசிங்கன் திருப்தியடையவில்லை. ஆனால் டச்சுக்காரர்க்கோ அவனுடன் பொருத விருப்பம் இல்லை. 1652-ம் ஆண்டில் போர்த்துக்கீஸருக்கும் டச்சுக்காரருக்கும் இடையில் மீளவும் யுத்தம் மூண்டது. அதில் டச்சுக்காரர் வெற்றி கொண்டு கொழும்பைக் கைப்பற்றினர். கொழும்புக் கோட்டையை இடிக்கவேண்டும் என்று இராஜசிங்கன் விரும்பினன். ஆனால் டச்சுக்காரர் இதற்கு இணங்கவில்லை. போர்த்துக்கீஸரிடமிருந்து தாமே அதனைக் கைப்பற்றியபடியால் அதனைத் தாம் வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் பிடிவாதம் செய்தனர். அவர்கள் தங்கள் இலட்சிய பூர்த்திக்காக இராஜசிங்கனை ஓர் கருவியாக உபயோகித்தார்களேயன்றி அவன் ஆணைப்படி நடக்க வரவில்லை. இதனை இப்போதுதான் இராஜசிங்கன் உணர்ந்தான். நெருப்புக்குப் பயந்து நெய்க் கொப்பரைக்குள் விழுந்த பூச்சியின் நிலைமையைத் தான் எய்தியதை அவன் கண்டு பச்சாத்தாபப்பட்டான். ஆனால் டச்சுக்காரர்க்கு விரோதமாக அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

1664-ம் ஆண்டில் இராஜசிங்கனுக்கு விரோதமாக ஓர் உள்நாட்டுக் கலகம் கிளம்பியது. இதனை அடக்குவதில் தனக்கு உதவி செய்யவேண்டும் என்று அவன் டச்சுக்காரரை வேண்டினன். சமயம் நோக்கியிருந்த டச்சுக்காரர் அவன் கோரிய உதவியை அளித்துவிட்டு அவ்வுதவிக்குக் கைம்மாருக இலங்கையின் கரைப்பகுதிகள் பலவற்றைத் தமதாக்கினர். இது நிகழ்ந்தது 1665-ம் ஆண்டில். டச்சுக்காரரின் இச்செயலினால், கடலுக்குப் போகும் பாதை கண்டி இராச்சியத்துக்கு இல்லாது போய்விட்டது. டச்சுக்காரர் கற்பிட்டி, கொட்டியாரம், திருக்கோணமலை, மட்டக்களப்பு என்னும் கரையோரப் பட்டினங்களைத் தமதாக்கி இராஜசிங்கனுக்கு மேன்மேலும் ஆத்திர மூட்டினர்.



செய்வதின்னதென்றறியாது திகைத்த இராஜசிங்கனின் நாட்டம் பிரான்சியர்மீது சென்று, டச்சுக்காரர்க்கு விரோதமாக உதவி செய்யும்படி அவர்களைக் கேட்டான். ஆனல் பிரான்சிய உதவி இராஜசிங்கனுக்குப் பயன் அளிக்கவில்லை. திருக்கோணமலையில் இருந்த பிரான்சியரை டச்சுக்காரர் 1672 ம் ஆண்டில் துரத்திவிட்டனர். 1677-ம் ஆண்டிலே டச்சு மகாதேசாதிபதி இராஜசிங்கனிடம் இருந்து 1665-ம் ஆண்டில் கைப்பற்றிய பகுதிகளைத் திருப்பி அவனிடம் ஒப்புவிக்குமாறு டச்சுத் தேசாதிபதியாகவிருந்த வான்கோவன்ஸ் என்பவனுக்குக் கட்டளையிட்டான். அப்படிச் செய்தும் டச்சுக்காரர்க்கும் இராஜசிங்கனுக்கு மிடையில் உண்மையில் மனப்பூர்வமான சமாதானம் நிலவவில்லை. போர்த்துக்கீஸரிடம் இருந்த பகுதிகளை டச்சுக்காரர் தம் பொறுப்பில் வைத்துப் பரிபாலனம் செய்யக்கூடாது என்பது இராஜசிங்கனின் கொள்கை. அவன் தமக்கு நேர்ந்த யுத்தச் செலவுகளைக் கொடுக்காதபடியினாலேயே தாம் அப் பகுதிகளைத் தம் பரிபாலனத்திற் கொண்டுவந்தனர் என்றும், வாக்குறுதி செய்தபடி யுத்தச் செலவுகளை இராஜசிங்கன் இறுத்திருந்தால் தாம் அப்பகுதிகளை விட்டிருப்பர் என்றும் டச்சுக்காரர் சாதித்தனர். ஆனல், டச்சுக்காரர் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசினர்கள்

என்பதை மறுக்கமுடியாது. தாம் கைப்பற்றிய போர்த்துக்கீஸ மாகாணங்களிலிருந்து எல்லா அரசிறையையும் டச்சுக்காரர் வற்ற வடித்துவிட்டபடியால் அவர்கள் தனக்குதவியாகப் போர்த்துக்கீஸருடன் போர் செய்தமைக்குச் செலவு கொடுக்க வேண்டியதில்லை என்று இராஜசிங்கன் வாதித்தான். எது எப்படியிருந்தபோதிலும், தாம் வெற்றிகொண்டு கைப்பற்றிய பகுதிகளைத் திரும்பவும் இராஜசிங்கனிடம் கொடுக்கும் எண்ணம் எப்போதாவது டச்சுக்காரர்க்கு இருக்கவில்லை என்பதை வான் டீ மன் என்னும் மகாதேசாதிபதியின் கூற்றிலிருந்தே நன்கு அறியலாகும். "இலங்கையில் இப்போது எமக்குள்ள உரிமைகளைப் பாதுகாப்பதுடன் நாம் நிற்கப் போவதில்லை. முழுத் தீவினையும் கைப்பற்றுவதே எங்கள் நம்பிக்கை" என்று அவன் 1638-ம் ஆண்டு உடன்படிக்கையையும் கவனியாது கூறியமை ஈண்டு நோக்கற்பாலது.

தாம் அனுப்பிய உதவிப் படையின் செலவை இரண்டாவது இராஜசிங்கன் கொடுக்கவில்லை என்ற டச்சுக்காரர் கூற்று எவ்வளவு ஆதாரமற்றது என்பது அவன் மாற்ஸயிக்கருக்கு எழுதிய ஓர் கடிதத்திலிருந்து நன்கு அறியலாகும். அக்கடிதத்தின் ஓர் பகுதி வருமாறு:-

"என்னுடைய சேவையின் பொருட்டு நீர் செய்த செலவைப்பற்றி ஒவ்வொரு கடிதத்திலும் திருப்பித் திருப்பி எழுதிப் பணத்தை இறுக்கும்படி கேட்கிறீர். இவ்விஷயமான ஓர் விபரக் கணக்கு அனுப்பும்படி உம்மை எத்தனையோ முறை கேட்டேன். ஆனால் இதுவரை நீர் அதனை அனுப்பி வைக்கவில்லை. நான் பட்ட கடன்களைத் தாமதமின்றி இறுக்கவேண்டும் என்பதே எனது அவா."



ஆகவே இராஜசிங்கன் ஏமாற்றப்பட்டான் என்பது தெளிவு. அவன் 1687-ம் ஆண்டு இறந்தான். போர்த்துக்கீஸர் என்னும் ஓர் அந்நிய சாகியத்தாரைக் கலைப்பதற்கு இன்னோர் அந்நியச் சாகியத்தாராகிய டச்சுக்காரரைத் தான் வரவழைத்தது எவ்வளவு மௌட்டீகமான செயல் என்பதை இராஜசிங்கன் தனது அந்திய காலத்தில்தான் உணர்ந்து பச்சாத்தாபப்பட்டான்.

இரண்டாவது இராஜசிங்கன் டச்சுக்காரர்க்கு எழுதிய பல கடிதங்களின்மூலம் அவனைப்பற்றி நன்கு அறியலாகும். அக்கடிதங்களை டி. பெர்குஸன்[1] என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இலங்கையைப்பற்றி நொக்ஸ்[2] என்னும் ஆங்கிலன் அக்காலத்தில் எழுதிய வரலாற்றிலிருந்தும் இராஜசிங்கனைப்பற்றி நாம் அறிந்துகொள்ளலாகும்.

இரண்டாவது இராஜசிங்கனுக்குப் பின் அவனது மகனான **இரண்டாவது விமலதர்ம சூரியன்** 1687-ம் ஆண்டு தொடக்கம் 1707 ம் ஆண்டுவரை அரசு புரிந்தான். இவனுக்கும் டச்சுக்காரர்க்குமிடையில் சீக்கிரமே பிணக்கு மூண்டது. அவர்கட்கிடையே எப்போதாவது உண்மையான சாஸ்வதமான நட்பு இருக்கவில்லை. தனக்குச் சேரவேண்டிய பிரதேசங்களை டச்சுக்காரர் நியாய விரோதமாகக் கைப்பற்றி அடாத்தாக வைத்திருக்கிறார்கள் என்று விமலதர்ம சூரியனும், போர்த்துக்கீஸரைத் தாமே துரத்தியபடியால் அப்போர்த்துக்கீஸருக்கு இருந்த பிரதேசங்கள் தமக்கே உரியனவாகையால் தாம் அவற்றைக் கண்டி அரசனுக்கு அளிக்க ஏதுவில்லை என் டச்சுக்காரரும் பரஸ்பரம் மாறுபட்டு நின்றனர். 1701 ம்

1 D. Ferguson 2 Knox

ஆண்டில் அரசன் தனது வியாபாரத்தைக் கொட்டியாரம், புத்தளம் என்னும் துறைமுகங்கள் வாயிலாக அதிகரிக்கவேண்டித் தனது எல்லைப்புறத்தை அடைத்துவிட்டான். இதன் பயனாகக் கண்டி விளைபொருள் எதுவும் டச்சுப் பிரதேசங்களுக்குப் போகவில்லை. இதனால் ஆத்திரம்கொண்ட டச்சுக்காரர், ஏட்டிக்குப் போட்டியாகத் தாமும் கருமம் ஆற்றவேண்டும் என்று துணிந்தவராய், தென்னிந்தியாவில் இருந்து வரும் வர்த்தகக் கப்பல்கள், தமது ஆதிக்கத்தில் இருந்த காலி, கொழும்பு, யாழ்ப்பாணம் என்னும் துறைமுகங்களை ஒழிந்த ஏனைய துறைமுகங்களுக்குச் செல்லவிடாதபடி தடுத்தனர்.

பௌத்த சங்கத்தைப் புனருத்தாரணம் செய்யும் கைங்கரியத்திலும் இரண்டாவது விமலதர்ம சூரியன் ஈடுபட்டான். பர்மா தேசத்து அரக்கன் நகரத்தில் இருந்து பிக்குகளை வரவழைக்க வேண்டி ஓர் இராஜரீகத் தூதுக்கோஷ்டியை அவன் அந்நகருக்கு அனுப்பினான். மூன்று அடுக்கு மாடியுள்ள தலத மாளிகை எனப்படும் புத்த தந்த மாளிகையைக் கட்டுவித்தவனும் இவனே. 1707-ம் ஆண்டிலே அவன் இறக்க அவன் மகன் **நரேந்திரசிங்கன்** கண்டி அரசனானான்.

1723-ம் ஆண்டில் டச்சுப் பிரதேசங்களில் குழப்பங்கள் உண்டாயின. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஊழியம் செய்த கறுவாப்பட்டை உரிப்போரின் நிலைமை மிகவும் கேவலமாக இருந்தது. அவர்கள் அதிருப்தி கொண்டவராக டச்சுக்காரர்க்கு விரோதமாக எழுந்தனர். அந்த எழுச்சியை டச்சுக்காரர் அடக்கியபோதிலும் 1732-ம் ஆண்டில் மீண்டும் கறுவாப்பட்டை உரிப்போர் கிளர்ந்தெழுந்தனர். அவர்களுக்குதவியாகக்



கண்டிச் சனங்களும் (மலைநாட்டினர்) சேர்ந்தனர். எனவே கண்டி இராச்சியத்துடன் டச்சுக்காரர் 1736-ம் ஆண்டில் யுத்தப் பிரகடனம் செய்தனர். ஆனால் அவ்வாண்டில் இலங்கைக்குப் புதிதாக வந்த டச்சுத் தேசாதிபதியான வான் இம்ஹோவ்[1] அப்போதுள்ள நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தான். டச்சுக்காரரின் கம்பெனி வியாபாரம்மூலம்—அதிலும் விசேஷமாகக் கறுவா வியாபாரமூலம்—இலாபம் அடைய வேண்டுமானால் கண்டி இராச்சியத்துடன் பகைமை கொள்ளாது நட்புடன் இருக்கவேண்டும் என்பதை அவன் கண்டு போர்ப் பிரகடனத்தை நிறுத்திக்கொண்டான்.

1760-ம் ஆண்டில், டச்சு மாகாணங்களில் மீண்டும் பாரதூரமான கலகம் மூண்டது. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற அந்நிய ஸ்தாபனம் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்காகத் தாம் மாடுபோல உழைக்கவேண்டி ஏற்பட்டது என்பதைச் சிங்களர் உணர்ந்து ஆத்திரப்பட்டு டச்சுக்காரர்க்கு எதிராகக் கிளம்பினர். டச்சுத் தேசாதிபதியாக அக்காலம் இருந்த ஸ்குறூடர்[2] என்பவன் கறுவா விளையும் பிரதேசங்களில் உள்ள தென்னந்தோப்புக்களைக் கம்பெனியே எடுத்துக்கொள்ளும் என்று ஓர் உத்தரவு பிறப்பித்தான். சிங்களர்க்குக் கறுவா தேவையில்லை. ஆனால் அவர்களுக்குத் தேங்காய் ஜீவாதாரப் பொருளாக விளங்கியது. எனவே தமது ஜீவாதார உணவுப் பொருளிலும் டச்சுக்காரர் கை வைக்கிறார்களே என்று சிங்களர் கொதித்தெழ அவர்களுக்கு மலைநாட்டினரும் உதவி புரிந்து 1761-ம் ஆண்டில் மாத்தறையையும் ஹன்வலையையும் கைப்பற்றினர். கண்டி அரசன்

1 Van Imholf  2 Schreuder

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் உதவியைக்கூட நாடினான். ஆனால் 1762-ம் ஆண்டில், புதிதாக வந்த டச்சுத் தேசாதிபதியான வான் எக்[1] என்பவன் கலகக்காரர்க்கு எதிராகவும், கண்டி யரசனுக்கு விரோதமாகவும் கண்டிப்பான நடைவடிக்கை எடுக்கத் தீர்மானித்து 1765-ம் ஆண்டு கலகெதரைக் கணவாய் வழியாகக் கண்டி.மீது படையெடுத்தான். கண்டியரசன் டச்சுக்காரர்க்குப் பணிந்து கம்பெனிக்கு உட்பட்ட அரசனாக இருக்க வேண்டும் என்று வான் எக் வற்புறுத்தினான். 1747-ம் ஆண்டில் அரசனான கீர்த்தி ஸ்ரீ. வான் எக்கின் கேள்விக்கு இணங்க மறுத்தான். எனவே வான் எக் தன் சேனைகளுடன் கண்டிக்குட் புகுந்தான். அவ்வாறு புகுந்துமென்? அவனால் கண்டி இராச்சியத்தை வெற்றி கொள்ள முடியாது கொழும்புக்கு மீண்டான். 1766-ம் ஆண்டில் கண்டி அரசனுக்கும் டச்சுக்காரர்க்குமிடையே ஓர் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படிக்கு இலங்கையின் சகல கரையோரப் பிரதேசங்களையும் அரசன் டச்சுக்காரர்க்குக் கையளித்தான்.

இது இவ்வாறாக இலங்கையில் நிகழ, ஐரோப்பாவில் இங்கிலாந்திற்கும் ஒல்லாந்துக்குமிடையே போர் மூண்டது. அப்போது பிரிட்டிஷ் கடற்படைத் தளபதியான ஹியூஸ்[2] இலங்கையில் டச்சுக்காரர் வசமாயிருந்த திருக்கோணமலையைக் கைப்பற்றினான். இதன்பின் பொயிட்[3] என்னும் ஆங்கிலேயனை ஹியூஸ் கண்டிக்குத் தன் தூதுவனாக அனுப்பி டச்சுக்காரர்க்கு விரோதமாக பிரிட்டிஷார்க்குக் கண்டியரசன் துணை செய்ய வேண்டும் என்று கேட்டான். அப்போது கண்டியை ஆண்டவன் கீர்த்தி

1 Van Eck    2 Admiral Hughes    3 Boyd



ஸ்ரீக்குப் பின் அரசுரிமையேற்ற **இராஜாதி ராஜசிங்கன்** (1782—1798) என்பவன். இவ்வரசன் பொயிட்டுடன் உடன்படிக்கை பேச மறுத்துவிட்டான்.

பிரான்சிய அரசியற் புரட்சியின் பயனாக ஏற்பட்ட யுத்தங்களில் இங்கிலாந்தும் ஒல்லாந்தும் ஈடுபட்டன. ஸ்ராட் ஹோல்டர்[1] என்று வழங்கப்பட்ட டச்சு அரசியல் தலைவர் தம் நாட்டைவிட்டு ஓடி இங்கிலாந்தில் அடைக்கலம் புக, டச்சுக்காரர் பிரான்சியரின் உதவியுடன் ஓர் குடியரசை ஸ்தாபித்தார்கள். பிரான்சியருக்கும் ஆங்கிலர்க்கும் இடையில் ஐரோப்பாவில் நிகழ்ந்த யுத்தம் இந்தியாவுக்கும் பரவியது. பிரான்சியருடன் செய்யும் கடல் யுத்தங்களிலே தமது கப்பல்கள் பழுதடையின் அவற்றைக் கொண்டுபோய் ஆகவேண்டியவாறு திருத்துதற்கு வங்காள விரிகுடாவில் ஓர் துறைமுகம் இருந்தாலோ என்று பிரிட்டிஷார் அங்கலாய்ப்புடன் இருந்தனர். அத்தகைய ஓர் துறைமுகமே திருக்கோணமலை. அது அப்போது டச்சுக்காரர் வசயாக இருந்தது. அதனை எப்படிப் பெற்று உபயோகிக்கலாம் என்பதனை ஆலோசித்த பிரிட்டிஷார் ஓர் உபாயத்தைச் சூழ்ந்தனர். தம் நாட்டில் அடைக்கலம் புகுந்த டச்சு ஸ்ராட் ஹோல்டர், பிரிட்டிஷார் திருக்கோணமலையை உபயோகிக்க அநுமதிக்க வேண்டுமென இலங்கையின் டச்சுத் தேசாதிபதிக்குக் கட்டளையிடும்படி செய்தனர். ஸ்ராட் ஹோல்டர் பதவியிழந்து இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்ததை அறியாத இலங்கையின் டச்சுத் தேசாதிபதி ஸ்ராட் ஹோல்டரின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து, அவன் கூறியவாறே திருக்கோணமலைத் துறைமுகத்தைப் பிரிட்டிஷார் உப

1 Stadholder

யோகிக்கவிட்டான். பிரிட்டிஷாரின் கைப்பிள்ளையாக விளங்கிய ஸ்ராட்ஹோல்டர் இவ்வளவுடன் நிற்கவில்லை. டச்சுக் குடியேற்ற நாடுகளில் உள்ள துறைமுகங்கள் பிரான்சியர் கையிற் சிக்காதபடி அவற்றைப் பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஓர் உத்தரவை அவன் பிறப்பித்தான். ஆனால் இதற்கிடையில் தம் தாய் நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் கொழும்பில் உள்ள டச்சு அதிகாரிகளுக்கு எட்டியன. எனவே அவர்கள் ஸ்ராட்ஹோல்டரின் ஆணையை ஏற்க மறுத்துத் தமது குடியரசிடமிருந்தே கட்டளை பெறமுடியும் என்றனர். ஆகவே பிரிட்டிஷார் துறைமுகங்களுக்கு வந்தால் அவர்களை எதிர்த்துத் துரத்த வேண்டும் என ஆங்காங்குள்ள டச்சுத் தளபதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. ஸ்ருவார்ட்[1] என்னும் பிரிட்டிஷ் கடற்படைத் தலைவன் தனது படைகளுடன் திருக்கோணமலைக்குச் செல்ல, அவன் தடுக்கப்பட்டான். இதனால் சீற்றம் கொண்ட அவன் திருக்கோணமலையில் இருந்த டச்சுக் கோட்டையை 1795-ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 31-ம் திகதி தாக்கிக் கைப்பற்றினான். அடுத்த மாதத்தில் அதாவது செப்ரெம்பரில் மட்டக்களப்பும் யாழ்ப்பாணமும் பிரிட்டிஷார் வசமாயின. அடுத்த ஆண்டு (1796) பெப்ரவரி மாதம் கொழும்பையும் பிரிட்டிஷார் கைப்பற்றி இலங்கையின் கரையோர மாகாணங்களைத் தமதாக்கினர்.

டச்சுக்காரருடன் தாம் செய்யும் யுத்தத்தில் கண்டியரசனின் உதவியை பிரிட்டிஷார் விழைந்தனர். அந்த உதவியைப் பெறுதற்கான பேச்சுக்களை நடாத்த அன்ட்ரூஸ்[2] என்பான் இராஜரீகத்தூது[3]வராக அனுப்பப் பட்டான். உப்பு, மீன் என்பவற்றைப் பெறுதற்கு அர

1 Colonel Stewart 2 Andrews 3 Ambassador



சனது ஆட்கள் கரைப்பகுதிகளுக்குச் செல்வதற்கான உரிமையை அளித்து, 1796-ம் ஆண்டில் ஓர் உடன்படிக்கையைப் பிரிட்டிஷார் இயற்றினர். டச்சுக்காரர் மறுத்த அதே சிலாக்கியத்தை பிரிட்டிஷார் கண்டியரசனுக்கு வழங்கியபோதிலும், அவன் இவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்தான். இதன்பின் இப்படியான சலுகையைக் கண்டியரசனுக்குப் பிரிட்டிஷார் கொடுக்கவில்லை. அதன் பயனாக கண்டி இராச்சியம் வெளிநாட்டாருடன் வியாபாரம் செய்ய முடியாமற் போய்விட்டது.

கொழும்பின் வீழ்ச்சியுடன் ஒன்றரை நூற்றாண்டுகளாக இலங்கையில் நிகழ்ந்த டச்சு ஆட்சியும் வீழ்ச்சி அடையலாயிற்று.

## டச்சுப்பரிபாலனமும் அதன் பலாபலன்களும்

உண்மையைக் கூறுமிடத்து டச்சுக்காரர் இலங்கையின் ஓர் பகுதிக்கே எஜமானராயிருந்து ஆட்சி செய்தனர். இலங்கையிலே அவர்கள் ஆட்சி செய்த இடங்களைக் காட்டும் படம் ஒன்றை 50-ம் பக்கத்திற் காணலாம். வடக்கே டச்சுத்தளபதி ஒருவனின் பரிபாலனத்தில் இருந்த யாழ்ப்பாணக் குடாநாடு, மன்னார், மட்டக்களப்பு என்னும் இடங்களில் டச்சுக்காரரின் ஆட்சி உறுதியாக நிலவியது. இந்த இடங்களில் அவர்கள் கோட்டைகளை அமைத்துத் தக்க பாதுகாப்புடன் பரிபாலனம் செய்தனர். வன்னிப் பகுதிகளிலே குறுநில மன்னர்போல் அதிகாரம் செலுத்திய வன்னியர்கள் காலந்தோறும் டச்சுக்காரர்க்குக் கப்பம் செலுத்தியபோதிலும், அப்பகுதிகளில் டச்சு அதிகாரம் அவ்வளவாகச் செல்லவில்லை. வருடந்தோறும் வன்னியர்கள் 42 யானைகளை டச்சுக்காரர்க்குச் செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்டது.

ஆனால் அக் கப்பத்தை அவர்கள் ஒழுங்காகக் கொடுத்ததில்லை. வன்னிப் பகுதிகளில் மன்னார், பூநகரி, முல்லைத்தீவு என்னும் இடங்களின் கோட்டைகளுக் கணித்தாகவுள்ள இடங்களில்தான் டச்சு ஆதிக்கம் செல்வாக்குடன் விளங்கியது.

கொழும்புத் தளபதியின் (கொம்மாண்டோர்) பொறுப்பில் இருந்த பகுதி கற்பிட்டி தொடக்கம் தெற்கே வெந்தோட்டை ஆறு ஈறாக இருந்தது. சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, அலுத்கம என்னும் இடங்களில் இப்பகுதிக்கெனக் கரையோரக் கோட்டைகள் இருந்தன. உள்நாட்டில் சீதவாக்கை, ஹன்வல, பாதுக்கை, கிரியெல, அங்குருவத்தோட்ட என்னும் இடங்களில் டச்சுக்காரர் கோட்டைகள் கட்டியிருந்தனர். கொழும்புக்குப் போக்குவரத்துச் செய்வதற்கு கழனி ஆறு, கலுகங்கை என்னும் ஆறுகள் பிரதானமாயமைந்தன. இவ்விரு ஆறுகளும், பொல்கொடை ஏரி வழியாகக் கலுகங்கையிலிருந்து வரும் கால்வாய்கள்மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. வடக்கே ஓர் கால்வாய் நீர்கொழும்பு வழியாகப் புத்தளத்தை, கழனியாற்றின் வடகரைப் பகுதியிலிருந்து வத்தளையுடன் இணைத்தது. இவ்வாறாக அமைந்த கால்வாய்கள், ஆறுகள்மூலம் உள்நாடுகளிலிருந்து விவசாயப் பொருள்கள் தோணிகளில் ஏற்றப்பட்டுப் பிரதான துறைமுகமாய கொழும்பை வந்தடைந்தன.

காலித் தளபதியின் பொறுப்பில் இருந்த பகுதி வெந்தோட்டை ஆற்றிலிருந்து அம்பாந்தோட்டை ஈறாகவுள்ளதாகும். அதாவது, இப்போது தென்மாகாணம் என வழங்கப்படும் பகுதியே என்க. காலியிலும் மாத்தறையிலும் டச்சுக்காரர் இரண்டு பிரதானமான கோட்டை



களை வைத்திருந்தனர். அத்துடன் ஹக்மன அக்குரஸ போன்ற இடங்களில் எல்லைப்புறப் பாதுகாப்புக்களும் ஏற்படுத்தியிருந்தனர்.

மூன்று விஷயங்களை டச்சுப் பரிபாலனம் நோக்கமாகக்கொண்டிருந்தது. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், தம் தாய்நாடாகிய ஒல்லாந்துக்கும் ஆதாயம் தேடிக்கொடுத்தல் ஒரு நோக்கமாகும். இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காக, டச்சுக்காரர் வியாபார விஷயத்தில் தமக்கு எதிரிடையாக இருந்த சகலரையும் முறியடித்து அகற்றினர். இதன்பயனாக இதுவரை வர்த்தகம் செய்துவந்த சோனகர் பாடு கஷ்டமானது. போர்த்துக்கீஸர் காலத்தில் அவர்கள் வருத்தப்பட்டதுபோல டச்சுக்காரர் காலத்திலும் துன்புறுத்தப்பட்டனர். "நீதியான சகல தொழில்களையும் செய்வதற்கு நம்மவரான டச்சுக்காரர்க்கு, சுதேசிகளுக்கு மேலாகச் சலுகை வழங்கவேண்டும். எவ்வகையான வியாபாரப் பொருளையாவது வைத்து வியாபாரம் செய்ய எந்தச் சோனகரையாவது, எந்த அஞ்ஞானியையாவது விடக்கூடாது. இந்த வியாபாரச் சிலாக்கியம் நம்மவர்க்கே வழங்கப்படவேண்டும். இவ்வகையான உதவியை நம்மவரான டச்சுக்காரர்க்குச் செய்வதுடன் நாம் நின்றுவிடாது நிலங்களையும், தோட்டங்களையும், வீடுகளையும் சந்ததி சந்ததியாக அநுபவிக்க அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். எங்கள் சொந்த மனிதராகிய டச்சுக்காரர்க்கன்றி வேறெவர்க்கும் தானதர்மமும் செய்யக்கூடாது". மேலே காட்டப்பட்ட குறிப்புக்கள் "இலங்கைத் தேசாதிபதிக்கு மகாதேசாதிபதியும் இந்திய நிருவாகசபையும் இடும் கற்பனைகள் [1] என்பதில் இருந்து அநுவதிக்கப்பட்டவை.

[1] Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylon.

டச்சு அரசாங்கம் தன் சாதியார்க் கநுகூலமாகவே அரசி யல் நடாத்துவதில் எத்தகைய கொள்கையைக் கடைப் பிடித்து வந்தது என்பதை மேலே காட்டிய கூற்றுக்கள் நன்கு காட்டுகின்றன.

இரண்டாவதாக, டச்சுக்காரர் தங்கள் சமயமாகிய புரொட்டெஸ்தாந்த கிறிஸ்துவத்தைப் பரப்ப ஆவலாக இருந்தனர், இதன்பொருட்டு "கிறிஸ்தவ போதகர்மா ருக்கு அரசியல் அதிகாரிகள் வேண்டிய வேண்டிய உதவி களைச் செய்யவேண்டும்" என விதிக்கப்பட்டது. அவர்க ளுக்குத் தக்க மரியாதையும் கணிப்பும் கொடுத்து அவர்க ளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் அதிகாரிகள் செய்து கொடுக்க வேண்டும். சுதேசிப் பிள்ளைகளுக்கு டச்சுப் பாஷையைப் பயிற்றவேண்டும். பள்ளிக்கூடங் களை மிகவும் சாவதானமாகப் பேணவேண்டும். சுதேசி களை உபதேசிமாராகப் பயிற்றவேண்டும் என்றின்னோ ரன்னவாறு டச்சு அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பி க்கப்பட்டது.

"எங்கள் சொந்த மனிதரை இக் குடியேற்ற நாட்டு க்கு வரவழைத்து" இலங்கையை டச்சு மயமாக்கவும் அவர்கள் திட்டம் வகுத்திருந்தனர்.

பட்டேவியாவில் இருந்த மகாதேசாதிபதியினதும் அவரது ஆலோசனைச் சபையினதும் அதிகாரத்துக் கடங் கியே,இலங்கையில் டச்சுப் பரிபாலனம் இருந்தது. இலங் கைத் தேசாதிபதிக்கு வேண்டிய கட்டளைகள் பட்டேவியா வில் இருந்தே பிறக்கும். தேசாதிபதிக்கு உதவி செய்ய ஓர் அரசியற் சபை[1] இருந்தது. இச் சபை எட்டு சிரேஷ்ட சிவில் சேர்விஸ் அதிகாரிகளை[2]க் கொண்டது. இவர்கள்

1 Political Council  2 Senior Civil Servants



சிரேஷ்ட வர்த்தகர் என்று வழங்கப்பட்டனர், டச்சுக் காரரின் சிவில் சேர்விஸ் வர்க்கம் வியாபார முறையையே பிரதான அம்சமாகக் கொண்டிருந்தபடியால் இப்பெயர் அவர்களுக்கு வழங்கப்படலாயிற்று. டச்சுப் பரிபால னத்தில் நாலுவிதமான முக்கிய சேவைகள் இருந்தன: அவையாவன:-

**1. வர்த்தக சேவை:** சிவில் சேர்விஸ் வர்க்கமே இது. இதில் ஓர் சிரேஷ்ட வர்த்தகர்,[1] கனிஷ்ட வர்த்தகர்,[2] கணக்கு வைத்திருப்பவர்[3] என்பவர்கள் தொடக்கம் எழுத்தாளர் அல்லது கிளார்க்மார் ஈறாகப் பலர் இருப் பர்.

**2. தரைப்படை, கடற்படைச் சேவை:** டச்சுத் தரைப் படைகளிலும், கடற்படைகளிலும் இருந்தவர்கள் இப் பிரிவில் அடங்குவர்.

**3. மதச்சேவை:** சமயசம்பந்தமான விஷயங்களுக் கும் கல்வி சம்பந்தமான விஷயங்களுக்கும் இப்பகுதி பொறுப்பாக இருந்தது.

**4. தொழிலாளர் சேவை:** இப்போது நாம் பகிரங்க வேலைப்பகுதி அல்லது பொது வேலைப்பகுதி என வழங் கும் பகுதிக்கு இதனை ஒப்பிடலாம்.

பொதுப் பரிபாலன வேலையைப் பல்வேறு அரசாங்கப் பகுதிகள் ஆற்றின. சாதாரண சிவில் கருமங்களை **செக்கிறிற்றேறியற்** என்னும் காரியதரிசிக் கந்தோர் ஆற்றி யது. இதன் தலைவர் அரசியற் காரியதரிசி[4] யாவர். இதனை விட ஓர் **வர்த்தகக் கந்தோர்**[5] (நெகோற்றி கன்ரூர்[6]), ஓர் **கணக்குப் பரிசோதனைக் கந்தோர்**[7] **பணம் கொடுக்கும் கந்தோர்**[8]

1 Senior Merchant
2 Junior Merchant
3 Book-keeper
4 Political Secretary
5 Trade Office
6 Negotie Kantoor
7 Audit Office
8 Pay Office

பண்டகசாலைக் கந்தோர்[1] என்பனவும் இருந்தன. ஓர் பண்டகசாலை அதிபர்[2] கடைசியாகக் கூறப்பட்ட கந்தோரின் தலைவராக இருந்தார். மேலே கூறியனவற்றை விடத் **தனாதிகாரி** என்பவரின் தலைமையில் ஓர் நிதிப் பகுதி இருந்தது. இன்னும் **பொது வேலைப் பகுதியும்**[3] உணவுப் பண்டங்களுக்குப் பொறுப்பாக **கொம்மிஸறியற்**[4] என்பனவும் இருந்தன. **கறுவாப் பகுதி**[5] என்னும் பெயருடன் ஓர் பிரதான பகுதி **மகாபத்தே**யின் தளபதியின் தலைமையில் இருந்தது. இவ்வதிகாரியாக டச்சுக்காரரே நியமிக்கப் படுவான். கறுவாப்பட்டை உரிப்போர் வசிக்கும் கிராமங்களில் **விதானைமார்** இவனுக்குக் கீழ் இருந்தனர். கறுவாப்பட்டை உரிப்பவர்களின் பெயர்கள் எல்லாம் ஓர் தின வரவு இடாப்பில் பதியப்பட்டிருந்தன. அவர்கள் தாம் செய்துவந்த கறுவாப்பட்டை உரித்து டச்சுக்காரர்க்குக் கொடுத்தலாகிய தொழிலை விடுத்து வேறோர் தொழிலிலும் ஈடுபடக்கூடாது. இவர்களில் யாரேனும் தம் கிராமத்தைவிட்டு ஓடினால் அவனைப் பிடித்துக் குறிசுட்டு விடுவார்கள். கறுவாப்பட்டை உரிக்கும் தொழிலில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் **சீரவரி**[6] என்ற ஓர் வரி இறுக்க வேண்டியிருந்தது. இவ்வரி அவர்கள் 12 வயதடைந்ததும் இறுக்கப்பட வேண்டியிருந்தது. அதாவது 12 வயதடைந்த ஒவ்வொரு கறுவாப்பட்டை உரிப்பவனும் 62 இருத்தல் கறுவா கம்பெனிக்குக் கொடுக்கவேண்டியது. ஒருவன் இறுக்கவேண்டிய ஆகக் கூடிய சீரவரி 682 இருத்தல் கறுவா ஆகும். கறுவாப்பட்டை உரிப்போர்க்கு டச்சுக்காரர் குறித்த அளவு உப்பும், அரிசியும் வழங்கிவந்தனர். அத்துடன் 600 இருத்தல் நிறை

1 Ware house Office
2 Store-keeper
3 Public Works Department
4 Commissariat
5 Cinnamon Department
6 Body Tax



கொண்ட உரித்த கறுவாவுக்கு 90 சதவீதம் வேதனமும் கொடுத்தனர்.

சிவில் பரிபாலனம் மேலே காட்டியவாறு இருப்ப, இராணுவப் பகுதி வேறாக இருந்தது. இதில் அதிகாரிகளும் சாதாரண வீரரும் இருந்தனர். இராணுவ அதிகாரிகளில் மேஜர்[1] என்ற பதவியினனே அதி உயர்ந்தவன். அவனுக்குப் பின் கப்ரின்[2] லெப்ரினன்ற்[3] என்சைன் சார்ஜன்ற்,[4] கோர்ப்போறல்,[5] சாதாரண வீரர் என்பவர்கள் முறையே இருந்தனர். **கடற்படைச் சேவையில்** பல்வேறு தராதரமுடைய அதிகாரிகளும் வீரரும் இருந்தனர். **நுண்தொழிற் சேவையாளர் பகுதி**[6] என்ற பகுதி பல்வேறு சிறு தொகுதிகளாக வகுக்கப்பட்டு "பாஸ்" எனப்படும் கப்பல் தலையாளி[7]யை அதிபனாகக்கொண்டிருந்தது. அவன் கீழ், வீட்டுத் தச்சர், ஆயுதசாலை அதிகாரி, என்பவர்களுடன் கொல்லர், மேசன்மார், செங்கல் அடுக்குவோர் ஆகியோர்களின் தலைவனும் கடமையாற்றினர்.

பரிபாலன விஷயமாக டச்சுக்காரர் இன்னோர் சேவையையும் ஏற்படுத்தினர். அதுதான் **மதசம்பந்தமான சேவை**.[8] இது இரண்டு பிரிவுகளாக இருந்தது. குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்ட போதகர்மார் மேற்பிரிவினர், நோயாளிகளைத் தரிசித்து அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதையும் வேறும் சிறு கடமைகள் புரிவதையும் பிரதான கடமைகளாகக்கொண்ட ஏனையோர் கீழ்ப்பிரிவினர். மதசம்பந்தமான சேவையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனவாய் **ஸ்கொலர்ஷேன்**[9]

1 Major
2 Captain
3 Lieutenant
4 Ensign Sergeant
5 Corporal
6 Artizan Service
7 Master of Ship
8 Ecclesiastical Service
9 Scholarchen

என்று டச்சுப் பாஷையில் வழங்கப்பட்ட பாடசாலைச் சபையும் டயஸனேற் [1] என்ற கோயிற் சபையும் இருந்தன. பாடசாலைச் சபையானது பாடசாலைகளையும் போதகர்மாரைப் பயிற்றும் கலாசாலைகளையும் மேற்பார்வை செய்து வந்தது. கடைசியிற் கூறப்பட்ட கலாசாலைகளை செமினரிகள் என ஆங்கிலத்தில் வழங்குவர். இத்தகைய செமினரிகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்தன. போதகர்மாரையும், கம்பெனியின் இராச்சிய பரிபாலன வேலையைச் செய்யும் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தரையும் பயிற்றுவது இவற்றின் கடமையாக இருந்தது. கிறிஸ்தவ சுவிசேஷங்களை ஜனங்களுக்குப் போதிப்பதில் டச்சுக்காரர் மிகவும் ஆர்வம் கொண்டவராய் அச் சுவிசேஷங்களைச் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்தனர். டபிள்யூ. கொனின் என்பவர் சுவிசேஷங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தார். இம்ஹோவ் தேசாதிபதி 1738-ம் ஆண்டு ஓர் அச்சு யந்திரசாலையை நிறுவி அதிலிருந்து பல சிங்கள நூல்களும் தமிழ் நூல்களும் பிரசுரிக்கச் செய்தார். தமிழில் புதிய ஏற்பாடு முழுவதும் (1758), சிங்களத்தில் செபமாலைக் கொத்தும் (1738, நாலு சுவிசேஷங்களும் (1739) டச்சுக்காரரால் வெளியிடப்பட்டன. சுருங்கக் கூறுங்கால் டச்சுக்காரர் புரொட்டெஸ்தாந்த கிறிஸ்தவ இலக்கியம் ஒன்றைத் தமிழிலும் சிங்களத்திலும் உருவாக்கினர்.

டச்சுக்காரரின் கல்விமுறை **மாகாண வித்தியா சபைகள்** [2] மூலம் ஒழுங்கு படுத்தப்பட்டது இச்சபைகள் அவ்வம் மாகாணத் திஸாவைமார், போதகர்மார் என்பவர்களின்

1 Diocenate    2 Provincial School Boards



பொறுப்பில் இருந்தன. கொழும்புப் பகுதியில் 48 பாடசாலைகளும், காலிப் பகுதியில் 37 பாடசாலைகளும் யாழ்ப்பாணப் பகுதியில் 48 பாடசாலைகளும் இருந்தன. வருடந்தோறும் டச்சுப்போதகர்மார் இப்பள்ளிக்கூடங்களுக்கு விஜயம் செய்து மாணவரைப் பரீட்சை செய்வர். அப்படி அவர்கள் விஜயம் செய்யும்போது புதுமணமாகும் தம்பதிகட்கிடையே விவாகக் கிரியைகளும், பிள்ளைகளுக்கு ஞானஸ்நானமும் செய்வர். இப்பாடசாலைகளில் புரொட்டெஸ்தாந்த மதத்தின் மூலாதாரக் கொள்கைகளே பிரதானமாகக் கற்பிக்கப்பட்டன. சிங்கள, தமிழ், டச்சுப் பிள்ளைகளுக்கு வேறுவேறாகவே பாடசாலைகள் இருந்தன. சாதாரண பாடசாலைகளைவிட தொழிற் பாடசாலைகளும், அநாதைகள் படிக்கும் பாடசாலைகளும் இருந்தன. இவை டச்சுப் பிள்ளைகளின் உபயோகத்துக்காகவே ஏற்படுத்தப்பட்டன. "கிறிஸ்தவ சமயத்தைச் சுதேசிகள் தழுவும்படி செய்ய அவர்களுக்குப் பலவிதத்திலும் ஆசைகள் ஊட்டப்பட்டன. இதன்பயனாகச் சில கிராமங்களில் உள்ளார் அனைவரும் அப்படியே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர்" என்று மேலே சொல்லிய பாடசாலைகள் சம்பந்தமான பத்திரங்களில் இருந்து அறியலாகும். "சுதேசக் குடும்பங்கள் பற்றிய தகவல்களையும் இப்பத்திரங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்; சுதேசிகள்மீது தங்கள் சமயத்தைப் பலவந்தமாகப் புகுத்துதலாய கெட்ட முறையை டச்சுக்காரர் அநுட்டித்திருக்காவிட்டால் இத் தகவல்களைப் பெற்றிருக்கவும் முடியாது" என்று அந்தோனிஸ் என்பவர் எழுதியிருப்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

## நீதி பரிபாலனம்.

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தகம் செழித்தோங்கி அதன் பயனாக அது நல்ல இலாபம் அடைய

வேண்டுமானால் நாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது இன்றியமையாததென்பதை டச்சுக்காரர் உணர்ந்து அவற்றை நிலைநாட்டுவதிற் சிரத்தை கொண்டனர். அவர்கள் தேசவழமை போன்ற சுதேசச் சட்டங்களை ஒழுங்காக்கினர். ரோமன் டச்சுச் சட்டம் என்ற சட்டத்தை இந்நாட்டின் நீதிபரிபாலன விஷயத்திற் கொண்டுவந்தவர்களும் அவர்களே. டச்சுச் சட்ட நிபுணர்களால் நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டதே இச்சட்டம். சாதி, சாதி உரிமைகள் என்பவற்றை ஆதாரமாகக்கொண்ட பழைய மானிய முறைச் சட்டங்களை இலங்கையில் தகர்த்தெறிவதில் டச்சுக்காரர் புகுத்திய ரோமன் - டச்சுச் சட்டம் பெருந்துணை செய்தது எனலாம்.

ரோமன் - டச்சுச் சட்டம் இலங்கையில் இருந்த பல்வேறு டச்சு நீதிஸ்தலங்களினால் அநுட்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டது. கொழும்புப் பட்டணத்தில் ரூட் வான் ஜஸ்ரிற்றை[1] என்று டச்சு பாஷையில் வழங்கப்பட்ட நீதிஸ்தலம் இருந்தது. இதுவே அக்கால உயர்தர நீதிமன்றமாகவும் அமைந்தது. இங்கே கோட்டையில் வசித்த ஐரோப்பியர் சம்பந்தமான வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. கீழ் நீதிஸ்தலங்களின் தீர்ப்புக்கு மாறாக மனுச் செய்யப்படும் அப்பீல்கோடும் இதுவாக இருந்தது.

சுப்பிறிம்கோடு அல்லது உயர்தர நீதிமன்றத்தின் அங்கத்தவர்கள் சட்ட நிபுணர் அல்லது நியாயவாதிகளல்லர். முந்திக் கூறிய அரசியற்சபை அங்கத்தவர்களே இம்மன்றத்து அங்கத்தவராகவும் இருந்தனர்.

1 Raad Van Justititie



மாகாணங்களில் லாண்ட் ரூட்ஸ்[1] சிவில் ரூட்ஸ்[2] என்ற இருவித நீதிஸ்தலங்கள் இருந்தன. இப்போது நாம் டிஸ்திறிக்கோடு[3] என்று வழங்கும் நீதிஸ்தலங்களுக்கு ஏறக்குறைய ஒப்பானவையே லான்ட் ரூட்ஸ் என்பன. மாகாணத்துத் திஸாவை, பிஸ்கால், ஒரு அல்லது இரண்டு சிரேஷ்ட சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர், மகா முதலியார் என்பவர்களே இந்த நீதிஸ்தலத்து நீதிபதிகளாவர். 120 இறைசாலு[4]க்கு மேற்பட்ட தொகை சம்பந்தமான வழக்குகளை இந் நீதிஸ்தலம் பொதுவாக விசாரணை செய்தது. 120 இறைசாலுக்குக் குறைந்த தொகை சம்பந்தமான வழக்குகளை "சிவில் ரூட்ஸ்" என்னும் நீதிஸ்தலம் விசாரணை செய்தது.

## அரசாங்க வருவாய்

சிங்கள அரசர்கள் எவ்வாறு தம் நாட்டை ஆட்சி புரிந்தனரோ அவ்வாறே டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும் தன்கீழ் இருந்த மாகாணங்களை ஆட்சி செய்தது. சிங்கள அரசர் எவ்வாறு சகல நிலங்களுக்கும் சொந்தக்காரராகவிருந்து விளங்கினரோ அவ்வாறே இக்கம்பெனியும் நிலங்கள் முழுவதுக்கும் தானே உரிமையாளி என்றும் அரசனுக்குக் கொடுபடவேண்டிய அரசிறை முழுவதுக்கும் தானே உரித்தாளி என்றும் கூறிக் கருமம் ஆற்றியது. இன்னும், போர்த்துக்கீஸ அரசர் இத்தீவின் வர்த்தக விஷயமாகக் கொண்டிருந்த ஏகபோக உரிமையையும் தனக்காக்கியது. இதன்பயனாக இந்நாட்டில் இருந்த சகல இலாபகரமான முயற்சிகள் அனைத்தும் டச்சுக் கம்பெனியின் அதிகாரத்திலேயே இருந்தன. கம்

1 Land Raads
2 Civil Raads
3 பெரும் பிரிவு நீதிஸ்தலம் என்றும் கூறுவர்
4 Rix Dollers. இப்போதுள்ள 75 சதம் அப்போது ஒரு இறைசால் என்றுங் கூறுவர்

பெனியின் அநுமதியில்லாமல் எவராவதுசரி வியாபார முயற்சியில் ஈடுபட முடியாதிருந்தது. புடைவை முதலாம் பருத்திப் பொருள்களை அது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தது. புடைவைகளுக்கு யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் சாயம் ஊட்டுவர். இதனைவிட ஈயம், செம்பு, பித்தளை என்னும் உலோக வகைகளையும் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி இறக்குமதி செய்தது. வரி விதித்தலாலும் டச்சுக்காரர் வருமானம் பெற்றனர் பல்வேறு வகைப்பட்ட சாதியினருக்குப் பல்வேறு விதமான வரிகள் இருந்தன, இவற்றை எல்லாம் சேர்த்துத் **தலைவரி** என்றனர். இவற்றுள் **ஊழியவரி** என்ற ஒன்றும் அதிகாரிவரி என்ற ஒன்றும் இருந்தன. குறித்த சில சாதியினரிடம் இருந்து அறவிடப்பட்டதே ஊழியவரி. சாராயக்குத்தகை, கடைக்குத்தகை, மீன்குத்தகை என்பவற்றை விற்பதாலும் டச்சுக்காரர் வருமானம் ஈட்டினர். பூதல்வரி விதித்துப் பெருந்தொகைப் பணம் வருமானமாகப் பெற்றனர். இன்னும் ஆயக் குத்தகைகளினாலும் சுங்கப்பகுதியாலும் வருமானம் கிடைத்தது. யானைகள், உப்பு, வெண்கட்டி, முத்துக்கள் என்பவற்றை விற்பதாலும் ஓர் தொகைப்பணம் வருமானமாயது.

தங்கள் வருவாயின் பெரும் பாகத்தைக் காணி பூமிகளிலிருந்தே டச்சுக்காரர் பெற்றனர். **வட்டுபடே** அல்லது காணிவரி என்ற ஓர் வரியை அவர்கள் விதித்தார்கள். விளைந்த தானியத்தில் அல்லது தோட்டப் பிரயோசனத்தில் 1/10 தொடக்கம் ½ வரை காணிக்காரர் இறுக்க வேண்டுமென இருந்தது. தென்னந் தோட்டங்களுக்கு டச்சுக்காரர் நல்ல மதிப்பு அளித்தனர். தென்னையில் இருந்து பெறப்படுவனவாய தேங்காய் நெய், காடி, சாரா



யம் என்பவற்றை அவர்கள் ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டினர். சாராயம் தென் இந்தியாவுக்கும் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. தும்புக் கயிற்றையும் அவர்கள் சேகரித்துக் கப்பல்களில் அனுப்பி வியாபாரம் செய்தனர். பாக்கு தென் இந்தியாவிற்கு அனுப்பி விற்கப்பட்டு நல்ல இலாபம் கொடுத்தது, மிளகு, கறுவா என்பவற்றால் டச்சுக்காரர் ஏக போக உரிமை கொண்டவர்களாய் அவற்றை ஏற்றுமதி செய்து தக்க இலாபம் கண்டனர்.

ஊரவர்கள் ஒவ்வொருவரும் தாம் அரசாங்கத்துக்கு இறுக்கவேண்டிய வரிகளைக் கிரமமாகக் கொடுக்கவும், அவர்கள் அவ்விஷயத்தில் தவறாமல் இருக்கவும் டச்சுக்காரர் "தோம்பு" என்று வழங்கப்படும் சாதனங்களைத் தயார் செய்தார்கள். வரிகள் கொடுக்க வேண்டியவர்களின் பெயர்கள், அவர்கள் இறுத்த வரியின் தொகை என்னும் இன்னோரன்ன விபரங்கள் இத் தோம்புகளில் அவ்வப்போது குறிக்கப்படும். இப்படியாக் குறிக்காமையினால்தான் போர்த்துக்கீசரும் அவர்களின் ஈவிரக்கமற்ற பரிவாரங்களும் தமக்கு மானிய முறை ஆட்சிப்படி வரவேண்டிய பாக்கிகளைக் கண்டபடி வசூலிக்க ஊரவர்களை வருத்தினார்கள் போர்த்துக்கீசருடன் டச்சுக்காரரை இவ்விஷயமாக ஒப்பிட்டு நோக்கும்போது அவர்கள், அதாவது டச்சுக்காரர், எவ்வளவோ நீதித் திறமையும் நிறையுணர்ச்சியும் கொண்டிருந்தனர் என்றே சொல்லவேண்டும். தோம்பு முறையை அக்காலத்தவர் எப்படித்தான் வெறுத்தபோதிலும், பணம் பறிக்கும் கிராதகரான அதிகாரிகளிடம் இருந்து ஊரவர்களைப் பாதுகாக்கும் ஓர் சாதனமாக அது விளங்

கியது என்பதை மறுக்கமுடியாது. டச்சுத் தோம்பு ஒன்றிலிருந்து மாதிரிக்காக ஓர் பக்கம் கீழே தரப்படுகிறது:-

**ரத்மலானைக் கிராமத்தில்**

| வளவுப் பெயர் — | தென்னை மரத் தொகை | இறுக்க வேண்டிய வரிப் பெறுமதி இ. தட்டு | கொடுபட வேண்டிய எண்ணெய் அளவு |
|---|---|---|---|
| பஸ்தியான் அப்புகாமிக்குச் சொந்தமான தொம்பகஹாவத்தை | 195 | $1.\ 12\frac{15}{16}$ | $24\frac{3}{8}$ |
| ஏபிரஹாம் பெரேரா பயிரிட்ட வெத்தகயகஹாவத்தை | 105 | $0.\ 32\frac{3}{6}$ | $13\frac{1}{8}$ |

இ=இறைசால்

**சுருக்கம்.**

குடியேற்ற நாடுகள் என்பன தமக்கு வருவாய் அளிக்கும் தோட்டங்கள்; அங்கே வசிக்கும் மக்கள் தம் தோட்டத் தொழிலாளர்-என்ற ஒரு மனப்பான்மை அக்காலத்து ஆளும் சாதியாரிடம் இருந்தது. இந்த மனப்பான்மையினையே டச்சுக்காரரும் கொண்டிருந்தனர். இலங்கையிற் பிறந்து, இலங்கையில் வளர்ந்து இந்நாட்டைத் தாயகமாகக்கொண்ட மக்களான சுதேசிகளுக்கு என்னென்ன செய்ய வேண்டும்? அவர்களின் தேவைகள் என்ன? அவர்களை எவ்வாறு நன்கு பரிபாலிக்கலாம்? என்ற சிரத்தை டச்சுக்காரர்க்கு இருக்கவில்லை. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொழுத்த இலாபம் தேடித் தரும் கருவிகளாகப் பிறந்தவர்களே சுதேசிகள் என்ற



மனப்பான்மை டச்சுக்காரரிடம் நிலவியது. ஆனால் அவர்கள் தம் சுயநலங் கருதி, போர்த்துக்கீஸரைப்போல மத வெறிபிடித்து இந்நாட்டு மக்களை வருத்தித் தம் சமயத்துக்குச் சேர்க்கவில்லை. அப்படியிருந்தும் அவர்களுக்குக் கீழ் இருந்த மக்களது நிலை உயர்ந்து விடவில்லை. கறுவாப்பட்டை உரிப்பவர்கள் அக்காலத்திலே வாழ்ந்த நிலை கேவலம் அடிமை நிலையைப்போன்றேயிருந்தது.

டச்சுக்காரர் மதவிஷயத்தில் கொடியவராய் சமரச நோக்கில்லாதவராக இருந்தார்கள். அவர்கள் ரோமன் கத்தோலிக்கரைத் தம் ஜென்ம வைரிகளாகக் கருதினர். முஸ்லீம்களை அவர்கள் சமயத்தின் பொருட்டும் அவர்களின் வர்த்தக நாட்டத்தின் பொருட்டும் துவேஷித்தனர். பௌத்தரையும் ஹிந்துக்களையும் அஞ்ஞானிகள் என்று கூறி அவர்களைப் பலாத்கார மூலமாகவேனும் மதமாற்றம் செய்து ஞானஸ்நானம் செய்விக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர்.

இப்படியெல்லாம் இருந்தும் டச்சுக்காரரின் ஆட்சி என்றுமழியாப் பயன்கள் சிலவற்றைத் தந்திருக்கின்றது. அவர்களுடைய சந்ததியார் இன்னும் பறங்கியர் என்ற பெயருடன் இலங்கையில் வாழுகின்றனர். பறங்கியரைச் சிங்களர் "ஹொலன்ஸி" என்பர். ஒல்லாந்து தேசத்திலிருந்து வந்தவர்கள் என்பது இதன் கருத்து. "பேர்கர்ஸ்" என்றும் அவர்களை அழைப்பதுண்டு. பேர்கர்ஸ் என்றால் நகரவாசி என்பது கருத்து.

இலங்கைச் சரித்திரத்திலே **பறங்கியர்** மிகவும் பிரதானமான பங்கு எடுத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் பரிபாலன ஆரம்ப காலத்திலே பறங்கியரிற் பலர் வைத்தி

யர்களாகவும், நியாயவாதிகளாகவும், அரசியல் வாதிகளாகவும் பிரபல்யமுற்றிருந்தனர். இன்றும் எழுத்தாளர் சேவை எனப்படும் கிளறிக்கற் சேவையிற் பல பறங்கியர் கடமையாற்றி வருகிறார்கள்.

டச்சுக்காரர் ஏற்படுத்திய றோமன் - டச்சுச் சட்டம் இன்றும் இலங்கை நீதிஸ்தலங்களில் பிரயோகிக்கப்படுகிறது. இன்று நாம் இலங்கையிற் காணும் நீதிஸ்தலங்களுக்கு ஆதாரமாக இருந்தவை அக்காலம் டச்சுக்காரர் ஸ்தாபித்த நீதிஸ்தலங்களே.

இக்காலத்திலே இலங்கையில் புரோட்டெஸ்தாந்த கிறிஸ்தவசமயம் நன்கு வேரூன்றியிருக்கிறது. இதற்கு டச்சுக்காரர் அன்று செய்த முயற்சியே காரணமாகும். புரொட்டெஸ்தாந்த கிறிஸ்தவ இலக்கியம் ஒன்றைத் தமிழிலும் சிங்களத்திலும் சிருஷ்டி செய்த பெருமை டச்சுக்காரர்க்கே உரியது. சுவிசேஷங்களை இந்நாட்டு மக்களின் தாய்ப்பாஷைகளில் மொழி பெயர்த்தனர். சுதேசிகளை உபதேசிமாராகப் பயிற்றினர். தமிழிலும் சிங்களத்திலும் சமய சம்பந்தமான நூல்களை வெளியிட்டனர். இவை எல்லாம் டச்சுக்காரரால் நாம் அடைந்த பெரும் பயன்களாம்.

டச்சுக்காரரின் பழக்கவழக்கங்களை மக்களின் சமுதாய வாழ்க்கையில் நாம் இப்போதும் காணலாம். மிகச் சமீபகாலம்வரை, டச்சுச் சிற்ப முறைப்படியே இலங்கையில் வீடுகள் கட்டப்பட்டன. வீடுகளில் ஓர் "ஸ்தோப்பு" அல்லது விறுந்தை இருக்கும். விறுந்தையில் இருந்து "நடைகூடம்" அல்லது மண்டபத்துக்குப் போகலாம். நடைகூடத்துக்கு அணித்தாக வீட்டில் உள்ளார் வசிக்கும் அறைகள் இருக்கும். நடைகூடத்துக்குப் பின்னால்



முற்றமும் அதற்கப்பால் வேலைக்காரர் விடுதியும் இருக்கும்.

அநேக விதமான புது உணவு வகைகளும், பான வகைகளும் டச்சுக்காரரால் இங்கு புகுத்தப்பட்டு ஊரவர்களால் நன்கு அபிமானிக்கப்பட்டன. உதாரணமாக "பேஸ்ற்றி" [1] என வழங்கப்படும் மாப்பண்டங்கள், அச்சாறுகள், கேக் வகைகள் என்பவற்றை இன்றும் டச்சுப் பெயர்கள்கொண்டே வழங்குகிறார்கள். அறுத்தாப்புக் கிழங்கு என வழங்கப்படும் உருளைக்கிழங்கையும் இங்கு கொண்டுவந்து உபயோகிப்பித்தவர்கள் டச்சுக்காரரே. உருளைக்கிழங்கை அறுத்தாப்புக்கிழங்கு என்று இப்போதும் டச்சுப் பாஷையில் வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும். ஜின் என்ற மதுபானத்தையும் புகையிலை உபயோகத்தையும் டச்சுக்காரர் இங்கே அபிவிருத்தி செய்தனர்.

அநேக டச்சுப் பாஷைச் சொற்கள் சிங்களத்திலும் தமிழிலும் இப்போது வழங்கப்படுகின்றன. விசேஷமாக வியாபார, சட்ட விஷயங்களில் டச்சுச் சொற்கள் இன்றும் உபயோகத்தில் இருந்து வருகின்றன.

கந்தோர் (காரியாலயம்)

வெந்திஸ்

நொத்தாரிஸ்

கொந்திஸ்

என்பன இப்போது உபயோகத்தில் உள்ள டச்சுச் சொற்களிற் சிலவாம்.

தோட்டப் பயிர்ச் செய்கைக்கு அத்திவாரம் இட்டவர்கள் டச்சுக்காரரே என்றும் சொல்லலாம். தாம் ஏற்று

1 Pastry

மதி செய்வதற்கு வேண்டிய கறுவா, மிளகு, தேங்காய், கோப்பி என்பவற்றைப் பெருந்தொகையில் விளைவிக்க வேண்டி அவர்கள் பல தோட்டங்களைத் திறந்தார்கள். இலங்கை உணவு விஷயத்தில் தற்பாதுகாப்புடையதாயிருக்கவும், உணவுப் பொருள்களின் பொருட்டு வெளிநாடுகளுக்குப் பணம் செல்லாமல் இருப்பதற்குமாக அவர்கள் நெல் விவசாயத்துக்கு ஊக்கம் அளித்தனர். நாட்டில் விளைவிக்கப்பட்ட கறுவா, மிளகு முதலாம் பொருள்களைக் கொழும்பில் இருந்து புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டியிருந்ததால், அப்பொருள்களைக் கொழும்புக்கு வருவிப்பதற்கு றோட்டுக்களும் கால்வாய்களும் தேவையாக இருந்தன. இவற்றை டச்சுக்காரர் இட்டுத் தம் வியாபாரத்தைப் பெருக்கினர்.

டச்சுக்காரர் நில அபிவிருத்தியின் பொருட்டுக் கைக்கொண்ட முறைகளை அவர்களுக்குப்பின் இலங்கையைப் பரிபாலித்த பிரிட்டிஷாரும் கைக்கொண்டனர். இவ்வாறாக, தோட்டப் பயிர்ச் செய்கையே இலங்கையின் செல்வநிலைக்கு ஆதாரமாக இருந்தது. தோட்டச் செய்கை விருத்தியிலேயே அரசாங்கம் கூடிய கவனத்தைச் செலுத்தி உணவுப் பயிர்ச் செய்கையைப் பொதுவாகப் புறக்கணித்தது. அதன் பயனை நாம் இப்போது அநுபவிக்கிறோம். ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தியாக்கி அவற்றைப் புறநாடுகளுக்கு அனுப்பி ஆதாயம் பெற்றோரது செய்கையினால் நமது நெல் விவசாயமும் கைத்தொழில்களும் தேடுவாரற்றுக் கீழ்நிலைமையை எய்தின. மற்றவர்களின் ஊதியத்தின் பொருட்டு நாம் வருந்த வேண்டியதாயிற்று.



## வினாக்கள்:

1. கீழைப் பிரதேசங்களில் டச்சு அதிகாரம் வளர்ச்சியுற்ற விதத்தைக் கிரமமாகக் கூறுக.

2. இலங்கையின் கரையோர மாகாணங்களை டச்சுக்காரர் கைப்பற்றித் தமதாக்கியதை விபரமாகக் கூறுக. பிரதான உடன்படிக்கைகளின் திகதிகளையும் காட்டுக.

3. கண்டி மன்னருக்கும் டச்சுக்காரருக்குமிடையேயிருந்த தொடர்பைப்பற்றிச் சுருக்கமாக எழுதுக. அவர்களுக்கிடையே பிணக்குகள் நிகழ்ந்தமைக்கு முக்கிய ஏதுக்கள் யாவை?

4. டச்சுக்காரர் இலங்கையிற் செய்த அரசியற் பரிபாலனத்தை விபரமாகக் கூறுக. இப்பரிபாலனத்தைப் போர்த்துக்கீஸரின் ஆட்சியுடன் ஒப்பிடுக.

5. டச்சுக்காரரின் பரிபாலனத்தில் இலங்கையின் பொருளாதார நிலைமை எவ்வாறு இருந்ததென்பதை விளக்குக. போர்த்துக்கீஸரின் ஆட்சியின்கீழ் இருந்த பொருளாதார நிலைமைக்கும் டச்சுக்காரரின்கீழ் இருந்த நிலைமைக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?

6. டச்சுப் பரிபாலனத்தின் காரணமாக ஏற்பட்ட சாஸ்வதமான பயன்கள் யாவை என்று நீர் கருதுகிறீர்.

# கண்டி இராச்சியம்.

போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும் முறையே இந் நாட்டின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றி அவற்றைத் தமதாக்கி ஆட்சி புரிந்த காலத்தில் சிங்கள மன்னர் இலங்கையின் மத்திய பாகத்தில் சுதந்திர முடையர்களாய் அரசு புரிந்தனர். அடர்ந்த காடுகளாற் சூழப்பட்ட இம்மலைநாட்டில் சிங்களர் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்து வாழ்ந்து வந்தனர்.

கண்டி இராச்சியத்தை ஈரலிப்பான பிரதேசம், வரண்ட பிரதேசம் என்ற இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். மாத்தளை, கண்டி, நுவரெலியா, அப்புத்தளை என்பவற்றை இணைக்கும் ஓர் ரேகை அல்லது கோடு இவ்விரு பகுதிகளையும் பிரிப்பது எனலாம். இக்கோட்டுக்குக் கிழக்கேயுள்ளது வரண்ட பிரதேசம். இங்கே பருவ மழை பெய்யும். இதன் காரணமாக இப்பிரதேசம் நெற் செய்கைக்கு ஏற்றதாக இருந்தது. மாத்தளை, தும்பரை, ஹேவகெற்ற, வலப்பன, யதிகின்ட, வதுளை என்னும் கண்டி மாகாணங்கள் இவ்வரண்ட பிரதேசத்திலேயே இருந்தன.

பருவ மழையின் உதவியால் மலைநாட்டு மக்கள் தமது பிரதான உணவுப் பொருளாய நெல்லை விளைவித்து வந்தனர். ஆனால் அவர்கள் மலைச் சரிவுகளையடுத்த பிரதேசங்களிலே நெல் விளைவிக்க வேண்டி இருந்ததால் சம பூமியில் நெல் விளைவிப்போர்க்கிருக்கும் சுகம் அவர்களுக்கில்லை. மலைச்சரிவு நிலங்களை மேடு பள்ளமின்றி ஒப்புரவாக்கி அவற்றிலே நெல் விளைவிக்க வேண்டி இருந்தது. இதனை எவ்வளவு சிறப்பாகவும் அநுகூலமாகவும் செய்து வருகிறார்கள் என்பதனை இப்



போதும் தும்பரை, ஊவாப்பகுதிகளிற் காணலாம். செப்ரெம்பர் (ஆவணி-புரட்டாதி) மாத மழையுடன் விதைப்பு ஆரம்பமாகி பெப்ரவரி மார்ச் (மாசி-பங்குனி) மாதங்களில் அறுவடையாகும்.

தண்ணீர் கிடைத்தால் இரண்டாம் போகத்திலும் நெல் விளைவிக்கக்கூடியதாயிருந்தது. மலைகளில் இருந்து பாயும் சிற்றாறுகள் அருவிகளின் நீரைக் கட்டி இப்படியாக இரண்டாம்போக நெல்லை விளைவித்து வந்தார்கள். மாத்தளைக் குன்றுகளில் இருந்து பாயும் அருவிகளின் நீர் தும்பரை நெல் வயல்களுக்கும், ஹோர்ட்டன் சம பூமிகளில் இருந்து பாயும் அருவிகளின் நீர் ஊவாப் பகுதி நெல் வயல்களுக்கும் உபயோகப்படத்தக்கதாக அக்காலத்தவர் நீர்ப்பாசனக் கருமங்களை மிக்க திறமையுடன் ஆற்றினர்.

நெல்லைவிட சேனைப்பயிர்கள் மேட்டு நிலங்களில் விளைவிக்கப்பட்டன. விசேஷமாக ஊவாப்பகுதிப் புல் நிலங்களில் பத்தனைகள் கால்நடைகள் விருத்தியாக்கப்பட்டன.

வர்த்தகத் தொழில் அவ்வளவு பெரிய நிலையில் அக்காலத்துக் கண்டி இராச்சியத்தில் இருக்கவில்லை. மினிப்பேப் பகுதியில் இருந்து இரத்தினக் கற்கள் எடுக்கப்பட்டன. அவற்றுடன் தேன், மெழுகு, தந்தம், பாக்கு என்பனவே அக்காலத்து வியாபாரப் பொருட்களாயிருந்தன. வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கொட்டியாரம், புத்தளம், மட்டக்களப்பு என்பனவே கடற் றுறைமுகங்களாயிருந்தன, நெல், உப்பு, கருவாடு என்பன அம்பாந்தோட்டை-மட்டக்களப்புப் பகுதிகளில் இருந்து கண்டி இராச்சியத்துக்குக் கொண்டுவரப்பட்டன. டச்சுக்காரர் மேலே சொல்லிய மூன்று துறைமுகங்களையும்

முறை அடைத்துவிட்டபடியால் கண்டி மக்கள் மிகவும் இடைஞ்சற்பட்டுத் தவித்தார்கள்: உணவுக்கு வேண்டிய உப்புத்தானும் இல்லாது அவர்கள் சீவிக்க வேண்டி ஏற்பட்டது.

கண்டி இராச்சியம் அக்காலம் பெரிய அடவிகளாற் சூழப்பட்டிருந்தது. இவ்வடவிகள் சத்துருக்களுக்கு விரோதமான அரண்களாகவும் இருந்தன. இவற்றுக் கூடாகப் பாதைகள் இடவொண்ணுது என்பது அக்கால இராசகட்டளையாகும். கண்டி இராச்சியத்து எல்லைப் புறங்களில் கடவைகள் இருந்தன. இராச்சியத்திலிருந்து போகும் பொருள்களுக்கும், பிற இடங்களிலிருந்து ஆங்குச் செல்லும் பொருள்களுக்குமான தீர்வை இக்கடவைகளிலேயே அறவிடப்பட்டது. புத்தளத்தில் இருந்து கலகெதரைக் கடவைக்கூடாக ஒரு பாதை கண்டி இராச்சியத்துக்குச் சென்றது. இன்னுேர் முக்கியமான "பாதை" கண்டியிலிருந்து களனிப் பள்ளத்தாக்கு வழியாகச் சென்று வலனைத்தணவாயை அடைந்தது. இக்கணவாயே கண்டி மலைக்கோட்டைக்கு வாயிலாகவும் அமைந்தது எனலாம். கொட்டியாரத்தில் இருந்து இன்னுேர் பாதை கண்டிக்குச் சென்றது. மகாவலிகங்கைக் கருகாமையாக அது அலுத்நுவரைக்குப்போய் அங்கிருந்து தும்பரைப் பள்ளத்தாக்கினூடாகக் கண்டியை அடைந்தது. மட்டக்களப்பில் இருந்து இன்னேர் பாதை அலுத்நுவரையை அடைந்தது. அது விந்தனையில் உள்ள நில்கலையைக் கடந்து உரனியாவுக்குப் போய் அப்படியே அலுத்நுவரையை அடைந்தது. அலுத்நுவரையை டச்சுக்காரர் "விந்தனை" என்று அழைத்தனர். அது ஓர் "வனப்பு வாய்ந்த நகரம்" என ஆங்கு விஜயம் செய்த டச்சுக்காரர் கூறிப்போந்தனர். இங்கேயிருந்த மாபெரும் ஸ்தூபத்தைப் பாராட்டி ஸ்பில்பேர்ஜென் என்ற டச்சுக்காரர் விபரித்திருக்கிறுர். இப்பட்டினத்திலே தோணி கட்டுந் தொழிலில் அநேகர் ஈடுபட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறுர்.



கண்டி இராச்சியத்தின் ஏனைய பட்டினங்கள் வதுளை, மாத்தளை என்பனவாகும். வதுளை, மாத்தளை என்ற இரு குறுநிலங்களுக்குத் தலைப்பட்டினங்களாகவே இவை இருந்தன. தோல்வி, துன்பம் நேர்ந்த காலத்தில் தாம் ஒதுங்கி வாழ்வதற்கு ஹங்குருன்கெற்றவில் ஓர் இடத்தைக் கண்டியரசர்கள் வைத்திருந்தனர்.

மட்டக்களப்பு, பனமா மாகாணங்கள் கண்டி மன்னருக்கு அதிக பயன் கொடுக்கும் விசேஷ மாகாணங்களாய் விளங்கின. இம்மாகாணங்களில் அதிக நெல் விளைந்தது. மீனும் அபரிமிதமாக அகப்பட்டது. உப்பும் விளைவிக்கப்பட்டது: எனவே இவை கண்டி இராச்சியத்தின் மிகப் பிரதான மாகாணங்களாய் விளங்கின. இப்படியான செல்வம் கொழிக்கும் மாகாணங்களை 1667-ம் ஆண்டில் டச்சுக்காரர் கைப்பற்றினர்.

அரசாங்கத்தின் தலைவன், முதல்வன் அரசனே: சட்டங்களை வகுத்தல், பின் அவற்றை நடைமுறையிற் கொண்டுவருதல் ஆகியவற்றுக்கு அவனே பொறுப்பாளி. அவன் தனக்கு வேண்டிய ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஓர் சிறு சபையையும் அமைத்து வைத்திருந்தான். இச்சபை அடிக்கடி கூடி அரசருக்கு வேண்டிய சூழ்ரைகள் கூறியிருக்கின்றது என்பதற்குச் சந்தேகமேயில்லை. அரசாங்கத்தின் பிரதான உத்தியோகத்தர் இரண்டு அதிகார்களாவர். அதிகார்களுக்குக் கீழ் திஸாவைகள் என வழங்கப்பட்ட மாகாணதிபதிகளும் ரட்டருலைகள் என

வழங்கப்பட்ட பகுதித் தலைவர்களும் இருந்தனர். இராச்சியத்தின் ஒவ்வோர் பகுதியிலும் பெரிய சபை தொடக்கம் 'கம்சபை' என்ற பஞ்சாயத்து அல்லது கிராமச்சபையீறாகச் சபைகள் இருந்து பரிபாலனம் செய்தன என்பதற்குச் சான்றுகள் உள. நீதிபரிபாலன கர்த்தாவாக மன்னனே விளங்கினான். ஒருவனுக்கு மரணதண்டனை விதிக்கும் அதிகாரம் அரசன் ஒருவனுக்கே இருந்தது. மாகாணங்கள், பெரும் பிரிவுகள், கிராமங்கள் என்பவற்றில் நீதிமன்றங்கள் இருந்தன. அங்கே பிரதானிகள் வழக்குகளை விசாரணை செய்து நீதி வழங்கினர்.

தனது இராச்சிய பரிபாலன வேலையில் தனக்கு உதவி செய்யப் பல்வேறு விதமான இலாகாக்கள் அல்லது பகுதிகளை அரசன் வைத்திருந்தான். இவை அரசனின் காரிய கர்த்தாக்கள் பார்வையில் இருந்து, ஆயுதங்கள் உதவல், போக்குவரத்துச் சாதனங்கள் வழங்கல், என்னும் இன்னோரன்னவற்றுக்குப் பொறுப்பாக இருந்தன.

போர்த்துக்கீஸரும் டச்சுக்காரரும் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த காலத்தில் கண்டி இராச்சியத்தைப் பரிபாலித்த பிரதானமான சில மன்னரைப்பற்றி இனிச் சிறிது ஆராய்வாம்.

இவர்களில் முதன்மையானவனும் பராக்கிரமம் வாய்ந்தவனும் அதிக பிரக்கியாதி அடைந்தவனும் விமலதர்மசூரியன் என்பவனாவன். இவன் ஓர் சுத்த வீரன்: போர்த்துக்கீஸ பாஷையைப் பயின்று அதில் நல்ல பரிச்சயம் பெற்றிருந்தான். அவன் பலவிதத்திலும் இக்காலத்துக்கேற்ற அரசனே என்றும் கூறலாம் ஸ்பில்பேர்ஜென் என்ற டச்சுக்காரன் இம்மன்னன் மாளிகைக்கு விஜயம்



செய்து அவனைக் கண்டு தான் கண்ட அரசவையைப் பற்றி எழுதிப்போந்துள்ளான். "மன்னன் என்னை ஓர் பாரிய மண்டபத்தில் வரவேற்றான். அம்மண்டபத்தைச் சூழ அழகிய சித்திரத் திரைகள் மாட்டப்பட்டிருந்தன. ஸ்பானியதேசக் குதிரைகள் மண்டபத்தில் இருந்தன. அங்கிருந்த மேசைமீது கிறிஸ்தவ ஆசார முறையில் எல்லாம் தயாராக வைக்கப்பட்டிருந்தன. சங்கீதமும் வேறும் களியாட்டங்களும் அங்கு நிகழ்ந்து உற்சாகம் விளைத்தன" என்று ஸ்பில்பேர்ஜென் கூறியிருக்கிறான். ஆனால் கண்டியரசனான விமலதர்மன் மாளிகையில் இவையெல்லாம் நிகழ்ந்தமை நூதனம் அல்ல. அவனும் அவன் பட்டமகிஷியும் போர்த்துக்கீஸர் மத்தியிற் பலகாலம் வாழ்ந்து, ஐரோப்பியர்க்கு விருந்தோம்புவதில் தக்க பரிச்சயப்பட்டவர்களாவர்

விமலதர்மனுக்குப் பின் செனரத் அரசனானான். இவன்காலத்தில் போர்த்துக்கீஸர் கண்டி இராச்சியத்தின்மீது படையெடுத்து சர்வநாசம் விளைத்தனர். ஆனால் போர்த்துக்கீஸப் படைகள் தோற்கடிக்கப்பட்டு டிஸா என்ற போர்த்துக்கீஸத் தளபதியும் கொல்லப்பட்டமையினால் இராச்சியம் பகைவர் கையிற் சிக்காமல் தப்பிவிட்டதையிட்டு அவன் பின்னுக்கு ஒருவாறு ஆறுதல் அடைந்தான். அந்த யுத்தத்திலே சிறையாகிக் கண்டிக்குச் சென்ற ஓர் போர்த்துக்கீஸ வீரன் அரசனைப்பற்றியும் அவனது பட்டமகிஷி டோனா கதெரினாவைப் பற்றியும் ஓர் குறிப்பெழுதியிருக்கிறான். அவன் கூறியதாவது: "அரசன் சாந்தகுணமுடையவன்: இலக்கிய நூல்களில் விசேஷமாக சோதிட சாஸ்திரத்தில் அவனுக்கு

நாட்டம் உண்டு. கீழைத்தேய பாஷைகள் பலவற்றில் அவன் தேர்ச்சியுடையவனாக இருந்தான். போர்த்துக்கீஸ பாஷையையும் அவன் நன்றாகப் பேசினான். அவன் தாராள கொள்கை பூண்டவனாய் வறியவர்கள்பால் இரக்கம் கொண்டு அவர்கட்கு உற்ற நண்பனாக இருந்தான்". அரசியைப்பற்றி இப்போர்த்துக்கீஸ வீரன் பின்வருமாறு குறிப்பிட்டான்:

"அரண்மனையில் இருந்த ஏனையோர் பல்வேறு ஆபரணங்களைப் பூண்டிருப்ப அரசி எவ்வித ஆபரணமுமில்லாது அழகுடன் ஜ்வலித்தமை எனக்கு வியப்பாக இருந்தது. அவளது மடம், அழகு என்பன அங்கிருந்த எங்கள் எல்லாரதும் கண்களையும் அவள்பால் காந்தம்போல ஈர்த்தன. அவள் வரகவியைப்போலக் காவியங்களை மிக அழகாக இயற்றும் பெற்றியள். எனவே அவளை நான் மனதாரப் புகழ்ந்தேன். நானும் காவியங்கள் இயற்றுபவன் என்பதை அறிந்ததும் அவள் என்னைப் பாதுகாத்து தாராள மனத்துடன் எனக்குப் பேருதவிகள் புரிந்தாள்."

செனரத்துக்குப் பின் அவனுடைய மகன் **இரண்டாவது இராஜசிங்கன்** என்ற பெயருடன் 1635-ம் ஆண்டில் அரசனானான். அவன் 1638-ம் ஆண்டில் டச்சுக்காரருடன் ஓர் நேச உடன்படிக்கை செய்தான். அவன் போர்த்துக்கீஸரை நஞ்செனவெறுத்து அவர்களை இலங்கையில் இருந்து விரட்டிக் கலைக்கச் சமயம் நோக்கியிருந்தான். டச்சுக்காரர் போர்த்துக்கீஸரை இலங்கையில் இருந்து துரத்தியதைக் கண்ட அவன் மகிழ்ச்சியடைந்தான் எனினும் அம்மகிழ்ச்சி நிரந்தரமாக இருக்கவில்லை. டச்சுக்காரர் போர்த்துக்கீஸரை விரட்டிய பின்னர் இவர்கள்



பரிபாலித்த பிரதேசங்களைத் தமதாக்கித் தமது ஆட்சியை நிறுவினர். இன்னும் கண்டி இராச்சியத்தின் செல்வத்துக்கேதுவாக இருந்த வளம்மிக்க மாகாணங்களையும் தமதாக்கிக்கொண்டனர். எப்படியாவது இரண்டாவது இராஜசிங்கனை இணக்கி அவனைத் தம் பக்கத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் டச்சுக்காரர் எண்ணமாக இருந்தது. அப்படியிருந்தும் அடிக்கடி அவனுக்கும் டச்சுக்காரர்க்குமிடையே பகை மூண்டு யுத்தங்களும் ஏற்பட்டன. 1664-ம் ஆண்டிலே தனக்கெதிராகக் கிளம்பிய கலகத்தை யடக்குதற்காக இராஜசிங்கன் டச்சுக்காரரின் உதவியை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, அவர்கள் இதன்பொருட்டுச் செய்த துணைக்குப் பிரதியுபகாரமாக 15 பிரதேசங்களை அவன் இழக்க வேண்டி ஏற்பட்டது. டச்சுக்காரரை எவ்வாறு துரத்தலாம் என்பதனை அல்லும் பகலும் ஆலோசித்துக்கொண்டிருந்த இராஜசிங்கன் பிரான்சியருடன் இவ்விஷயமாக ஓர் உடன்படிக்கை செய்தான். இது நிகழ்ந்தது 1671-ம் ஆண்டில். பிரான்சியர் திருக்கோணமலையைக்கூடக் கைப்பற்றினர். ஆனால் அவர்களின் வெற்றி நீடித்து இருக்கவில்லை. டச்சுக்காரர் திருக்கோணமலையை மீண்டும் 1672-ம் ஆண்டில் கைப்பற்றினர். 1675-ம் ஆண்டில் இராஜசிங்கன் மீண்டும் டச்சுப் பிரதேசங்கள்மீது படையெடுத்தான். 1665-ம் ஆண்டில் அவனிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை மீண்டும் அவனிடம் ஒப்படைக்குமாறு இலங்கையில் இருந்த டச்சு அதிகாரிகளுக்கு பட்டேவியாவில் இருந்த டச்சு அரசாங்கம் 1677-ம் ஆண்டில் உத்தரவு பிறப்பித்தது. 1684-ம் ஆண்டில் இராஜசிங்கன் மீண்டும் படையெடுத்து டச்சுக்காரரைத் தாக்கி அவர்களிடம் தான் முந்திப் பறிகொடுத்த மாகாணங்க

ளிற் பெரும்பாலனவற்றைக் கைப்பற்றினன். இவ்வாருக அவன் திருப்பிக் கைப்பற்றியனவற்றுள் அம்பாந் தோட்டையும் ஒன்ருகும். 1687-ம் ஆண்டில் இரண்டாவது இராஜசிங்கன் இறந்தான்.

மற்றும் கண்டியரசர்களிலும் பார்க்க, இரண்டாவது இராஜசிங்கனைப்பற்றி நாம் அதிகமாக அறியக்கூடியவர்களாயிருக்கிறேம். 1659-ம் ஆண்டு தொடக்கம் 1679-ம் ஆண்டுவரை கண்டி இராச்சியத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த ருெபேட் நொக்ஸ்[1] என்னும் ஆங்கிலேயன் இராஜசிங்கனைப்பற்றி விரிவாக எழுதியிருக்கிறன். இன்னும் இரண்டாவது இராஜசிங்கன் டச்சுக்காரர்க்கு எழுதிய கடிதங்களிலிருந்தும் பல விஷயங்களை நாம் இப்போது அறிய முடிகிறது. முதலாவது இராஜசிங்கனைப் போலவே இவ்வரசனும் உரமும் உறுதியுமுடையவனுய்த் தன் பரிபாலனத்தில் இருந்த மாகாணங்களைத் திறமையுடன் ஆட்சி புரிந்தவன் என்பதற்குச் சந்தேகம் இல்லை. செனரத், விமலதர்மன் என்பவர்களைப் போல இவனும் போர்த்துக்கீஸ பாஷையிற் பரிச்சயமுள்ளவனுயிருந்தான். அது மாத்திரம் அல்ல. இவன் வாலிபனுக இருந்த காலத்தில் ஓர் பிரான்சிஸ்க சபைக் குருவானவரிடம் பாடம் கேட்டு லத்தீன் பாஷையையும் கற்றுத் தேர்ந்திருந்தான். இவன் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் தந்திரி என்றும், குள்ள புத்தியுடையான் என்றும் இவனுடைய தந்திரோபாயங்களைச் சமாளிக்கவே டச்சுக்காரரும் இவன்பால் குயுக்திகளையும் தந்திரோபாயங்களையும் கையாண்டனர் என்றும் கொட்றிங்ரன்[2] போன்ற சில சரித்திர நூலாசிரி

1 Robert Knox, 2 H. W. Codrington



யர் கூறுவர். ஆனுல் இவ்வரசனுக்கும் டச்சுக்காரர்க்கும் ஏற்பட்ட தொடர்புகளைப் பட்சபாதமற்ற மனத்துடன் ஆராய்வார்க்கு ஒரு விஷயம் தெள்ளிதிற் புலனுகும். அதாவது: 1638-ம் ஆண்டில் டச்சுக்காரர் அவனுடன் உடன்படிக்கை செய்தபோது அதன்படி நடக்கும் சித்தமுடையவராக இருக்கவில்லை. போர்த்துக்கீஸரை இலங்கையில் இருந்து துரத்துவதில் தனக்கு உதவி செய்யவே டச்சுக்காரர் வந்தனர் என்று அவன் மனப் பூர்வமாக நம்பும்படி இவர்கள் (டச்சுக்காரர்) அவனை நயமொழிகளினுல் ஏமாற்றிவிட்டு போர்த்துக்கீஸர் இருந்த இடங்களில் தாமே இருந்தனர். போர்த்துக்கீஸரைக் கலைப்பதில் தமக்கு ஏற்பட்ட செலவை அரசன் இறுக்காமையினுலேயே தாம் அவ்விடங்களில் இருப்பதாக டச்சுக்காரர் சாக்குப் போக்குக் கூறியமைக்காதாரமில்லை. முதலாவதாக, டச்சுக்காரர் தம்க்கேற்பட்ட செலவு இவ்வளவு என்று அரசனுக்குக் கணக்குக் காட்டிக் கேட்கவில்லை. இரண்டாவதாக, இலங்கையின் வளம் மிக்க மாகாணங்களையே இவர்கள் போர்த்துக்கீஸரிடம் இருந்து (அரசனுக்காக) வெற்றிகொண்டு அங்கே தமது எண்ணப்படி திறையைச் சேகரித்து, தாம் செலவழித்த தொகையை ஈடுசெய்து விட்டனர். உண்மை இவ்வாறிருப்ப இரண்டாவது இராஜசிங்கன் டச்சுக்காரர்க்குரிய பணத்தைக் கொடுக்கவில்லை என்பது நியாயத்தின்பாற்பட்டதாகாது.

1747 ம் ஆண்டு தொடக்கம் 1782-ம் ஆண்டுவரை கண்டியை யாண்ட கீர்த்தி ஸ்ரீ கண்டியின் சிறந்த மன்னரில் ஒருவனுவன். இவன் பௌத்த சமயத்தில் அதிக பற்றுக்கொண்டவன். இவனுடைய காலத்தில்தான்

பௌத்த சங்கத்தின் "சயாமியப்பகுதி" ஸ்தாபிக்கப்பட்டது. முதலாம் விஜயபாகு, முதலாம் விமலதர்மன் என்பவர்கள் செய்ததுபோல கீர்த்திஸ்ரீயும் பர்மா, சயாம் சீயம்) ஆகிய பௌத்த நாடுகளில் இருந்து பௌத்த குருமாரை வரவழைத்து பௌத்த சங்கத்தைப் புனருத்தாரணம் செய்தான். இவை எல்லாவற்றிலும் மேலாக, இவனுடைய பரிபாலன காலத்தில்தான் **வெலிவிற்ற சரணங்கரா** என்னும் பிரபல்ய பௌத்த ஆசிரியர் வாழ்ந்து பௌத்த மதத்தின் புத்தெழுச்சிக்கு அரிய பணியாற்றினார். 4-ம் பராக்கிரமபாகுவின் காலம் தொடக்கமாக எழுதப்படாத மகாவம்சம், அக்காலம் தொடக்கம் கீர்த்தி ஸ்ரீயின் காலம் ஈறுகத் தொடர்ந்து எழுதப்பட்டது. இன்னும் தலதா மாளிகையை அவன் புதுக்குவித்து இப்போது நாம் காணும் உள் விகாரையையும் கட்டுவித்தான்.

கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் **ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்**. இவனது ஆட்சி 1815-ம் ஆண்டில் முடிவெய்தியது.

மலைநாட்டுச் சிங்களர் என்றும் வழங்கப்படும் கண்டிநாட்டுச் சிங்களர் தம் வாசஸ்தலங்களான மலைப் பகுதிகளில் ஓர் தனிச்சிறப்பு வாய்ந்த பண்பாட்டையும் நாகரீகத்தையும் விருத்தி செய்தனர். மற்றும் பல மலைவாசிகளைப்போன்று கட்டட வேலைகளில் மரங்கள் அதிகமாயுபயோகிக்கப்பட்டதோடு மரச் சிற்பமும் ஒரு விசேஷ கைத்தொழிலாக முக்கியத்துவம் அடைந்துள்ளது. கண்டிப் பகுதி வீடுகளின் அழகுமிக்க கூரைகள் அவற்றிற்குப் பின்னணியாக வமைந்துள்ள காடுகளுக்கு மிகப் பொருத்தமுடையனவாக இருக்கின்றன. எம்பெக்க தேவாலயத்தின் மரக்கூரையும் ஆங்கு காணப்படும் மரச் சிற்பங்களும் கண்டிநாட்டுச் சித்திர வேலைப்பாடுகளுக்கு உதாரணங்களாகும். இந்நாட்டுச் சித்திரத்தில் அலங்காரப் பகுதி உயர் ரகமானது. இதற்குச் சிறந்த சான்றுன அழகுமிக்க மாதிரிகளைப் பொன், வெள்ளி, பித்தளைப் பொருட்களிலும், தந்தச் செதுக்குகளிலும், சுவர் ஓவியங்களிலும், மேற்பரவை ஓவியங்களிலும் காணலாம். கேத்திர ரூப அலங்காரத்திலும் வளைவு ரேகைகளின் உபயோகத்திலும் அக்காலச் சித்திரகாரன் மிகுந்த திறமை காட்டினன். பௌராணிகக் கதைகள் சித்தரிக்கப்பெற்ற அலங்காரக் கரைகளும் தனி மதிப்புக்குரியனவாம். 'நாரிலதா', 'கிந்துற', அன்னம், மகரம், 'எற்கந்த லிகினிய' பறவை என்பன போன்ற அலங்கார ரூபங்கள் சித்திரகாரனுற் பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டுள்ளன. நாகலோக மரமான கடுவுல், தேவலோக மரமான பாரிசாதம் என்பன கண்டிச் சித்திரத்திற் பொதுவாகக் காணப்படுகின்றன. அதுவுமன்றி இயற்கையிற் காணப்படும் எழில்மிக்க வர்ணங்கள், உருவங்கள் அமைந்த இலைகள், பூக்கள், கொடிகள் போன்ற பலப்பல அலங்காரச் சித்திரத்தில் உபயோகிக்கப்பட்டன. கமல ரூபங்கள், அன்னுசி மாலை, கிளி, மற்றும் பறவைகள் என்பன கண்டிநாட்டு அலங்காரச் சித்திரத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன.

## வினுக்கள்:

1. கண்டி இராச்சியத்தின் விஸ்தீரணத்தையும் அதில் இருந்த மாகாணங்களேயும் தேசப் படம் மூலம் விளக்கிக் காட்டுக.

2. கண்டி மக்களின் பொருளாதார வாழ்க்கையைப் பற்றி ஓர் கட்டுரை எழுதுக.

3. கண்டி இராச்சியத்தின் மாகாண ஆட்சி, மத்திய ஆட்சி என்பவற்றை விளக்கி எழுதுக.

4. கண்டி இராச்சியத்துக்கும்

   (1) போர்த்துக்கீஸர்
   (2) டச்சுக்காரர்
   (3) பிரிட்டிஷார்

   என்பவர்களுக்கு மிடையேயிருந்த தொடர்பைத் தனித்தனியாக விளக்கிக் கூறுக.

5. கண்டி மக்களின் கலேகள், நுண்கலேகள் என்பவற்றைப்பற்றி உம்மால் இயன்ற அளவுக்கு ஓர் விரிவான கட்டுரை எழுதுக.

# அதிகாரம் 4.

## பிரிட்டிஷார்காலம் 1796-1948.

### பிரிட்டிஷ் பரிபாலனத்தில் இலங்கை ஒன்றுபட்டமை (1796-1832)

1796-ம் ஆண்டில் பிரிட்டிஷார் கரையோர மாகாணங்கள் அனைத்துக்கும் அதிகாரிகளாயினர். இம் மாகாணங்களே டச்சுக்காரரிடம் இருந்து கைப்பற்றுவதில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி 12,000 பவுண்களேச் செலவழித்தது. இப்பணத்தையும், இயலுமானல் அதற்கு மேற்பட்ட தொகையையும் தாம் வெற்றி கொண்ட பிரதேசங்களில் இருந்து எவ்வாருகவேனும் வசூலித்துவிட வேண்டும் என்று கம்பெனி அவாவுற்றிருந்தது. இதன் பொருட்டு கரையோர மாகாணங்கள் சென்னே இராஜதானியின் ஓர் பகுதியாக்கப்பட்டன. தாம் கைப்பற்றிய இலங்கை மாகாணங்களுக்கெனத் தனி அரசாங்கம் ஒன்றை பிரிட்டிஷார் அமைக்காமல் விட்டதற்கு இன்னேர் காரணமும் இருந்தது. அக் காலத்தில் ஐரோப்பாவில் நிகழ்ந்த யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்படும் காலத்தில், இலங்கையில் தாம் கைப்பற்றிய பிரதேசங்களே டச்சுக்காரருக்கு மீண்டும் கையளிக்க வேண்டியும் நேர்ந்துவிடுமோ என்றும் பிரிட்டிஷார் சந்தேகத்துடன் இருந்தனர். ஆகவே நிரந்தரமான அரசியன் முறையை ஏற்படுத்தாது தற்காலிக முறையில் அரசாங்கத்தை நடத்துவதே மேல் என அவர்கள் எண்ணினர். டச்சுக்காரருக்கு இலங்கைப் பிரதேசங்களேத்

திருப்பிக் கொடுக்க ஏற்பட்டால், அதற்குமுன் தாம் செலவழித்த பணத்தை எப்படியாவது அறவிட்டுக் கொள்ள வேண்டும் என்பது பிரிட்டிஷாரின் நோக்கமாக இருந்தது.

வெற்றிகொண்ட பிரதேசங்களின் பரிபாலனப் பொறுப்பு ஓர் பிரதம சேனாதிபதி[1] யிடம் விடப்பட்டது. இவருக்குப் பரிபாலன விஷயமாக சிவில் அதிகாரமும் இராணுவ அதிகாரமும் இருந்தன. இவ்வாறு முதற் பிரதம சேனாதிபதியாக இருந்தவர் ஸ்ருவார்ட்[2] என்பவர். றெபேர்ட் அன்ட்றூஸ்[3] என்பவரின் அதிகாரத்தின்கீழ் சென்னை சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர் கம்பெனியின் இலங்கைப் பிரதேசங்களின் சிவில்நிருவாகத்தை நடாத்தினர். இவர்களுக்கு மேலாக றெபேர்ட் அன்ட்றூஸ் திறை மேற்பார்வையதிகாரி[4] யாக ரெவன்யு சுப்ரின்ரெண்டன் இருந்தார். அன்ட்றூஸின்கீழ் பல உதவியாளர் கொழும்பு, காலி, திருக்கோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு என்னும் ஊர்களிற் கடமையாற்றினர். இவர்கள் திறையற விடுவதுடன் மாத்திரம் நிற்கவில்லை. தம்கீழ் உள்ள பகுதிகளில் சிவில் நிருவாகம், நீதிபரிபாலன வேலை என்பவற்றையும் அவர்கள் செய்ய வேண்டியிருந்தது. இப்படியாகப் பல்வேறு கடமைகள் இருந்தபோதிலும் திறை வசூலிப்பதிலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாகவிருந்து, அதனையே தம் பிரதான கடமையாகக் கருதினர். திறையதிகாரிகளின் காரியாலயங்கள் கச்சேரிகள் என வழங்கப்பட்டன. அமீல்தார் என்று வழங்கப்பட்ட சென்னை உத்தியோகத்தர்கள் திறையதிகாரிகளுக்குத் திறை சேகரிப்பதில் உதவி புரிந்தனர்.

1 Commander-in-Chief
2 Colonel Stewart
3 Robert Andrews
4 Superintendent of Revenue



கரையோர மாகாணங்களை பிரிட்டிஷார் கைப்பற்றி ஒரு வருஷம் கழியமுன் சிங்களர் கலகம் செய்தனர். இதன் பயனாக திறை வசூலிக்க முடியாமற் போனது. வாள் முனையில்தான் திறையை வசூலிக்க முடியுமென்று ஓர் உத்தியோகத்தர் தமது மேலதிகாரிகளுக்கு அறிவித்தார்.

சிங்களர் செய்த கலகத்துக்குப் பொருளாதாரப் பிரச்சினைகளே முக்கிய காரணமாக இருந்தன. தம் நிலத்தில் விளைந்த தானியங்களையோ வேறும் பொருள்களையோ வரியாகக் கொடுப்பது சிங்களரின் தொன்றுதொட்ட மரபாக இருந்து வந்தது. ஒவ்வொருவரும் எவ்வளவு இறுக்க வேண்டுமென்பதும் பாரம்பரிய வழக்க முறைப்படி விதிக்கப்பட்டிருந்தது. குடிகளின் பழக்க வழக்கங்களையும் திறை விஷயமாக அவர்கள் தலைமுறை தலைமுறையாக எவ்வளவு திறை கொடுத்து வந்தனர் என்பதையும் நன்கு அறிந்திருந்த பிரதானிகளே திறையை வசூலிப்பவராக இருந்தபடியால் அவர்களாற் குடிகளுக்கு அதிக கஷ்டமோ அநீதியோ நேர்ந்துவிடவில்லை. ஆனால் தனது வருமானத்தை ரொக்கப்பணமாகப் பெற அவாப்பட்ட சென்னை அரசாங்கம் 1796-ம் ஆண்டில் சேவாநிலமுறை*யினை ஒழித்தது. சேவாநிலங்கள் அல்லது மானிய நிலங்கள் இரண்டு வகையின. உத்தியோகக் கடமைகளை ஆற்றுவோர்க்கு அளிக்கப்பட்டன ஒருவகை நிலங்கள். சரீர ஊழியம் போன்ற கூலிவேலைகளின் பொருட்டு உதவப்பட்டது இரண்டாம் வகை நிலங்கள். இப்படியான சேவாநிலங்களை அவரவர்க்கு வழங்கியபடியால் முற்கால அரசாங்கங்கள் தத்தமக்கு வேண்டிய தொழிலாளர்களைச் சிரமமின்றி வேண்டிய வேண்டியபோது பெற்றன.

* Service tenure

மேலே கூறிய சேவா நிலங்களைவிட சேவர்முறையில் அடங்காத நிலங்களும் இருந்தன. அந்த அந்த நிலங்களில் விளையும் தானியங்கள், பறிக்கப்படும் தேங்காய்கள் என்பவற்றில் ஒரு பகுதியை வரியாகக் கொடுப்பவர்களுக்கு சேவாமுறையில் அடங்கா நிலங்கள் வழங்கப்பட்டன.

சென்னை அரசாங்கம் சேவா நிலமுறையை ஒழித்து, குடியானவர்கள் தங்கள் விளைபொருள்களில் அரைவாசியை வரியாக இறுக்க வேண்டுமென விதித்தது. இவ்வளவுடன் நிற்காது ஒவ்வொரு தென்னை மரத்துக்கும் ஒரு பணம் [1] வீதம் ஓர் மரவரி இறுக்க வேண்டுமெனவும் அது விதித்தது. இது ஓர் அநியாய வரி. மரத்தில் உள்ள தேங்காய்களின் பெறுமதியிலும் பார்க்க இவ்வரி சில சமயங்களில் அதிகமாகவும் இருந்தது. இறுக்க வேண்டிய வரிகளைக் குடிகள் ரொக்கப் பணமாகவே இறுக்க வேண்டுமெனவும் சென்னை அரசாங்கம் கட்டளையிட்டது. மானிய முறையில் திளைத்து அதில் வளர்ந்த மக்கள் உள்ள ஓர் நாட்டிலே ரொக்கப் பணம் ஏது? இன்னும் வரியைச் சேகரிப்பதில் அக்கால உத்தியோகத்தர் அநுசரித்த முறைகளும் ஏற்றவையாக இருக்கவில்லை. குறிக்கப்பட்ட ஓர் இடத்து வரிகளை வசூலிக்கும் உரிமையைப் பிரசித்த ஏலத்தில் விற்பர். அப்போது, திறையைச் சேகரிக்கும் கடமை பூண்ட அதிகாரியே அநேகமாக அவ்வுரிமையை ஏலத்தில் வாங்கி, தான் இலாபம் அடைவதற்கான சகல வழிகளையும் தேடுவான். குடியானவன் ஒருவன் தான் இறுக்கவேண்டிய வரியை இறுக்கத் தவறினால் அவனை நீதிஸ்தலத்துக்கு இட்டுச் செல்வர். அங்கேயும் நீதிபதியாக இருப்பவன் திறை அதிகாரியே.

1 fanam



திறையைச் சேகரிக்கும் அவனே வழக்காளியாகவும் நீதிபதியாகவும் இருந்தமையால் பட்சபாதமற்ற நீதி வழங்கப்படுதலும் இயலாதாயிற்று. கடைசியாக, சென்னையில் இருந்துவந்த அமீல்தார்களும் ஊரவர்களின் அபிமானத்தைப் பெறாதவர்களாய் தம் செயல்களினால் அவர்களின் வெறுப்பையும் துவேஷத்தையும் ஈட்டிக்கொண்டனர். இவர்களைப்பற்றி சென்னைத் தேசாதிபதியாக இருந்த ஹோபார்ட் [1] பிரபு கூறியமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

> "கொள்ளையடிப்பதே அவர்கள் தொழில்: அவர்களின் நலவுரிமைகள் இலங்கைக்கு அந்நியமானவை; தம்முடைய உத்தியோக நிலைமை அந்தரமானதாகையால் சொற்ப காலத்துக்குள் எவ்வளவு சூறையாட முடியுமோ அவ்வளவையும் சூறையாட அங்கலாய்ப்புடையவர்கள். இப்படியான போக்கிரிகளே இவர்கள்"

என்னும் கருத்துப்பட ஹோபார்ட் தேசாதிபதி கூறினார்.

நாட்டின் குழப்பமான நிலையை ஹோபார்ட் தேசாதிபதி கேள்வியுற்று, கலகம் தொடங்க முன்னரேயே ஓர் விசாரணைச் சபையை இலங்கைக்கு அனுப்பினார். டி மியூறன் [2] இச்சபையின் தலைவர். அக்நியூ, [3] அன்ட்ரூஸ் [4] என்பார் இதன் அங்கத்தவர்கள். சென்னை முறையை ஒழித்து விட்டு டச்சுக்காரரின்கீழ் இருந்த வரி முறையை அநுசரிக்க வேண்டும் என்று இவ்விசாரணைச் சபை செய்த சிபாரிசுகள் 1798-ம் ஆண்டு மே மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் பயனாக, 1798 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிரெடரிக் நோர்த் தேசாதிபதியாக வந்தபோது இலங்கையில் சமாதானம் நிலவியது.

1 Lord Hobart
2 Colonel De Meuron
3 Agnew
4 Andrews

சென்னைப் பரிபாலன முறையினால் கம்பெனிக்குப் பணநட்டம் ஏற்படவில்லை. இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றுவதில் ஏற்பட்ட செலவு 12,000 பவுண்கள் மாத்திரமே. முத்துக்குளிப்பு ஒன்றால் மாத்திரம்

| | | |
|---|---|---|
| 1796-ம் ஆண்டில் | 31,000 | பவுணையும் |
| 1797-ம் ஆண்டில் | 107,000 | ,, |
| 1798-ம் ஆண்டில் | 123,000 | ,, |
| எல்லாமாக | 261,000 | பவுணை |

கம்பெனி சம்பாதித்ததால் அதற்கு நட்டம் ஏற்பட்டது என்று கூறமுடியாது.

அடுத்தடுத்து மூன்று வருஷங்களாக முத்துக் குளித்ததால் பார்களில் சிப்பிகள் இல்லாமல் ஒழிந்தன. அதன் பயனாக 1799-ம் ஆண்டில் நிகழ்ந்த முத்துக் குளிப்பு பலன் கொடுக்கவில்லை.

## இரட்டை ஆட்சிக் காலம் 1798-1802

1798-ம் ஆண்டு ஐரோப்பிய யுத்தம்' எதிர்பார்த்த படி முடிந்துவிடவில்லை. எனவே இலங்கையைப்பற்றி எப்படி முடிவு செய்வதென்பது தவணையிடப்பட்டது. ஆகவே இன்னோர் தற்காலிக பரிபாலன முறை இலங்கைக்கு அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கென ஓர் தேசாதிபதியைப் பிரத்தியேகமாக நியமித்தது. ஆனால் இத்தேசாதிபதி தமக்குரிய கட்டளைகளை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகஸ்தர்களிடமிருந்தே பெற்றார். தேசாதிபதிக்குப் பரிபாலன விஷயமாக உதவி செய்ய ஓர் சபையும் அமைக்கப்பட்டது.



பிரதம காரியதரிசி, பிரதிக் காரியதரிசி, வர்த்தக ஸ்தானிகர்[1] பிரதம கணக்காளர்[2] சிவில் கணக்குப் பரிசோதனையதிகாரி[3] என்பவர்களே பிரதான உத்தியோகத்தர். கரையோர மாகாணங்கள் நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டு "கலெக்டர்" அல்லது திறை சேகரிப்போர் என்னும் ஒவ்வோர் அதிகாரி வசம் அவை ஒவ்வொன்றும் விடப்பட்டன. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மாத்தறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு என்னும் இடங்களில் ஒவ்வொரு கலெக்டர் இருந்து தம் கடமைகளை யாற்றினர். முதலியார்மார், விதானைமார் என்பவர்கள் கலெக்டர்களுக்குதவியாக இருந்தனர். இவ்வாறாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து சேகரிக்கப்பட்ட திறைப் பணம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அனுப்பப்பட்டது.

இவ்வாறான புதிய பரிபாலன முறையின்கீழ் நியமிக்கப்பட்ட முதல் தேசாதிபதி நோர்த் பிரபு ஆவர். அவர் நேர்மையும் நன்னோக்கமும் கொண்டவர். ஆனால் மனிதரை அளந்திட்டறியத் தெரியாதவர். நோர்த் தேசாதிபதி பரிபாலன விஷயமாகப் பல சீர்திருத்தங்கள் செய்ய அவாவினார். ஆனால் சென்னை அரசாங்கம் இலங்கையைப் பரிபாலனம் செய்த காலத்தில் அதன்கீழ் இங்கு வேலை பார்க்கவந்த அதிகாரிகள் நோர்தின் நோக்கங்களுக்கு விரோதமாகவிருந்து அவருக்கு அடிக்கடி தொந்தரவு கொடுத்தனர். சென்னையில் இருந்துவந்த சிவில் சேர்விஸ் அதிகாரிகள் லஞ்சம் பெறுபவர்கள், சுயநல மனப்பான்மையுடையவர்கள் என்பதை நோர்த் மனப்பூர்வமாக உணர்ந்தார். எனவே அவர்களைப்பற்றி ஓர் விசாரணை

1 Commercial Resident
2 Accountant General
3 Civil Auditor

நிகழ்த்தப்பட்டது. அதன்பயனாக தென்னிந்திய சிவில் சேர்விஸ் அதிகாரிகளின் ஊழல்கள் எல்லாம் வெளியாயின. எனவே அவர்களிற் பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். இலங்கையிலே கம்பெனிக்கிருந்த பிரதேசங்களைச் செம்மையான முறையிற் பரிபாலிப்பதற்கு இலங்கைக்கென ஓர் 'சிவில் சேர்விஸ் பகுதி' வேறாக இருக்கவேண்டியது அவசியம் என நோர்த் உணர்ந்தார். இலங்கையிலே கம்பெனியின் வருமானத்துக் கேதுவாய இலாகாக்கள் அல்லது பகுதிகளைக் கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்தற்கு **அரசிறை வர்த்தகச்சபை** [1] என்ற ஓர் ஸ்தாபனத்தை அவர் நிறுவினார். இன்னும் "கலெக்டர்" என்ற பதவிகளை அவர் ஒழித்து, 13 திறைப் பகுதிகளையும் பரிபாலிக்க **அரசிறை ஏசண்டர்கள்** [2] என்னும் உத்தியோகத்தரை நியமித்தார். இவ்வுத்தியோகத்தரை மேலே சொல்லிய அரசிறைச் சபை மேர்பார்வை செய்தது. இச்சபையிலே பிரதம காரியதரிசி, உபதனாதிகாரி, பிரதம கணக்காளர், வேதன விநியோகப்பேரதிகாரி [3] என்பவர்கள் அங்கத்துவம் வகித்தனர்.

பல சட்டத் திருத்தங்களையும் நோர்த் ஆரம்பித்தார். "கிறிமினல் வழக்குகள் விஷயமாகவும், சிவில் வழக்குகள் விஷயமாகவும் 1796-ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் நீதிபரிபாலன வேலை ஸ்தம்பித்துவிட்டது." என்பதை அவர் உணர்ந்தார். பிரிட்டிஷார் வருவதற்குமுன் இருந்த டச்சு நீதிபதிகள் பிரிட்டிஷாருக்கு இவ்விஷயமாக உதவி புரிய மறுத்துவிட்டனர். அத்துடன் அப்போது நடைமுறையில் இருந்த ரோமன் - டச்சுச் சட்ட முறைகளில் பிரிட்டிஷாருக்குப் பரிச்சயமில்லை. ஆனால்நோர்த் மனம் தளரவில்லை. கல்

1 Board of Revenue and Commerce
2 Agents for Revenue
3 Paymaster General



கத்தாவில் இருந்த எட்மன்ட் கரிங்ரன் [1] என்ற பிரபல நியாயவாதியை அழைத்து டச்சுக்காரரின் நீதிபரிபாலனச் சட்ட முறைகளை ஆராய்ந்து இலங்கைக்கு வேண்டிய சட்டங்களைத் தொகுக்குமாறு அவருக்குப் பணித்தார். கரிங்ரன் அவ்வாறே செய்து ஓர் சட்டத்தொகுப்பை இயற்ற அது 1799-ம் ஆண்டு அமுலுக்கு வந்தது.

**சுப்பிறீம்கோடு** என வழங்கப்படும் உயர்தர நீதிமன்றம் ஒன்றையும் உயர்தர அப்பீல் கோடு என்னும் நீதிஸ்தலத்தையும் அமைக்க 1801 ம் ஆண்டில் இலங்கைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஒரு பிரதம நீதியரசரும் ஒரு உதவி நீதியரசரும் இந்நீதி ஸ்தலங்களில் விசாரணை புரிந்தனர். 1802 ம் ஆண்டில் **மாகாண நீதிஸ்தலங்கள்** [2] ஐந்து மாகாணங்களில் நிறுவப்பட்டன. இவற்றில் சிவில் சேர்விஸ் அதிகாரிகள் நீதிபரிபாலனம் செய்தனர். இதே வருஷத்தில் **சமாதான நீதிபதிகள்** [3] எனப்படுவோரும் நியமிக்கப்பட்டனர். சமாதான நீதிபதிகளின் நீதிஸ்தலங்களிலே அற்ப குற்றங்கள் சம்பந்தப்பட்ட சிவில், கிறிமினல் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. இப்போது **அற்றேணி ஜெனரல்** எனப்படும் இராசகாரிய நியாயவாதி செய்யும் கருமங்களை நிருவகிப்பதற்கு **அத்வக்காத் பிஸ்கால்** [1] என்ற ஓர் சட்ட அதிகாரியும் நியமிக்கப்பட்டார். அரசாங்கத்தின் சட்ட விஷயமான ஆலோசகராகவும், அரசாங்க வழக்குகளை நடத்துபவராகவும் அத்வக்காத் பிஸ்கால் இருந்தார். அரசாங்க மசோதாக்களை இயற்றுபவரும் அவரே.

காணிகள் சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்வதிலும் நோர்த் முனைந்தார். மானியச் சேவாமுறை

1 Edmund Carrington
2 Provincial Courts
3 Justices of Peace
4 Advocate Fiscal

யை மீண்டும் நாட்டிற் கொண்டுவரவேண்டும் என மியூறன் என்பவர் தம் விசாரணையின் பயனாகச் சிபாரிசு செய்தார் என நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம். ஆனால் நோர்த் தேசாதிபதிக்கு இந்த சிபாரிசு பிடிக்கவில்லை மானிய முறையில் ஊழியம் செய்வதை ஜனங்கள் விரும்பவில்லை என்றும், அந்த முறையை முற்றாக ஒழிக்கவே அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் அவர் எண்ணினார். பயிர் செய்வோருக்கே பயிர் செய்யும் காணியைச் சொந்தமாக்கிவிட்டால் பயிர் விளைவு அதிகரிக்கும் என்றும், அதன் பயனாக அரசாங்கத்துக்குத் திறை கூடுதலாகக் கிடைக்குமென்றும் அவர் எண்ணினார். இன்னும் இராஜகாரிய முறையில் வரும் தொழிலாளர்களில் தங்கியிருப்பதிலும்பார்க்க வேதனம் கொடுத்துத் தொழிலாளர்களைத் தமது வேலைகளுக்கு அமர்த்துவது சிறந்தது எனவும் அவர் கருதினார். ஆகவே 1800 ம் ஆண்டில் அவர் ஓர் பிரகடனம் செய்வித்தார். மானிய முறைப்படி சேவை செய்யவேண்டியவர்கள் அச்சேவைக்குப் பதிலாக அவரவர் நிலத்தில் விளைந்த பொருள்களில் 1/10 தொடக்கம் ¼ ஐ வரியாகக் கொடுத்துத் தம் சேவா முறையை நீக்கிக் கொள்ளலாம் என்பதே அப்பிரகடனம். ஆனால் இந்தப் பிரகடனத்தின்படி எவரும் செய்யவில்லை. எனவே "மானியச் சேவாமுறை ஒழிய அதற்குப் பதிலாக அச் சேவையின் பொருட்டு நிலங்களை வைத்திருப்போர் தம் விளை பொருள்களில் 1/10 தொடக்கம்1/4 வரை அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும்" என்று ஓர் உத்தரவு 1802 ம் ஆண்டு பிறப்பிக்கப்படலாயிற்று. இதுவரை அரசாங்க சேவை செய்யும் அதிகாரிகளுக்கு நிலமே வழங்கப்பட்டு வந்தது. இந்த முறையை நோர்த் தேசாதிபதி ஒழித்து, உத்தியோகம் வகிப்பவர்களுக்கு வேதனம் கொடுக்கப்பட வேண்டுமென விதித்தார்.



ஆனால் நோர்த்தின் திட்டங்கள் அநுகூலம் அடையவில்லை. அவர் எதிர்பார்த்தபடி அரசிறை அதிகரிக்கவில்லை. அதுவுமன்றி, அரசாங்கம் தனக்கு வேண்டிய தொழிலாளரின் பொருட்டு, முன்னரிலும் பார்க்க அதிக செலவு செய்யவேண்டி ஏற்பட்டது. விதிக்கப்பட்ட வரி வீதமும் அதி கூடுதலாகவே இருந்தது. அத்துடன், ரொக்கமாக வரியை இறுக்கக்கூடிய நிலைமையில் அப்போது குடிகள் இருக்கவில்லை. இதுதான் நோர்த் இட்ட திட்டம் பிரதிகூலம் அடைந்ததற்கு முக்கிய காரணம். அக்காலத்துப் பொருளாதார முறை பழைய மானிய முறையிலேயே அமைந்திருந்தது. இதனை நோர்த் உணராது கருமம் ஆற்றத் தொடங்கியபடியால் அவர் எண்ணியபடி இவ் விஷயமாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் முதலியார்மார், தலைமைக்காரர் என்பவர்களுக்குச் சம்பளம் கொடுக்க நோர்த் தீர்மானித்தமை நல்ல பயன் அளித்தது. அதனால் அவர்கள் குடியானவர்களிடம் இருந்து தம் மனம் போனவாறு தானியங்களை அறவிட முடியாமற் போனது. எனவே, அவர்கள் இதுவரை குடிகள்மீது கொண்டிருந்த அதிகாரமும் செல்வாக்கும் குறையலாயின.

மேலே சொல்லிய திருத்தங்களைவிட வேறும் பல சீர்திருத்தங்களை நோர்த் தமது பரிபாலன காலத்தில் கொண்டுவந்தார். அளவைப்பகுதி பொது வேலைப்பகுதி, வைத்தியப்பகுதி, தபால்பகுதி, கல்விப்பகுதி போன்ற அரசாங்கப் பகுதிகள் உருவாதற்கு அத்திவாரம் இட்டவர் நோர்த் பிரபுவே. இலங்கையில் அம்மைப்பால் குற்றிக் கொள்ளும் முறையை முதன்முதலாக வைத்தியப்பகுதி அநுட்டானத்துக்குக் கொண்டுவந்தது. ஜேம்ஸ் கோர்டினர்[1] என்பவரே கல்விப்பகுதியின் முதல் அதிகாரியாக

---

1 James Cordiner

இருந்தார். டச்சுக்காரர் காலத்திருந்த கோயிற் பற்றுப் பள்ளிக்கூடங்களை[1] இக்கல்விப் பகுதி தன்னகத்தே கொண்டதாய், "அஞ்ஞானி"களை மனந்திருப்புதல் பௌத்தம், ஹிந்துமதம் என்னும் பழைய சமயங்களில் இளஞ்சிறார் கொண்ட விசுவாசத்தை மறக்கச் செய்தல் என்னுமிவற்றை நோக்கமாகக்கொண்டதாக அமைந்திருந்தது.

கண்டி இராச்சியத்துடன் நோர்த் தேசாதிபதி கொண்டிருந்த தொடர்பு அவ்வளவு சிறந்ததாக இருக்கவில்லை. இலங்கையின் மத்தியிலே கண்டி ஓர் தனி இராச்சியமாகச் சுதந்திரத்துடன் இருப்பது, அதனைச் சுற்றியுள்ள பிரிட்டிஷ் பிரதேசங்களுக்கு ஆபத்து என்பதே நோர்த்தின் சித்தாந்தமாக இருந்தது. இன்னும் தமது பரிபாலன இராஜதானியாகிய கொழும்புக்கும் திருக்கோணமலைக் கடற்படைத் தளத்துக்குமிடையில் கண்டி இராச்சியத்தைச் சேர்ந்த பிரதேசங்கள் இருந்து குறித்த இரண்டு பகுதிகளையும் பிரித்து வைத்தன. கொழும்பில் இருந்து திருக்கோணமலைக்குத் தொடர்பேற்படுத்த வேண்டுமானால், இடையில் உள்ள பிரதேசங்களுக்கூடாகவே செய்யவேண்டும்; அதற்கு ஒன்றில் அப்பிரதேசங்களை வெற்றிகொண்டு தமதாக்கவேண்டும், அல்லது கண்டியரசனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். இந்தியாவில் அக்காலத்திலே பல சமஸ்தானங்களை வெற்றிகொண்டு அவற்றை பிரிட்டிஷார் தம்கீழ் வைத்தமாதிரி கண்டி இராச்சியத்தையும் தம் ஆணைக்குக் கீழ் கொண்டுவந்தால் என்ன என்று நோர்த் சிந்திக்கலாயினார். அவ்வாறு அவர் சிந்திப்பதற்கு

1 Parish Schools



அக்காலக் கண்டி இராச்சிய நிலைமையும் சாதகமாயிருந்தது. கண்டியரசன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் பிரதானிகளின் வெறுப்பை ஈட்டிக்கொண்டிருக்க, அவனைத் தொலைத்துவிட்டுத் தானே அரசனாக முதல் அதிகாரியாயிருந்த பிலிமத்தலாவை சமயம் பார்த்துக்கொண்டிருந்த காலம் அது. பிலிமத்தலாவை பிரிட்டிஷ் உதவியை நாடினான். ஆனால் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் பிரிட்டிஷாருடன் நேசபான்மை கொண்டு அவர்களை விரோதித்துக் கொள்ளாமல் இருந்ததால், அவனுக்கு விரோதமாகப் படைகள் அனுப்பி பிலிமத்தலாவைக்கு உதவி செய்ய பிரிட்டிஷாரால் முடியாமல் இருந்தது.

தனது நோக்கம் நிறைவேறாததைக் கண்ட பிலிமத்தலாவை மித்திரபேதச் சூழ்ச்சியில் இறங்கி, கண்டி அரசனுக்கும் பிரிட்டிஷார்க்குமிடையே பகையை உண்டாக்கச் சதிபுரிந்தான். அக்காலத்தில் பிரிட்டிஷார்க்குரியதான கரையோர மாகாணங்களைச் சேர்ந்த சோனக வியாபாரிகள் சிலரை மலைநாடுகளில் யாரோ சிலர் துன்புறுத்தி அவர்களது பண்டங்களையும் கொள்ளையடித்தனர். இதனையறிந்த நோர்த் நட்டஈடு தரல் வேண்டுமென்று அரசனைக் கேட்டார். இவ்வக்கிரமத்துக்குக் காரணர்கள் யார் என்பதை அறியாமையினாலோ, இது ஓர் சதி, இதனைப் பிரதானிகளே வேண்டுமென்று செய்தனர் என மனப்பூர்வமாக எண்ணியபடியாலோ மன்னன் நட்டஈடு கொடுக்க மறுத்தான். "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்" என்பார்கள். நோர்த் முன்பின் யோசியாது கண்டிமீது யுத்தப்பிரகடனம் செய்தார். கண்டியைச் சுற்றி அரண்கள்போல பெரிய மலைகளும் அடவிகளும் இருந்தன. இவற்றுக்கிடையே கரந்துநின்று பகைவரைத் தாக்கும் கொரில்லாப் படையினர் உளர்.

இன்னும் இராஜதானியை அடைவதற்குச் சரியான பாதைகள் இல்லை. இதன் பயனாக படை உதவியோ, உணவு உதவியோ, கண்டிக்குள் நுழைந்தவர்களுக்கு வெளியில் இருந்து வருவது கஷ்டம். இன்னும் மழை பெய்யச் சகதிகள் மிகும். இச்சகதிகளால் மலேரியா என்னும் காட்டுக்காய்ச்சல் பரவிப் படை எடுப்போரை மாய்க்கும்.

பிரிட்டிஷ் படைகள், கலகெதரை, பலக்கடுவைக் கணவாய்கள்மூலம் கட்டுகாஸ்தோட்டையை அடைந்து அதனைக் கைப்பற்றிப் பின்னர் கண்டிக்குள் நுழைந்தன. இவற்றின் வருகையை அறிந்த ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் தனது துணைவருடன் ஹங்குரன்கெற்ற என்னும் மலைநாட்டுக்குச் சங்கேதப்படி சென்று ஒளித்துக்கொண்டான். கண்டியை அடைந்த பிரிட்டிஷ் படைகள் தம் பகைவரைக் காணவில்லை. அவர்களுக்குப் பதிலாக மலேரியா, உணவுப் பஞ்சம் என்பன அவர்களைப் பீடித்து வாட்டத் தொடங்கின. இவற்றை நிருவகிக்க முடியாத பிரிட்டிஷ் படைகள், முன்னேற்பாட்டின்படி சுற்றி வளைத்துத் தாக்கிய கண்டிப் படைகளிடம் சரண் புகுந்தன.

இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியிற் கொண்டு வரவேண்டும் என்ற நோர்த்தின் ஆசை இவ்வாறாக முடிந்தது. ஐரோப்பாவிலே பிரிட்டிஷார் நெப்போலியனுக்கு விரோதமான யுத்தங்களில் ஈடுபட்டிருந்தமையினால், புதுப்படைகளை இலங்கைக்கு அனுப்ப முடியாமற் போய்விட்டது. அப்படியிருந்தும் வெமிஸ்[1] என்னும் சேனாதிபதியின் தலைமையில் கண்டியைக் கைப்பற்ற இன்னோர்

1 Wemyss



படை அனுப்பப்பட்டது. அந்த முயற்சியும் முந்தியதைப் போலப் பிரதிகூலமடையவே, கண்டியைக் கைப்பற்றுவது முடியாதென்பதைக் கண்ட பிரிட்டிஷார் 1805-ம் ஆண்டில் அதனுடன் சமாதானம் செய்துகொண்டனர்.

1802-ம் ஆண்டில் டச்சுக்காரர் இலங்கையை பிரிட்டிஷாருக்குக் கையளித்தனர். அதன் பயனாக இலங்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கித் தனது நேரடியான பரிபாலனத்திற் கொண்டு வந்தது. நோர்த் தேசாதிபதியின் பரிபாலனத்தில் வெறுப்புக்கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை 1805-ம் ஆண்டு பதவியினின்று நீக்கி இங்கிலாந்துக்கு அழைத்து அவரிடத்துக்கு சேர் தோமஸ் மெயிற்லன்ட் என்பவரை நியமித்தது.

உறுதியும், உழைப்பும், நேர்மையும், திறமையும் கொண்டிருந்தவர் மெயிற்லன்ட். தான் நேர்மையாக நடப்பதுமன்றித் தனது உத்தியோகத்தரையும் நேர்மைப் பாதையிற் செல்லும்படி அவர் தூண்டினார். "மாட்சிமை தங்கிய மன்னர்பிரானுக்குரிய சேவையின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும்" என்று அவர் இடையறாது தனது அதிகாரிகளுக்குத் தெருட்டிவந்தார். அவர் தேசாதிபதியாகக் கடமையேற்றமுதற் சிலமாத காலத்துக்குள் ஊர்தோறும் சென்று நிலைமையை உள்ள உள்ளவாறு அறிந்தார். அவர் ஒவ்வொரு மாகாணத்துக்கும் விஜயம் செய்து அங்குள்ள பிரச்சினைகளை நேரே கண்டு பரிபாலனம் எவ்வளவு சீர்கெட்டுவிட்டது என்பதைக் கண்டார். பரிபாலன விஷயமாக அவர் ஓர் அலங்கோல நிலைமையையே எங்கும் கண்டார். நோர்த் தேசாதிபதி

1 Crown Colony

மூடத்தனமாக அனுட்டித்த காணிக்கொள்கையினால் அரசிறை வருவாய் குறைந்திருந்தது. சிவில் சேர்விஸ் அதிகாரிகளுக்குப் போதிய வேதனம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் திறமையற்றவராய்ப் பலவித ஊழல்களுக்காளானவராய் இருந்தனர்.

அரசிறையை அதிகரிப்பதற்குப் பழைய நிலமானிய முறையையே அநுட்டிக்க வேண்டும் என்பதை மெயிற்லன்ட் தேசாதிபதி கண்டு அவ்வாறு செய்தார். கண்டி இராச்சியம் விஷயமாக நோர்த் கைக்கொண்ட கொள்கையை மெயிற்லன்ட் கைவிட்டு, தமது அதிகாரத்தில் இருந்த பிரதேசங்களின் பரிபாலனத்தைச் செம்மைப்படுத்துவதில் தீவிரமாக முனைந்தார். திறமையற்ற, கூடா நெறி பூண்டிருந்த அதிகாரிகள் அனைவரையும் அவர் நீக்கிவிட்டு, சிவில் சேர்விஸ் உத்தியோகத்தரின் கருமங்களை நுணுக்கமாகவும், தீவிரமாகவும் மேற்பார்வை செய்தார். உத்தியோகத்தரின் கடமை விஷயமாக அவர் நயவு தாட்சண்யம் காட்டாதவராக இருந்தபோதிலும் அவர்களுடைய நலவிருத்திக்காகப் பாடுபட்டார். உள்ளூர்ப் பிரதானிகளின் செல்வாக்கு அதிகாரம் என்பவற்றைச் சிதைத்து, முடிக்குரிய குடியேற்றநாட்டுப் பரிபாலன இலட்சியங்களைச் செவ்வனே இலங்கையிற் புகுத்த வேண்டுமானால் சிவில் சேர்விஸ் வர்க்கத்தைத் திறம்பட அமைக்கவேண்டும்; அதுவே சிறந்த மார்க்கம் என்பதை அவர் உணர்ந்தார். மாகாணத்துப் பகுதிகளின் பரிபாலனத்துக்குப் பொறுப்பாய் இருந்துகொண்டு திறை வசூலித்தல், நீதிபரிபாலனம் செய்தல் ஆகியவற்றை சிவில் சேர்விஸ் அதிகாரிகள் செய்தால், முதலியார்மார்க்கு ஜனங்களைத் துன்புறுத்தச் சந்தர்ப்பங்கள் ஏற்படா என்றும் அவர் கருதினார்.



மெயிற்லன்ட் தேசாதிபதி சிவில் சேர்விஸ் வர்க்கத்தை முதலாம் பிரிவு, இரண்டாம் பிரிவு, மூன்றாம் பிரிவு என மூன்று பிரிவுகளாக வகுத்தார். ஒரு சிவில் சேர்விஸ் அதிகாரி மூன்றாம் பிரிவில் இருந்து இரண்டாம் பிரிவுக்கு உயர்ச்சி அடைய விரும்பின், அவர் தாமிருந்த பிரிவில் மூன்று வருஷம் திருப்திகரமான சேவை செய்ய வேண்டும். இரண்டாம் பிரிவில் ஏழு வருஷம் திருப்தியான சேவை செய்த பின்னரே அப்பிரிவு அதிகாரி ஒருவர் முதலாம் பிரிவை எய்தலாம். இவ்வாறாக, ஒரு சிவில் சேர்விஸ் அதிகாரி தன் கடமையைத் திறமையுடனும் நேர்மையுடனும் ஆற்றிவந்தால், அவர் உத்தியோகத்திற் சேர்ந்த 10 வருஷங்களின்பின் முதலாம் பிரிவையடையலாம். இன்னும், சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர் சிங்களம், தமிழ் ஆகிய சுதேசப் பாஷைகளைக் கற்று முதலியார்மாரின் உதவியில்லாமலே குடிசனங்களுடன் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் மெயிற்லன்ட் தேசாதிபதி விதித்தார். சிங்கள அறிவுடைய சிவில் சேர்விஸ் அதிகாரிகள் 3-ம் பிரிவில் இருந்து 2 ம் பிரிவுக்கு இரண்டு வருஷத்திலும், 2-ம் பிரிவில் இருந்து 1-ம் பிரிவுக்கு 6 வருஷத்திலும் போகலாம் என்று அவர் விதித்து, சிங்களம் கற்பதில் சிவில் சேர்விஸ் அதிகாரிகளுக்கு ஊக்கம் பிறப்பித்தார்.

**திறைக்கோமிஷனர்** அல்லது **அரசிறைக் கோமிஷனர்**[1] என்னும் அதிகாரியின்கீழ் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு கலெக்டர் நியமிக்கப்பட்டார். மாகாண பரிபாலனத்தைச் செவ்வியமுறையில் நடத்துவதே கலெக்டரின் கடமை. மாகாணத்தில் இருந்து சேரவேண்டிய திறைகளை வசூலித்தல், சிறிய சிவில், கிறிமினல் வழக்குகளை விசாரணை

1 Commissioner of Revenue

செய்து தீர்ப்புக்கூறல் என்பன கலெக்டரின் பிரதான கடமைகள். இன்னும் அவர்கள் அடிக்கடி மாகாணம் எங்கணும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கு விவசாயம், வர்த்தகம் ஆதியாம் முயற்சிகளும், ஜனங்களின் சுகாதார நிலையும் விருத்தியடைதற்கான வழிவகைகளைத் தேடவேண்டும் என்றும் கலெக்டர்மார் கட்டளையிடப் பட்டனர். ஒவ்வொரு கலெக்டரும் தன்தன் மாகாணப் பரிபாலன விஷயமாக ஓர் ஆண்டறிக்கை தயாரித்து அதனைத் தேசாதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் நிதிநிலைமை காலந்தோறும் ஓர் கணக்குப் பரிசோதனையதிகாரியால் ஆராயப்பட்டது; அவர் வரவுகளையும் செலவுகளையும் நுணுக்கமாகப் பரிசிலனை செய்தார். சிவில் சேர்விஸ் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடக்கூடாதெனவும் மெயிற்லன்ட் விதித்தார். இதற்குமுன் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர் தமது உத்தியோகத்துடன், வியாபாரம் முதலாம் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டுத் தம் வருமானத்தைப் பெருக்க வழிதேடினர். இதனால் பல தகாக்கருமங்களிலும் அவர்கள் ஈடுபடவேண்டியிருந்தது. ஆனால் மெயிற்லன்ட் தேசாதிபதி அவர்களுக்கு இப்போது மாதவேதனம் நிர்ணயித்து "பென்ஷன்" எனப்படும் ஓய்வுகால வேதன உரிமைகளும் கொடுத்திருந்ததால் அவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

மெயிற்லன்டின் பரிபாலன காலத்திற் பிரதம நீதியரசராக இருந்தவர் சேர் அலெக்ஸான்டர் ஜோன்ஸ்ரன் [1] என்பவர். இவர் ஓர் மேதாவி. பல பாஷைகளிற் பரிச்சயம்

1 Sir Alexander Johnston



பெற்றவர். பிரதம நீதியரசர் பதவியிலிருந்து இளைப்பாறி இங்கிலாந்துக்குச் சென்றபின் கீழைத்தேசப் பண்பாடுகளை பிரிட்டிஷ் மக்களும் அறிவதற்காக ரோயல் ஆசியச் சங்கத்தை [1] அவர் அங்கே ஸ்தாபித்தார். அவர் இலங்கையில் இருந்த காலத்திலே, தம் உத்தியோக கருமமாக இந்நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று மக்களின் நிலைமைகளை நன்கு அவதானித்தார். நீதி, சட்டவிஷயங்களில் மாத்திரமல்ல ஏனைய விஷயங்களிலும் அவர் சிரத்தை கொண்டிருந்தார். அவர் பல சமயங்களில் விவசாய விருத்தி போன்ற விஷயங்களில் மெயிற்லன்ட் தேசாதிபதிக்கு ஆலோசனையும் சொல்லிக்கொடுத்தார். அவருடைய ஆலோசனையின் பேரில்தான் ஓர் விசேஷ உத்தியோகத்தர் மன்னார், அம்பாந்தோட்டைப் பகுதிகளில் நெற்சாகுபடி செய்வதுபற்றி ஓர் அறிக்கை விடுத்தார். ரோமன் கத்தோலிக்கருக்கு விரோதமாக விருந்த சட்டங்களை நீக்கி, டச்சுக்காரரால் அவர்களுக்கு மறுக்கப்பட்ட வழிபாட்டுச் சுதந்திரத்தை மீண்டும் கொடுக்க மூலகாரணராகவிருந்தவர் ஜோன்ஸ்ரனேயாவர். ஜூரிமார் மூலம் விசாரணை செய்யப்படும் முறையும் 1910-ம் ஆண்டில் அநுட்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

கஷ்டங்களும், அதிருப்தியும் நிலவிய நோர்த் தேசாதிபதியின் பரிபாலனத்துடன் மெயிற்லன்டின் பரிபாலனத்தை ஒப்பிட்டு நோக்குமளவில் பின்னையது எவ்வளவோ சாலச் சிறந்தது என்பது இதுவரை கூறியவற்றால் விளங்கும். மெயிற்லன்ட் பல விஷயங்களில் சர்வாதிகாரிபோல நடந்தார் என்பது உண்மையே. ஆனால் அவர் குடியேற்றநாட்டுப் பரிபாலனத்து இலட்சியத்தைக் கொஞ்சமேனும் நழுவவிடாது தம் மனச்சாட்சிப்படி

1 Royal Asiatic Society

நேர்மையாகப் பரிபாலனக் கருமத்தை நடாத்தினர் என்பதை மறுக்கமுடியாது. "சுதேசிகளின் சந்துஷ்டியையும் செல்வத்தையும் பொதுவாக அபிவிருத்தி செய்தல் மூலமே இத்தீவின் செல்வ நிலையைப் பாதுகாக்க வேண்டும். இதுவே அரசாங்கத்தின் பூரண இலட்சியம்: இதனையே இலட்சியமாக அரசாங்கம் எப்பொழுதும் கடைப்பிடிக்க வேண்டும்" என்று அவர் வருணித்தமைக் கமைந்திருந்ததே அக்காலக் குடியேற்றநாட்டுப் பரிபாலனம்.

மெயிற்லன்டிற்குப் பின்னர் சேர் றெபேர்ட் பிரௌன்றிக்[1] (1812-1820) தேசாதிபதியாக வந்தார். கண்டி இராச்சியத்திலே நிகழ்ந்த சில சம்பவங்களால், அவ்விராச்சியத்தையும் பிரிட்டிஷ் பரிபாலனத்திற் கொண்டுவர அவரால் முடிந்தது.

X நோர்த்தின் படையெடுப்பு பிரதிகூலமடைந்தபின், ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தனக்கு இடையூறுகள் விளைத்துவந்த முதலாவது அதிகாரி பிலிமத்தலாவையின் செல்வாக்கைக் குறைக்க முற்பட்டான். அவ்வதிகாரி தன்னைக் கொலை செய்யச் சதிசெய்தான் என்று குற்றம் சாட்டி 1812-ம் ஆண்டில் மரண தண்டனை விதிப்பித்தான். பிரிட்டிஷார் உதவியைவிட வேறு உதவி இல்லை என்பதை உணர்ந்த மற்றும் பிரதானிகள், பிரிட்டிஷாருடன் தொடர்பேற்படுத்தி அரசனை அகற்றச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். கண்டி இராச்சியத்தை எப்படியாவது பிரிட்டிஷ் பரிபாலனத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பதில் பிரௌன்றிக் ஆர்வமுடையவராயிருந்தார்; எனவே அவர் கண்டியரசனின் விரோதிகளான பிரதானிகளுக்குப் பலவகையிலும் ஊக்கம் அளித்தார். இதற்

1 Sir Robert Brownrigg



கிடையில் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தனக்குத் துரோகிகளானவர்களை அகப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தான். இவர்களின் முதன்மையானவனை எகெலப்பலை அரசனுக்கெதிராகக் கிளம்பிச் சதி செய்யவே ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் இப்பிரதானியின் மனைவி மக்களையும் சுற்றத்தவரையும் பிடித்து வாளுக்கிரையாக்கினான். அரசன் பிரதானிகளின் துணையின்றித் தன்னந்தனியனாக நிற்பதால், அவனைச் சுலபமாக வெற்றி கொள்ளலாம் என்பதை பிரௌன்றிக் கண்டார். இவ்வாறாக இருக்கையில் பிரிட்டிஷ் பிரஜைகளான சில வியாபாரிமாரைக் கண்டியரசனின் வீரர் உளவாளிகள் என எண்ணிப் பிடித்து அவர்களின் கைகால்களை வெட்டிவிட்டனர். இத்துடன் அவர்கள் பிரிட்டிஷ் பிரதேசத்திலிருந்த ஓர் கிராமத்துக்கும் தீ வைத்தனர். தாம் கண்டி மீது போர்ப் பிரகடனம் செய்ய இவை போதுமான ஏதுக்கள் என்று பிரௌன்றிக் கொண்டு அவ்வாறே செய்து வெகு சீக்கிரத்திற் கண்டி நகரத்தைக் கைப்பற்றினர். இதன்பின் அரசனையும் சிறைப்படுத்தித் தேசப்பிரஷ்டம் செய்தார். அதே ஆண்டில் கண்டியில், பிரதானிகளைக்கொண்ட ஓர் சமாஜம் கூடியது. அதில், இங்கிலாந்து அரசனையே தமது அரசனாகவும் கொள்வதெனப் பிரதானிகள் தீர்மானித்து இணங்கினர். பிரதானிகளின் உரிமைகள், சலுகைகள் என்பவற்றைப் பாதுகாக்கவும் பௌத்த மதத்தைப் பேணி வளர்க்கவும் பிரிட்டிஷார் இணங்கினர். கண்டி இராச்சியத்துக்கும் ஏனைய பிரிட்டிஷ் பிரதேசங்களுக்குமிடையேயிருந்த வியாபாரத் தடைகள் நீக்கப்பட்டன. இதனால் நன்மையடைந்தவர்கள் பிரிட்டிஷாரே. இவ்வாறாக இரு பகுதியார்க்கும் நன்மையளிப்பதுபோல ஏற்பட்ட கண்டி உடன்படிக்கை[1]யில் ஒரு நூதன்மை இருந்

1 Kandyan Convention

தது. இவ்வுடன்படிக்கைப்படி பிரதானிகள் சிவில் பரிபாலனம் நீதிபரிபாலனம் செய்யலாம் என்றிருந்தது. ஆனால் அவர்கள் சிவில் சேர்விஸ் அதிகாரிகளுக்குக் கீழ்க் கட்டுப்பட்டிருக்க வேண்டியது என்றும் காணப்பட்டது. குடியானவர்கள் இடும் முறையீடுகளைக் கேட்டுப் பரிகரிப்பு அளிக்கவும், பிரதானிகளின் பரிபாலனத்தில் பிழைகள் நேரின் அவற்றைத் திருத்தவும் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

1818-ம் ஆண்டில் கண்டி மாகாணங்களில் பிரிட்டிஷார்க்கு விரோதமாக ஓர் கலகம் ஏற்பட்டது.

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியபின்னர், கண்டி மாகாணங்களை பிரிட்டிஷார் ஓர் சபையின் பரிபாலனத்தில் விடுத்தனர். இச்சபைக்கு ஸ்தானிகர்[1] என்ற உத்தியோகத்தர் தலைவராக இருந்தார். ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு விரோதமான சதிகளில் பிரதான பங்கெடுத்த ஜோன் டொய்லி[2] என்பவரே முதல் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார். டொய்லியின்கீழ் அரசிறை ஏஜண்டுகள் இருப்ப, அவர்களின் கீழேயே பிரதானிகள் இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டது.

புதிய பரிபாலனம் பிரதானிகளின் செல்வத்திலும் கைவைத்தது. கடவைகளை அகற்றித் தங்குதடையில்லாமல் வியாபாரம் செய்யலாம் என்று பிரிட்டிஷார் விதித்ததால் பிரதானிகளுக்கு இதுவரை கிடைத்துவந்த கடவைப்பணம் கிடைக்காமற் போனது. இதனால் அவர்களின் செல்வம் குன்றியது. பழைய மானியமுறைப்படி பிரதானிகள் குடியானவர்களிடம் தமக்கு வரவேண்டியனவற்றை அறவிடும்போது அவர்களுக்கும் அரசிறை

1 Resident 2 John D'oyly



ஏஜண்டுகளுக்குமிடையே தகராறும் ஏற்பட்டது. இன்னும் ஆயுதங்கள் யாவற்றையும் கண்டிக் கச்சேரியில் சேர்த்துவிட வேண்டும் எனவும் பிரிட்டிஷ் அதிகாரிகள் ஓர் உத்தரவைப் பிறப்பித்தனர். இப்படிச் செய்வது தமது பழைய பலத்தைக் குறைப்பதாகும் என்று பிரதானிகள் கருதினர். இவற்றைவிட, பிரதானிகளுக்குச் சஞ்சலத்தையும், அவர்கள் மனத்தில் விரோத மனப்பான்மையையும் வளர்க்கும் வேறும் சில கருமங்களையும், புதிதாக வந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் செய்தார்கள். அவர்கள் சாதிகுல வேற்றுமைகளைப் பாராட்டவில்லை. பிரதானிகளுக்குத் தொன்றுதொட்டு இருந்த மரியாதைகளை அவர்கள் செலுத்தாதுவிட்டனர். பௌத்த சமயத்தை வளர்ப்பதிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் சிரத்தை கொள்ளவில்லை. இதன்பயனாகப் பௌத்த குருமாரும் பிரிட்டிஷ் ஆட்சியில் வெறுப்புக் கொண்டனர். கடைசியாகக் கண்டி மக்களுக்கு பிரிட்டிஷார் வேம்பு போல இருந்தனர். அந்நியராட்சிக் கடங்கிநடக்க அவர்கள் விரும்பவில்லை.

மேலே சொல்லிய காரணங்களின் பயனாக 1818-ம் ஆண்டில் ஓர் கலகம் ஊவாவில் ஆரம்பித்தது. அதனை அதிகாரிகள் மிகுந்த கஷ்டத்துடன் அடக்கினர். ஜனங்களை அடக்குமுன் பல கண்டிக் கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, அவர்களுடைய நீர்ப்பாசன வேலைகள் பல நாசமாக்கப்பட்டன. ஏறக்குறைய 10,000 மக்கள் இக்கலகத்தில் இறந்தனர்.

1818 ம் ஆண்டுக் கலகத்துடன் கண்டி இராச்சியத்தில் எஞ்சியிருந்த சின்னங்களும் மறைந்தன. பரிபாலன விஷயமாகத் தமக்கிருந்த அதிகாரங்களைப் பிர

தானிகள் இழக்க அவை, "அரசாங்க ஏஜண்டுகள்"[1] எனப்படும் மாகாணாதிபதிகள் வசம் விடப்பட்டன. இவ்வாறாக மானியமுறையில் இருந்த புராதன இராச்சியம் ஒன்று தன் அந்திய காலத்தை எய்தியது. இதன் பயனாகப் பொதுமக்கள் நற்பயன் அடைந்தனர் என்று கூறலாகும். இலங்கை முழுவதும் இப்படியாக பிரிட்டிஷ் பரிபாலனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டாலும், நாட்டின் பல்வேறு பாகங்கள் ஒன்றோடொன்று தொடர்பு வைத்துக்கொள்வது பூர்த்தியாக்கப்படவில்லை. பார்ண்ஸ் தேசாதிபதி[2] (1820-1830)யின் பரிபாலன காலத்தில் பல தெருக்கள் அமைக்கப்பட்டதன் பயனாக கண்டிப் பகுதிகள் கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுடன் இணைக்கப்பட்டன. கலகம் ஏற்படும் காலத்திற் படைகள் கலகம் நடக்கும் இடங்களுக்கு இந்த தெருக்கள் வழியாகச் சுலபமாகப் போக முடிந்தது. இதுவரை கண்டி இராச்சியம் தனித்தொதுங்கி அந்நியப் படையெடுப்புக்களுக்காளாகாது இருந்தது. ரோட்டுக்கள் அமைத்தமை இப்படித் தனித்தொதுங்கி வாழ்வதற்குச் சாவுமணி அடித்துவிட்டது. கண்டிப் பிரதேசங்களில் கலகம் செய்வதும் வியர்த்தமாயது. ரோட்டுகள் அமைக்கப்பட்டபின் இலங்கையின் மாகாணங்கள் அனைத்தும் இராணுவ விஷயத்திலாக, சிவில் பரிபாலன விஷயத்திலாக, ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாயின. 1832-ம் ஆண்டில் இவ்வாறான போக்குவரத்துச் சாதனங்களும் தொடர்புச் சாதனங்களும் விருத்தியடைய, இலங்கையின் பல்வேறு பகுதிகளும் ஒன்றாகின எனலாம்.

---

1 Government Agents  2 Barnes



## வினாக்கள்:

1. பிரிட்டிஷார் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றுதற்கு ஏதுவாக இருந்த சம்பவங்களைக் கிரமப்படி எடுத்துக் காட்டுக.

2. இலங்கையைப் பரிபாலிப்பதில் சென்னை அரசாங்கம் அநுகூலமடையவில்லை. ஏன்?

3. நோர்த், மெயிற்லன்ட் என்னும் தேசாதிபதிகளின் பரிபாலனத்தை ஒப்பிட்டுக் காட்டுக.

4. கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதில் நோர்த் பிரதிகூலமடைய, பிறௌன்றிக் அநுகூலமடைந்ததனுக்குக் காரணம் என்ன?

5. 1818-ம் ஆண்டுக் கலகத்தை விபரித்துக் கூறுக: அக்கலகத்துக்கான காரணங்கள் யாவை? அதனால் விளைந்த பயன்கள் யாவை?

## அதிகாரம் 5.

# இக்கால இலங்கை.

### கோல்புறூக் விசாரணை

மெயிற்லன்ட் தேசாதிபதி அநேக சீர்திருத்தங்களைச் செய்தார் என முந்திய அதிகாரத்திற் படித்தோம். இச்சீர்திருத்தங்கள் ஏற்பட்டும் இந்நாட்டின் வருவாய் அதன் செலவுக்குப் போதுமானதாக விருக்கவில்லை. எனவே ஏதோ பிழைகள் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தீவின் நிதி நிருவாக முறையினைப் பரிசீலனை செய்து பரிபாலனச் செலவுக்குப் போதுமானதாக நிதி நிலைமையினைக் கொண்டுவர வேண்டுமென நிச்சயித்தது. இன்னும் இங்கிருந்த சட்ட நிருவாகமும் தக்கதாக விருக்காமையினால் அதனையும் சீர்திருத்தியமைக்க வேண்டுமென எண்ணியது.

எனவே இலங்கையின் பரிபாலன முறையினை ஆராய்ந்து அறிக்கை விடுமாறு சேர் வில்லியம் கோல்புறூக் என்பவரை 1829-ம் ஆண்டிலும், நீதி நிருவாக விஷயங்களை ஆராய்ந்து அறிக்கை விடுமாறு ஸி. எச். கமெரன் என்பவரை 1830-ம் ஆண்டிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பியது. இவ்விருவரும் இங்கிலாந்து அரசியலில் லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்கள். தனி மனிதனுக்குச் சுதந்திர மிருக்கவேண்டும்;' எல்லா விஷயங்களிலும் அரசாங்கம் தலையிடக்கூடாது என்ற கொள்கை உடையவர்கள். இத்தகைய நோக்குடையார்க்கு இலங்கையில் இருந்த இராஜகாரிய முறை வெறுப்பைக் கொடுத்தது. இம்முறையினாற் பலர் ஒருசிலர்க்குத் தொன்றுதொட்டுக்



கட்டுப்பட்டவர்களாய், அடிமைகளாய் தமக்கு வேண்டிய பிழைப்பைத் தாமே தேடுவதற்குச் சுதந்திரம் அற்றோராய் இருப்பதாக உணர்ந்தனர். இன்னும், முதலியார்மார் விதானைமார் என்னும் அதிகாரிகள், உழுத்துப்போன ஓர் மானிய முறைக்கே ஏற்றவர்களன்றி இக்கால முறைக்கு ஏற்றவர்கள் அல்லர் என இவ்விருவரும் கண்டனர்.

இலங்கையை முடிக்குரிய குடியேற்றநாட்டு முறையில் ஓர் தேசாதிபதியின் சர்வாதிகாரத்தில் விடுவது நல்லதல்ல என, அரசியலில் தாராள நோக்குப் பூண்ட லிபரல்கள் எண்ணினர். இங்கிலாந்திலேயும் ஓர் காலத்தில் மன்னர்கள் சர்வாதிகாரிகள்போலத் தாம் வைத்ததே சட்டம் என்று தனியாட்சி செலுத்தியபோது, பல்வேறு சட்டங்களையும் ஸ்தாபனங்களையும் வகுத்து அவர்களின் சர்வாதிகாரத்தைச் சிதைத்தவர்கள் லிபரல்கள். இப்படியான லிபரல்களுக்கு இலங்கையிலே தேசாதிபதிக்கிருந்த சர்வாதிகாரம் பிடிக்கவில்லை.

லிபரல் கொள்கைகளில் நன்கு திளைத்திருந்த கோல்புறூக் தாம் சிபாரிசு செய்த சீர்திருத்தங்களில் லிபரல் கொள்கைகளைப் புகுத்தினர். எல்லா விஷயங்களிலும் தனி மனிதனுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும்; அரசாங்கம் அவன் விஷயத்தில் தலையிடக்கூடாது; அரசாங்கம் நிருவகிக்கும் விஷயத்தில் தனி மனிதனுக்கு உரிமையிருக்க வேண்டும். தனி மனிதர்கள் தமக்கான பிரதிநிதிகளை அரசியன் மன்றங்களுக்குத் தெரிவு செய்தனுப்பி அதன்மூலமாக நாட்டு நிருவாகத்திற் பங்குபெற உரிமையுடையவர்களாவர்; வியாபாரம், வர்த்தகம் கைத்தொழில் என்னும் இன்னோரன்னவற்றில் அரசாங்

கம் தலையிட்டுக் கட்டுப்பாடுகள் விதிக்கவொண்ணுது; தேசத்துச் செல்வ விருத்திக்கு, அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற தனி மனிதனது சுதந்திரமான முயற்சியே காரணமாக இருக்கவேண்டும்; இவ்விதமான தனி மனிதனின் முயற்சியே செல்வ வளர்ச்சிக்குற்ற சாதனம் என்னும் இன்னேரன்னவையே லிபரல் கொள்கைகள்.* இவற்றை கோல்புறூக் தமது சிபாரிசுகளில் வெளியிட்டார். அக்கால இலங்கைக்கு இவை எல்லாம் ஏற்றனவாக இல்லாதிருந்த போதிலும் பிற்காலத்து இலங்கை யரசாங்கம் புதுப் புது வழிகளில் தொண்டாற்றி இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவி புரியச் செய்வதில் அக்காலத்திய இச்சிபாரிசுகள் பெருந்துணை செய்தன என்பதை மறுப்பதற்கில்லை. கோல்புறூக், கமெரன் என்பவர்கள் செய்த சிபாரிசுகள் முக்கியத்துவம் வாய்ந்தன: மதிப்பிடற்கரியன: இக்கால இலங்கையை உருவாக்குவதில் இச்சிபாரிசுகள் பெரிதும் உதவி செய்தன என்றும் கூறலாம். இன்று இந்நாட்டிலே பிரதிநிதித்துவ பொறுப்பாட்சி நிலவி வருகிறது. சாதி, சமய, வகுப்புப் பேதம் பாராட்டப்படாது "எல்லாரும் சமம்" என்ற நிலை ஏற்பட்டு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? இவற்றுக்கு விதையிட்டவர்கள் யார்? என்று பின்னேக்கி நாம் ஆராய்வோமானுல் கோல்புறூக், கமெரன் என்பவர்களே விதையிட்டவர்கள் என்றும் அவர்கள் அக்காலம் செய்த சிபாரிசுகளே காரணம் என்றும் ஐயந் திரிபறக் கூறலாம்.

கோல்புறூக் செய்த பிரதான சிபாரிசுகளை இனி ஆராய்வாம். இராஜ காரியமுறையை ஒழிக்க வேண்டுமென அவர் கூறினுர். இது தொன்றுதொட்டு வந்த ஓர் முறை:

* லிபரல் கொள்கைகளை, தாராளக் கொள்கை என்று கூறலாம்.



ஆனுல் 1832-ம் ஆண்டளவில் இம்முறை செல்லரித்து பல சந்தர்ப்பங்களில் அநீதியையும் தீங்கையும் விளைத்தது. உதாரணமாக, எந்தக் காணியையும் மானியமாகப் பெற்றவன் ஒரு ஆண்பிள்ளையின் சேவையை அரசாங்கத்துக்கு அளிக்க வேண்டுமென்று இருந்தது. குடியானவர்கள் வைத்திருந்த எல்லாக் காணிகளும் ஒரேயளவின வல்ல: ஒரே தொகையினர்தான் எல்லாக் காணிகளிலும் இருக்கவுமில்லை. இன்னும், சில காணிகள் அதிக விளைவுள்ளனவாகவும், சில விளைவில்லாதனவாகவும் இருந்தன. ஆகவே எல்லாக் காணிக்காரருக்கும் ஓரே விதமுறையை அநுட்டிப்பது பொருத்தமாக இருக்கவில்லை. மேலும், இவ் விராஜகாரிய முறையின்படி, குறித்த ஓர் சாதியிற் பிறந்தவன் குறித்த ஒருவிதமான இராஜகாரியம் புரியவேண்டும். அவன் தன் காணியை விட்டுப் போகவோ, தொழிலை விடவோ முடியாது. எனவே அவனுக்குச் சுதந்திரம் இல்லை. இப்படியான ஓர் இராஜகாரிய முறையில் அரசாங்கம் தன் பரிபாலன வேலைகளுக்குத் தங்கியிருப்பது, ஓர் அடிமை முறையை நீடிக்கச் செய்வதில் அது உதவி புரிவதை நிகர்க்கும். இராஜகாரிய முறையினுல் அரசாங்கம் பொருளாதார விஷயமாக நன்மை பெறுகிறதோ என்ருல் அதுவும் இல்லை. ஏன்? வியாபார வர்த்தகத் தொழிலையோ, விவசாயத்தையோ இம்முறை ஊக்குவதாக இருக்கவில்லை. தாம் மற்றவர்களிலும் பார்க்க முன்னேற வேண்டும், முயற்சியாற் புகழ்ச்சியடைய வேண்டும் என்று அவாக்கொண்டு முயற்சிகளில் ஈடுபட விரும்புவோர்க்கு, மானியகால இராஜகாரிய முறை சந்தர்ப்பம் அளிக்கவில்லை. இதன் பயனுக நாட்டின் செல்வம் விருத்தியாகாது போகவே அரசாங்கமே ஈற்றில் நட்டவாளியாகியது.

1832-ம் ஆண்டில் இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது. சட்டபூர்வமாக இந்தப் புராதன முறை ஒழிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு இலங்கையனும் சுதந்திரவானாகி தனக்கு விரும்பிய தொழிலைத் தான் மேற்கொள்ள முடிந்தது. இராஜகாரிய முறை சட்டபூர்வமாக ஒழிக்கப்படச் சாதிக்கட்டுப்பாடும் தளர்ந்தது. சட்டத்தின் முன்னிலையில் எல்லாரும் சமமாக்கப்பட்டனர். இவ்வாறாகச் சட்டப்படிக்கேனும் தனி மனிதன் சுதந்திரம் என்பது பெறப்பட்டது.

இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டதோடு சிற்சில வியாபாரங்களிலும், தொழில்களிலும் இருந்த ஏகபோக உரிமை முறையும் ஒழிக்கப்பட்டது. இந்த ஏகபோக உரிமைகளைப் போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும், அவர்களுக்குப் பின், தமது பரிபாலன ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷாரும் வைத்திருந்தனர். கறுவா விஷயமான ஏகபோக உரிமைக் கட்டுப்பாட்டையும் வியாபாரம், விவசாயம் என்பன விஷயமாகவிருந்த உரிமைகளையும் அரசாங்கம் கைவிட்டது. அரசாங்கம் இவ்வாறு கை விட்ட முயற்சிகளைத் தனிப்பட்டவர்கள் ஏற்று நடத்தினர். சிலகாலத்தின் பின்னர் இம்முயற்சிகளில் இலங்கையரும் ஈடுபட்டு அவற்றை விருத்தியாக்கினர். ஆனால் ஆரம்ப காலத்திலே போதிய முதற் பணத்தையும் தொழிற் பயிற்சியையும் கொண்டிருந்த ஐரோப்பியர்தான் இத்தொழில்களில் தீவிரமாக ஈடுபட்டு அதிக பயன் அடைந்தனர்.

குடியேற்ற நாட்டுப் பரிபாலன முறையில் இலங்கையைச் சர்வாதிகாரமாக முந்திய தேசாதிபதிகள் பரிபாலித்தனர் என்று முன்னர்க் கூறினோம். அல்



லவா? இச்சர்வாதிகார முறையின் அம்சங்கள் சிலவற்றுக்கும் கோல்புறாக் திருத்தங்கள் முடிவு செய்தன.

பிரிட்டிஷ் பரிபாலனத்து ஆரம்ப காலத்திருந்த தேசாதிபதிகள் நல்லாட்சி புரியும் சர்வாதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றே பிரிட்டிஷ் அரசாங்கம் காத்திருந்தது. இத்தேசாதிபதிகள் தம்மிடம் பொறுப்பிக்கப்பட்ட குடியேற்ற நாடுகளை நல்லாட்சி புரிவதற்காக அவர்களிடம் சர்வாதிகாரமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வதிகாரத்தைக் கொண்டு அவர்கள் நல்லாட்சி புரியின் அவர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் மெச்சிச் சன்மானிக்கும். ஆனால் அவ்வதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, எதிர்பார்த்தபடி பரிபாலனம் செய்யாவிட்டால் அவர்களைத் திருப்பிக் கூப்பிட்டுவிடும். நாட்டின் நல்லாட்சிக்கு ஒருவரைப் பொறுப்பாக விடுத்து, அதற்கு வேண்டிய சகல அதிகாரங்களையும் அவருக்குக் கொடுத்துவிட்டு, பின்னர் அவ்வதிகாரங்களைக் கட்டுப்படுத்தமுடியாது. அப்படியின்றிக் கட்டுப்படுத்தினால், நாட்டின் பரிபாலனத்துக்கு அவரைப் பொறுப்பாக்க முடியாது.

மேலே சொல்லிய ஆட்சி முறையானது வரம்பாட்சி முறையினையே பேணிவரும் லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு விரோதமான ஓர் விஷயமாகும். வரம்பாட்சி என்பது ஜனங்களுக்குப் பொறுப்பான ஓர் நிருவாக முறையினைக் கொண்டதாய், ஜனங்கள் கையிலேயே அதிகாரத்தை விடுவதாய ஓர் அரசியல் முறையே என்க. அரசாங்கத்தை நடத்துவோர் ஜனப்பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து அரசியல் அலுவல்களைச் செய்ய வேண்டும் என்ற சித்தாந்தம் கொண்டுள்ளவர்கள் லிபரல்கள். எனவே அக்காலத்திருந்த சர்வாதிகார முறையை

கோல்புறூக் அகற்றிவிட வேண்டும் என எண்ணியமை நூதனம் அல்ல. கோல்புறூக் சீர்திருத்த அம்சங்கள் பின்வருமாறு:—

இலங்கையிலே ஓர் சட்ட நிரூபண சபையினையும் சட்ட நிருவாக சபையினையும் அமைக்க வேண்டும்; சட்ட நிருவாக சபையைத் தேசாதிபதியானவர் தம் பரிபாலனக் கருமங்கள் விஷயமாகக் கலந்தாலோசிக்கவேண்டும்; ஆனால் தேசாதிபதியே பரிபாலனக் கருமங்களுக்கும் நிதி பற்றிய கருமங்களுக்கும் பொறுப்பாளியாயிருப்பதனால் அவர் இச்சபையின் ஆலோசனைகளுக்குக் கட்டாயம் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற நியதியில்லை. சட்ட நிருவாக சபை கொண்டுள்ள அபிப்பிராயத்துடன் தேசாதிபதி ஒத்துப் போகாவிட்டால் அதற்கான காரணத்தினை அவர் குடியேற்ற நாட்டு மந்திரிக்குத் தெரிவிக்க வேண்டும்:

சட்ட நிரூபண சபையில் நியமன அங்கத்தவர்கள் இருந்தனர். இவர்கள் இலங்கையில் வாழ்ந்த பல்வேறு சாகியத்தாரின் பிரதிநிதிகளாக இருந்தனர். ஆகவே, பிரதிநிதித்துவ அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் அரசியல் மன்றம் கோல்புறூக்கின் சிபாரிசுகளின் பயனாக உண்டாயது என்றும் கூறலாம். தமிழர், சிங்களர், பறங்கியர், ஐரோப்பிய வர்த்தகர், தோட்டத் துரைமார் என்பவர்களின் பிரதிநிதிகளாக அவர்கள் இருந்தனர். இவர்களுக்கு அரசியற் பரிபாலன விஷயமாக எவ்விதமான அதிகாரமும் இருக்கவில்லை. ஆனால் பேச்சுச் சுதந்திரம் இருந்தது. இலங்கையில் உள்ள ஜனங்களின் தேவைகள் என்ன? அவர்களின் உரிமைகள் என்ன? அவர்களின் கோரிக்கைகள் என்ன? அவர்களுடைய நிலைமையை எந்த எந்த விதத்தில் திருத்த வேண்டும் என்று இன்னோரன்னவாறு இப்பிரதிநிதிகள் நிருவாக சபையில் இருந்து தேசாதிபதிக்கு அறிவிக்க முடியும். ஜனங்களின் சார்பாகப் பேசக்கூடியவர்களாயிருந்தவர்கள் இவர்களே; இவர்கள் வேறு எதனைத் தான் செய்ய இயலாவிட்டாலும், தேசாதிபதியின் பரிபாலனக் கருமங்களை ஜனங்கள் விருப்புடன் நோக்குகிறார்களா? வெறுப்புடன் பார்க்கிறார்களா என்பதையாவது அவருக்குச் சட்ட நிரூபண சபையில் இருந்து தெருட்ட முடியும். இவர்கள் மூலமாகத் தேசாதிபதியும் தனது கருமங்களின் குணாகுணங்களை பொதுஜன அபிப்பிராயம் என்னும் உரைகல்லில் வைத்துப் பார்க்க முடியும். ஆகவே 1832 ம் ஆண்டில் உருவான சட்ட நிரூபண சபையானது பின்னர் ஏற்பட்ட பிரதிநிதித்துவ பொறுப்பாட்சிக்கு வித்தாக இருந்தது என்று கூறலாம்.



தனி மனிதனின் சுதந்தரத்துக்கும் 1832 ம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் வழிகோலின. இதுவரை தேசாதிபதியானவர் ஒருவரையோ பலரையோ, அவர்கள் நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைப்பவர் என்ற காரணத்தைக் கொண்டு, சிறைப்படுத்தவோ, விசாரணையின்றிச் சிறைத் தண்டனை விதிக்கவோ, தேசப் பிரஷ்டம் செய்யவோ அவருக்கு அதிகாரம் இருந்து வந்தது. இப்படியான ஓர் சர்வாதிகார உரிமை இருப்பது லிபரல் கொள்கையினரான கோல்புறூக்கிற்குப் பிடிக்கவில்லை. எனவே, அவ்வுரிமையை அகற்றும்படி அவர் செய்துவிட்டார்.

இன்னும், பழைய குடியேற்ற நாட்டுப் பரிபாலன முறையில் தேசாதிபதியின் எச்செயலையேனும் ஓர் நீதி

ஸ்தலத்தில் ஆட்சேபிக்க முடியாது என்று விதிக்கப்பட்டிருந்தது. அதாவது தேசாதிபதியானவர் சட்டத்துக்கு மேற்பட்டவராக இருந்தார். தேசாதிபதியின் இந்த உரிமை கோல்புறூக்கின் சிபார்சுகளினுல் நீக்கப்பட்டது. சட்டம் என்பது தேசாதிபதிக்கும் மேற்பட்டது. அவருடைய கருமங்கள் சட்ட வரம்புக் குட்பட்டவையா? இல்லையா? என்பதை ஆராய்ந்து முடிவுகூற அவற்றை நீதிஸ்தலத்தில் விடுக்கும் ஓர் உரிமையைக் கோல்புறூக்கின் சிபாரிசுகள் உண்டாக்கின.

கோல்புறூக் - கமெரன் சிபாரிசுகளின் பயனுக இலங்கையின் நீதிஸ்தல முறையும் திருத்தி அமைக்கப்பட்டது. இதற்கு முன் சட்டமே தெரியாத அதிகாரிகள் சிவில் நீதிஸ்தலங்களில் இருந்து விசாரணை செய்தனர். 1832 ம் ஆண்டில் இந்தக் கேவலமான முறை ஒழிக்கப்பட்டது. தேசாதிபதியின் அதிகாரத்துக்கப்பாற்பட்ட ஓர் உயர்தர நீதிமன்றம் (சுப்பிறீம் கோடு) அமைத்து அதில் கிறிமினல் குற்றங்களும் கீழ்க் கோட்டுத் தீர்ப்புக்கெதிராய மனுக்களும் விசாரணை செய்யப்பட்டன. மாகாணந்தோறும் டிஸ்திறிக் கோடு என்னும் பெரும் பிரிவு நீதிஸ்தலங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இக்கோடுகள் செய்யும் தீர்ப்புக்கு விரோதமான மனுக்களை உயர்தர நீதிமன்றம் விசாரணை புரிந்து தன் தீர்ப்பை அளிக்கும். இதுவரை ஐரோப்பியர்க்கொருவிதச் சட்டமும் ஒருவகை நீதிஸ்தலங்களும், சுதேசிகளுக்கு இன்னேர் சட்டமும் இன்னேர் வகை நீதிஸ்தலங்களும் இருந்தன. இந்த முறையும் நீக்கப்பட்டு ஐரோப்பியராக, இலங்கையராக ஒரேவித சட்டத்துக்கமையவும் ஒரேவித நீதிஸ்தலத்தால் விசாரணை செய்யப்படவும் வேண்டும் என்று விதிக்கப்பட்டது.



மேலே கூறியவைகளால், தனிமனிதனின் சுதந்திரம், சர்வாதிகார ஆட்சி முறையில் இருந்து பாதுகாக்கப்பட்டது.

இவ்வாருக ஏற்பட்ட திருத்தங்களைவிட இலங்கையின் பல்வேறு பகுதிகளைப் பரிபாலிப்பதிலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இதுவரை பரிபாலன முறை மாகாணத்துக்கு மாகாணம் பேதப்பட்டிருந்தது. கோல்புறூக்கின் சிபாரிசின்படி இலங்கை, வட்மாகாணம், மேன் மாகாணம், கீழ்மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம் என ஐந்து மாகாணங்களாக வகுக்கப்பட்டு எல்லா மாகாணங்களிலும் ஒரே விதப் பரிபாலன முறையே இருக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

கோல்புறூக் பரிபாலன விஷயமாகச் செய்த சிபாரிசுகளில், சிவில் சேர்விஸ் அதிகாரிகள் பற்றிச் செய்தன அவ்வளவு அநுகூலம் அடையவில்லை என்றே கூறவேண்டும். சிவில் சேர்விஸ் பகுதியினுல் அதிக பணம் இலங்கைக்கு விரயமானது; ஆகவே அத்தகைய ஓர் உத்தியோக வர்க்கத்தை வைத்துப் போஷிப்பது இலங்கையினுல் முடியாது என்பதை கோல்புறூக் உணர்ந்தார். ஆனுல் அக்காலம் இலங்கை இருந்த நிலைமையிலே ஓர் திறமைவாய்ந்த சிவில் சேர்விஸ் வர்க்கம் இருக்கவேண்டியது இன்றியமையாதது என்பதை அவர் உணரவில்லைப் போலும். இலங்கையில் அக்காலத்திலே கிராமச் சபைகள் இருந்ததைக் கண்ட அவர், அவையே உள்ளூர்ப் பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தலாம், சிவில் சேர்விஸ் வர்க்கத்தினர் வேறு விஷயங்களைக் கவனிக்கலாம் என்று எண்ணினுர் என்றே தோற்றுகிறது. ஆனுல் பழைய மானிய முறைக் காலம் மாறிப் புதிய முறைக

ளைக் கொண்ட ஓர் பாதையில் இலங்கை சென்றுகொண்டிருந்ததை அவர் நோக்கவில்லை. இலங்கையின் எதிர்கால பரிபாலனத்தைப் பழைய மானிய முறையில் நடாத்த முடியாது என்பதை அவர் உணரவில்லை.

அரசாங்க சேவையில் இலங்கையரும் சேர்ந்து கடமையாற்றுதற்கான ஆங்கில அறிவை அவர்களுக்கு ஊட்டுதற்கு ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவவேண்டுமென்று கோல்புறூக் சிபாரிசு செய்தார் சிவில் சேர்விஸ் பதவிகளையும் இலங்கையருக்கு வழங்க வேண்டுமென்று அவர் விரும்பினார். சிவில் சேர்விஸ் பதவிகளில் ஐரோப்பியரே இருப்பதால் அவர்களுக்கு அதிக வேதனம் கொடுக்க வேண்டியிருந்தது. இலங்கையருக்கு அவ்வளவு தொகை வேதனம் கொடுக்க வேண்டியதில்லை என்று அவர் முடிவு செய்தார். அவர் ஐரோப்பிய சிவில் சேர்விஸ் உத்தியோகத்தரது "பென்ஷன்" உரிமைகளை நீக்கியதுடன், அவர்களின் சம்பளத்தையும் குறைத்துவிட்டார். இதன் பயனாக சிவில் சேர்விஸ் உத்தியோக வர்க்கத்தின் தகைமையும் திறமையும் பங்கப்பட்டு பின்னுக்குப் பெரும் இடைஞ்சல்களுக்கேதுவாக இருந்தன.

கோல்புறூக்கின் சிபாரிசுகளிற் சில குறைபாடுள்ளனவாக இருக்கலாம். சில காலத்துக் கேற்றனவாகாது இருக்கலாம். எது எப்படியிருந்த போதிலும் நாம் ஒரு விஷயத்தை மறுக்கமுடியாது அதாவது கோல்புறூக் சீர்திருத்தங்கள் இலங்கைச் சரித்திரத்தின் ஓர் முக்கிய அம்சமாக அமைந்து, இந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமுதாய சரித்திரத்துக்குத் தோற்றுவாயாக விள



ங்குவன என்பதே. இன்றைய இலங்கைக்கு விதையிட்டவை கோல்புறூக் சீர்திருத்தங்களே.

## வினாக்கள்:

1. எக்காரணங்களினால் கோல்புறூக் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்?

2. (அ) பரிபாலனச் சீர்திருத்தங்கள். (ஆ) சட்ட நிர்வாக விஷயமான சீர்திருத்தங்கள். (இ) அரசியல் விஷயமான சீர்திருத்தங்கள் பற்றி கோல்புறூக்கின் சிபாரிசுகள் யாவை என்பதை விபரித்துக் கூறுக.

3 இக்கால இலங்கை வளருவதற்கு கோல்புறூக் சீர்திருத்தங்கள் தோற்றுவாயாக இருந்தன என்பதை விமரிசனம் செய்க.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி

பிரிட்டிஷார் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய காலத்தில், நாட்டின் வருவாய்க்குக் கறுவாவே பிரதான காரணமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் இலங்கைக் கறுவாவுக்கு நல்ல மானம் இருந்தது. எனவே கறுவா வியாபாரத்தில் தனக்கிருந்த ஏகபோக உரிமையை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வந்தது. கம்பெனி நிருவாகத்தில் இருந்து இலங்கை ஓர் குடியேற்ற நாடாக வந்ததும் கறுவாவை உற்பத்தியாக்கல், கறுவாப் பட்டையைச் சேர்த்தல் என்னும் தொழில்களை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. இவ்விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்குமிடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி கம்பெனி 400,000 இருத்தல் கறுவாவை அரசாங்கத்திடமிருந்து பெற்று அதன் பொருட்டு 60,000 பவுண்களைக் கொடுத்தது.

1821-ம் ஆண்டில் கம்பெனியுடன் மேலே சொல்லியவாறு ஏற்பட்ட உடன்படிக்கை முடிவெய்த அடுத்த ஆண்டில் அரசாங்கமே கறுவா வியாபாரத்தில் ஏகபோக உரிமை கொண்டது. இந்த முறை 1833-ம் ஆண்டு வரை இருந்து வந்தது. ஆனால் கறுவாவுக்கு உலகத்தில் இருந்த மதிப்பு மெல்ல மெல்லவாகக் குறைந்து வந்தது. இதற்குப் பலகாரணங்கள் இருந்தன. முதலாவது, இலங்கைக் கறுவாவின் விலை மிகக் கூடுதலாக இருந்தது. ஆகவே மலிந்த விலையில் அதனைப் பெற வேண்டி, மற்றும் சாகியத்தார் - அவர்களிலும் விசேஷமாக டச்சுக்காரர் - கறுவாப் பயிரை ஜாவாவில் உற்பத்தியாக்கினர். இரண்டாவதாகக் கறுவாவுக்குப் பதிலாக இலவங்



கம் அமோகமாக விளைவிக்கப்பட்டது. இதன் பயனாகவும் கறுவா வியாபாரத்தில் இலங்கைக்கிருந்த ஏகபோக உரிமை படிப்படியாக மறையலாயிற்று. 16-ம் 17-ம் நூற்றாண்டுகளில் உலகம் எங்கணும் கறுவா மிக்க மதிப்புடன் வாங்கப்பட்டுவந்தது. ஆனால் காலகதியில் ஏனைய பொருள்கள் கறுவா வகித்துவந்த ஸ்தானத்தைக் கைப்பற்றிவிட்டன. வாசனைத் திரவிய வர்த்தகம் குறையக் கறுவா வர்த்தகமும் குறைந்து இப்போது உலக வியாபாரத் துறையில் மிகவும் அற்பமான ஸ்தானத்தையே அது பெற்றிருக்கிறது.

இலங்கையின் ஈரலிப்பான பிரதேசங்களிலேயே கறுவா பயிரிடப்பட்டது. இங்குள்ள சீதோஷ்ண நிலை கறுவா விருத்திக்கு மிகவும் ஏற்றது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சரக்காக கறுவா வகித்த ஸ்தானம் போய்விடவே, மலைநாட்டில் விளைந்த இன்னோர் பண்டம் அந்த இடத்துக்கு வந்தது. அதுதான் கோப்பி. டச்சுக்காரரும் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டனர் என்பது உண்மையே; ஆனால் 1837-ம் ஆண்டுவரை அது முக்கியத்துவத்தை அடையவில்லை. அக்காலத்திலே மேற்கிந்தியத்தீவுகளில் இருந்துதான் கோப்பிக்கொட்டை உலக நாடுகளுக்குச் சென்றது. அக் கோப்பிக் கொட்டைக்கிருந்த ஏற்றுமதி வரி இலங்கை கோப்பிக் கொட்டைக்கிருந்த ஏற்றுமதி வரியிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தது. இதன் பயனாக முன்னைய கோப்பி இலங்கைக் கோப்பியிலும் பார்க்க மலிவாக விற்கப்பட்டது. ஆனால் 1835-ம் ஆண்டில் ஏற்றுமதிவரி விஷயமாக இரு நாடுகளிலும் கூடியும் குறைந்துமிருந்த வித்தியாசம் நீக்கப்பட்டது. இன்னும், மேற்கிந்தியத் தீவுகளின் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்த அடிமைகளுக்குச்

சுதந்திரம் நல்கி அவர்களை விடுதலையாக்கியதனுல் அங்கே கோப்பி உற்பத்தி குறைந்தது. இதன் பயனுக இலங்கைக் கோப்பி வர்த்தகம் தலை தூக்கியது. இத்துடன் மேற்கிந்தியத் தீவுகளிற் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டிருந்த ரைலர்[1] என்பவர் 1837-ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து கோப்பிச் செய்கையிற் சிறந்த புதிய முறைகளைக் காட்டிக் கொடுத்தார். அதன் பயனுகவும் கோப்பிச் செய்கை அமோகமாக விருத்தியடைந்தது. மலைநாட்டுக்குப் பல பாகங்களிலும் இருந்து செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட தெருக்கள் வழியாக, விளைந்த கோப்பியைக் கொழும்புக்குக் கொண்டு வந்து புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

முடிக்குரிய காணிகளை அரசாங்கம் விற்றதால் கோப்பிச் செய்கை அபிவிருத்தியடைந்தது. இக்காணிகளில் உள்ள மரங்கள், பற்றைகளை அகற்றித் தோட்டங்களாக்கினர். 1835-ம் ஆண்டில் 142,000 பவுண்கள் பெறுமதியான கோப்பி ஏற்றுமதி செய்யப்படது. ஆனுல் 10 ஆண்டுகளின் பின் 250,000 பவுண்கள் பெறுமதியான கோப்பி ஏற்றுமதியானது. 1847-ம் ஆண்டில் கோப்பிச் செய்கை விஷயமாக ஓர் மந்த நிலை ஏற்பட்டது: எல்லாரும் சுலபத்தில் இலாபம் அடைய விரும்பிக் கண்டபடி தோட்டங்களை வாங்கிக் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டதாலேயே இவ்வீழ்ச்சி நேர்ந்தது. ஆனுல் 1855 ம் ஆண்டில் கோப்பிச் செய்கை புத்துயிர் பெற்றுப் பழைய நிலைமையை எய்தியது. இதன் பயனுக 1855 ம் ஆண்டில் 1,025,000 பவுண்கள் பெறுமதியான கோப்பியும் 1870 ம் ஆண்டில் 2,753,005 பவுண்கள் பெறும்தியான கோப்பியும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

1 Tyler



பண முதல் வைத்திருந்தவர்கள் யாவரும் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டனர். மலைநாட்டுக் குடியானவர்களும், தம் சிறு சிறு நிலங்களில் உண்டாக்கப்படுதற்குக் கோப்பிச் செடி வாய்ப்பானது, இலாபம் தரக்கூடியது என்பதைக் கண்டு அதனைத் தம் நிலங்களிற் பயிரிட்டு வந்தனர். கோப்பிச் செடி உரொக்கப்பணம் பெற்றுக் கொடுப்பதற்கேதுவானதாக அக்காலத்தில் விளங்கியது. அதில் குடியானவர்கள் தீவிரமாக ஈடுபட்டபடியால், அப்போது ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பியில் ¼ தொடக்கம் ½ பங்குவரை இவ்வாறு சிறு சிறு துண்டுக் காணிகளில் குடியானவர்களால் உண்டாக்கப்பட்டதாக இருந்தது,

கோப்பியைப் புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அதனைக் கொழும்புக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது. இதன் பொருட்டுப் பல ரோட்டுக்களை இலங்கையைப் பரிபாலித்த தேசாதிபதிகள் நிருமாணித்துக் கொடுத்தனர். கம்பளை—எட்டியாந்தோட்டை ரோட்டை அன்டெர்ஸன்[1] (1850-1855) முற்றுவித்ததுமன்றி, ஹற்றன் பகுதியிலிருந்து கினிஹத்தன வழியாக ஓர் பாதையையும் அமைத்துக்கொடுத்தார். வார்ட் தேசாதிபதி (1855—1860) கண்டி—கொழும்பு ரோட்டில் உள்ள பாலங்களைத் திருத்துவித்தார். 1860 ம் ஆண்டில் 3000 மைல் நீளமுள்ள ரோட்டுக்கள் இலங்கையில்இருந்தன. கண்டி, மாத்தளை என்பவற்றின் கீழ்பாரிசத்தில் இருந்த பகுதிகளை அபிவிருத்தி செய்யவேண்டி றங்கலை தெல்தெனிய என்னும் இடங்களுக்கு அவர் ரோட்டுக்கள் இடுவித்தார். கொழும்பில் இருந்து பெல்மதுளைக்குச் சென்ற ரோட்டு 1860 ம் ஆண்டுக்கும் 1863 ம் ஆண்டுக்கு மிடையில்

1 Sir John Anderson

பலாங்கொடைவரை நீட்டுவிக்கப்பப்பட்டது. றொபின்சன் (1865—1872), மக்கார்தி (1860—1863) என்னும் தேசாதிபதிகள் காலத்தில் வதுளைப் பகுதிக்கு ரோட்டுக்கள் இடப்பட்டன. கொழும்பில் இருந்து சென்ற ரோட்டு ஹப்புத்தளைவரை விஸ்தரிக்கப்பட்டதன் பயனாக வதுளைப் பகுதித் தோட்டங்கள் கொழும்புடன் இணைக்கப்படலாயின.

ரோட்டுக்கள் மீது மந்தகதியுடைய மாட்டு வண்டிகள் பொருள்களைக் கொண்டு செல்வது அவ்வளவு திருப்திகரமாயிருக்கவில்லை. அப்படியிருக்க இலங்கையில் ரெயில் சகாப்தம் உதயமாகியது. 1867-ம் ஆண்டில் கண்டிக்கு ஓர் ரெயில் பாதை அமைக்கப்பட்டது. 1871-ம் ஆண்டில் இப்பாதை நாவலப்பிட்டிக்கும் 1885-ம் ஆண்டில் நனுஓயாவுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

ரோட்டுகள் வழியாகவும், ரெயில் மூலமாகவும் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. மனிதர் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போய் வந்தனர். இந்த அபிவிருத்தி ஓர் புறமிருக்க, வர்த்தக விஷயமாகவும் பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. 1841-ம் ஆண்டில் இலங்கை வங்கி[1] என்ற பெயருடன் ஒருவங்கி ஏற்படுத்தப்பட்டது. அதன் கிளை ஸ்தாபனம் ஒன்று 1843-ம் ஆண்டு கண்டியில் நிறுவப்பட்டது. 1847-ம் ஆண்டிலே நிகழ்ந்த வியாபார நெருக்கடி இவ்வங்கியின் தொழிலை ஏறக்குறைய அழியச் செய்தது. ஆனால் 1842-ம் ஆண்டில் இலங்கையில் தொழில் நடாத்தத் தொடங்கி அபிவிருத்தியடைந்த பம்பாய் ஒரியன்ரல் வங்கி[2] இலங்கை வங்கியைத் தன்னுடன் சேர்த்துத்

1 Bank of Ceylon
2 Bombay Oriental Bank



தொழில் நடத்தியது. 1858-ம் ஆண்டிலே குறைந்த செலவில் தபால் அனுப்பும் முறை அமுலுக்கு வர அதனால் வியாபாரமும் தொழில்களும் விருத்தியாயின. 1858-ம் ஆண்டில் தந்தி மூலம் செய்திகள் அனுப்பும் முறை இலங்கையில் அநுட்டிக்கப்பட்டு கண்டி, மன்னார், திருக்கோணமலை என்னும் இடங்களுடன் கொழும்புக்குத் தந்தித் தொடர்பு ஏற்பட்டது. சமுத்திரத்தின் கீழ் உள்ள தந்தி முறையினால் இலங்கை 1870-ம் ஆண்டில் இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது.

தன் சொந்த நிலத்திற் பிறந்து தன் சொந்த நிலத்தில் வாழ விரும்பிய சிங்களக் குடியானவன், கேவலம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளியாகத் தோட்டங்களில் வேலை செய்ய விரும்பவில்லை. எனவே நவமாகத் தோன்றிய தோட்டங்களுக்கு வேண்டிய தொழிலாளரைப் பெறுவது ஓர் பெரும் பிரச்னையாய் முடிந்தது. இப்பிரச்னையைத் தீர்க்கத் தோட்ட முதலாளிகள் தென் இந்தியாவில் இருந்து தொழிலாளர்களைத் தருவித்தனர். தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவோர் அவர்களுக்கான வைத்திய வசதிகளைக் கட்டாயம் செய்து கொடுக்க வேண்டும் என்று 1865-ம் ஆண்டிற் சட்டம் இயற்றப்பட்டது. இதன் பயனாக ஏராளமான தொழிலாளர் தென் இந்தியாவிலிருந்து மத்திய இலங்கைக்கு வந்து குடியேறி அப்பகுதி மக்களில் ஓர் பகுதியாயினர். இது இன்னோர் பிரச்சினையைக் கிளப்பியது. தோட்டத் தொழிலாளர் தொகையோ அதிகம்; அவர்கள் தங்களுக்கிருக்கும் வாக்குச் சம்மதப் பலத்தைக் கொண்டு இந்நாட்டின் அரசியன் மன்றங்களுக்கு மலைநாட்டினர் அல்லாதவரையே எப்போதும் பிரதிநிதிகளாகத் தெரிந்தனுப்பியிருக்கின்றனர். இதன் பயனாக, மலைநாட்டுச் சிங்களர் தங்களில்

ஒருவரைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்ய முடிகிறதில்லை. மலைநாட்டிற் பிறந்து மலைநாட்டில் வளர்ந்து மலைநாட்டையே தம் தொன்று தொட்ட தாயகமாகக் கொண்டுள்ள மலைநாட்டு மக்கள் தம்மவரில் ஒருவரையே பிரதிநிதியாய அரசியன்மன்றத்துக்கு அனுப்ப வேண்டியது நியாயமே. ஆனால் தோட்டத் தொழிலாளரான இந்தியருக்குப் பெரும்பான்மை வாக்குச் சம்மதங்கள் இருப்பதால், மலைநாட்டினர் அரசியல் விஷயமாகத் தம் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

1882-ம் ஆண்டில் கொழும்புத் துறைமுகம் நிருமாணிக்கப்பட்டதும் சூயெஸ் கால்வாய் திறக்கப்பட்டதும் பொருளாதாரத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களாம். சூயெஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் இந்து சமுத்திரப் பிரதேச வர்த்தகத்துக்குக் கொழும்பு ஓர் தங்கிடமாகியது. இங்கே இந்து சமுத்திரத்துக்கூடாகச் செல்லும் கப்பல்கள் வந்து தங்க வேண்டி நிலை ஏற்பட்டது. துறைமுகத்துக்குக் கப்பல்கள் வந்து பாதுகாப்புடன் தங்குவதற்குக் கடல் அடைத்து அணைகட்டப்பட்டது. இப்படிச் செய்தமை இலங்கையின் வியாபாரம் பெருகவும் உதவி செய்தது. கடல் அடைப்பு ஏற்பட்டதால் கப்பல்களுக்குப் பண்டங்களை ஏற்றுவதும், கப்பல்களிலிருந்து பண்டங்களை இறக்குவதும் ஆபத்துக்களின்றிச் சுலபமாயின.

1870-ம் ஆண்டில் கோப்பித் தொழில் உச்ச நிலையை எய்தியது. இதற்குப் பின்னரும் ஹற்றன் பீடபூமி என இழைக்கப்படும் பகுதியில் பல கோப்பித் தோட்டங்கள் திறக்கப்பட்டன. 1869-ம் ஆண்டுக்கும் 1879-ம் ஆண்டுக்குமிடையில் 400,000 ஏக்கர் முடிக்



குரிய நிலங்கள் விற்கப்பட்டன, ஆனால் 1869-ம் ஆண்டளவில் இத்தொழிலுக்கு ஏற்படக்கூடிய கெடுதிகளின் உற்பாதம் தோன்றலாயிற்று. கோப்பிச் செடிகளில் ஓர்வித நோய் பரவி அவற்றின் இலைகளைப் பாழாக்கியது. 1882-ம் ஆண்டளவில் இந்த இலை நோய் வெகு தீவிரமாகப் பரவி நாசம் செய்தது. இதன் பயனாக 1889-ம் ஆண்டளவில் கோப்பிச் செய்கையில் 50,000 ஏக்கர் நிலங்களே இருந்தன. இலை நோய் கோப்பித் தொழிலின் அழிவுக்கு முக்கிய காரணமாக இருந்தது. அத்துடன் பிரேஸில் நாட்டுக் கோப்பித் தோட்ட முதலாளிமார் இலங்கைத் தோட்ட முதலாளிமாருடன் இட்ட எதிரிடையும், ஐரோப்பிய நாடுகளில் கோப்பிக்கு மானம் குறைந்தமையும் இலங்கைக் கோப்பித் தொழில் வீழ்ச்சிக்கான ஏனைய ஏதுக்களாம்.

தோப்பித் தொழில் இவ்வாறு அவல நிலையை எய்தியதால் இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமாகவீடாடியது. அரசாங்கத்துக்கு வருமானம் குறைந்தது. அதன் பயனாக ரோட்டுக்கள் நிர்மாணித்தல் போன்ற பல நற்கருமங்கள் தடைப்பட்டன.

இலங்கையின் பொருளாதார சுபீட்சத்துக் கேதுவாக இருந்த கோப்பிச் செய்கை இப்படியாக வீழ்ச்சியுற்றமையினால் இலங்கைப் பொருளாதாரம் சீர்குலைந்தது உண்மையேயெனினும், கோப்பிக்குப் பதிலாக இனி எதனைப் பயிரிட்டுப் பணம் சம்பாதிக்கலாம் என்பதில் முதலாளிகளாயுள்ளார் ஈடுபட்டனர். இதன் பயனாகச் சிங்கோனா எனப்படும் கொயினாச் செடி உண்டாக்கப்பட்டது. ஹக்கலையில் சிங்கோனா 1861-ம் ஆண்டிற் பயிரிடப்பட்டது. இலங்கையின் சிங்கோனாப் பட்

டைக்கு உலகில் நல்ல மானம் இருந்தபடியால் மேலும் பல சிங்கோனுத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1879-ம் ஆண்டில் 60,000 ஏக்கர் நிலத்தில் சிங்கோனு பயிரிடப்பட்டது. மிதமிஞ்சியோர் இத்தொழில் ஈடுபட்டமையினுல், கோப்பி விஷயத்திற் போல இதிலும் தேவைக்கு மிஞ்சிய உற்பத்தி ஏற்பட்டது. இதன் பயனுக விலை வீழ்ச்சி உண்டாக சிங்கோனுச் செய்கையில் ஈடுபட்டோர் மெல்லமெல்லவாக அதனைக் கைவிட்டனர்.

1872-ம் ஆண்டில் தேயிலைச் செய்கை ஓர் சிறிய அளவில் ஆரம்பமானது. ஆனுல் வெகு சீக்கிரத்தில் அது அபிவிருத்தி எய்தியது. 1883-ம் ஆண்டில் 35,000 ஏக்கர் நிலத்தில் அது பயிரிடப்பட்டது. 1889-ம் ஆண்டில் இலங்கையில் இருந்து ஏற்றுமதியான பொருள்களில் தேயிலை மூன்றில் ஒரு பங்காக விருந்தது. இவ்வாருகத் தேயிலைச் செய்கை முன்னேற்றமடைந்து மலைநாட்டின் மேற்குப் பாங்கரைத் தனதாக்கிக் கொண்டது,ரோட்டுக்களும் ரெயில் பாதைகளும் தேயிலைத் தோட்ட அபிவிருத்திக்கு ஏற்றவாறு விஸ்தரிக்கப்பட்டன. கொழும்பில் இருந்து சென்ற ரெயில் பாதை நுவரெலியா, வதுளைவரை நீடிக்கப்பட்டது. 1902-ம் ஆண்டிலே 5 கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இது அவ்வாண்டில் இலங்கையில் இருந்து ஏற்றுமதியான பொருள்களில் அரைப்பங்கிற்கு மேற்பட்டதாகும்.

தேயிலைச் செய்கை அதிகரிக்க அதிகரிக்க இந்தியத் தொழிலாளரின் வருகையும் அதிகரித்தது. தேயிலைச் செய்கை அநுகூலமடைய வேண்டின் தோட்டத்திலேயே வசித்துத் தொழிலாற்றக் கூடிய பெருந் தொகைத்தொழிலாளர் வேண்டும். சிங்களத் தொழிலாளரால் அப்படித் தோட்டத்துக்குள்ளே குடியாக வசிக்க முடியாது. அவர்களுக்குத் தோட்டத்துக்கு வெளியே பார்க்க வேண்டிய பல விஷயங்கள் இருந்தன. அவர்களுக்குச் சொந்த நிலம் புலங்களிருந்தன. அவற்றையெல்லாம் புறக்கணித்துவிட அவர்களால் முடியாது. இக்காரணத்தினுல் அந்நியத் தொழிலாளர்களே தேயிலைத் தோட்டச் செய்கைக் கேற்றவர்கள் என்பதைத் தோட்ட முதலாளிமார் கண்டு அவர்களை ஆயிரக்கணக்கில் வருவித்தனர். இப்போது இலங்கையிலே 800,000 இந்தியத் தமிழர் வசிக்கிருர்கள். இவர்களிற் பெரும்பான்மையினர் தோட்டத் தொழிலாளரேயாவர்.



தென்னை, ரப்பர் என்னும் இரண்டு தோட்டப்பயிர்களையும் முறைப்படி செய்கை பண்ண ஆரம்பித்ததும் 19-ம் நூற்றுண்டிலேயாம். மிகப் புராதனகாலம் தொடக்கமாக இலங்கையில் தென்னைப் பயிரடப்பட்டு வந்தது உண்மையேயெனினும் அதனை முறைப்படி ஒழுங்காகப் பயிரிட்டு வருமானம் பெற்றவர்கள் டச்சுக்காரரே. 20-ம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்திற் சவர்க்காரம் முதலாம் பொருள்களை ஆக்குதற்குத் தாவர நெய்கள் வேண்டியிருந்தன, இதனுல் தேங்காய் எண்ணெய்க்கு அதிக மானம் உண்டாயது. மேல் மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் - விசேஷமாக நீர்கொழும்பு, சிலாபம், குருநாகற் பகுதிகளில் - பல தென்னந் தோட்டங்கள் திறக்கப்பட்டன. இப்பகுதிகளில் உற்பத்தியான தேங்காய்களையும் தெங்குப் பொருள்களையும் கொழும்புக்குக் கொண்டுவருதற் குதவியாக கொழும்பிலிருந்து நீர்கொழும்புக்கும் அதில் இருந்து சிலாபம், புத்தளத்துக்கும் ஓர் ரெயில்பாதை அமைக்கப்பட்டது. அத்

துடன் கொழும்பிலிருந்து கரையோரமாகச் சென்ற ரெயில்பாதை மாத்தறைவரை நீடிக்கப்பட்டது.

1876-ம் ஆண்டில் ரப்பர் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டது. 1900-ம் ஆண்டிற்குள் ரப்பர்ச் செய்கை பெரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டது. மோட்டார் வாகன உற்பத்தித் தொழிலும் மின்சாரம் சம்பந்தமான தொழில்களும் அபிவிருத்தியடைய அவற்றுக்கு வேண்டிய ரப்பருக்கு அதிகமானம் ஏற்படலாயது. ரப்பரை உலகமெங்கணும் விரும்பி வாங்கினர். இலங்கையிலே, உஷ்ணமும் ஈரலிப்பும் வாய்ந்த தென்மேற்குப் பகுதிகள் ரப்பர் மரம் செழிப்பாக வளர்வதற்கேற்றன என்று காணப்பட்டன. ஆகவே கொழும்புக்குச் சமீபமான களுத்துறை, கேகாலை, இரத்தினபுரிப் பகுதிகள் வெகு சீக்கிரத்தில் ரப்பர் விளையும் இடங்களாயின. இப்பகுதிகளில் ரோட்டுக்கள் துரிதமாக அமைக்கப்பட்டன. 1906-ம் ஆண்டில் 50,000 ஏக்கர் விஸ்தீரண நிலத்திலேயே ரப்பர் உற்பத்தியாக்கப்பட்டது. ஆனால் 1910-ம் ஆண்டில் இத்தொகை 200,000 ஏக்கர் ஆக அதிகரித்தது. இப்போது 573,000 எக்கர் நிலத்தில் ரப்பர்ச் சாகுபடி நடைபெறுகிறது. ரப்பர் உண்டாக்கப்படும் பிரதான இடங்களை மேலே காட்டினோம். அவற்றை விட தென் மாகாணத்தில் உள்ள ஈரலிப்பான இடங்களிலும் ரப்பர் உண்டாக்கப்படுகிறது.

மானியமுறைக் காலத்தில் மற்ற நாடுகளின் உதவியை எதிர்பாராது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்த இலங்கை மேலே சொல்லிய தேயிலை, தெங்குப் பொருள், ரப்பர் என்னும் முப்பொருள்களையும் அந்நிய நாடுகளுக்கு விற்பனை செய்து தன் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டது. இலங்கை முழுவதின் செல்வமும் இம்முப் பொருள்களதும் விற்பனையிலேயே இன்று தங்கியிருக்கிறது. இவற்றின் விற்பனை குன்றுமேயானால், இலங்கையில் உள்ளார் தமது உணவுக்கே திண்டாட வேண்டி எற்படும்.



தோட்டப் பயிர்ச் செய்கை இவ்வாறாக விருத்தியானதால் ஏற்பட்ட சில பிரதான மாற்றங்களை இனி ஆராய்வாம்: நிலத்தைப் பயன்படுத்தும் விஷயமாக இதனை நாம் நோக்குவோமானால் இம்மாற்றங்களைப் புரட்சிகரமானவை என்றே கூறவேண்டும் முற்காலத்திலே, உணவுப் பொருள்களை விளைவிப்பதற்கே மக்கள் பூமியைப் பிரதானமாக உபயோகித்து வந்தனர். ஆனால் 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த விவசாய முறை மாற்றங்களினால், மக்கள் உணவுக்கான விவசாயத் தொழிலைப் புறக்கணித்து ஏற்றுமதி வர்த்தகத்தை விருத்தி செய்தற்கான ஓர் விவசாய முறையில் ஈடுபடத் தொடங்கினர். இந்த விவசாய முறை மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் விளைவிப்பதை விடுத்து, இந்நாட்டுக்கு ரொக்கப் பணம் வர உதவியது. முற்காலத்திலேயிருந்த விவசாயமுறை மக்களை உணவு விஷயத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்தவர்களாக இருக்கச் செய்தது. ஆனாற் புதிய விவசாயமுறை ரொக்கப் பணத்துக்கு மாத்திரமன்றி, அப்பணத்தைக் கொடுத்து வாங்கக்கூடிய உணவுப் பொருள்களுக்கும் இலங்கையைப் புறநாடுகளில் தங்கியிருக்கச் செய்தது. இவ்வாறாக உலக வர்த்தகம் என்னும் நிலையற்ற அலையில் இலங்கையும் இப்போது ஈர்க்கப்பட்டு இருப்பதால் அவ்வலைகளில் எற்படும் ஏற்றத் தாழ்வு, இலங்கையையும் முன்னெருபோதும் இல்லாதவாறு பாதித்து வருகின்றது.

விவசாய விஷயமாக ஏற்பட்ட அபிவிருத்தியினால் போக்குவரத்து,ஏற்றுமதி இறக்குமதி முறைகளிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ,உண்டாயின. ஆரம்பத்தில் இராணுவத் தேவைகட்காகவே நிருமாணிக்கப்பட்ட ரோட்டுக்கள் தோட்ட விளைபொருள்களைக் கொண்டு செல்லவும் உள்ளூர் வியாபாரம் நடைபெறவும் உபயோகிக்கப்பட்டன. இந்த ரோட்டுக்கள் ஏற்பட்டதன் பயனாக, இதுகாறும் தத்தம் மாகாணங்களிலும் பகுதிகளிலும் ஒதுங்கி வாழ்ந்துவந்த மக்கள் ஒருவரோடொருவர் ஊடாடிப் பழக முடிந்தது. மானியமுறைக் காலத்திலே ஒரு கிராமம் இன்னோர் கிராமத்திலிருந்தும், ஓர் ஊர் இன்னோர் ஊரிலிருந்தும் பிரிந்து இருப்பது சர்வ சாதாரணம். இதன் பயனாக ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு ஊரும் சுயாபிமானத்தில் திளைத்து ஒன்றைப்பற்றி மற்றொன்று அறியாத, அறிய நினைக்காத ஓர் நிலை இருந்தது. ரோட்டுக்கள் அபிவிருத்தியடைய, மத்திய அரசாங்கம் மற்றும் பகுதிகள்மீது கொண்டிருந்த ஆதிக்கமும் பெருகியது. இதன் காரணமாகக் காலகதியில் இலங்கை முழுவதுக்கும் பொதுவான ஓர் அரசாங்கம் வலிமை பெற்று உருவாகவும் இலங்கையானது அதன் கண் வாழ்கின்ற சகலர்க்கும் உரியதே என்ற ஓர் தேசீய உணர்ச்சி வளரவும் முடிந்தது. ரோட்டுப் பிரயாணம், ரெயில் பிரயாணம் என்பவையும் பழைய மானியமுறைச் சமுதாய வாழ்க்கை அமைப்பினைச் சிதைத்தன. பழைய மானியமுறைக் காலத்தில் சாதிப் பாகுபாட்டுமுறை இலங்கையில் எங்கும் இருந்துவந்தது. ஒவ்வோர் சாதியினரும் தத்தமக்கு வகுக்கப்பட்ட ஆசாரங்களின்படி ஒழுக வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ரெயில் வண்டிகளில் சாதிக்குத் தக்கதாக இடங்கள் வகுக்கப்



படாது எல்லார்க்கும் ஒரு மாதிரியே ஆசனங்கள் வகுக்கப்பட்டன. எல்லாரும் உயர்வு தாழ்வின்றி ஒருமித்து ரெயில் வண்டிகளிற் பிரயாணம் செய்ய முடிந்தது. ரோட்டுக்களும் ரெயில்களும் உள்ளூர்வர்த்தகத்தைப் பெருக்கின. அத்துடன் பொருள் விநியோகத்தையும் அதிகரித்தன. முற்காலத்து மானிய முறையில் ஒவ்வோர் பகுதியும் தன்னளவில் திருப்தியுற்று மற்றப் பகுதிகள் விஷயமாக அவ்வளவு சிரத்தையற்று இருந்தது. இந்த முறை மாறி, நவமாகத் தோன்றி வளர்ச்சிபெறும் பட்டினங்கள் கிராமப் பகுதிகளுடன் நெருங்கிய தொடர்புற்றனவாகின. இதனால் கிராமத்துக் குடியானவர்கள் தம் வருவாயைப் பெருக்கப் பல வழிகள் உண்டாயின. புதிதாகத் தோன்றிய பட்டினங்களுக்குத் தேவையான பொருள்களைக்கிராமத்துக்குடியானவர்கள் உதவுதல் அவ்வழிகளிற்பிரதானமானது என்க.

பூமியைப் பண்படுத்திப் பயன்படுத்துவதும் தீவிரமாக அதிகரித்தது. ஒரு காலத்திலே காடாய்க்கிடந்த நிலங்கள் இப்போது தேயிலை, ரப்பர், தென்னை என்பன உண்டாகி நற்பயன் அளிக்கும் தோட்டங்களாயின. ஆனாற் குடியானவர்களின் விவசாயத் தொழில், தோட்டப்பயிர்ச் செய்கைத் தொழிலைப்போல அவ்வளவு ஆதரவையும் ஊக்கத்தையும் பெறவில்லை என்பதை ஈண்டுக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இந்த ஆதரவுக் குறைவின் காரணமாக உஷ்ண வலயத்திலே நெல் விளைவுக்கு ஏற்றதாக விருந்த எவ்வளவோ பரந்த நிலங்கள் தரிசுபற்றிக் கிடந்தன.

ஆகவே, ரோட்டுக்கள், ரெயில், தபால், தந்திச் சேவைகள், பத்திரிகைகள் என்பன ஓர் நவ இலங்கை

யைச் சிருட்டிசெய்ய ஏதுவாயிருந்தன என்பது இதுவரை கூறியவற்ருல் விளங்குகிறது.

தோட்டப் பயிர்ச்செய்கை மக்களுக்குப் பிழைப்புத் தரும் வழிகளையும் அதிகரிக்கச் செய்தது. நிலங்களைப் பண்படுத்தி ஆதாயம் கருதிப் பயிர்களை விளைவித்தனர். அத்துடன் நிற்காது இந்நிலங்கள் வியாபார வர்த்தகங்களுக்கும் ஆதாரமாக இருந்தன. பட்டினங்களிலே ஏற்பட்ட பல புதுப்புதுக் கருமங்களால் கந்தோர் வேலைசெய்யும் ஓர் புது வகுப்புத் தொழிலாளர் தோன்றினர். கிளார்க்மார் என வழங்கப்படும் எழுத்தாளர் ஆகியாம் உத்தியோகத்தரே இவர்கள். பண வருவாயும், பணப் புளக்கமும் அதிகரித்தமையினுல் இன்னும் பலர் உபாத்திமைத் தொழில், நியாயவாதத் தொழில், வைத்தியத் தொழில் என்பவற்றில் ஈடுபட முடிந்தது. போக்குவரத்துச் சேவைகளும், ஏற்றுமதி இறக்குமதிச் சேவைகளும் ஏற்பட்டு அதிகரித்தமையினுல் பலர் கம்பெனிப் பிரதிநிதிக (ஏஜென்டு) களாகவும், புரோக்கர் (தரகர்) மாராகவும், எந்திரத் தொழிலாளராகவும், தொழில் நிபுணராகவும் புதுப்புதுத் துறைகளில் ஜீவனேபாயம் தேட முடிந்தது. இவ்வாறு தோன்றிய தோட்டப் பயிர்ச்செய்கைச் சகாப்தத்தின் பயனுக முதலாளி வகுப்பு என்ற ஓர் வகுப்பினரும், தொழிலாளி வகுப்பு என்ற இன்னோர் வகுப்பினரும் கந்தோர்களில் வேலைசெய்தோர், நியாயவாதம், உபாத்திமைத் தொழில், வைத்தியம் ஆதியாம் தொழில்களில் ஈடுபட்டோர் தம் ஜீவனேபாயத்தைத் தேடும் பிறிதோர் மத்திய வகுப்பினரும் தோன்றினர் என்று கூறலாம்.

சமுதாய வாழ்வுக்குப் பணமே பிரதானமாகவும் அமைந்தது. பண்டமாற்றுமுறை என்ற பழைய முறைக்குப் பதிலாகக் காசுப்புளக்கமே கொடுக்கல் வாங்கல்களுக்கு ஆதாரமாயிற்று. முன்பெல்லாம் ஊழியத்துக்கு ஊதியம் மானிய முறையில் நிலமாகவோ பண்டங்களாகவோ அமைந்திருந்தது. அந்த முறை இப்போது மறைய, பணமே ஊழியத்துக்கு ஊதியமானது. எஜமான், ஊழியன், வேலை கொடுப்பவன், வேலை செய்பவன் என்பவர்களுக்கிடையே யிருக்கும் தொடர்பு ஒப்பந்தத்தை ஆதாரமாகக் கொண்டதாகியது. இவ்வொப்பந்தத்தைச் சமயோசிதமாக ஆக்கி, அழிக்க பரஸ்பர ஏற்பாடுகள் உண்டாகின. மானியமுறைச் சமுதாயம் சாதிவாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த முறை கழிய செல்வம், கல்வி என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட வகுப்புப் பிரிவினை ஏற்படலாயிற்று.



இலங்கை யடைந்துள்ள மாற்றங்களினுல் அதன்வருமானமும் மிகத் தீவிரமாக அதிகரித்தது. 1805-ம்ஆண்டு இலங்கையின் அரசிறை வருவாய் 30 லட்சம் ரூபாவாக இருந்தது. இத்தொகை 1925-ம் ஆண்டில் 12 கோடியே 50 லட்சம் ரூபாவாகி 1939-ம் ஆண்டில் 40 கோடி ரூபாவாக அதிகரித்தது. இப்படியாகப் பண வருவாய் அதிகரித்தும் செல்வம் எல்லா மக்களிடமும் சமமாகப் பங்கிடப்பட்டு இருக்கவில்லை. ஒரு பக்கத்தில் செல்வத்தில் திளைத்தவர்கள் இருந்தார்கள். இவர்கள் இலங்கை வாழ்க்கையில் தமது நிலைமையை உறுதிப்படுத்தவேண்டி இன்னும் கூடிய அரசியல் அதிகாரம் வேண்டும் என்று வாதாடினர். இவர்களுடன் கல்வியறிவுபெற்ற மத்திய வகுப்பினரும் சேர்ந்து அரசியலதிகாரம் வேண்டுமென இடையருது கேட்டனர். இன்னோர் பக்கத்தில் வறுமையினையே தமது அன்ருட வாழ்க்கையின் அம்சமாகக் கொண்ட பட்டினத் தொழிலாளரும் கிராம மக்களும்

இருந்தனர். பட்டினத் தொழிலாளர் தொகையிற் குறைந்தவராய் அன்றாடம் கிடைக்கும் வேதனத்தைக் கொண்டு தம் சீவியத்தைக் கழித்தனர். கிராமப்புற மக்கள் மிகப் பெருந்தொகையினர். அவர்களுடைய வருவாய் தோட்டப்பயிர்ச் செய்கை அபிவிருத்தி யடைந்தமையின் பயனாகத் திருந்தவில்லை. தொகுத்துக் கூறுங்கால் தோட்டப் பயிர்ச்செய்கை இலங்கையில் அபிவிருத்தியானதால் அரசியல், சமுதாயச் சமத்துவ மின்மையும் பொருளாதார விஷயமாக நிதார்த்தமற்ற ஓர் சஞ்சலத்தன்மையும் ஏற்படலாயின எனலாம்.

நில அபிவிருத்திக் காலத்தில் சில பிரச்சினைகள் தோன்றின. அவற்றினை இனி அவதானிப்பாம்: முதலில் முடிக்குரிய காணிகள் பல பெருவாரியாகப் பராதீனப் படுத்தப்பட்டன. இக்காணிகளை அரசாங்கம் மிகக் குறைந்த விலைக்கு, அவற்றை விரும்பியோர்க்கு விற்றது. இப்படிச் செய்தமையினால் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டதேயன்றி நட்டமோ தீமையோ ஏற்படவில்லை என்றும் வாதிக்கலாம். ஆனால் ஒழுங்கு முறையில்லாது—ஒரு திட்டம் வகுக்காது— பராதீன முறை கையாளப்பட்டதால், நாட்டின் நிரந்தரவாசிகளின் தேவைகளைக் கவனியாது நிலங்கள் பெருவாரியாகப் பராதீனம் செய்து விற்கப்பட்டன என்பது இன்று இலங்கையின் தென்மேற்குப் பகுதியிலும் மத்திய பகுதியிலும் பெருந்தொகைக் குடியானவர்கள் நிலமின்றித் தவிப்பதில் இருந்து புலனாகும். இக்குடியானவர்களுக்கு நிலங்கள் உதவி அவர்களைக் குடியேற்றுவது இன்றைய அரசாங்கத்தின் இன்றியமையாத அவசியக் கடமைகளில் ஒன்றாய்விட்டது. இன்னும் தோட்டப் பயிர்ச்செய்கையின் நோக்கம் ஆதாயம் பெறுவதுதான் என்று இருந்தது. ஆகவே அக்காலத்தில் நிலங்



களை வாங்கித் தோட்டங்கள் ஆரம்பித்தபோது மண் அரிப்பு, ஆறுகள் வற்றல் என்பவற்றைத் தடுப்பதற்கான வழிகள் கையாளப்படவில்லை. இதன் பயனாக இவ்விரண்டு விஷயங்களாலும் இந்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிரந்தரமான நட்டம் மிகவும் பெரிது.

அடுத்ததாக தோட்டப் பயிர்ச்செய்கையும் அதனுடன் இணைபிரியாதுள்ள வியாபார வர்த்தகமும் அந்நியர் பொறுப்பிலேயே இருந்தன. இவ்வந்நியரின் நலன்களும் தேச மக்களின் நலன்களும் பல விஷயங்களில் பரஸ்பரம் நேர்மாறாக இருந்தன. உதாரணமாக உள்ளூர்க் கைத்தொழில்களை அல்லது உணவுப்பொருள் உற்பத்தியை அபிவிருத்தி செய்யவேண்டும் என ஏதும் முயற்சிசெய்தால், இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த அந்நியர் அம்முயற்சியை எதிர்த்து வந்தனர். வருமானவரி முறை இங்கே ஏற்பட்டபோது அந்நியக் கோஷ்டியினர் அதனை எதிர்த்தமையும் அவர்களுடைய சுயநலத்துக்கோர் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

தோட்டப் பயிர்ச்செய்கை பெருவாரியாக அபிவிருத்தியாகி அதற்கே சகலவித உதவிகளும் அளிக்கப்பட்டதால் மக்களின் உணவுக்கான விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. அரசியல் அதிகாரம் மத்திய வகுப்பினர், வியாபார வர்த்தகத்துறைகளில் ஈடுபட்டவர்கள் என்பவர்கள்வசமே இருந்ததால் நெல் விளைவை அபிவிருத்தி செய்யவோ, நெல் விளைவுக்கேற்ற நிலங்களைச் சீரிய முறையிற் பண்படுத்தி அதிகரிக்கவோ முயற்சிகள் செய்யப்படவில்லை. அந்த எண்ணந்தானும் ஏற்படவில்லை என்றும் கூறலாம். தேயிலை, ரப்பர், தெங்குப்பொருள் என்பவற்றை ஏற்றுமதி செய்வதால் இலங்கைக்குப் பணம் வந்தது. உணவுப் பொருள்களையும் ஏனைய உற்

பத்திப் பொருள்களையும் வாங்க இப்பணம் உபயோகமானது. இந்த முறையின் பயனாக முழு இலங்கையின் பொருளாதாரமும் அந்நிய மார்க்கெட்டுகளுடன் தொடுக்கப்பட்டது: அந்த அந்நிய மார்க்கெட்டுகளின் விலைவாசிகளில் ஏற்றத்தாழ்வு ஏற்பட இங்கே பலவிதமான கஷ்டங்கள் உண்டாகும். இன்னும், முழு இலங்கையின் செல்வமும் மூன்றே மூன்று பொருள்களிற்றான் தங்கியிருக்கும் நிலை ஒன்றும் ஏற்பட்டது. இவற்றுக்கு ஏதும் கெடுதி நேர்ந்தால் அக்கெடுதியை ஈடுசெய்ய வேறு பொருள் இல்லை. இவ்வாறாக, இலங்கையின் பொருளாதார அமைப்பு பலமற்றதாய், நிலையற்றதாய் இருந்து வந்தது.

1929-ம் ஆண்டில் நிகழ்ந்த பொருளாதார நெருக்கடி மேலே காட்டிய குறைபாடுகளை எல்லாம் துலாம்பரமாகக் காட்டின. தனி மனிதர் தத்தம் எண்ணப்படி தாம் தாம் விரும்பிய தொழிலைச் செய்யும் முறையை அளவு கடந்து அநுமதிப்பதும், அரசாங்கம் கைத்தொழில், விவசாயம் என்னும் இன்னோரன்னவற்றில் தலையிடாமல் இருப்பதும் எப்போதும் நன்மையளிக்காது. காலமறிந்து அரசாங்கம் தலையிட வேண்டும் என்ற பெரிய உண்மையை மேலே குறிப்பிட்ட நெருக்கடி தெருட்டியது. ஓர் அளவுக்காவது மக்கள் தம் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டியதன் அவசியத்தை மக்களும் உணரத் தொடங்கினர். நாட்டின் விவசாய முறையை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் தெளிவாகக் கண்டனர். உரொக்கப் பணம் சம்பாதித்துக் கொடுக்கும் ரப்பர், தேயிலை, தெங்கு என்பவற்றுடன் உணவுப் பயிர்களையும் விளைவிக்கவேண்டும்: அதன்பொருட்டு உஷ்ணவலயத்துப் பிரதேசங்களைவிளை



நிலங்களாக்கவேண்டும் என்று மக்கள் தேர்ந்தனர். கால்நடைப் பண்ணை, ஆட்டுப்பண்ணை என்பவற்றையும் விவசாயத்துடன் செய்தாலும், எல்லாரும் விவசாயத் தொழிலில் ஈடுபட முடியாது: ஆகவே கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல் ஆவசியகம் என உணரப்பட்டது. நீர்வீழ்ச்சிமூலம் மின்சார சக்தியை இங்கே அமோகமாகப் பெறலாம். ஆகவே அச்சக்தியைப் பயன்படுத்திக் கைத்தொழில்களை விருத்திசெய்யலாம். பருத்தியும் கரும்பும் உஷ்ணவலயப் பகுதிகளில் நன்கு உண்டாகி வளரும். ஆகவே நெசவுத் தொழில், சீனி உற்பத்தித் தொழில் என்பவற்றை இங்கேஆரம்பிக்கவும் ஆலோசனை செய்யப்பட்டது. இதுபோலவே ரப்பர்ப் பொருள்களையும், சவர்க்காரம், சிமெந்து, மீன் எண்ணெய், உப்பு, பெட்டிகள் என்னும் இன்னோரன்ன பொருள்களையும் இங்கு ஆக்கலாம் என்று கருதப்பட்டது. இப்பொருள்களை ஆக்குதற்கு வேண்டிய மூலப்பொருள்களும் மின்சார சக்தியும், தொழிலாளரும் போதிய அளவுக்கு இங்கேயுண்டு.

இவை எல்லாவற்றிலும் மேலாக இத்தொழில்களுக்கு அரசாங்க உதவி இன்றியமையாததெனக் கருதப்பட்டது. தொழில்களுக்கு வேண்டிய மூலதனத்தை வழங்கவும் அவற்றுக்கான தொழில் நுட்பக் கல்வியை யூட்டவும் ஆராய்ச்சிகள் நிகழ்த்தவும், தொழிற்சாலைகளில் ஆக்கப்படும் பொருள்களுக்கு விற்பனையிடங்கள் தேடவும் அரசாங்கம் முன்வந்து உதவவேண்டும்என்றும் உணரப்பட்டது. இலங்கை அரசாங்கம் தனது பணத்தை இலங்கையர் உபயோகிக்கச் சந்தர்ப்பம்அளிக்காமல் வெளிநாடுகளில் முடக்கிவைத்திருந்ததை, 1934-ம் ஆண்டின் வங்கி

விசாரணைக் கமிஷன்[1] தானும் எடுத்துக் காட்டியது.

அரசியல் விஷயமாக இந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை வகுக்க உதவியாகின. 1931-ம் ஆண்டில் அரசாங்கசபை ஏற்பட்டதன் பயனாக தம் கருமங்களைத் தாமே நிருவகிக்க இந்நாட்டு மக்களுக்கு முதன்முதலாகச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. எல்லாவற்றிலும் மேலாக, சர்வஜன வாக்குரிமை முறையானது, அரசியல் விஷயமாக ஒருசிலர் அநுபவித்துவந்த ஏகபோக அதிகாரத்தைச் சிதைத்து சாதாரண மக்களின் க்ஷேமலாபத்துக்கான சட்டங்களை அரசாங்கம் இயற்ற வழிகோலியது. இத்துறையில் அரசாங்க சபையானது ஆற்ற எத்தனித்த பணிகளைச் சுருக்கமாகக் காட்டுதல் ஏற்புடைத்தாகும்: அதிக உணவும் பொருள்களை விளைவிக்கவும், உஷ்ண வலயத்துப் பிரதேசங்களை வளங்கொழிக்கச் செய்யவும் அரும்பெரும்முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன: இன்றும் செய்யப்பட்டு வருகின்றன. குடியானவர்களைக் குடியேற்றும் திட்டங்கள் பல ஆரம்பமாகி இப்போதும் மிக்க அநுகூலத்துடன் நடைபெற்று வருகின்றன. வீட்டு மிருகவளர்ப்பில் அரசாங்கம் அதிக சிரத்தைகொண்டு பொலநருவை, அம்பேபுஸ, போபத்தலாவை முதலாம் பல இடங்களில் வீட்டு மிருகப் பண்ணைகளை ஆரம்பித்திருக்கிறது. 1939-ம் ஆண்டில் தொடங்கிய இரண்டாவது உலக மகாயுத்தம் இலங்கைக்கு இதுவரை உணவுப் பொருள்களை அனுப்பிவந்த நாடுகளை இலங்கையிலிருந்து துண்டித்துவிட்டு, இங்கேயே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான மாபெரும் உத்வேக சக்தியாக விளங்கினது. அரசாங்கத்தின் பொறுப்பில் ஓர் விற்பனைப் பகுதி அல்லது விற்பனை இலாகா

1 Banking Commission of 1934



அங்குரார்ப்பணமாகி உள்ளூர் விளைபொருள்களை விற்பனையாக்குவதில் நல்ல உதவியளித்து வருகிறது. இவை எல்லாவற்றிலும்மேலாகவுள்ளது கூட்டுறவு இயக்கம். யுத்த காலத்திலே இது ஓர் வரப்பிரசாதமாக அமைந்து இந்நாட்டு மக்களுக்கு உடைநெகிழ்ந்தான் கைபோல உதவியது என்று கூறினால் மிகையாகாது. சமாதான காலத்திலும் கூட்டுறவு இயக்கம் ஓர் வரப்பிரசாதமாக மிளிர வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. பல நீர்ப்பாசனத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றுள் பராக்கிரம சமுத்திரத் திட்டம், மினிப்பேத் திட்டம் என்பவையும் மிகச் சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்ஓயாத் திட்டமும் மிகப் பெரியவை. பழைய தோட்டப் பயிர்ச் செய்கை முறையினால் ஏற்பட்ட தீமைகளை ஈடுசெய்யவே இந்த நடவடிக்கைகள் இப்போது கையாளப்பட்டிருக்கின்றன: இவற்றால் தோட்டச் செய்கைக்கு எவ்வித தீங்கும் ஏற்படாவண்ணம் கருமம் ஆற்றப்பட்டு வருகிறது என்பதையும் நாம் அவதானித்துக்கொள்ளல் வேண்டும். எம் பொருளாதார வளர்ச்சிக்கும் செல்வத்துக்கும் தோட்ட விவசாயமே இன்று மூலகாரணமாக இருக்கின்றது. இன்னும் பல வருஷ காலத்துக்கு அது அவ்வாறாகவே இருக்கும். ஆனால் எமது இறக்குமதிப் பொருள்களைப் படிப்படியாகக் குறைத்து, தோட்டப் பயிர் விளைபொருள்களில் தங்கியிருப்பதை நாம் கெடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

கைத்தொழில்கள் விஷயமாகவும் இலங்கையின் அரசாங்கங்கள் 1931ம் ஆண்டு தொடக்கம் புதப்புதுத் துறைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. வட்டவளையில் உள்ள நீர் வீழ்ச்சி மின்சாரத் திட்டம் இப்போது பூர்த்தியாகும் நிலைமையில் இருக்கிறது. மின்சார சக்தியைப்

பிறப்பிப்பதற்கும் கல்லோயாத் திட்டம் பயன்படும். அதிலிருந்து பிறக்கும் மின்சார சக்தி வெளிச்சம் ஏற்றுதற்கும் கைத்தொழில்களை இயக்குதற்கும் உபயோகிக்கப்படும். இலங்கையில் பூகர்ப்ப சம்பந்தமான ஓர் ஆராய்ச்சி சமீப காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டது. அதன் பயனாக இலங்கையிலே பொருளாதாரப் பயனுடைய எவ்வெவ்வித உலோகங்கள் உண்டு; அவற்றை எவ்வித முறையில் பெறலாம்? அவற்றை எவ்வெவ்வாறாக உபயோகிக்கலாம்? என்னும் இன்னோரன்ன விஷயங்கள் சம்பந்தமான விபரங்கள் முதன்முதலாகச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையிலே மீன்பிடித் தொழிலை எவ்வாறாக அபிவிருத்தி செய்யலாம் என்பதை அறிய நிபுணர்களின் ஆலோசனை கோரப்பட்டிருக்கிறது, தேயிலை, ரப்பர், தேங்காய் என்னும் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் மாத்திரம் இலங்கை அதிகமாகத் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு அரசாங்கம் எவ்வெவ்விதப் புதுத் துறைகளில் இறங்கியிருக்கிறது என்பதனைக் காட்டும் சிலவே மேற்கூறியனவாம். இலங்கையிலே எத்தனையோ மூலப் பொருள்களை இயற்கையன்னை அள்ளித்தந்திருக்கிறாள்; இப்பொருள்களைப் பரிபூரணமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரேவித விவசாயத்தினைச் செய்யாது பலவித விவசாயத் துறைகளில் ஈடுபடவேண்டும், இக்கைங்கரியங்களை எவ்வாறு ஆற்றலாம் என்பதே இன்றைய இலங்கை அரசாங்கத்துக்கு உள்ள பெரும் பிரச்சினை. இலங்கையின் மத்திய பாகமும் தென்மேற்குப் பாகமும் தேயிலை, ரப்பர், தென்னை ஆதியாம் தோட்டப் பயிர்கள் செழித்து வளர்வதற்கான சுவாத்தியத்தைக் கொண்டன. உஷ்ண வலையப் பிரதேசங்கள் தானியங்கள் விளைவிக்கவும், தும்புத் தொழில் செய்யவும், பழ விருட்சங்கள், செடிகள்,



கொடிகள் நன்கு உண்டாவதற்கும் ஏற்ற சுவாத்தியத்தைக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு வலையப்பிரதேசங்களிலும் விவசாயத்தைச் சிறப்புறச்செய்து பெரும் பயன் அடையலாம். ஒரு வலையத்தில் உரக்கம் தரும் தோட்டப் பொருள்களையும், மற்ற வலையத்தில் உணவுப் பொருள்களையும் ஆக்கிக்கொண்டால், இந்நாட்டு மக்கள் இப்போதிலும் பார்க்கக் கூடிய அளவுக்குச் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவர்களாக இருப்பர். தம் வாழ்க்கைச் செல்வத்துக்கு அவர்கள் புறநாடுகளில் தங்கியிருக்கும் நிலைமை ஏற்படமாட்டாது.

## வினாக்கள்:

1, 1835-ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையிற் பொருளாதார முக்கியத்துவம் பெற்றிருந்த விளைபொருள்கள் யாவை?

2. 19-ம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டு காலத்தில் கோப்பித் தொழில் அடைந்த வளர்ச்சியைக் கிரமமாகக் கூறுக. கோப்பிச் செய்கைக்கு வேண்டிய நிலத்தை எவ்வாறு பெற்றனர்? தொழிலாளரை எவ்வாறு பெற்றனர்? கொழும்புக்குக் கோப்பிக் கொட்டையை எவ்வாறு அனுப்பினர்? என்பவற்றை விளக்குக.

3. 20-ம் நூற்றாண்டில் தேயிலை, ரப்பர், தென்னை என்பவற்றின் உற்பத்தி எவ்வாறு அபிவிருத்தியடைந்தது என்பதைச் சுருக்கமாகக் கூறுக.

4. ரோட்டு, ரெயில், வியாபாரம் என்பன அபிவிருத்தி எய்தியமையால், இலங்கையில் இருந்த பழைய மானியமுறை வாழ்க்கை எவ்வாறு படிப்படியாக மாற்றமடைந்தது?

5. "தோட்டப் பயிர்ச் செய்கையினால் இலங்கை அளவுக்குமிஞ்சி அந்நிய வர்த்தகத்தில் தங்கியிருக்க ஏற்பட்டது" என்னும் கூற்றை ஆராய்க.

6. 1929-ம் ஆண்டு நிகழ்ந்த வியாபார வீழ்ச்சியினாலும், நடந்து முடிந்த இரண்டு உலகமகாயுத்தங்களாலும் இலங்கையின் பொருளாதார அமைப்பு விஷயமாக அதன் மக்கள் கற்றுக்கொண்டவை யாவை?

7. இலங்கையில் இறக்குமதியாகும் உணவுப்பொருள்களிலும் ஏனைய பொருள்களிலும் அதன் மக்கள் தங்கியிருக்காமல் சுய தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாக அவர்களை ஆக்க 1931-ம்ஆண்டுதொடக்கம் செய்யப்பட்டுள்ள முயற்சிகளை விபரித்துக் கூறுக.

8. இலங்கையின் உஷ்ணவலையப் பிரதேசங்களில் நிலத்தைப் பண்படுத்தி அபிவிருத்தி செய்தற்கு ஆற்றப்பட்ட முயற்சிகள் யாவை? அவை எவ்வளவுதூரம் அநுகூலம் அடைந்திருக்கின்றன.

9. இலங்கையிலே கைத்தொழில்களை நிறுவுதற்கு 1931 ம் ஆண்டுதொடக்கம் செய்யப்பட்டுள்ளமுயற்சிகளைச் சுருக்கமாகக் கூறுக.



# இலங்கையின் அரசியல் அபிவிருத்தி.

1802-ம் ஆண்டில் இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடானது. குடியேற்ற நாட்டு முறைப்படி எல்லா அதிகார்மும்—சட்டங்கள் ஆக்கும் அதிகாரமும் அச்சட்டங்களை நடைமுறையிற் கொண்டுவரும் அதிகாரமும்—ஒரு தனி மனிதரின் பொறுப்பிலேயே விடப்பட்டன. அவரது பரிபாலனக் கருமங்களில் அவருக்கு உதவிசெய்ய சிவில் சேர்விஸ் உத்தியோக வர்க்கம் இருந்தது. இத்தகைய ஓர் அரசியல் முறையிலே பரிபாலன விஷயமாக, பரிபாலிக்கப்படும் மக்களுக்கு எவ்விதமான பங்கும் அதிகாரமும் இருக்கவில்லை. அரசியற் கருமங்களில் பங்குபற்ற அவர்கட்குத் தகைமை போதாது; தமக்கு நன்மை பயப்பன யாவை என்று சொல்லத்தானும் அவர்கட்குத் தகுதியில்லை என்பதே அக்காலத்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது. தம் கீழ் உள்ள பிரசைகளைத் தேசாதிபதியானவர் தம் பிள்ளைகளை வழி நடத்துவது போல நடாத்தவேண்டும். அவரது உத்தியோகத்தராகிய சிவில் சேர்விஸ் வர்க்கத்தினர் பிரஜைகளுக்குச் சேவை புரிவதொன்றையே தம் இலட்சியமாகக் கொண்டு தேசாதிபதியின் பரிபாலனக் கருமங்களில் உதவி புரிய வேண்டும் என்ற கொள்கையையே பிரிட்டிஷ் அரசாங்கம் அக்காலத்திற் கடைப்பிடித்தது என்க.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஒன்றுக்கு மாத்திரம் அடங்கியவரான தேசாதிபதியின் இவ்வித யதேச்சாதிகார அரசியல்முறை—அதாவது ஓர் தகப்பன் பிள்ளைகளை வைத்துப் பேணுவது போன்ற முறை—காலத்துக்கேற்றவாறு தம்மை அமைத்துக்கொள்ளாத பிற்போக்கான மக்களுக்கு மிகவும் ஏற்றதுதான் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இம்முறை அநுகூலமடைவதற்கு பரிபாலனப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தேசாதிபதி சமயோசித புத்தி சாதுரியம் உடையவராயும், பரிபாலன விஷயத்தில் திறமையுடையவராயும் இருத்தல் வேண்டும். இவ்விலக்கணங்கள் அவருக்கு இல்லையேல், அவர் பதவியினின்றும் நீக்கப்பட, அவரிடத்துக்கு இன்னொருவர் நியமிக்கப்படுவர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பகாலத்தில், குடியேற்ற நாட்டு முறை அரசியல் இலங்கைக்கு ஏற்றதுவே என்று கூறலாம் இத்தீவில் இருந்த மக்களுக்கு ஆங்கிலம் தெரியாது. எனவே, ஆங்கிலரின் பரிபாலன முறை அவர்கட்கு விளங்காது. அவர்கள் இதுவரை மானிய முறைப் பிரகாரம் குறித்த குறித்த பிரதானிகளின் ஆட்சியில் இருந்தார்கள்: தங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையை அவர்கள் அறியார்கள். இவர்கள் எல்லாரும் இலங்கையிற் பிறந்து, இலங்கையில் வளர்ந்த இலங்கைக் குடிகள். இவர்களைவிடக் கல்வியறிவு பெற்ற ஒரு சிறுபான்மை வகுப்பினர் இருந்தனர். அவர்கள்தான் ஐரோப்பியர், பறங்கியர் என்க. இவர்கள் சுதேசிகளுடன் கலக்காது தனித்துத் தம்பாட்டில் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் ஏதேனும் பாராளுமன்ற அரசியல்முறை ஒன்றை வழங்கியிருந்தால் சுதேசிகள் வாளா கிடப்ப, இச்சிறுபான்மையினர்தான் அதிகாரத்தைக் கைப்பற்றி, ஒரு சமயம் தம் சுயநலத்தின் பொருட்டு நாட்டை ஆட்சியும் புரிந்திருப்பர். இப்படியான ஓர் நிலைமை ஏற்படுவதைத் தடுப்பதற்குத்தான்ஒரு தனிமனிதருக்குச் சர்வ அதிகாரமும் வழங்கப்பட்டது. கல்வியறிவற்றபெரும்பான்மையினர்க்கும்,செல்வம்,செல்வாக்கு, கல்வியறிவு என்பவற்றை உடையவராய் அவற்றைத் தம் நலத்தின்பொருட்டுப் பயன்படுத்தக்கூடியசிறுபான்மையினர்க்கு மிடையே யதேச்சாதிகாரமுடைய தேசாதிபதி தமது அதிகாரத்தை நடுநிலைகொண்டு செலுத்துவர்.



இன்னும், மானியமுறைப் பிரகாரம் பிரதானிகள் தம் எண்ணப்படி குடிகளை அடக்கியாண்ட அக்காலத்தில், சிவில் சேர்விஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டமைஓர் வரப்பிரசாதமாக இருந்தது என்று கூறலாம். அக்காலத்து மக்களுக்கிடையே சாதிப்பாகுபாடுகள் வெகுதீவிரமாக இருந்தன. சாதியில் உயர்ந்தவர்கள்தான் அதிகார பதவிகளை வகித்தனர். தாழ்ந்தவர் எனப்பட்ட சாதியினர் எப்படித்தான் தகைமை யுடையவராயிருந்தாலும் அவர்களுக்கு அதிகார பதவி கிடைக்காது. இப்படியான நிலைமையில் பட்சபாதமற்ற ஓர் பிரிட்டிஷ் சிவில்சேர்விஸ் அதிகாரி எல்லார்க்கும் பொதுவாக, நடுக்கோணாது பரிபாலனக் கருமங்களை ஆற்றுவார். இத்தகைய காரணங்களினால், அக்காலத்தில் இலங்கை இருந்த நிலைமையில், குடியேற்றநாட்டுப் பரிபாலன முறையே ஏற்றதாகவிருந்தது. இம்முறைக்குப் பதிலாக வேறெந்த முறையாவது அக்காலம் உசிதமாயிருக்குமோ என்பது மிகமிகச் சந்தேகம்.

பிரதிநிதித்துவ ஆட்சிமுறைக்கு முதன் முதல் வழிகோலியது கோல்புறூக் கொமிஷன். கோல்புறூக் யதேசாதிகார முறையை விரும்பியவர் அல்லர்: எனவே,அவர் தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் என்று சிபாரிசு செய்ததுடன் ஓர் சட்ட நிரூபண சபை[1] யினையும் ஓர் சட்ட நிருவாக சபை[2] யினையும் ஸ்தாபிக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்தார்.

---

1 Legislative Council 2 Executive Council

சட்ட நிருவாக சபையில் சேனுதிபதி, பிரதம காரியதரிசி, அற்ரேணி ஜெனரல், மத்திய மாகாண அரசாங்க ஏஜண்டு என்பவர்கள் அங்கம் வகிக்கவேண்டும் எனவும் தேசாதிபதியே சபைக்குத் தலைமை வகிக்க வேண்டுமெனவும் கோல்புறூக் சிபாரிசு செய்தார்.

சட்ட நிரூபண சபையில் **ஒன்பது உத்தியோகத்தரும் ஆறு உத்தியோகப் பற்றில்லாதவர்களும்** அங்கம் வகிக்கவேண்டும் என்றும் இப்பதினைந்து பேரையும் தேசாதிபதியே நியமிக்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவராக முதற் சட்ட நிரூபண சபையிலே பின்வருவோர் அங்கம் வகித்தனர்: ஜே. றீட், ஜெப்ரை, பேர்ட் (ஆங்கிலர்); ஹில்டிபிரான் (பறங்கியர்); ஜோர்ஜ் பிலிப்ஸ் (சிங்களர்); பொ. குமாரசுவாமி (தமிழர்): சட்ட நிரூபண சபையில் தேசாதிபதியே மசோதாக்களை எடுத்தாள்வார். ஒரு விஷயத்தைப்பற்றி விவாதிப்பதைத் தடுக்க அவர் தமது ரத்ததிகாரத்தைப்[1] பிரயோகிக்கலாம். உத்தியோக அங்கத்தவர்களின் வாக்குச் சம்மதங்களைக்கொண்டு உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களின் தீர்மான பலத்தைச் சிதைக்க தேசாதிபதிக்கு அதிகாரம் இருந்தது. தேசாதிபதிக்குஏற்கெனவே இருந்த அதிகாரங்களைக் குறைக்கக்கூடாது என்பதற்காகவே இவை எல்லாம் அநுமதிக்கப்பட்டன. அவர் ஆட்சி புரியவேண்டும்: நாட்டிலே நல்லாட்சி நிலவுதற்கும் சமாதானம் நிலவுதற்கும் அவர் பரிபூரண பொறுப்பாளியாயிருக்க வேண்டும். இக்காரணத்தின்பொருட்டே அவர் சட்ட நிரூபண சபையின் எண்ணப்படி நடக்க வேண்டும் அல்லது அச்சபையின் அபிப்பிராயத்தைஏற்க

1 Power of Veto



வேண்டும் என்ற கட்டாயம் அவர்க்கு விதிக்கப்படவில்லை, ஆனால் சபை செய்யும் ஓர் தீர்மானத்துடன்அவர் ஒத்துப்போகாவிட்டால் அதற்கான காரணத்தை அவர் குடியேற்றநாட்டு மந்திரிக்கு விரிவாக விளக்குதல்வேண்டும்.

மேலே காட்டியதிலிருந்து சட்ட நிரூபண சபை என்பது ஓர் **ஆலோசனைச் சபை**யாக மாத்திரமே இருந்தது என்பது தெளிவு. ஓர் பிரச்சினை ஏற்படும்போது, அப்பிரச்சினையைப்பற்றி நாட்டில் உள்ள பல்வேறு சாதியத்தாரும் என்ன என்ன விதமான அபிப்பிராயம் கொள்கிறார்கள் என்பதை அவ்வச்சாதியப் பிரதிநிதிகளாகச் சட்ட நிரூபண சபையில் அங்கம் வசிப்போர் தேசாதிபதிக்கு எடுத்துக்காட்டுவர். இன்னும், தேசாதிபதியானவர் நாட்டுக்கு வேண்டிய சட்டம் எதனையும் ஆக்க விரும்பினால், அவ்விஷயமாக நாட்டு மக்களின் அபிப்பிராயம் என்ன என்பதை உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்கள் மூலமாக அறியவும் சட்ட நிரூபண சபை ஓர் சாதனமாக அமைந்தது. ஆகவே, அரசியல் ஞானமும், சாதுரியமும் உடைய ஓர் தேசாதிபதிக்கு சட்ட நிரூபண சபை தேசமக்களின் **அபிப்பிராயத்தை அறிவிக்கும் கருவி**யாகவும் விளங்கியது.

ஆனால் இப்படியான ஓர் சட்ட நிரூபண சபையுடன் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலரும் பறங்கியரும் திருப்தியடையவில்லை. சமூகங்கள் என்ற தன்மையில் ஆங்கிலரும் பறங்கியரும் ஒழுங்குமுறையான அமைப்புடன் இருந்தனர். அவர்களுக்கு—அவர்களிலும் விசேஷமாக ஆங்கிலர்க்கு—இலங்கையில் பல நலவுரிமைகள் இருந்தன, தங்கள் நலவுரிமைகளைப் பாதுகாத்தற்கும் அவற்றை

விருத்தியாக்குதற்கும் வேண்டிய சட்டங்களைச் சட்ட நிரூபண சபை மூலம் நிறைவேற்றுவிக்க வேண்டும்: அதற்கு அச்சபையிலே தமக்குக் கூடிய பங்குவேண்டும் என இவ்விரு சமூகத்தினரும் விழைந்தனர். சட்ட நிரூபண சபையிலே அங்கம் வகிக்கவேண்டியபிரதிநிதிகளைத் தாமே தெரிந்துகொள்ளும் வன்மையுடையவர்களாயும் அவர்கள் இருந்தனர். எனவே தம்பொருட்டு அங்கத்தவர்களைத் தேசாதிபதியே நியமிக்கும் முறையை அவர்கள் வெறுத்தனர். தேசாதிபதி நியமிக்கும் அங்கத்தவர்கள் அவருடைய கைப்பிள்ளைகளாக இருந்து அவர் சொற்படி நடப்பரேயன்றி, தாம் எச்சமூகத்தின் பொருட்டு நியமிக்கப்பட்டனரோ அச்சமூகத்தின் நன்மையைப் பரிபூரணமாகக் கவனிக்க மாட்டார்கள் என்று ஆங்கிலரும் பறங்கியரும் கருதினர். எனவே தம் பிரதிநிதிகளைத் தாமே தெரியவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். அது மாத்திரமல்ல: இங்கிலாந்தின் லிபரல் சம்பிரதாயப்படி சட்ட நிரூபண சபையிலே உத்தியோகப் **பற்றில்லாத அங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்கவேண்டும்** என்றும் கோரினர். இக்கோரிக்கைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இணங்கினால் அரசாங்க வரவு செலவைத் தயாரிப்பது தங்கள் அதிகாரத்தில் வரும் என்றும் அதன் பயனாக ரோட்டுக்கள் நிர்மாணிப்பதற்கும் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்தற்கும் கூடிய பணத்தை ஒதுக்கச் செய்யலாம் என்றும் அவர்கள் எண்ணினர். இவ்வாறான அரசியற் சீர்திருத்தம் வேண்டும் என்ற கிளர்ச்சி, பணமுட்டு நிகழ தேசாதிபதி ரோட்டுக்கள் விஷயமாக ஏற்படும் செலவுகளைக் குறைக்கும்போது, மிகவும் வலுப்பெற்று வளர்ந்தது. ஆனால் செல்வநிலை சீர்ப்பட்டு ரோட்டுக்கள் முதலானவற்றிற்கு அதிக



பணம் செலவழிக்கப்பட இக்கிளர்ச்சி குறைந்துவிடும். கோப்பித் தொழில் தற்காலிக வீழ்ச்சிக்குப்பின் 1853-ம் ஆண்டில் செழிப்படைய ரோட்டுக்களின் பொருட்டும் நில அபிவிருத்தியின் பொருட்டும் பெருந்தொகைப்பணம் செலவழிக்கப்பட்டது. அப்போது அரசியற் சீர்திருத்தம் வேண்டும் என்ற கிளர்ச்சி தளர்ச்சியடைந்தது. இவ்விஷயமாக பத்திரிகைகளும் அக்காலத்தில் ஆரம்பமாகி அரசியற் சீர்திருத்தக் கிளர்ச்சிக்கு நல்ல பிரசாரம் செய்தது. **''கொழும்பு ஜேர்னல்''**[1] என்ற ஓர் பத்திரிகையை ஹோர்ட்டன் தேசாதிபதி ஆரம்பித்து, அதிலே பொது நலத்துக்கான கட்டுரைகளையும் அபிப்பிராயங்களையும் சனங்கள் எழுத அநுமதித்தார். ஆனால் அரசாங்கமே ஓர் பத்திரிகையை வைத்து நடாத்துவது உசிதமல்லவென கண்ட இங்கிலாந்து அரசாங்கம் அப்பத்திரிகை நடைபெறுவதைத் தடுத்துவிட்டது. இலங்கையில் இருந்த பிரிட்டிஷ் வர்த்தகர்கள் 1833-ம் ஆண்டில் அரசாங்கத்துக்கு மாறான ஓர் பத்திரிகையை **''கொழும்பு ஒப்ஸேர்வர்''**[2] என்ற நாமத்துடன் ஆரம்பித்தனர். இப்பத்திரிகைக்கெதிராக அரசாங்கச் சார்புகொண்ட இன்னோர் பத்திரிகை **''கொழும்பு கிரொனிக்கிள்''**[3] என்ற பெயருடன் ஆரம்பமாகி 1846-ம் ஆண்டில் **''சிலோன் ரைம்ஸ்''**[4] என்ற பெயரைக்கொண்டது. அதே ஆண்டில் **''எக்ஸாமினர்''**[1] என்ற ஓர் பத்திரிகையைப் பறங்கியர் ஆரம்பித்தனர்.

இப்படிப் பலவிதமாகச் சிறுபான்மையினரான ஆங்கிலரும் பறங்கியரும் கிளர்ச்சி செய்தும் அரசியற் சீர்திருத்தம் விஷயமாக அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை ஆனால் 1855-ம் ஆண்டில் இலங்கை வர்த்தகர் சங்கமும்

---

1. Colombo Journal  2 Colombo Observer
3. Colombo Chronicle  4, Ceylon Times

தோட்டத் தரைமார் சங்கமும் தமக்குரிய பிரதிநிதிகளைத் தாமே தனித்தனி தெரிந்துகொள்ளலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அநுமதித்தது. இவ்விரு சங்கங்களும் மூன்று அங்கத்தவர்களைச் சட்ட நிரூபண சபைக்குத் தெரிய அநுமதியளிக்கப்பட்டது. எனவே **பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்ளல்** என்ற கொள்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் முதன்முதலாக 1855-ம் ஆண்டில் அங்கீகரித்தது என்க: அப்படிச் செய்தபோதிலும், சட்ட நிரூபண சபையிலே உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்கவேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் காலந்தோறும் நிராகரித்தது. இவ்விஷயமாக வார்ட் தேசாதிபதி பிரிட்டிஷ் அரசாங்கத்தக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டதை ஈண்டுத் தருதல் ஏற்புடைத்தாகும்: அவர் கூறுவதாவது: "ஏழாயிரம் தொடக்கம் எண்ணாயிரம்வரை ஐரோப்பியரையும் நல்ல கல்வியறிவுடைய மிகச் சிறு தொகையினராகிய பறங்கியரையும் இருபது லட்சம் ஏனையோரையும் கொண்ட ஓர் குடியேற்ற நாட்டிலே **பிரதிநிதித்துவ ஆட்சிமுறைக்கொள்கையை[1] நாம் புகுத்த வொண்ணாது** ஐரோப்பியர், சுதேசிகள் என்பவர்களின் நலவுரிமைகள் விஷயத்தில் **அரசாங்கமானது நடுக்கோணாது** நீதி செலுத்தி இராச்சிய பரிபாலனம் செய்யவேண்டும்."

1860-ம் ஆண்டில், உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களுக்கு ஓர் விசேஷ சலுகை வழங்கப்பட்டது. அதாவது பணமசோதா ஒன்றைவிட வேறெம்மசோதாவையும் அவர்கள் சட்ட நிரூபண சபையில் எடுத்தாளலாம் என்பதே. இதுவரை அரசாங்கமே மசோதாக்களை

1 Principle of Representative Government



எடுத்தாளும் கருமத்தைச் செய்துவந்தது. இந்தச் சலுகையை வழங்கியமை, தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளும் நியமனப் பிரதிநிதிகளும் சட்டங்கள் மசோதாக்களாக்கும் கருமத்தில் ஈடுபடற்கு வழி திறந்தது எனலாம்.

1864-ம் ஆண்டில் செலவுக்கு மிஞ்சிய வருமானமாக இலங்கை அரசாங்கத்துக்கு 100,000 பவுண் கிடைத்தது. இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கமே இலங்கையில் இருந்த இராணுவத்துக்கான செலவை ஏற்றுவந்தது. ஆனால் இனி அந்தச் செலவை இலங்கையே ஏற்றுநடாத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பியது அப்படி விரும்பியதும் பிழையல்ல. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விருப்பத்துக்குச் சட்ட நிரூபண சபையில் இருந்த ஐரோப்பியர் மாறாக இருந்தனர். ஆகவே இராணுவத்துக்கான செலவை உத்தியோக அங்கத்தவர்களின் வாக்குச் சம்மதத்தைக் கொண்டே தேசாதிபதி நிறைவேற்றவேண்டியிருந்தது. அப்படி அவர் செய்யவே நியமன அங்கத்தவர்களாயிருந்த லோறன்ஸ், வால், தொம்ஸன், காப்பர், ஜேம்ஸ் அல்விஸ், ஈற்றன்[1] என்பவர்கள் தம் பதவிகளைவிட்டு விலகினர். ஆனால் அவர்களின் இராஜிநாமாவைத் தேசாதிபதி ஏற்க மறுத்தார். இதன்பின் அரசியற் சீர்திருத்தச் சங்கம் ஒன்றை அவர்கள் புதிதாக அமைத்து அதன் மூலமாகத் தேசாதிபதியின் நடத்தையைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்தனர். பிரிட்டிஷ் அரசாங்கமே இதுவரை இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்பாடு செய்து வந்தது. அந்தக் கட்டுப்பாட்டை பிரிட்டிஷ் அரசாங்கம் 1867-ம் ஆண்டில் தன் பொறுப்பில் இருந்தும் நீக்கி இலங்கை அரசாங்

1 Lorenz, Wall, Thompson, Capper, James Alwis & Eaten.

கத்துக்கே ஒப்படைத்தது. மற்ற விஷயங்கள் யாவும் முன்போலவே நிகழ்ந்தன. பிரிட்டிஷ் அரசரின் பிரதிநிதியான தேசாதிபதி பலம் வாய்ந்த சிறுபான்மையினர்க்கும், நிராதரவாகவிருந்த பெரும்பான்மையினர்க்குமிடையில் நடுக்கோணாது பரிபாலனக் கருமங்களை நடாத்திவந்தார். எனவே மேலே சொல்லிய கிளர்ச்சியினாலும் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை.

20-ம் நூற்றாண்டுடன் இலங்கையின் அரசியல்பெரும் மாற்றங்களை அடைந்தது. மெல்லமெல்லவாக இலங்கையரும் அரசியல் அரங்கத்தில்தோற்றினர்; சிங்களரும் தமிழரும் ஆங்கிலக் கல்வியறிவு படைத்து ஆங்கில அரசியற் சம்பிரதாயங்களை நன்கு அறிந்தனர். ஆங்கில மக்கள் அநுபவிக்கும் அரசியல் உரிமைகளின் தத்துவங்களை நன்கு உணர்ந்த அவர்கள் தமக்கும் அதே அரசியல் உரிமைகள் வேண்டும் என வாதாடினர். ஆங்கிலக் கல்வி பெற்ற இலங்கையர் சிறுதொகையினர்தான். சிறுதொகையைக் கொண்ட மத்திய வகுப்பினரான இவர்கள் மற்றும் இலங்கையருடன் ஊடாடாது ஒதுங்கி வாழ்ந்தனர். ஆகவே இப்போது இரண்டுவிதச் சிறுபான்மையினர் தோற்றலாயினர். ஒன்று ஐரோப்பியர்: மற்றது ஆங்கிலக் கல்விபெற்ற இலங்கையர். படித்த இலங்கையரும் ஐரோப்பியரைப்போலச் சங்கங்களை ஸ்தாபித்தனர். 1907-ம் ஆண்டிலே தாழ்ந்த பிரதேச விளைபொருட் சங்கம்[1] ஸ்தாபிக்கப்பட்டது. ஐரோப்பியரையே அதிகமாகக் கொண்ட மலைநாட்டுத் தேயிலைத் தோட்ட முதலாளிமார் சங்கத்துக்கு எதிராக நிறுவப்பட்டதே தாழ்ந்த பிரதேச விளைபொருட் சங்கம்: வர்த்தக விருத்தியைக் குறைவாகவும், வகுப்புவாதத்தையே பிரதானமாகவும் கொண்ட வேறும் பல ஸ்தாபனங்களும் இக்காலத்தில் உருவாயின. யாழ்ப்பாணச் சங்கம்[2], சிலாபச் சங்கம்[3] என்பன இவற்றுட் குறிப்பிடத்தக்கன.

1. Low Country Products Association



அரசியற் சீர்திருத்தத்தினை நல்கவேண்டும் என்று இலங்கையர் 1909-ம் ஆண்டில், ஒன்றுக்குப் பல மனுக்கள் சமர்ப்பித்துக் குடியேற்றநாட்டு மந்திரியைக் கேட்டனர். சட்ட நிரூபண சபையிலே தங்களுக்குரிய பிரதிநிதிகளைத் தாங்களே தெரிவுசெய்யும் உரிமை தங்களுக்கு இருக்கவேண்டும்; நிருவாக விஷயத்திலும் தமக்கு ஓரளவு பங்கு இருக்கவேண்டும்; அதன்பொருட்டு உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர் ஒருவர் அல்லது அதற்குக் கூடியதொகையினர் சட்ட நிருவாக சபையில் இருக்கவேண்டும் என்று இலங்கையர் கேட்டனர். இலங்கையர் தம் கோரிக்கைக்கு ஆதாரமாகப் பின்வருமாறு வாதித்தனர்: 1833-ம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்ட நிரூபண சபை 1909-ம் ஆண்டுக்குப் பொருத்தமானதல்ல: இடையில் சென்ற 75 ஆண்டு காலத்துக்கிடையிலும் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. உதாரணமாக 1833-ம் ஆண்டில் 10 லட்சமாக இருந்த ஜனத்தொகை 1908 ம் ஆண்டில் 40 லட்சமாக உயர்ந்துவிட்டது. இன்னும் 40 லட்சம் ரூபாவாக இருந்த அரசாங்க வருமானம் 3 கோடியே 30 லட்சம் ரூபாவாக அதிகரித்துவிட்டது. இப்படியான மாற்றங்கள் நிகழ்ந்தும் சட்ட நிரூபண சபையிலே தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. இதன் பயனாக நாட்டின் வருமானமானது நாட்டு மக்களின் உரிமைகளைச் சிந்திக்காது செலவழிக்கப்படுகிறது. நாட்டு மக்களின் குறைகள் என்ன? அவர்களுக்கு என்ன என்ன

2. Jaffna Association 3. Chillaw Association

செய்யவேண்டும் என்னும் இன்னோரன்னவற்றை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்ட நியமனப்பிரதிநிதிகளால் முடியாது. ஜனங்களால் தெரியப்படும் பிரதிநிதிகளாலேயே அதனைச் செய்ய முடியும். ஜனங்களின் தேவைகள் இன்ன என்பதை அறிய தேசாதிபதியும் அவரது சிவில் சேர்விஸ் அதிகாரிகளும் மிகவும் தகுதிவாய்ந்தவர்கள் என அரசாங்கம் கூறுவது பொருந்தாது: ஏன்? ஐரோப்பியரால்—அவர்கள் எவ்வளவு நேர்மையும் திறமையும் உடையவர்களாயிருந்த போதிலும்-சுதேசிகளின் தேவைகளைத் தாமாக உணரவோ, அறியவோ முடியாது என்பதனால் என்க: இப்போது நடப்பதென்னவென்றால், தேசாதிபதி தேசத்துக்கு இன்ன இன்ன செய்யவேண்டும் என்று தாமாக யூகித்துச் செய்கிறார். ஆனால் நாட்டு மக்கள் உண்மையில் தமக்கு வேண்டியதைப் பெறுவதில்லை, உதாரணமாக கல்வி விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம்: இப்போது அநுட்டானத்தில் இருக்கும் கல்விமுறை இங்கிலாந்தில் இருந்து இங்கு புகுத்தப்பட்டது: அம்முறையானது இந்நாட்டு மக்களுக்குக் கொஞ்சமேனும் ஏற்றதன்று. இக்கல்வி முறையினால் தாய்ப் பாஷைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன. இந்நாட்டுக்குரிய கலாச்சாரம் தேடுவாரற்றுப் பாழ்பட்டது: ஜனங்களுக்கு நல்லதென்று அரசாங்கம் செய்வது அவர்களுக்கு நன்மை விளைப்பதில்லை என்பதற்கு இதுவொன்றே தக்க எடுத்துக்காட்டாகும். இன்னும் அரசாங்கம் நெல்விளைவைக் கவனிக்கவில்லை: ஏனைய உணவுப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபடவில்லை: இலங்கை மக்களின் க்ஷேமாபிவிருத்திக் கேதுவான நிலக்கொள்கையைக் கைக்கொள்ளவில்லை: இவையெல்லாம் அரசாங்கம் புத்தி பூர்வமாகவோ, அபுத்திபூர்வமாகவோ செய்யும்



பிழைகளுக்கும், அதன் தகுதியின்மைக்கும் தக்க எடுத்துக் காட்டுகளாகும்.

இவ்வாறாக இலங்கையர் தம் கட்சியையெடுத்துக்காட்டினர். அவ்வளவுடன் அவர்கள் நிற்காது இன்னும் பல விஷயங்களையும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தெருட்டினர். இதுவரை வர்த்தகத் தொழிலில் இலங்கையர் அதிகமாக ஈடுபடாதிருந்தனர். ஆனாற் காலம் போகப் போக அவர்களிற் பலர் வர்த்தகத் தொழிலிலும் ஈடுபட்டனர். ஐரோப்பிய வர்த்தகர்க்கெனச் சட்ட நிரூபண சபையிற் பிரதிநிதிகள் இருப்ப, இலங்கை வர்த்தகர்க்குப் பிரதிநிதிகள் இருக்கவில்லை. இன்னும் ஐரோப்பியர்க்குச் சட்ட நிரூபணசபை அங்கத்தவர்கள் விஷயமாக அளவுக்கு மிஞ்சிய சலுகை வழங்கப்பட்டிருந்தது. உதாரணமாக 9000 ஐரோப்பியர்க்கு மூன்று பிரதிநிதிகள் சட்ட நிரூபண சபையில் இருப்ப, 226,000 முஸ்லிம்களுக்கும், 955,000 தமிழர்க்கும், 2,340,000சிங்களர்க்கும் ஒவ்வோர் பிரதிநிதியே சட்ட நிரூபண சபையில் இடம்பெற்றார்.

இப்படியாக இலங்கையர் அரசியற் சீர்திருத்தம் கோரிச் சமர்ப்பித்த மனுக்கள் விஷயமாக அக்காலம் தேசாதிபதியாகவிருந்த சேர் ஹென்றி மக்கலம் எழுதிய ஆட்சேபக் குறிப்புக்கள் ஈண்டுக் குறிப்பிடற்பாலன. அரசியற் சீர்திருத்தங்களை எதிர்த்தவர்களின் பான்மைக்கு அவை எடுத்துக்காட்டாக இருப்பன. அப்போதிருந்த ஆட்சியிலேயே நாடு நன்கு செழித்தது: எனவே சீர்திருத்தங்கள் ஆவசியகம் இல்லை என்பது மக்கலம் தேசாதிபதியின் முதல் ஆட்சேபனை. அப்போதிருந்தஆட்சியில் இலங்கை செழித்தது என்று அவர் வாதித்தார். எனினும், நல்லாட்சியின் பயனாகத்தான் அவ்வாறு செழிப்புற்றது என்று அவர் வாதிடவில்லை என்பதைக் குறித்துக்

கொள்ளல் வேண்டும். நாடு செழித்தது என்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் அச்செழிப்புக்குக் காரணம் இலங்கைக்கு வெளியேயிருந்த பொருளாதாரச் சக்திகள்: இச்சக்திகளே இங்கு கோப்பிச்செய்கையிலும், அதற்குப் பின்னர் தேயிலை, ரப்பர், தெங்கு என்பவற்றின் செய்கையிலும் முதலாளிகள் ஈடுபடுவதற்கான உத்வேகத்தை அளித்தன. இன்னும், இச்செழிப்பு வளர்ச்சியில் அரசாங்கம் தலையிடாது தன்பாட்டில் புத்திசாலித்தனமா யிருந்ததும் பொருளாதார விருத்திக்குக் காரணமாக இருந்தது. தேசாதிபதியின் கூற்றுப்படி நாடு உண்மையில் செழிப்படைந்ததுதானா என்றும் மற்றப்பக்கத்தால் வாதித்து அக்கூற்றை ஆட்சேபிக்கலாம். தோட்டங்கள் அபிவிருத்தியானதால் செல்வம் பெருகியது என்பது உண்மை: ஆனால் அச்செல்வத்தை இந்நாட்டு மக்கள் அதிகம் அநுபவிக்கவில்லை என்று கூறினால் அது மிகையாகாது. 100க்கு 80 விகிதமானவர்களை விவசாயக் குடிகளாகக் கொண்டுள்ள இந்நாட்டிலே குடியானவர்களின் விவசாயம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது: இப்படிப் புறக்கணிக்கப்பட்டமை நல்லாட்சியின் அம்சமாகாது என்று வாதிக்கலாம்.

ஆங்கிலக் கல்வியைப்பெற்று பட்டினங்களிலே வசிக்கும் மிகச் சிறுபான்மையினராகிய ஒருசில இலங்கையரே அரசியற் சீர்திருத்தங்களை விழைகின்றனர் அன்றி சுதேசிகளிற் பெரும்பான்மையினர் அத்திருத்தங்களைக் கேட்கவில்லை என்பது மக்கலம் தேசாதிபதியின் இரண்டாவது கூற்று. ஆங்கிலம் படித்த இலங்கையர் உடை நடை பாவனையில் மிகப் பெரும்பான்மையினரான சுதேசிகளுக்கு வேறானவர்கள்; தொகையில் மிகச் சொற்பமான இவர்களின் கோரிக்கையை நாட்டு மக்களின் கோரிக்கை



எனக் கொள்ளலாகாது; ஆராயுமிடத்து கிராமப்புறங்களில் வசிக்கும் இலங்கையரில் மிகப் பெரும்பான்மையினர் அரசியல் விஷயமாக எவ்வித சிரத்தையும் கொள்வதில்லை. அவர்கள் தங்களுக்கு அரசாங்க "ஏஜண்டு" என வழங்கப்படும் மாகாண அதிபரே சிறந்த பிரதிநிதி எனக் கொள்ளுகிறார்கள்: அவர் தம் பரிபாலனக் கருமங்களில் சாதி, சமய பேதம் பாராட்டுவதில்லை என்று இன்னோரன்னவாறு மக்கலம் தேசாதிபதி தம் இரண்டாவது கூற்றுக்கு ஆதாரங்கள் எடுத்துக் காட்டினார். ஆனால் அவருடைய கூற்றுக்களைக் கண்டிக்கவும் முடியும். மாகாண அதிபராயிருப்பவர் ஓர் அந்நியர். அவருக்கு நாட்டு நடப்பு விளங்காது: ஆகவே அவர் தமது முதலியார்மாரில்தான் தங்கியிருக்கவேண்டும். முதலியார்மார் சொல்வது பொதுஜன அபிப்பிராயம் அன்று: தம் சுயநலம் கருதியும் மாகாண அதிபரின் முகமன் வேண்டியும் அன்னாருக்குப் பணிந்து கருமம் ஆற்றும் உழுத்துப்போன பழைய மானியமுறை வர்க்கத்தவரே முதலியார்மார். ஆகவே அவர்கள் சொல்வது பொதுமக்களது அபிப்பிராயம் என்று மக்கலம் தேசாதிபதி கூறியது பிழை என வாதிக்கலாம்.

ஆகவே மக்கலம் தேசாதிபதி தீவிரச் சீர்திருத்தங்களுக்கு மாறாக இருந்தார். ஆனால் படித்த இலங்கையரது உரிமைகளை ஆலோசித்தல் ஏற்புடைத்தாகும் என்பதில் உடன்பாடுடையவரா யிருந்தார்.

1910-ம் ஆண்டிலே அரசியல் விஷயமாக மாற்றங்கள் செய்யப்பட்டன. இச்சீர்திருத்தங்களின்படிக்கும், தேசாதிபதிக்கே நாட்டின் நிருவாகப் பொறுப்பு முழுவதும் ஒப்புவிக்கப்பட்டது. நாட்டின் ஆட்சிக்கு அவரே

(முன்போல) பொறுப்பாளியாக்கப்பட்டார். அவரே வரவு செலவுத் திட்டத்தை எடுத்தாளவேண்டும்: அவருக்கு முன்பிருந்த ரத்ததிகாரம் அப்படியே இருந்தது, அத்தியாவசிய விஷயங்களில் தானாகச் சட்டங்கள் ஆக்கும் அதிகாரமும் அவருக்கு இருந்தது. சட்ட நிரூபண சபையை அவரே கூட்டவேண்டும்: எந்தவிதமான சட்டங்கள் இயற்ற வேண்டுமானாலும் அதற்கு அவரது அங்கீகாரம் பெறல்வேண்டும்.

முன்பிருந்த சட்ட நிருவாக சபை 1910-ம் ஆண்டுச் சீர்திருத்தத்தின் பின்னரும் தொடர்ந்திருந்தது. பல்வேறு அரசாங்கப் பகுதிகளின் தலைவர்கள் அதில் அங்கம் வகித்தனர். சட்ட நிருவாக சபைக்கு வேறானதாகச் சட்ட நிரூபண சபை அமைக்கப்பட்டது. அதிலே 11 உத்தியோகத்தர்களும் 10 உத்தியோகப் பற்றில்லாதவர்களும் அங்கம் வகித்தனர். பின் கூறப்பட்டவர்களில் நால்வர் தெரிவு செய்யப்படுபவர்கள்: மீதி அறுவரும் தேசாதிபதியால் நியமிக்கப்படுபவர்கள். தெரிவு செய்யப்படும் நால்வரில், இருவர் ஐரோப்பியர்க்கும் (நாட்டுப்புற ஐரோப்பியர்க்கு ஒரு பிரதிநிதி, நகர்ப்புற ஐரோப்பியர்க்கு ஒரு பிரதிநிதி) ஒருவர் பறங்கியர்க்கும், ஒருவர் படித்த இலங்கையர்க்குமாக இருந்தனர். திரு. பொன்னம்பலம் இராமநாதன் (பின்னர் சேர் பொன்னம்பலம் இராமநாதன்) அவர்களே படித்த இலங்கையரின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இலங்கையரில் ஒரு சிறு பகுதியினர்க்கு ஓரளவுக்கு வாக்குரிமை யளிக்கப்பட்டதுதான் 1910-ம் ஆண்டுச் சீர்திருத்தங்களினால் அடைந்த இலாபம். சட்ட நிருவாக சபையைச் சட்ட நிரூபண சபையிலிருந்து பிரித்து பின்கூறிய சபையின் எவ்வித கட்டுப்பாட்



டிலிருந்தும் நீக்கியமை தேசாதிபதியின் ஆட்சியதிகாரத்தை நன்கு உறுதிப்படுத்தியது. சட்ட நிரூபண சபையிலே உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்கள் தம் வாய் கொண்டமட்டும் பேசலாம். ஆனால் அப்பேச்சினால் அதிக பயன் இல்லை. ஏன்? பரிபாலனத்தின்மீது நாடெங்கும் அதிருப்தி நிலவாத பட்சத்தில்-அப்படி அதிருப்தி பரவாதிருக்கும்வரையில்-தேசபரிபாலனத்தைத் தேசாதிபதியின் ஆணைப்பிரகாரம் நடாத்தும் உத்தியோகத்தரைக் கொண்ட சட்ட நிருவாக சபை உத்தியோகப்பற்றில்லாதவர்கள் சட்ட நிரூபண சபையில் எப்படிப் பேசினாலும் அதற்குச் செவிசாய்க்காது கருமம் ஆற்றலாம் என்பதனால் என்க.

1908-ம் ஆண்டு வரையில் இலங்கைக்கு அரசியற் சீர்திருத்தங்கள் வேண்டும் என்று விடாது கிளர்ச்சி செய்தவர்கள் ஐரோப்பியர்களே. ஆனால் இலங்கை அரசியல் அரங்கத்திலே இலங்கையர் தோற்றியதும் இந்தஐரோப்பியர் தம் பழைய கருமங்களை விடுத்து சீர்திருத்தங்கள் வேண்டியதே இல்லை என்று நேர்மாறான கொள்கையைப் பூண்டனர். இது குறிக்கத்தக்க ஓர் விஷமமாகும். இலங்கையர் அரசியல் அதிகாரம் பெற்றால் தாம் இதுவரை ஏகபோகமாகக் கொண்டிருந்த அதிகாரமும் செல்வாக்கும் மிகக் குறைந்துவிடும் என்பதை அவர்கள் ஏற்கெனவே அறிந்தனர்: எனவே உள்ள உள்ளவாறே பரிபாலன முறை இருக்கவேண்டும் என்று அதன் பொருட்டுத் தம்மாலானமட்டும் பாடுபட்டனர். அத்துடன் தமது அரசியல் அந்தஸ்தைப் பாதிக்கக்கூடிய அரசியல் மாற்றங்களை அவர்கள் தீவிரமாக எதிர்த்தனர்.

சேர் பொன். அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ் ஆகியவர்கள் தலைமையில் இலங்கை தேசீய காங்கிரஸ்[1] 1919-ம்

1 Ceylon National Congress

ஆண்டு அமைக்கப்படலாயிற்று. இலங்கையர்க்கிடையே பலவிதமான வேற்றுமைகள் உண்டு: அரசியல் விஷயமாக ஒத்த கொள்கையுடையவர்களாக அவர்கள் இருக்கவில்லை என்ற பல்லவியை, இலங்கைக்கு அரசியற் சீர்திருத்தங்கள் நல்குவதை எதிர்ப்போர் அடிக்கடி பாடிக்கொண்டு, நாட்டின் அரசியல்முன்னேற்றத்துக்கு இடருகட்டையாக இருந்தனர். இலங்கையில் வாழ்ந்த சகல சமூகங்களையும் ஒரு அமைப்பின்கீழ்க் கொண்டுவந்து அதன் மூலமாக இலங்கையின் அரசியல் முன்னேற்ற எதிரிகளின் வாயை அடக்கிச் சீர்திருத்தக் கோரிக்கைகளை ஒருமுகப்படுத்திச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனேயே தேசீய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. தேசாதிபதியின் யதேச்சாதிகார ஆட்சியை ஒழித்து அதற்குப் பதிலாக ஜனநாயக ஆட்சியை இலங்கையில் நிறுவ வேண்டும்; சட்ட நிரூபண சபையிலே உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்கவேண்டும்; அப்போதுதான் ஜனப்பிரதிநிதிகளின் அபிப்பிராயத்துக்கு மதிப்பு உண்டாகும். அதாவது சட்ட நிரூபண சபையில் ஜனங்களின் பிரதிநிதிகள் பெரும்பான்மையினராக இருந்தால், சட்டங்கள் ஆக்கும் அதிகாரம் ஜனங்களிடம் இருந்தே பிறக்கிறது என்றதாகிவிடும். அப்படியான ஓர் சட்ட நிரூபண சபையே அமைக்கப்படல் வேண்டும் என்று தேசீய காங்கிரஸ் தான் ஆரம்பமான நாள்தொடக்கமாகக் கிளர்ச்சி செய்தது. ஓர் சட்டத்தைப்பற்றி விவாதிக்கவும் கலந்து பேசவும்தான் இதுவரை சட்ட நிரூபண சபையின் அங்கத்தவர்களுக்கு உரிமையிருந்தது. அந்த உரிமை போதாது: ஜனங்களின் செல்வ வளர்ச்சிக்கான சட்டங்களை ஜனப்



பிரதிநிதிகளே இயற்றவும் அவர்களுக்கு அதிகாரம் வேண்டும் என தேசீயக் காங்கிரஸ் கேட்டது.

அரசாங்கம் சட்ட நிரூபண சபை யங்கத்தவர்களை நியமிப்பதையும், வகுப்புவாத முறையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் முறையையும் தேசீயக் காங்கிரஸ் கண்டித்தது. நல்லாட்சிக்கும் நீதியான பரிபாலனத்துக்கும் இப்படியான வகுப்பு வேற்றுமைகள்தான் சாவுமணியடிப்பன என்று அரசாங்கம் சொல்லிக்கொண்டு, அதே சமயத்தில் வகுப்புவேற்றுமைகளை வளர்க்கும் ஓர் முறையைக் கைக்கொள்ளுதல் ஏற்றதாகாது என்று காங்கிரஸ் எடுத்துக்காட்டி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக **பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையை** ஏற்படுத்த வேண்டும் என்றும் அம்முறையே சாலச்சிறந்த முறை என்றும் தெருட்டியது. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையினால் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களதும் நலவுரிமைகள் ஒன்றாகக் கவனிக்கப்படும்; பல்வேறு பிரதிநிதிகள் தங்கள் தங்கள் பிரதேச நலவுரிமைகளை எடுத்துக்காட்டி அவற்றை விருத்தியாக்க வழிவகை தேடமுடியும்: அத்துடன் ஜனங்கள் தாம் சிங்களர், தாம் தமிழர் தாம் முஸ்லிம்கள் என்று வகுப்புவாரியாக நினைப்பதை ஒழித்து எல்லாரும் ஓர் நாட்டின் மக்களே என்ற மனப்பான்மை கொள்ள பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை தூண்டும் என்றும் அதிகாரிகளுக்கு காங்கிரஸ் விளக்கியது.

தேசீயக் காங்கிரஸின் கோரிக்கைகளை இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற நாட்டு மந்திரிக்கு எடுத்துரைத்து அரசியற் சீர்திருத்தத்தைப் பெறுவதற்காக ஓர் தூதுக் கோஷ்டி இங்கிலாந்துக்குச் சென்றது. இதன் தலைவர்பிர

பல நியாயவாதி (அத்வக்காத்)ஆக இருந்த திரு. எச். ஜே. சீ. பெரேரா என்பவர். இலங்கை மக்களின் கோரிக்கையை திரு பெரேரா குடியேற்றநாட்டு மந்திரியாக இருந்த வைக்கவுன்ற் மில்னர்[1] என்பவருக்கு ஆணித்தரமாக எடுத்துக் காட்டினர். குடியேற்றநாட்டு மந்திரியும் பிரிட்டிஷ் அரசாங்கமும் இலங்கையின் கோரிக்கையை நன்கு ஆலோசித்தபின்னர் புதிய அரசியற் சீர்திருத்த மசோதா ஒன்றினைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இங்கே அனுப்பினர். இது நிகழ்ந்தது 1920-ம் ஆண்டில் ஆகும்.

ஆனல் 1920-ம் ஆண்டின் அரசியற் சீர்திருத்தத்தினுலும் தேசாதிபதிக்கிருந்த அதிகாரங்கள் கிஞ்சித்தும் குறையவில்லை. சட்ட நிருவாக சபையிலே உத்தியோகப் பற்றற்ற மூவர் அங்கம் வகிக்க இச்சீர்திருத்தம் இடம் அளித்தது. சட்ட நிரூபண சபை, சட்ட நிருவாக சபை என்ற இரண்டு சபைகளுக்குமிடையே ஓர் தொடர்பு ஏற்படுத்துதற்காகவே இவ்வங்கத்தவர்கள் சட்ட நிருவாக சபையில் இருந்தனர்.

சட்ட நிரூபண சபையில் 14 உத்தியோக அங்கத்தவர்களும் 23 உத்தியோகப் பற்றில்லாதவர்களுமாக 37 பேர் அங்கம் வகிக்கலாம் என்றும் உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களில் 7பேர் நியமன அங்கத்தவர்களாயும் 16 பேர் ஜனங்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாயும் இருக்கவேண்டுமென்றும் இச்சீர்திருத்தத்தின் பயனுக ஏற்பட்டது. தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளில் 11 பேர் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்படவேண்டியிருந்தது. பிரதேசவாரியான ஓர் தேர்தற் றெகுதியிலே

1 Viscount Milner



நின்று தெரிவு செய்யப்பட முடியாத சிறுபான்மை வகுப்பினரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கு அவர்களின் பிரதிநிதிகளைச் சட்ட நிரூபண சபைக்கு நியமிப்பதற்கே தேசாதிபதி 7 பேரை நியமிக்கலாம் என விதிக்கப்பட்டது. வர்த்தக நலவுரிமைகளைக் கவனிக்கவேண்டுமென்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டதற் கறிகுறியாக ஐரோப்பியர் நகர்ப்புறப் பிரதிநிதி, நாட்டுப்புறப் பிரதிநிதி, வர்த்தகப் பிரதிநிதி என மூன்று பிரதிநிதிகளையும், தாழ்ந்த பிரதேச விளைபொருட் சங்கம் ஓர் பிரதிநிதியையும் சட்ட நிரூபண சபைக்குத் தெரிந்து கொள்ளலாம் என ஒழுங்கு செய்யப்பட்டது. பிரதேச வாரியான 11 ஸ்தானங்களும் பின்வருமாறு இருந்தன: கொழும்புப் பட்டினம் 1, மேன் மாகாணம் 2; ஏனைய மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் பிரதிநிதி.

முன்னர் "படித்த இலங்கையர்" என்பவர்களுக்கேயிருந்த வாக்குரிமை 1920-ம் ஆண்டு அரசியற் சீர்திருத்தத்தின் பயனுக மேலும் பலர்க்கு வழங்கப்பட்டது. 21 வயதுக்கு மேற்பட்டவராய் ஆங்கிலம் அல்லது சிங்களம் அல்லது தமிழில் எழுத பேச வாசிக்கத் தெரிந்தவர்கள் அனைவர்க்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. அத்துடன் 600 ரூபா வருட வருமானம் பெறுபவர்களுக்கும் 1500 ரூபாவும் அதற்கு மேலும் பெறுமதியான ஆதனம் உடையவர்களுக்கும் வாக்குரிமை யளிக்கப்பட்டது. இப்படியெல்லாம் வாக்குரிமை முறையை விஸ்தரித்தும் இலங்கை மக்களில் 100க்கு 4 விகிதத்தினரே அவ்வுரிமையைப் பெற்றனர்.

1920-ம் ஆண்டு ஏற்பட்ட அரசியற் சீர்திருத்தங்களினுல் வாக்குரிமைமுறை சொற்ப அளவுக்கு விஸ்தரிக்கப்

பட்டது: அத்துடன் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை ஏற்பட்டது: இந்த இரண்டும்தான் இத்திருத்தங்களினால் ஏற்பட்ட நற்பயன்கள். இவற்றைவிட வேறுமாற்றங்கள் நிகழவில்லை என்று கூறலாம். பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இருந்த அதே குடியேற்றநாட்டுப் பரிபாலனமுறை கிஞ்சித்தேனும் கெடாமல், பொதுஜனக் கோரிக்கைக்குக் கொஞ்சம் செவிசாய்த்து தொடர்ந்து அநுட்டானத்திலிருந்தது. இந்த அரசியல் திட்டத்தில் 1924-ம் ஆண்டில் இன்னோர் மாற்றம் நிகழ்ந்தது. முந்தி உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களின் தொகை 23 ஆக இருந்ததை 37 ஆக்கினர். இவர்களில் 29 பேர் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள். ஒவ்வோர்மாகாணத்துக்கும் இரண்டு ஸ்தானங்கள் வகுக்கப்பட்டதன் பயனாகப் பிரதேசவாரியான ஸ்தானங்கள் அதிகரிக்கப்பட்டன.

இவ்வாறான அரசியல் அமைப்பு 1920-ம் ஆண்டு தொடக்கம் 1929 ம் ஆண்டுவரை அநுட்டானத்தில் இருந்துவந்தது. ஆனால் இவ்வமைப்பிலே ஓர் பெருங்குறை இருந்தது. உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்கப் போதிய அதிகாரம் அளிக்கப்பட்டனர். தாம் அரசாங்கத்தைக் கண்டிக்கலாம்: ஆனால் அந்த அரசாங்கச்சுமை தம்மீது பொறுப்பிக்கப்பட மாட்டாது என்பதை நல்லாக உணர்ந்த அங்கத்தவர்கள் தம் கண்டனமாரியைச் சந்தோஷமாகவே பொழிந்தனர். ஒரு கருமத்தைக் கண்டிக்கும் ஒருவர்க்குக் அக்கருமப் பொறுப்பை வழங்கினால்தான் அதன் தன்மை அவர்க்குவிளங்கும்; ஆனால் 1929-ம் ஆண்டுக்குமுன் இருந்த அரசியலமைப்பிலே ஜனப்பிரதிநிதிகட்கு அத்தகைய பொறுப்புச் சுமத்தப்பட இடம்



இருக்கவில்லை உண்மையைக் கூறுங்கால் இந்த அரசியலமைப்பின் பயனாகச் சட்ட நிரூபண சபையிலே பரஸ்பரம் மாறுபட்ட இரண்டு கட்சிகள் தோன்றின. ஒன்று உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களுக்குச் சதா எதிர்ப்புடன் இருந்த அதிகாரவர்க்கக் கட்சி: மற்றது அதிகாரவர்க்கக் கட்சியின் கருமங்களை எப்போதும் கண்டித்து அதற்கெதிராகச் சதாகாலமும் இருந்த உத்தியோகப் பற்றில்லாதோர் கட்சி: இவ்விரு கட்சியினரும் எட்டிக்குப் போட்டி என்றாங்கு நின்றனர். இதன்பயனாக உத்தியோகப்பற்றில்லாதோர் விவாதம் புரிவதில் தக்க பயிற்சிபெற்று அதில் திறமை பூண்டவராய் உத்தியோகத்தர் ஆற்றும் கருமங்களைக் கண்டபடி கண்டிக்கத் தொடங்கினர். இதனால் உத்தியோக அங்கத்தவர் தம் பரிபாலனக் கருமங்களைக்கொண்டு நடத்துவதே அவர்களுக்குப் பெரும் கரைச்சலாக இருந்தது உத்தியோகப் பற்றில்லாதவர்கள் இவ்வாறு பரிபாலனக் கருமங்களைக் கண்டிக்கிறார்களே, அவர்களிடமே அப்பொறுப்பைக் கொடுக்கலாம் எனிலோ அதற்கும் அரசியலமைப்பில் இடமில்லை. எனவே அவர்களுக்கு இவ்வமைப்பின் பயனாகப் பொறுப்புணர்ச்சி உண்டாகவும் ஏதுவில்லை. இன்னும், சட்ட நிரூபண சபையிலே பெரும்பான்மையினராகவுள்ள உத்தியோகப் பற்றில்லா அங்கத்தவர்கள் எப்படித்தான் கண்டித்தாலும் அவர்களுக்கு, நாட்டின் நிருவாகத்தை நடாத்தும் சட்ட நிருவாக சபைமீது எவ்விதமான அதிகாரமும் அளிக்கப்படவில்லை. இதனால் சட்ட நிரூபண சபை யங்கத்தவர்கள் ஊக்கம் குன்றியவர்களாய், அரசியலமைப்பின்மீது வெறுப்புக் கொண்டவர்களாயிருந்தனர். இந்த வெறுப்பே 1931-ம் ஆண்டின் டொனமூர் அரசியல் திட்டத்துக்கு வழி கோலியது.

ஏற்கெனவே அநுட்டானத்தில் இருந்த அரசியலமைப்பில் உள்ள நூநதன்மைகளை டொனமூர் விசாரணைச் சபையினர் நன்கு கண்டுகொண்டனர். அரசியல் சீர்திருத்தம் விஷயமாகத் தம் சிபாரிசுகளைச் செய்வதில் அவர்கள் மூன்று விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டனர். பரிபாலன விஷயத்தில் இலங்கையர்க்குக் கிரியாமுறையில் தக்க பயிற்சியளிக்க வேண்டும் என்பது முதல் விஷயம். ஏற்கெனவே இலங்கையர் சட்ட நிரூபண சபையில் அங்கத்துவம் வகித்து வந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அவ்வங்கத்துவம் அவர்களுடைய அரசியல் உணர்ச்சிக்கு உத்வேகம் அளித்ததேயன்றி தேச பரிபாலனப் பிரச்சினைகளைத் தாமாகக் கையாளுவதற்கான ஆற்றலை வளர்க்கவில்லை. உதாரணமாக, நாட்டின் சுகாதாரப் பிரச்சினை, கல்விப்பிரச்சினை, விவசாயப் பிரச்சினை, கைத்தொழிற் பிரச்சினை என்னும் இன்னோரன்னவற்றை இலங்கையரே மிகவும் திறமையுடன் தீர்க்க முடியும். இரண்டாவது சட்ட நிரூபண சபை தனது அங்கத்தவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியையூட்டி பொறுப்பாட்சிக்கு அவர்களை இட்டுச்செல்லும் சாதனமாக அமையவில்லை. மூன்றாவது, குறித்த சிலருக்கே வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்ததால், பட்டணப் பக்கங்களிலும் நாட்டுப்புறங்களிலும் வாழ்ந்தசாதாரண மக்களின் நிலையைத் திருத்த முயற்சிகள் செய்யப்படவில்லை.

மேலே சொல்லிய மூன்று விஷயங்களையும் தம்மனத்தில் நன்கு பதித்துக்கொண்ட டொனமூர் விசாரணைச் சபையினர், தம் நாட்டின் பரிபாலனக் கருமங்களைத் தாமே நிருவகிக்கக்கூடியதாக இலங்கையர்க்குப் பயிற்சியளிக்கும் அரசாங்க முறையொன்றைச் சிபாரிசுசெய்யத்



தீர்மானித்தனர். அத்துடன் சாதாரண மக்களுக்கு அரசியல் அந்தஸ்து அளிக்கவும் தீர்மானித்தனர். அவர்களுக்கு அரசியல் அந்தஸ்து இருக்கும் பட்சத்தில், அவர்களுடைய வாக்குச் சம்மதங்களை நாடிவரும் எவரும் அவர்களது அபிப்பிராயங்களையும் கோரிக்கைகளையும் புறக்கணிக்க முடியாது.

பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்படும் 50 அங்கத்தவர்களையும் 8-க்கு மேற்படாத நியமன அங்கத்தவர்களையும் கொண்ட **அரசாங்க சபை** ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்று டொனமூர் விசாரணைச் சபையினர் சிபாரிசு செய்தனர். இச்சபை நாட்டுக்கு வேண்டிய சட்டங்களை ஆக்குவதுடன் அச்சட்டங்களை நிருவகிக்கவும் உரிமை உடையதாய் இருத்தல்வேண்டும் என்று அவர்கள் விதித்தனர். இதன்பொருட்டு அரசாங்க சபை **ஏழு நிருவாக சபைகளாக** வகுக்கப்பட்டது. நாட்டுக்குரிய விவகாரங்களில் மூன்றைவிட ஏனைய யாவும் இந்நிருவாக சபைகளின் பொறுப்பில் விடப்பட்டன. அரசாங்க சேவையாளரை நடத்தல், சட்ட நிருவாகம், நிதி நிருவாகம் என்னும் மூன்று விஷயங்களும் அரசாங்கசபையின் பொறுப்பில் விடப்படாது மூன்று இராஜாங்க அதிகாரிகள்[1] பொறுப்பில் விடப்பட்டன. சுகாதாரம், கல்வி, விவசாயம் என்னும் இன்னோரன்ன ஏனைய சகல விஷயங்களும் மேலே காட்டிய நிருவாக சபைகளின் பொறுப்பில் விடப்பட்டன. நிருவாக சபைகள் தனித்தனிகூடித் தமக்கென ஒவ்வோர் தலைவரைத் தெரிவுசெய்யும். அத்தலைவர் **மந்திரி** என வழங்கப்பட்டார். பரிபாலன விஷயமாக எழும் பிரச்சினைகளைத் தெளிவாக அங்கத்தவர்கள் அறிவதற்கு நிருவாகசபை முறை உதவிசெய்தது என்ப

1 Officers of State

தற்குச் சந்தேகம் இல்லை. அத்துடன் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியும் ஊட்டியது. பழைய சட்ட நிரூபண சபையிற் செய்ததுபோல யாரேனும் ஓர் அங்கத்தவர் அரசாங்கத்தைத் தாக்கித் தம் மனம்போனபடி பேசுவாரேயானால் அவர் வேறொருவரையுமல்ல தம் சகபாடிகளான அங்கத்தவர்களையே தாக்குபவராவர் என்பதைச் சீக்கிரத்தில் அவரே உணர்ந்துகொள்ள முடியும். அரசாங்கத்தைத் தாக்கிப் பேசுதல் பிரீதி விளைத்தது அந்தக் காலம்: டொனமூர் அரசியலமைப்பின் பயனாக ஏற்பட்ட நிருவாக சபை ஆட்சிமுறையில் ஒரு அங்கத்தவர் அரசாங்கத்தைத் தாக்கிப்பேசினால் அவர் அவ்வரசாங்கத்தின் அங்கமாயுள்ள தம்மையே தாக்கிப் பேசுபவராவர். இன்னும், நாட்டுக்கு நன்மை விளைக்கக்கூடிய விஷயங்களை ஆலோசித்து, வகுத்து ஏற்ற கருமங்கள் ஆற்றவும் நிருவாக சபை முறை அங்கத்தவர்களுக்கு உதவி புரிந்தது. இதுவரை நாட்டைப் பரிபாலித்தவர்கள் இங்கிலாந்தின் முறைகளை இங்கு புகுத்தினர்: அவர்கள் இலங்கையரல்லாதபடியால், அவர்கள் நாட்டு நிலைமையைப் பூரணமாக அறிந்து, அதற்குத்தக்கதாகக் கருமங்களை ஆற்ற முடியவில்லை. ஆனால் அரசாங்கசபை ஆட்சிமுறையினால், இந்நாட்டுப் பிரச்சினைகளை இலங்கை அரசியல்வாதிகள் உள்ள உள்ளவாறே நோக்கி அதற்குத் தக்கவாறு கருமம்ஆற்ற முடிந்தது. அரசாங்க சபையினால் ஏற்பட்ட பெரும் நன்மை இது; ஆனால் இந்நற்கைங்கரியங்களுக்கெல்லாம் தோற்றுவாய் சர்வஜன வாக்குரிமையே. இதுவரை அரசியல் அதிகாரம் ஒரு சில சிறுபான்மையினரிடமே இருந்தது. இவர்கள் தம் கல்வியாலும் செல்வத்தாலும் அதிகாரம் கொண்டிருந்தனர். சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டதன் பயனாக இது



வரை தேடுவாரற்றுக் கிடந்த சாதாரண மக்களுக்கு ஓர் தனி மதிப்பு ஏற்பட்டது. சாதாரண மனிதனின் தேவைகளைப் பூர்த்திசெய்து அவனைத் திருப்தி செய்தால்தான் எந்த அரசாங்கமும் தேர்தலில் வெற்றிகொண்டு மீண்டும் அதிகாரத்துக்கு வரும். எனவே அவனுடைய ஆதரவைப் பெறுவதற்காக அரசாங்க சபையானது விவசாயம், கல்வி, சுகாதாரம், தொழிலாளர் நிலைமை, ஸ்தல பரிபாலனம், கைத்தொழில் ஆதியனவற்றை அபிவிருத்தி செய்வதில் உற்சாகமுடையதாய் அதிக முயற்சிசெய்தது. தொகுத்துக் கூறுங்கால் இலங்கையின் பொதுமுன்னேற்றத்துக்கான பல நற்கருமங்கள் அரசாங்க சபையினால் ஆற்றப்பட்டன.

வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு மந்திரிகள் சபை[1]யிடம் விடப்பட்டிருந்தது. மந்திரிகள்சபை தயாரித்துச் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டத்தை அரசாங்க சபை நிராகரித்துவிடின் மந்திரிகள் தம் பதவிகளிலிருந்தும் விலகிவிடவேண்டும்.

பரிபூரணமான முடிக்குரிய குடியேற்றநாட்டு ஆட்சிமுறைக்கும், பரிபூரண சுயராச்சிய முறைக்கும் இடையில் உள்ளதுவே டொனமூர் அரசியல் அமைப்பு. இந்த நாட்டின் பரிபாலனத்துக்கு வேண்டிய பயிற்சியையும் பொறுப்புணர்ச்சியையும் இலங்கை அரசியல்வாதிகளுக்குத் தமது அரசியலமைப்பின் மூலமாகவழங்கி அவற்றை விருத்தியாக்க வேண்டுமென டொனமூர் சபையினர் விழைந்தனர். அவர்கள் விழைவுப்படியே டொனமூர் அரசியலமைப்பு இலங்கையில் அநுட்டானத்திலிருந்த 17 வருஷ காலத்துக்கிடையில் இலங்கை அரசியல்வாதி

---

1 Board of Ministers

கள் தக்க பயிற்சியும் போதிய பொறுப்புணர்ச்சியும் பெற்றனர் என்று கூறலாம். ஆனால் மனிதன் சிருட்டி செய்வனவற்றில் ஒவ்வோர் பிழை ஏற்படுவது சகஜம். எனவே டொனமூர் அமைப்பிலும் சில குறைபாடுகள் இருந்தன என்பதை மறுக்கமுடியாது. இக்குறைபாடுகள் யாவை என்பதை இனி ஆராய்வாம்:

டொனமூர் அமைப்பில் இரு சிறுபான்மை வகுப்பினர்க்கு—அவர்களிலும் விசேஷமாக மலைநாட்டுச் சிங்களர்க்கும்—அதிக பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்று புலப்பட்டது. ஆகவே அரசாங்கசபைப் பிரதிநிதித்துவமுறை திருப்பி வகுக்கப்படவேண்டியிருந்தது. அடுத்ததாக ஏழு நிருவாக சபைகளுக்கிடையிலும் பரஸ்பரம் ஒற்றுமை நிலவவில்லை. அடுத்த தேர்தலில் அதிக பொதுஜன ஆதரவைப் பெறுதற்காக ஒவ்வொரு நிருவாக சபையும் நான் முந்தி, நீ முந்தி என்று நாட்டு முன்னேற்றத்துக்கான கைங்கரியங்களைச் செய்வதிற் போட்டியிட்டன. மற்ற நிருவாக சபை செய்வதிலும் பார்க்கக்கூடிய பொதுஜனக் கைங்கரியங்களைத் தானே ஆற்றவேண்டும் என ஒவ்வொரு நிருவாக சபையும் முயன்றது. மந்திரிகளாயினோரும் கோஷ்டியாக ஒருமுகப்பட்டு ஒத்துழைக்கும் மனப்பான்மையை விடுத்து பொதுஜன ஆதரவும் கீர்த்தியும் தாம்தாம் பெறுதற்காகப் பரஸ்பரம் போட்டியிட்டுக் கருமம் ஆற்றினர். அரசாங்கம் என்ற இரதத்தினை சாரதியில்லாத ஏழு குதிரைகள் தம் மனம்போனவாறு இழுத்தன. கடிவாளத்தைச் செவ்வையாகப்பிடித்து இரதத்தை ஒருவழிப்படுத்தத்தக்க ஓர் சாரதி யிருக்கவில்லை. இதன் காரணமாக, முடிக்குரிய குடியேற்ற நாட்டுப் பரிபாலன முறையில் தேசாதிபதிமீது பொறுப்புச் சுமத்துவதுபோலவோ, மந்திரி சபை என்னும் நிரு



வாக ஸ்தாபனத்தைக்கொண்ட ஓர் பாராளுமன்றத்தின்
மீது பொறுப்புச் சுமத்துவது போலவோ, எந்த ஒரு தனி
மனிதன் மீதும் நாட்டுப் பரிபாலனத்துக்குப் பொறுப்புச்
சுமத்தமுடியாமல் இருந்தது.

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து எனப்படும்
சுயராச்சியமுறை வழங்க வேண்டுமென அரசாங்க சபை
1942-ம் ஆண்டில் கோரியது. அப்போது இரண்டாவது
உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. இலங்கையின்
கோரிக்கைக்குக் குடியேற்றநாட்டு மந்திரி 1943-ம் ஆண்
டிற் பதில் அளித்து ஓர் அறிக்கை விடுத்தார். "இலங்கை
யின் அரசியலமைப்பை, யுத்தம் முடிந்தபின் சீர்திருத்து
தல்பற்றி மாட்சிமை தங்கிய மன்னர்பிரானது அரசாங்
கம் உறுதி கூறுகிறது. உள்நாட்டு சிவில் பரிபாலன
விஷயங்கள் அனைத்திலும் பிரிட்டிஷ் முடியின்கீழ் பரி
பூரண பொறுப்பாட்சியை இராஜசபைக் கட்டளை[1] மூலம்
இலங்கைக்கு வழங்குவதை இச்சீர்திருத்த முயற்சி
நோக்கமாகக்கொள்ளும்" என்பது அவ்வறிக்கையின்
சாரம்.

இலங்கைக்கு வேண்டிய அரசியற் சீர்திருத்தங்களைப்
பற்றி விசாரணை செய்யவந்த சோல்பெரி விசாரணைச்
சபை மந்திரிமார் தயாரித்த அரசியற்திட்டங்களை அவ்
தானமாக ஆராய்ந்ததுடன் நிற்காது பொது மக்களின்
பலவித அபிப்பிராயங்களையும் இவ்விஷயமாக உசாவி
யது. இதன்பின் விசாரணைச் சபையினர் தம் சிபாரிசுக
ளைச் செய்ய பிரிட்டிஷ் பாராளுமன்றம் அவற்றை ஏற்
றுக்கொண்டது.

டொனமூர்த் திட்டத்தினால் வழங்கப்பட்ட சர்வ

---

1 Order in Council; இதனை இராஜசபைச் சட்டம், மந்திரணை ஆணை என்றும் வழங்குவர்.

ஜன வாக்குரிமை முறை தொடர்ந்திருக்க வேண்டியதன் அவசியத்தை சோல்பெரி விசாரணைச் சபையினர் நன்கு கண்டனர். அவ்வாக்குரிமையின் பயனாகவே பொது ஜனங்களின் நன்மைக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டன என்பதை அவர்கள் தெரிந்து கொண்டனர்.

ஈரங்க அரசியல் மன்றம்[1] ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று சோல்பெரி சபையினர் சிபாரிசு செய்தனர். **பிரதிநிதிகள் சபை, செனெற் சபை** அல்லது **மேற்சபை** என இரண்டு சபைகளை இலங்கைப்பாராளுமன்றம் கொண்டதாக இருக்கவேண்டும்: பிரதிநிதிகள் சபை யங்கத்தவர்கள் பிரதேச வாரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களாயிருக்கவேண்டும்; தனி அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் தேர்தற் றொகுதிகளும் பல அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் தேர்தற் றொகுதிகளும் இருந்தால்தான் சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படச் சந்தர்ப்பம் ஏற்படும் என்று சோல்பெரி சபை சிபாரிசு செய்தது. இன்னும், 75,000 குடிசனங்களுக்கு ஓர் அங்கத்தவரும். ஒவ்வோர் மாகாணத்திலும் 1000 சதுரமைல் கொண்ட ஓர் பகுதிக்கு ஓர் அங்கத்தவரும் பிரதிநிதிகள் சபையில் இருக்கவேண்டுமெனவும் விதித்தது. சிறுபான்மைப் பிரதிநிதிகள் தேர்தல்களில் வெற்றிபெறுதற்காகவே இந்த முறையினையும் விசாரணைச் சபையினர் சிபாரிசு செய்தனர். யாதேனும் ஓர் தேர்தற் பிரதேசத்திலே ஒரே சமுகத்தைச் சேர்ந்த மக்கள் பெருந்தொகையில் இருப்பின், அவர்களைக்கொண்ட ஓர்தேர்தற்றொகுதி உண்டாக்கப்படலாம் எனவும் ஷெ சபையினர் விதித்தனர்.

1 Bicameral Legislature



35 வயதுக்கு மேற்பட்டவர்களான 30 பேரை செனெற்சபை கொண்டதாயிருக்க வேண்டும் எனசோல்பெரிச் சபை சிபாரிசு செய்தது. இவர்களில் 15 பேர், வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் நற்சேவை செய்தவர்களிடையிருந்து தேசாதிபதியால் நியமிக்கப்படுவர். மீதி பதினைந்து பேரையும் ஜனப்பிரதிநிதிகள் சபை தெரிவு செய்யவேண்டும். செனெற்சபை ஓர் நிரந்தரமான ஸ்தாபனம். பிரதிநிதிகள் சபையைப்போல அது குறித்த காலத்தில் கலைக்கப்பட மாட்டாது. ஆனால் அதன் அங்கத்தவர்களில் 10 பேர் மூன்று வருஷத்துக்கொருமுறை பதவியிலிருந்தும் விலக, அவர்களிடத்துக்கு ஏனையோர் அல்லது அவர்களே மீண்டும் நியமிக்கப்படுவர்.

கபினெற் என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் மந்திரசபை பிரதம மந்திரி என்பவரின் தலைமையில் நாட்டின் நிருவாகத் தொழிலை நடத்தவேண்டும் என்றும், அதன் அங்கத்தவர்களான மந்திரிமார் நாட்டின் பரிபாலனத்துக்கு ஒருமித்தும் தனித்தும் பொறுப்பாக இருக்கவேண்டும் என்றும் சோல்பெரிச்சபை சிபாரிசு செய்தது. மந்திர சபை ஆட்சியின் பயனாக, தக்கமுறையில் அமைக்கப்படும் அரசியற் கட்சிகள் காலகதியில் உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

கீழ்ச்சபை எனவும் வழங்கப்படும் ஜனப்பிரதிநிதிகள் சபையே சட்ட நிரூபண மன்றமாகும். எல்லாச்சட்டங்களும் அதில் இருந்தே பிறக்கவேண்டும். சட்டங்கள் அநுட்டானத்துக்கு வருவதைக் குறித்த ஓர் காலவெல்லை வரை தாமதப்படுத்தத்தான் செனெற் சபைக்கு அதிகாரம் உண்டு.

இதுவரை இலங்கை அரசியல் அரங்கத்திலே முக்கிய நடிகராக இருந்த தேசாதிபதி தமது அதிகாரங்களை இழந்து மன்னர்பிரானது பிரதிநிதி என்ற தன்மையில் மாத்திரம் இருக்கவேண்டி ஏற்பட்டது. இவ்வாறாக முடிக்குரிய குடியேற்ற நாட்டுப் பரிபாலனமுறை முடிவடைய அதன் இடத்துக்கு உள்நாட்டு சிவில் பரிபாலனம் முழுவதுக்கும் இலங்கை மக்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டது இப்படியான பொறுப்பு வழங்கப்பட்டதுடன், டொனமூர் அரசியலமைப்பில் இருந்த மூன்று ராஜாங்க அதிகாரிகளது பதவிகளும் ஒழிந்தன. அவர்கள் வகித்துவந்த கடமைகள் மந்திரிமார் பொறுப்பில் விடப்பட்டன. மந்திரிமாரில் குறைந்தபட்சம் இரண்டு பேராவது செனெற்சபை யங்கத்தவராக இருக்கவேண்டுமென சோல்பெரிச்சபை சிபாரிசு செய்தமையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

1947-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இலங்கை அரசியல் விஷயமாக மகத்தான, என்றும் ஞாபகத்தில் வைக்கத்தக்க பிரகடனம் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கம்செய்தது. பிரிட்டிஷ் பொதுநலவமைப்பிற்[1]குள் இலங்கையானது பரிபூரண சுதந்திரம் பெற்றுள்ள டொமினியனாக விளங்கும் என்பதே அப்பிரகடனம், இதுவரை இலங்கையின் பரிபாலனத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கமே பொறுப்பாக இருந்தது. அந்தப் பொறுப்புக்கள் அனைத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கம் கைவிட்டு இலங்கை மக்களிடமே முழு அதிகாரத்தையும் ஒப்படைப்பதற்கான மசோதா ஒன்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இங்கிலாந்திலே மன்னரானவர் எத்தகைய நிலையில் இருக்கிறாரோ அத்தகைய நிலையிலேயே

1 British Commonwealth



இலங்கையின் கவர்னர் ஜெனரல் என வழங்கப்படும் மகா தேசாதிபதி இப்போது இருக்கிறார். டொமினியன் அந்தஸ்தைப் பெற்ற இலங்கையின் முதற் பாராளுமன்றத்தை குளோஸ்டர் கோமகன்[1] அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். முடிக்குரிய குடியேற்ற நாடாக இருந்த இவ்விலங்கை பிரிட்டிஷ் பொதுநல அமைப்பிலே டொமினியனாக வருவதற்கு நீடித்தகாலமாகச் சமாதான முறையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பூர்த்தி விழாவாகவே இவ்வங்குரார்ப்பண விழா நிகழ்ந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

## வினாக்கள்:

1. முடிக்குரிய குடியேற்ற நாட்டு அரசாங்கம் என்றால் என்ன? 19-ம் நூற்றாண்டிலே இவ்வித அரசாங்க முறை இலங்கைக்கு ஏற்புடைத்தாகியிருந்ததற்குக் காரணம் என்ன?

2. ஜனப்பிரதிநிதித்துவமுறை இலங்கையில் வளர்ச்சியடைந்ததை வரிசைக்கிரமமாகக் கூறுக.

3. 1920-ம் ஆண்டு தொடக்கம் 1948-ம் ஆண்டுவரை இலங்கையிற் பொறுப்பாட்சிமுறை அபிவிருத்தியடைந்ததைப்பற்றி விபரமாகக் கூறுக.

4. இலங்கையின் அரசியல் முன்னேற்றம் விஷயமாக டொனமூர் அரசியல் திட்டம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விமரிசனம் செய்க.

5. டொனமூர் அரசியலமைப்பிலே எவ்வெத்துறைகளில் முன்னேற்றம் செய்ய வேண்டுமென சோல்பெரி விசாரணைச்சபை சிபாரிசு செய்தது?

1 Duke of Gloucester

# இக்கால இலங்கையின் சமுதாய க்ஷேமாபிவிருத்தி

## கல்வி.

போர்த்துக்கீஸர், டச்சுக்காரர் என்பவர்களது ஆட்சியின் பயனாக ஐரோப்பிய நாகரீகம் இந்நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் எண்ணப்பாங்கிலும் செல்வாக்குப் பெற்றது என்பதை நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம். பிரிட்டிஷ் பரிபாலனத்திலும் இச்செல்வாக்கு மங்காது வளர்ந்துகொண்டு வந்தது. ஆளும்சாகியத்தாரின் பாஷை கலாசாரம், பழக்கவழக்கங்கள் என்பவற்றைஆளப்படும் சாகியத்தார் தோட்டி முதல் தொண்டைமான்வரை விரும்பி அவற்றைத் தம் வாழ்க்கையிற்கொள்ள அவாப்படுதல் நூதனமான ஓர் விஷயமன்று. தாம் ஆளும் மக்களது வாழ்க்கையினையும் எண்ணப்பாங்கினையும் தம்முடைய முறையில் ஆக்கி அமைக்க வேண்டுமென பிரிட்டிஷார் வேண்டுமென்று கருமம் ஆற்றாவிட்டாலும் ஆங்கிலக் கல்வியறிவின் மீதும், ஆங்கில வாழ்க்கை முறைகள் மீதும் அவர்கள் கொண்டிருந்த பெரும்மதிப்பினால், மக்கள் அவற்றின்மீது மோகம்கொள்ள மறைமுகமாக—அபுத்திபூர்வமாக—கருமம் ஆற்றினர் என்று சொல்லலாம்.

ஆங்கில அறிவைப் பரப்புவதிலும் "அஞ்ஞானி"களை மனந்திரும்பப் பண்ணுவதிலும் 1800-ம் ஆண்டு தொடக்கம் 1832-ம் ஆண்டு ஈறாகவுள்ள காலத்தில் அதிககவனம் செலுத்தப்பட்டது. நோர்த் தேசாதிபதி டச்சுக்காரரின் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்தினார். வித்தியாதிபதி போன்ற ஓர் அதிகாரியாக சங். ஜேம்ஸ் கோர்டி



னர் நியமிக்கப்பட்டபின், மதம் மாற்றும் வேலையை விஸ்தரிப்பதற்காக டச்சுக்காரரின் பழைய கட்டளைப் பள்ளிக்கூடங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

அரசாங்க உதவிபெறும் பள்ளிக்கூடங்களை மதம் மாற்றும் கருமங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்ற கருத்துடையவராக இருந்த பார்ண்ஸ் தேசாதிபதி தாய்ப்பாஷை மூலம் மக்களுக்குக் கல்வி புகட்ட இப்பள்ளிக்கூடங்களை 1820-ம் ஆண்டில் உபயோகிக்கச் செய்தார். ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக அப்பள்ளிக்கூடங்களின் பொருட்டுச் செலவிட அதிக பணம் அரசாங்கத்திடம் இருக்கவில்லை. அத்துடன் அப்பள்ளிக்கூடங்களில் உபாத்திமைத் தொழில் புரிந்தவர்களும் தக்கவர்களாக இருக்கவில்லை எனவே 1832-ம் ஆண்டளவில் இப்பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன.

மேலே சொல்லியவாறு மூடப்பட்ட பள்ளிக்கூடங்களை மீண்டும் திறக்க 1832-ம் ஆண்டுக்கும் 1867-ம் ஆண்டுக்குமிடையில் முயற்சிகள் செய்யப்பட்டன. பள்ளிக்கூடங்கள் இல்லாக்குறையை அவதானித்த கோல்புறூக் கொமிஷன் அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றையும் பாடசாலைக் கொமிஷன் என்ற ஸ்தாபனத்தின்மேற்பார்வையில் விடவேண்டுமென ஆலோசனை கூறியது. கண்டி, காலி, யாழ்ப்பாணம் என்னும் இடங்களில் இக்கொமிஷனுக்கு உப நிருவாக சபைகள் இருக்கவேண்டுமென்றும் மாகாணாதிபதியும் போதகர்மாரும் இப்பள்ளிக்கூடங்களுக்கு விஜயம்செய்து அவற்றுக்கு வேண்டிய உபாத்திமாரை நியமிக்க வேண்டும் என்றும் கோல்புறூக் கொமிஷன் கூறியது. ஆங்கிலம், ஆங்கில இலக்கண விதிகள், வாசிப்பு, கட்டுரை எழுதல் என்பவற்றைக் கற்பிக்க வல்லவராயும் நல்ல எழுத்து எழுதக்கூடியவரா

யும், கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்னும் கணிதத்துக்குரிய நான்கு விதிகளுடன், சரித்திரம், பூமி சாத்திரம் என்பவற்றின் ஆரம்ப அறிவும், பொது அறிவும் உடையவராயும் இருத்தல்தான் அக்கால உபாத்திமாரின் தகைமைகள் எனக் கருதப்பட்டது. இன்னும் "சுதேசி" வாலிபரை அரசாங்க உத்தியோகங்களுக்குப் பயிற்றுவதற்காக கொழும்பிலே ஓர் கல்லூரியையும் ஸ்தாபிக்க வேண்டுமெனவும், பாடசாலைகளுக்குரிய பாடத் திட்டத்தில் ஆங்கிலத்துக்கே உன்னத ஸ்தானம் வழங்கப்படவேண்டுமெனவும் கோல்புறூக் கொமிஷன் விரும்பியது. ஆங்கிலக் கல்வி முறையினால் அரசாங்கத்துக்கு வேண்டிய எழுத்தாளரையும் ஏனைய உத்தியோகத்தரையும் பெறமுடியும்: அத்துடன் ஆங்கில மக்கள் பொன்னேபோற் போற்றிக் கொண்டாடும் சுதந்திரக் கொள்கைகளையும் இந்நாட்டு வாலிபர் அறிந்துகொள்ள முடியும் என்று கோல்புறூக் சபையினர் கருதினர். கீழைத்தேயப் பாஷைகள் கல்விச்சாதனமாக இருக்கத் தகுதியற்றவை என்று மக்கலே[1] நினைத்ததுபோலவே கோல்புறூக் கொமிஷனும் நினைத்தது.

இக்காலத்திலே றோயல் கல்லூரி என வழங்கப்படும் கல்லூரி கொழும்புக் கலாசாலை[2] என்னும் பெயருடன் **1831-ம்** ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சவ. மார்ஷ் என்ற கிறிஸ்தவ பாதிரியார் அதன் முதல் தலைவராக இருந்தார் ஆங்கிலம், லத்தீன், கிரேக்க பாஷை என்பன பிரதான பாடங்களாயும் சரித்திரம், பூமி சாஸ்திரம், வர்த்தகக் கணக்கு, கணக்கு வைக்கும் முறை, அட்சர கணிதம், க்ஷேத்திர கணிதம்விவசாயத்துக்குப் பொருத்தமான இயற்கை ஞானம் என்பன உப பாடங்களாயும்

1 Macaulay 2 Colombo Academy



இக்கலாசாலையிற் படிப்பிக்கப்பட்டன. **1834-ம்** ஆண்டில் பாடசாலைக் கொமிஷன் ஸ்தாபிதமாயது.

பெண்கள் கல்விக்கென முகத்துவாரப் பகுதியிலே ஓர் பெண்கள் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இங்கே "சரித்திரம், பூமி சாத்திரம், எண் கணிதம், ஆங்கிலம், தையல் வேலை, பூகோள வடிவத்தை உபயோகித்தல்" என்பன மாணவிகளுக்குக் கற்பிக்கப்பட்டன.

அரசாங்கம் இவ்வாறாகக் கல்வி விஷயமாக முயற்சி செய்ய, கிறிஸ்தவ பாதிரிமார்களும் கல்வித்துறையில் தொண்டாற்ற முன்வந்தார்கள். மக்களை மதம் மாற்றுவதே அவர்களின் பிரதான நோக்கம்: கிறிஸ்தவர்களல்லாதவர்கள் அஞ்ஞானிகள், நிரீச்சுரவாதிகள்: அவர்களின் ஆத்மாவைக் காப்பாற்றுவது தம் கடமை என்றே இப்பாதிரிமாரிற் பலர் நினைத்தனர் ஆனால் பாதிரிமாராகிய தங்களின் இச்சுவிசேஷத் தொண்டைப்பற்றி இந்துக்களும் பௌத்தர்களும் என்ன நினைத்துக்கொண்டிருந்தனர் என்பதை அவர்கள் உணர்ந்தறியவில்லை. கல்வி விஷயத்தில் மிஷன் பாடசாலைகளே ஏகபோக செல்வாக்குடன் விளங்கின. பாதிரிமார் தகுந்த, மிக உயர்ந்த தராதரம் பெற்ற, சுயநலமற்ற ஆசிரியர்களைத் தம்பாடசாலைகளில் நியமிக்க அவர்களிடம் இருந்து இலங்கையர் ஆங்கிலம், இலக்கியம் முதலாம் பாடங்களைப் படித்துத்திறமை பெற முடிந்தது. ஆங்கிலமும் மேல்நாட்டு இலக்கியங்களுமே பிரதான பாடங்களாக இருந்தபடியால், கிறிஸ்தவரல்லாதவர்களால் நடாத்தப்பட்ட பாடசாலைகள் மிஷன் பாடசாலைகளுடன் போட்டியிட முடியவில்லை. இதன்பயனாக கீழைத்தேயப் பாஷைகளையும் கலாசாரங்களையும் படிப்பிப்பதைப் பாடசாலைகள் படிப்படியாகக் கைவிட்டன. ஆங்கிலக் கல்விபெற்ற வாலிபர் தம் முன்

னோரது சமயம், பழக்க வழக்கங்கள் என்பவற்றிற் பயிற்சி பெருது அவற்றுக்கு அந்நியராக வளர அவர்களுக்கு ஊட்டப்பட்ட கல்விமுறை ஊக்கமளித்தது.

பிரிட்டிஷ் பரிபாலனத்து அதி ஆரம்ப காலமாகிய 1812-ம் ஆண்டளவில் பப்ரிஸ்ற் மிஷனரிமார் இலங்கைக்கு வந்து தம் சுவிசேஷத் தொண்டில் ஈடுபட்டனர். இரண்டு வருஷங்களுக்குப்பின்—அதாவது 1814-ம் ஆண்டில்—அசங்கிளிக்கன், வெஸ்லியன் மிஷனரிமார் வந்தனர். 1816-ம் ஆண்டில் அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்துக்கு வந்து, இலங்கையில் மிகச்சிறந்த பாடசாலைகளை வெகு சீக்கிரத்தில் அங்கே ஸ்தாபிக்கலாயினர். மிஷன் பள்ளிக்கூடங்களில் ஊட்டப்பட்ட கல்வியின் தராதரம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அங்கே கடமையாற்றிய ஆசிரியர்களும் சிறந்தவராய்த் தக்க கல்வியறிவுடையவராய் இருந்தனர். இப்பாடசாலைகளில் இருந்த சில பிரதமாசிரியர்கள் மிகச் சிறந்த ஒழுக்கமும் மிகுந்த திறமையும் உடையவராக மிளிர்ந்தனர். அவர்களுடைய பெயர்கள் இன்றும் இலங்கையரது ஞாபகத்தில் இருக்கின்றன.

இலங்கையின் கல்விமுறையினைப்பற்றி **வால்ற்ர் ஸென்டல்**[1] என்பவரைத் தலைவராகக் கொண்ட கொமிஷன் ஒன்று 1867-ம் ஆண்டில் ஓர் அறிக்கை விடுத்தது. மாணவர் மாணவிகள் அக்காலத்தில் எத்தகைய ஆழமற்ற கல்வியைப் பெற்றுர்கள் என்பதை அக்கொமிஷன் தனது அறிக்கையிலே ஒளிப்பு மறைப்பின்றி எடுத்துக்காட்டியது. இந்தக் கல்விமுறையினுல் "ஆழமற்ற அரைப்படிப்பையே இவர்கள் பெறுகின்றனர். இவர்கள் தம் கல்வியி

1. Walter Sendai



ஞல் அறிவது யாதுமில்லை. ஆனுல் தாங்கள் எந்த நிலைமையில் எந்தச் சூழல்களிற் பிறந்தனரோ அந்த நிலைமையை, அந்தச் சூழல்களை வெறுக்கவும் எள்ளிநகையாடவும் இவர்கள் கற்ற கல்வி தூண்டுகிறது. இவர்கள் சோம்பேறிகளாய், மனச்சந்துஷ்டியற்றவராய் நீதிஸ்தலங்களிலும் அரசாங்கக் காரியாலயங்களிலும் (வேலை தேடி) துடைக்கினும் போகாதவராய் உழல்கிருர்கள்" இன்னும் ஏட்டுச் சுரைக்காய்க் கல்வியே அவர்களுக்கு ஊட்டப்படுகிறதென்பதை ஸென்டல் ஆணித்தரமாக எடுத்துக்காட்டினுர். புத்தகங்களைப் படிப்பதிலும் பரீட்சைகளுக்குத் தயார் செய்வதிலும்தான் அக்காலக் கல்வி தங்கியிருந்ததென்றும் இலங்கை மாணவ மாணவிகளின் உண்மைத் தேவைகளுடன் அது தொடர்புகொண்டிருக்கவில்லை என்றும், ஆகவே மாணவ மாணவிகளின் மனிதத் தன்மையை, மனித சக்தியை வளர்க்கும் சந்தர்ப்பத்தை அளிக்கவில்லை என்றும் அவர் தம் அறிக்கையில் வெளியிட்டார் இன்னும், வித்தியாசாலைகளில் ஊட்டப்பட்ட கல்விமுறை விவசாயம் வர்த்தகம் ஆதியாம் தொழில்களுக்கு மாணவ மாணவிகளைப் பயிற்றுவதில்லை; எனவே பள்ளிக்கூடத்துக்குச் சென்று கல்வி பெற்ற இலங்கையர் ஒன்றில் "கிளெறிக்கல்" உத்தியோகம் எனப்படும் எழுத்தாளர் சேவையில் ஈடுபடவேண்டும் அல்லது சோம்பேறிகளாக வேலையற்றுத் திரியவேண்டும்; இப்படியான ஓர் அந்தர நிலைமையை இக்கல்விமுறை இலங்கை மாணவர்க்கு உண்டாக்கிவிட்டது என்பதை ஸென்டல் நன்கு விபரித்துக் காட்டினுர். இங்கிலாந்திலே உருவாகி அங்கேயுள்ள மக்களுக்கு ஏற்றவிதமாக அபிவிருத்தியான ஓர் கல்விமுறையை இலங்கைப் பிள்ளைகள் மேலயிற் சுமத்தியமை எவ்வளவு புத்தியீனம் என்பதை

ஸெண்டலின் அறிக்கை துலாம்பரமாக எடுத்துக் காட்டியது. இப்படியான நூதன கல்விமுறையைத் தவிர்ப்பதற்கு ஸெண்டல் கொமிஷன் பின்வரும் சிபாரிசுகளைச் செய்தது:

1 பாடசாலைக் கொமிஷன் என்ற தாபனத்தை ஒழித்து அதற்குப் பதிலாக வித்தியா பகுதி என்ற ஓர் பகுதியை அரசாங்கப் பொறுப்பில் அமைக்கவேண்டும். இப்பகுதிக்கு வித்தியாதிபதி என்ற அதிகாரி தலைவராக இருத்தல் வேண்டும்.

2. ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளின் தாய்ப் பாஷை மூலமே கல்வி யூட்டப்படுதல் வேண்டும்.

3 உயர்தரப் படிப்புக்கென ஓர் கலாசாலை ஆரம்பிக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகத்திலே தகுதிவாய்ந்த மாணவ மாணவிகள் சென்று உயர்தரப் படிப்பைப்பெறுவதற்கு அவர்கட்கு வித்தியா விருத்திப்பணம் கொடுக்கும் முறை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

4. சுதேச பாஷா பாடசாலைகளின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். ஆசிரியரை அத்தொழிலில் பயிற்றுவதற்காக ஓர் ஆசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பொதுக் கல்விப் பகுதி[1] என்ற ஓர் பகுதி 1869-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அப்பகுதிக்கு ஓர் அதிபதி நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இருந்து வித்தியாசாலைகள் மிகத் தீவிரமாக அபிவிருத்தியாகின என்பதைப் பின்வரும் அட்டவணையில் இருந்து அறியலாகும்:

1 Dept of Public Instruction



| | |
|---|---|
| 1869—1872 | அரசாங்கப் பாடசாலைகள் 64-இல் இருந்து 200 ஆகின. |
| | உதவிபெறும் பாடசாலைகள் 21-இல் இருந்து 412 ஆகின. |
| 1872—1882 | அரசாங்கப் பாடசாலைகள் 200 இல் இருந்து 421 ஆகின. |
| | உதவிபெறும் பாடசாலைகள் 402 இல் இருந்து 832 ஆகின. |

கோப்பித் தொழில் செழிப்பான நிலைமையில் இருந்தபடியால் அதனால் கிடைத்த அதிக வருமானத்தைக் கொண்டு இவ்வாறு பாடசாலைகள் அபிவிருத்தி யடைந்தன. ஆனால் 1885-ம் ஆண்டில் கோப்பித் தொழில் வீழ்ச்சியடைந்து அரசாங்கத்துக்குப் பணவருவாய் குறைய பல அரசாங்கப் பாடசாலைகள் மூடப்பட்டன. ஆனால் அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளுக்கு அந்த அந்த மிஷன்களில் இருந்து பண உதவி போதுமான அளவுக்குக் கிடைத்தபடியால் அவை நடைபெற்று வந்தன.

1880 ம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்து ஸீனியர்ப் பரீட்சை முதன்முதலாக நடத்தப்பட்டது இப் பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து சிலர்க்கு வித்தியா வெகுமதி யளிக்கப்பட்டது. இப்படியான பல்கலைக் கழக வித்தியா வெகுமதியை முதன்முதலாகப் பெற்றவர் ஏ. ஈ. பூல்ற்ஜின்ஸ்[1] என்பவர். சுதேச பாஷா ஆசிரியரைப் பயிற்றுவதற்காக ஓர் ஆசிரியர் பயிற்சிக் கழகம் 1889-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1893-ம் ஆண்டில் ஓர் தொழில் நுட்பக் கல்லூரி[2]யும் ஆரம்பிக்கப்பட்டது. 1903-ம் ஆண்

1 A. E. Buitgens. 2. Technical College.

டிலே ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அரசாங்க பொறுப்பில் கொழும்பிலே நிறுவப்பட்டது.

1862-ம் ஆண்டு தொடக்கம் 1903-ம் ஆண்டுவரை கல்வி விஷயமாக எவ்வளவோ சீர்திருத்த முறைகள் ஏற்பட்டன. இவை ஒரு சில நன்மைகளை ஏற்படுத்திய போதிலும் இலங்கையின் கல்விப் பிரச்சினைக்கான மூலாதாரத்தைப் பாதிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

கேம்பிரிட்ஜ் ஸீனியர்ப் பரீட்சையை இங்குஏற்படுத்தியதால் மாணவரின் ஆங்கிலம், மேலைத்தேய இலக்கியங்கள், இக்காலப் பாடங்கள் ஆகியவற்றின் தராதரம் உயர்ந்தது என்பது உண்மைதான். ஆனால் பரீட்சைகளுக்கென வகுக்கப்பட்ட பாடத்திட்டமெனிலோ இலங்கை நிலைமைகளுக்கு ஒவ்வாதது. இதன் பயனாகப் பாடசாலைகளில் குறித்த குறித்த கிரமப்படி கல்வியைப் பெற்றுப் பரீட்சைகளிற் சித்தி எய்திய இந்நாட்டு வாலிபரும் மங்கையரும் தாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டின் பாஷை, கலாசாரம் என்பவற்றை அறியாதவர்களாய், தம் நாட்டுக்கு என்ன என்ன தேவை என்பதை உணராதவர்களாய் இருந்தனர். இலங்கையராகிய இவர்கள் கிரேக்க நாட்டைப் பற்றியும், ரோம சாம்ராஜ்யத்தைப்பற்றியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பற்றியும் மிகவாக அறிந்து, அவற்றின் பாஷைகளையும் நன்கு படித்தார்களே யன்றி, தம் தாய்நாட்டின் சரித்திரத்தைப்பற்றியோ அமைப்பைப்பற்றியோ கொஞ்சமேனும் அறியாதவராய் கேவலம் "புத்தகப் பூச்சி"களாக இருந்தனர்.

1911-ம் ஆண்டில் இன்னோர் கல்விக் கொமிஷன் இலங்கையின் கல்விப் பிரச்சினையைப்பற்றி விசாரணை புரிந்து அறிக்கை வெளியிட்டது. இக்கொமிஷனின் தலை



வர் பிரிட்ஜெஸ்[1] என்பவர். பின்னால் காட்டப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றி அறிக்கை செய்யும்படி இக்கொமிஷன் நியமிக்கப்பட்டது:

(அ) உயர்தரக் கல்வி—நடைமுறையில் இருந்துவரும் ஆங்கிலக் கல்விமுறையும் கேம்பிரிட்ஜ் பரீட்சைகளும் உள்ளூர் நிலைமைகளுக்குத் தகுதியானவையா?

(ஆ) அநுட்டானத்தில் இருந்த கல்வி முறையில்

(I) சுதேச பாஷைகள்

(II) கீழைத்தேய மேலைத்தேயப் புராதனப் பாஷைகள்

(III) பௌதீக விஞ்ஞான சாஸ்திரங்கள்

(IV) வர்த்தகக் கல்வி; தேகப்பயிற்சி

(V) பெண்களுக்கான வீட்டுப்பணி

என்பன கற்பிக்க இடம் அளிக்கப்பட்டிருக்கிறதா?

(இ) மேல்தரக் கல்வி-லண்டன் பல்கலைக் கழகத்து வெளிப்பரீட்சை[2]களுக்கு மாணவ மாணவிகளைக் கல்லூரிகள் மூலம் தயார் செய்தல் விரும்பத்தக்கதா? அல்லது உயர்தரக் கல்வி புகட்டுவதற்கென ஓர் பல்கலைக் கல்லூரியை ஸ்தாபித்தல் ஏற்புடைத்தா?

குறித்த கல்விக்கொமிஷன் தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளைப் பூரணமாக ஆராய்ந்துவிட்டு பின்வரும் சிபாரிசுகளைச் செய்தது:—

1. நான்காம் வகுப்புவரை மாணவர்க்குத் தாய்ப் பாஷை கட்டாயமாகப் படிப்பிக்கப்படல் வேண்டும்.

2. ஆங்கிலப் பாடசாலைகளை

(அ) தனியான ஆரம்ப பாடசாலைகள்

---

1 Bridges  2 External Examinations

(ஆ) உயர்தர வகுப்புக்களைக் கொண்ட ஆரம்ப பாடசாலைகள்

இ) விஞ்ஞானப் பகுதி ஒன்றும் பெண்களுக்கான மனையியற் சாஸ்திரப் பகுதி ஒன்றும் தன்னகத்தேகொண்டு பரிபூரண முறையில் அமைக்கப்பட்டுள்ள உயர்தர பாடசாலைகள்

என வகுக்கப்படல் வேண்டும்.

3. நாட்டின் தேவைகளுக்குத் தக்க ஓர் பாடத்திட்டத்தை ஆதாரமாகக் கொண்ட உள்ளூர்ப் பரீட்சை ஒன்றை ஏற்படுத்தவேண்டும். (இச்சிபாரிசின் பயனாகவே ஈ. எஸ். எல். ஸீ.[1] என வழங்கப்பட்ட பழைய ஆரம்பப் பாடசாலை விடுகைத் தராதரப் பரீட்சை உண்டானது)

4. லண்டன் பல்கலைக் கழகப்பட்டப் பரீட்சைகளுக்கு இலங்கை மாணவ மாணவிகளைத் தயார்ப்படுத்துதற்கு இலங்கைப் பல்கலைக் கல்லூரி ஒன்றை அமைத்தல் வேண்டும்.

இச்சிபாரிசுகள் தானும் இலங்கையின் கல்விப் பிரச்சினையைச் சரிவரத் தீர்ப்பதற்கான மார்க்கமாக அமையவில்லை. ஆனால் சில வழிகளில் உண்மையான நல்மாற்றங்களை அவை ஏற்படுத்த உதவின. உதாரணமாக ஆரம்ப வகுப்புக்களுக்காவது தாய்ப்பாஷை கட்டாயப் பாடமாக இருக்கவேண்டுமெனக் கொமிஷன் விதித்தது. இதனால் அதிக பயன் ஏற்படமாட்டாது என்பது உண்மை. தாய்ப்பாஷையில் மிக அற்பமான அறிவைப் பிள்ளைகளுக்கு இந்த முறை கொடுக்குமல்லாமல் அவர்க

1 E. S. L. C: Elementary School Leaving Certificate



ளுக்குத் தம் பாஷையில் போதிய பயிற்சியையோ அறிவையோ வழங்கமாட்டாது. உள்ளூர்ப் பரீட்சை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கொமிஷன் செய்த ஆலோசனை நல்லதென்றே கூறவேண்டும். இலங்கை நிலைமைகளுக்கேற்ற ஓர் பாடத்திட்டத்தைவகுப்பதற்கு உள்ளூர்ப் பரீட்சை உதவியளித்தது. இதன் பயனாகச் சிங்களம், தமிழ், பாளி, இலங்கைச் சரித்திரம், இலங்கைப் பூமிசாத்திரம் என்பன பரீட்சைப் பாடங்களாயாவது முதன் முதலாகப் படிக்க ஊக்கம் அளிக்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வியும் போதிக்கப்பட வேண்டுமென்று கல்விக் கொமிஷன் சிபாரிசு செய்தமை இதுவரை கேவலம் புத்தகப் படிப்புடன் மாத்திரம் நின்ற சாதாரண பள்ளிக்கூடங்களின் கல்வி முறையை ஓரளவுக்கேனும் திருத்துவதாக இருந்தது. பௌதீக விஞ்ஞான சாஸ்திரத்தைக் கற்பிக்க வேண்டும் என்று கொமிஷன் சிபாரிசு செய்தமை மாணவ மாணவிகளுக்குக் கல்வி விஷயமாகப் பெரும் அநுகூலம் அளிக்கலாயிற்று. நாம் காண்பனவற்றை நன்கு அவதானித்தல், பாகுபாடுகளை அறிதல், பரிசோதித்துப் பார்த்தல் ஆதியாம் நவீன விஞ்ஞான முறையில் மாணவர்க்குப் பரிச்சயம் அளிக்க இது உதவும். இவை எல்லாம் கல்வித்துறையில் ஏற்பட்ட நல்ல முன்னேற்றங்களாம். இன்னும், ஆசிரியர்க்கு ஓர் சம்பளத் திட்டமும் பென்ஷன் திட்டமும் அமைக்கப்பட்டமை, இலங்கைப் பல்கலைக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டமை, வித்தியா பகுதி தயாரித்த கிராமத் திட்டத்தின் பயனாகக் கல்வி முறைக்குக் கிராமியத் தொடர்பு ஏற்படுத்த பரீட்சை செய்யப்பட்டமை என்பன இக்காலத்துப் பிரதான சம்பவங்களாம்.

1929-ம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் படித்த வாலிபர் அநேகர்தொழிலற்றுக் கவிச்

தனர். நாட்டில் ஊட்டப்பட்ட கல்விமுறையே இக்கேவல நிலைமைக்குக் காரணம் என்பது புலனாயிற்று. ஆகவே இக்கல்வி முறையைப் பயன்தரத்தக்க முறையில் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்ற பிரச்சினை மீண்டும் எழலாயிற்று. நாட்டில் இருந்த பாடசாலைகள் ஆண்டுதோறும் பரீட்சைகளில் தேறிய பலமாணவரை வெளியே தள்ளின. இவர்களிற் சிலர் நியாயவாதிகளாகவோ வைத்தியர்களாகவோ பயிற்சிபெற்று அத்தொழில்களில் ஈடுபட்டனர். இன்னும் சிலர் அரசாங்கக் கந்தோர்களிலும் வர்த்தகக் கம்பனிக் கந்தோர்களிலும் எழுத்தாளர்களாகவோ வேறும் உத்தியோகத்தராகவோ அமர்ந்தனர்; பலர் எவ்விதத் தொழிலும் பார்க்க வகைதெரியாது இடர்ப்பட்டனர். ஆனால் கல்விபெற்ற இவர்களில் எவராவது தேசத்தின் செல்வத்துக் கேதுவான தொழில்களை நாடவில்லை. அப்போதிருந்த கல்விமுறையானது, தான் உண்டாக்காத செல்வத்தை எல்லார்க்கும் பகிர்ந்து கொடுக்கவே உதவி செய்தது. அச்செல்வம் அற்றுவிட எல்லாரும் அவதிப்பட்டனர். கல்வியானது செல்வத்தை உண்டாக்க வழி தேடிக்கொடுக்க வேண்டும். இல்லையேல் அக்கல்வி முறையினால் ஆம் பயன் இல்லை.

இலங்கைக்கேற்ற ஓர் கல்விக்கொள்கையை வகுக்கக் கூடிய நிலைமையில் இருந்த அரசாங்க சபை, இந்நாட்டுக்கு இன்றியமையாவை எனக்கண்ட சீர்திருத்தங்களைப்பற்றி ஓர் அறிக்கை விடுமாறு 1940-ம் ஆண்டில் ஒரு கொமிஷனை நியமித்தது. இக்கொமிஷன் கல்வித் துறையில் தக்க அநுபவம் படைத்த சிலரைக்கொண்ட ஓர் பொறுக்கு நிருவாக சபையேயாகும். இச்சபையின் அறிக்கை 1943-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது

1 Select Committee



இந்நாட்டின் சிறார்க்கு எவ்வித முறையிற் கல்வியூட்ட வேண்டும் என்ற பிரச்சினையை இலங்கையரே தீர்க்க முதன் முதலாகச் செய்த பிரயத்தனம் இதுவே எனலாம்.

எல்லாப் பிள்ளைகளுக்கும் ஓரேவிதமான கல்வி ஏற்புடைத்தாகாது என்பதைப் பொறுக்கு சபை ஒத்துக்கொண்டது. மாணவ மாணவிகளை முத்திறத்தினராகப் பிரித்து ஒவ்வோர் திறத்தினர்க்கும் ஒவ்வோர் விதக் கல்வி ஊட்டவேண்டும் என்பது இந்த சபையினரது முடிபு. கைப்பணியில் நாட்டமுடைய பிள்ளைகளை, அவர்களுடைய ஆரம்பக் கல்விக்குப்பின், இதற்கெனவுள்ள சாதனா பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டும். அங்கே இப்பிள்ளைகளின் தகைமைக்கேற்ற கல்வி அளிக்கப்படல் வேண்டும். கல்விச்சாலைகளில் உள்ள பிள்ளைகளில் 100-க்கு 80 விகிதமானோர் இத்தகைய கல்விக்கே ஏற்றவராவர் என்பது பொறுக்கு சபையின் சித்தாந்தம். புத்தகப் படிப்பில் ஆர்வம் காட்டும் பிள்ளைகளைச் சிரேஷ்ட பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டும். அங்கே அவர்கள் தம் படிப்பை முடித்தபின் அரசாங்க எழுத்தாளராகவோ வர்த்தகக் கம்பெனிகளில் எழுத்தாளராகவோ உத்தியோகம் பெறலாம். இப்படியானவர்கள் 100-க்கு 15 விகிதம் மாத்திரமே யாவர். மீதி 5 விகிதத்தினரும்—இவர்கள் புத்தகப் படிப்பில் அதி விவேகசாலிகளானவர்கள்—உயர்தரக் கல்விபெற்று பல்கலைக் கழகத்துக்குப் போகவேண்டும். சாதனா பாடசாலைகளிலும், சிரேஷ்ட பாடசாலைகளிலும் உள்ள பிள்ளைகளில் அதி விவேகசாலிகளாகக் காணப்படுபவர்களும் பல்கலைக் கழகத்துக்குப் போக இடம் அளிக்கப்பட்டது.

அரிச்சுவடி வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகப் படிப்புவரையுள்ள கல்வி இலவசமாக மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் பொறுக்கு சபை சிபாரிசு செய்தது. இலவசக் கல்வியை இம்முறைப்படி வழங்க நாட்டின் பண நிலைமை இடம் கொடுக்குமா என்பது ஒரு சாராரின் ஆசங்கை.

ஆரம்ப வகுப்புக்களில் தாய்ப்பாஷை மூலமே கல்வியூட்டப்படல் வேண்டும்; ஆங்கிலம் கட்டாய துணைப் பாடமாக இருக்கவேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டது. கல்வி விருத்தி விஷயமாகச் சொல்லுகில் இது ஓர் சிறந்த சீர்திருத்தம் என்றும் இதனால் பல நன்மைகள் விளையும் என்றும் கூறலாம். இதுவரை தமக்கு அந்நியமான ஓர் பாஷை மூலமே இந்நாட்டுக் குழந்தைகள் கல்வியூட்டப்பட்டு வந்தனர். இதன்பயனாக அவர்கள் கிளிப்பிள்ளைகள்போல சொல்லிக்கொடுத்ததைத் திருப்பித் திருப்பிச் சொன்னார்களே ஒழிய தம் சிந்தனாசக்தி வளரப் படிக்கவில்லை. பிள்ளைகள் தம் பலமற்றனர், தம் வயமிழந்தனர் என்றும் கூறலாம். தாய்ப்பாஷைமூலம் கல்வி பெறுவதனால் பிள்ளைகளுக்குக் கூடிய வாக்குச்சாதுர்யம் பிறக்கும். அவர்கள் மனத்தில் உள்ளதைத் தம் சொந்தப் பாஷையில் சிறப்பாகக் கூறமுடியும். இதுமாத்திரமல்ல: அவர்களது சிந்தனா சக்தி வளரும்: தாமே ஓர் கருமத்தை ஆரம்பிக்கும் வன்மை பிறக்க வழி உண்டாகும்.

மேலும், ஒரு பிள்ளையின் கல்வியறிவு விருத்தியடைந்தால் மாத்திரம் போதாது: அவனுடைய தேகமும் உறுதிப்பட வேண்டும்: அவனுடைய கட்பார்வை, கேட்கும் திறமை, கைவன்மை ஆதியனவும் விருத்தியாக வேண்டும் என்பதை அரசாங்கம் உணர்ந்து தேக



பயிற்சி விஷயத்தில் முன்னரிலும் பார்க்கக்கூடிய சிரத்தை கொள்ளத் தீர்மானித்தது. இதுவரை மாணவர்க்குக் கல்வியறிவு ஊட்டுவதிலேயே அதிக முயற்சி செய்யப்பட்டது. இப்போது ஓர் பிள்ளை என்பது வளரும்பிராணி, அதற்கு ஒரு வழியில் மாத்திரமன்றிச் சகலவிதங்களிலும் அபிவிருத்தி ஏற்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்துள்ள அரசாங்கம் கைப்பணி, சங்கீதம், வாய்ப்பாட்டு நாட்டியம், சித்திரம் என்பவற்றைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவதில் முன்னிலும் பார்க்கக் கூடிய சிரத்தை கொண்டிருக்கிறது.

ஆரம்ப வகுப்புக்களுக்குப்பின் உள்ள வகுப்புக்களில், இதுவரை புத்தகப்படிப்பு மாத்திரமே மாணவ மாணவிகளுக்கு ஊட்டப்பட்டு வந்தது. இந்தக்குறைபாடுள்ள முறையைக் கல்விப் பகுதியார் இப்போது கைவிட்டு சிறுவர்க்குப் பொது விஞ்ஞானமும், சிறுமியர்க்கு மனையியற் சாஸ்திரமும் பயிற்ற ஏற்பாடு செய்திருக்கிறது. அத்துடன் குடியியற் கல்வியும் அவர்களுக்கு ஊட்டப்பட்டு வருகிறது.

உயர்தரக் கல்வி விஷயமாகச் சொல்லுகில், இலங்கைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டமை, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, விவசாயக் கலாசாலை என்பன விஸ்தரிக்கப்பட்டமை சமீப கால முக்கியச் சம்பவங்களாம். கல்வி விஷயமாகப் பொறுக்கு சபை செய்த சிபாரிசுகளிற் சில கைக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆனால் இன்னும் கைக்கொள்ளப்படவேண்டியன பல. இவ்விஷயமாக நாம் ஒன்றை அவதானித்துக் கொள்ளல் வேண்டும். இதுவரை இந்நாட்டுக்கு வேண்டிய கல்விமுறை இதுதான் என்று வெளியார் கொண்டு வந்து புகுத்தினார்கள். அப்படியான கல்விமுறை இந்நாட்

டுக்கு ஏற்றதாகாது. இலங்கைக்கு உகந்த கல்வி முறையை இலங்கை மக்களே வகுக்கவேண்டும். அப்படியான கல்விமுறை இருந்தால்தான் இன்று குழந்தைகளாக இருக்கும் நம் கான்முளைகள் நாளை மனுஷராக வளர்ந்து சுதந்திர நாட்டின் நற்பிரஜைகளாகித் தமக்குரிய கடமைகளை ஆற்றமுடியும் என்பதை இப்போது இந்நாட்டினர் உணர்ந்துவிட்டார்கள். இனிவரும் காலத்திலே இந்நாட்டுக்கு கந்தோர்களில் வேலைசெய்யும் எழுத்தாளரல்ல, வயல்களிலும் தொழிற் சாலைகளிலும் பணியாற்றும் தொழின்முறை தெரிந்த விவசாயிகளும், சிறந்த தொழில்வினைஞரும், தேர்ச்சிபெற்ற சிற்பிகளுமே வேண்டியவராவர் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இவர்கள் எல்லாரிலும் மேலாக, இந்நாட்டின் சிறந்த இலட்சியப் பாதையானது என்றும் வெளிச்சத்துடன் நிலவுதற்குதவிசெய்ய ஜனநாயக சம்பிரதாயங்களில் நல்ல பயிற்சி பெற்றுள்ள பிரஜைகள் அத்தியாவசியம் என்க.

## சுகாதாரம். சுகம் பேணல்.

குடிகளாயுள்ளாரின் தேகாரோக்கியத்தைப் பாதுகாப்பது மன்னன் கடமை என்று சிங்கள அரசர்களது காலத்திற் சொல்லப்பட்டு வந்தது. சிங்கள மன்னர்கள் ஆஸ்பத்திரிகளையும், வைத்திய சாலைகளையும் வைத்திய சேவாதளங்களையும் ஸ்தாபித்துநடத்தினர் என்று அறிந்திருக்கிறோம்: கடைசியாகக் கூறப்பட்ட தளங்கள் பல கிராமங்களின் கூட்டமைப்பேயாகும்.

ஆனால் இங்கே நாம் எடுத்துக்கொண்ட விஷயம் பிரிட்டிஷாரின் பரிபாலன காலத்தில் சுகாதார சம்பந்தமாகச் செய்யப்பட்ட முயற்சிகளை அறிவதே என்க. இப்போது நாம் வைத்தியப் பகுதி என்று அழைக்கும் பகு-



திக்கு நோர்த் தேசாதிபதி 1802-ம் ஆண்டில் விதையிட்டார் எனலாம். 1800-ம் ஆண்டிலே ஓர் கொடிய வைசூரி நோய் பரவி மக்களைப் பீடித்தது: அதன் பயனாகவே சிவில் வைத்தியப் பகுதி ஆரம்பமானது. இராணுவத்தில் இருந்த வைத்தியர்களே இப்பகுதியில் வைத்தியர்களாகக் கடமையாற்றினர்.

1817-ம் ஆண்டுக்கும் 1846-ம் ஆண்டுக்குமிடையில் விசேஷமாக பேதிநோய் போன்ற கொள்ளை நோய்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றிப் பரவிப் பலரை இறக்கச் செய்தன. அப்போது அரசாங்கம் இந்நோய்களின் கொடுமையைக் கண்டு, உஷ்ணப் பிரதேசங்களுக்கு உரியனவான கொள்ளை நோய்களைத் தடுக்கவும் பரிகரிக்கவும் மார்க்கங்கள் தேடவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது. பட்டினங்கள் பெருகி அங்கே மக்கள் நெருங்கி வாழ்ந்தமையினால் ஓர் நோய் தோற்றியவுடன் வெகு சீக்கிரத்தில் பரவிவிடும். எனவே தான் இனியும் வாளாவிருக்க முடியாதென்பதை அரசாங்கம் கண்டது.

மேனாட்டு வைத்திய முறையில் வாலிபர்களைப் பயிற்றுவதற்கென 1890-ம் ஆண்டிலே வைத்திய கல்லூரி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. கண், காது, தொண்டை நோய்களைப் பரிகரிப்பதற்கு ஓர் ஆஸ்பத்திரி 1893-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1899-ம் ஆண்டில் டி சொய்ஸா கிருமி ஆராய்ச்சி நிலையம்[1] என்ற ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அது இத்துறையில் இன்றும் அரும்பணியாற்றி வருகிறது. விக்ரோறியா ஞாபகார்த்த கண் ஆஸ்பத்திரி 1906-ம் ஆண்டு திறக்கப்பட்டது. விசர் நாய்க்கடி வைத்தியசாலை (1918). காசரோக நிவாரண நிலையம், கந்தானை, ருகம, காங்கேசன்துறை என்னும்

1 De Soysa Bacteriological Institute

இடங்களில் சுகஸ்தான நிலையங்கள் (1919), தந்துரோக நிவிர்த்தி நிலையம் (1927) என்னும் வைத்திய நிலையங்களும் நிறுவப்பட்டன.

இந்நாட்டு மக்களை வெகுவாகப் பீடிக்கும் இரு பிரதான நோய்களாவன:

**1. மலேரியா** எனப்படும் **காட்டுக் காய்ச்சல்.** இலங்கையின் முக்காற் பாகத்தில் இந்நோய் பரவியுள்ளது.

**2. பாண்டு நோய்** அல்லது **கொக்கிப்புழு நோய்**

இலங்கைத் தேசீய இனத்தின் மிகக் கேவலமான தேகநிலைமைக்குக் காரணம் அவர்களின் சத்தற்ற உணவு என்க.

மலேரியாவையும் பாண்டு நோயையும் இலங்கையில் வேரோடு அழிக்கவேண்டும் என்று வைத்தியப் பகுதியானது கடந்த 25 வருட காலமாக இலங்கை முழுவதிலும் ஓர் பெரும் இயக்கத்தை நடத்தி வந்திருக்கிறது. இதன் பயனாகப் பல இடங்களிலே மலேரியா ஒழிக்கப்பட்டிருக்கிறது. கொக்கிப்புழு நோயை ஒழிக்கவேண்டும் என்ற இயக்கமும் தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது. இன்னும் சில காலத்தில் இந்நோயின் கொடுமையும் குறைந்துவிடும் என்று காத்திருக்கலாகும்: பட்டினப் பகுதிகளிலே—விசேஷமாகக் கொழும்புப் பகுதியில்—காசரோகம் பரவி மிகவும் கெடுதியை விளைத்துவருகிறது. இந்நோயைத் தடுப்பது எப்படி? பரிகரிப்பது எப்படி என்பதை நன்கு ஆராய்ந்தறிய இலங்கை வைத்தியர் சிலர் 1948-ம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு விஜயம்செய்தார்கள். காசநோயை எவ்வாறு எதிர்ப்பது என்பதில் இலங்கைக்கு ஆலோசனை சொல்லிக்கொடுக்கச் சில அந்நியநாட்டுவைத்திய நிபுணர்கள் 1949-ம் ஆண்டில் இங்கு விஜயம் செய்தனர்.



எல்லாப் பாடசாலைகளிலும் தேகப்பயிற்சி விஷயமாகப் போதிய முயற்சி செய்யப்படுகிறது. பாடசாலைகளுக்கு, இதற்கெனவுள்ள வைத்திய அதிகாரிகள் ஒழுங்காக விஜயம் செய்து பரிசோதனை செய்து வருகிறார்கள். வைத்திய சுகாதாரப் பகுதியார் 'சுகாதாரச் செய்திகள்'' என்ற ஓர் சஞ்சிகையைக் காலந்தோறும் பிரசுரிக்கிறார்கள். இன்னும் சினிமா மூலம் சுகாதார சம்பந்தமான பிரசாரங்கள் செய்து ஜனங்களைச் சுகவழிக்குத் திருப்பி வருகிறார்கள்.

டக்ரர் லூசியன் நிக்கொல்ஸ், டக்ரர் ஆநந்த நிமலசூரிய என்பவர்களின் தலைமையில் மக்களுக்குத் தேவையான போஷணையுள்ள உணவுபற்றிச் சிறந்த ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்நாட்டு மக்கள் வறியவர்கள்: ஆகவே அவர்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்க முடியாதிருக்கிறார்கள். இலங்கையின் நாட்டுப்புற மக்களில் 100-க்கு 35 விகிதமானவர்கள் வேண்டிய சத்து உணவைப் பெறுவதில்லை. 26 விகிதத்தினர் ஒரு அளவுக்குத்தான் சத்துணவுபெறுகின்றார்கள். 17 விகிதத்தினர் சத்தில்லா உணவை அருந்துகிறார்கள்; 55 விகிதமான குடியானவர் குடும்பங்கள் தம் சுகத்துக்குப் போதிய பிசித உணவை (இறைச்சி, பால், முட்டை, மீன்) அருந்துவதில்லை என்று 1941-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட அறிக்கையொன்றின் மூலமாக அறிகிறோம். இது மிகவும் கேவலமான ஓர் நிலைமை. இதனைப் போக்குதற்கு தேசீய வருமானத்தை அதிகரிக்கவேண்டும். அத்துடன் ஓர் தேசீய இனத்தின் ஆரோக்கியத்துக்கும் க்ஷேமாபிவிருத்திக்கும் இன்றியமையாத உணவுப் பொருள்களை விருத்தியாக்கவேண்டும்.

## கூட்டுறவு இயக்கம்.

ஓர் தேச மக்களின் நல்வாழ்க்கைக்கு ஆதாரம் அவர்களது தேகசுகமும் மனோபலமும் என்பது மறுக்கொணா உண்மை. சுகாதாரப் பகுதியார் மக்களிடையே நோய் அணுகா வண்ணமும், நோய் கண்டால் பரிகரிக்கும்வண்ணமும் பல கைங்கரியங்களைச் செய்துவருகிறார்கள். தேக சுகத்தின் பிரதானத்தை, அவசியத்தைப் பாடசாலைகளில் உள்ள சிறுவர் சிறுமியர் மெல்ல மெல்லவாக உணர்ந்து வருகிறார்கள். பிள்ளைகளுக்குத் தேகப்பயிற்சிவிஷயமான கல்வி யூட்டுவதில் இன்றைய பாடசாலை முகாமைக்காரர் எல்லாரும் மிகுந்த சிரத்தை கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேச மக்களின் சிந்தனா சக்தியும் தேக பலமும் அபிவிருத்தி யடைந்தால்மட்டும் போதாது. ஓர் தேச மக்கள் செழிப்புடன் வாழ இந்த இரண்டுடன் இன்னோர் சக்தி சேரவேண்டும். அதுதான் கூட்டுறவுச் சக்தி என்பது. கூட்டுறவு உணர்ச்சி எந்நாட்டு மக்களிடையே பலமாக உளதோ அந்நாட்டு மக்கள் சீரும் சிறப்புமெய்தி வாழ்வர் எனலாம். கூட்டுறவு உணர்ச்சி அபிவிருத்தியடைய வேண்டியதற்குக் காரணங்கள் பல இங்கே உள. ஜனநாயக முறைகளில் மக்களைப் பயிற்றுவதற்குக் கூட்டுறவு முறை தக்க ஓர் சாதனம் ஆகும். எந்தக் கூட்டுறவு முயற்சியிலும் அதிற் சேர்ந்துள்ளோர், கலந்து பேசல், சமரச நோக்கம் கொள்ளல், பெரும்பான்மையினர் செய்துள்ள தீர்மானத்தின்படி நடத்தல் ஆதியாம் சுகுணங்களைக் கொண்டவராயிருத்தல் வேண்டும். இப்படியான பயிற்சியைப் பெறுவோர் ஜனநாயக அரசியலையும் திறம்பட நிருவகிக்க முடியும். இரண்டாவது இலங்கை ஓர் பழைய நாடு: இங்குள்ள குடியானவர்கள் பன்னெடுங்காலமாகக் கடன் என்னும் பாரச் சுமையினால் தவித்துவருகிறார்கள். ஈவிரக்கமற்ற, கன்னெஞ்சப் பாதகராகிய தனிகர்—வட்டிக்குப் பணம் கொடுப்போரிடம் இருந்து குடியானவர்களை மீட்பதற்குக் கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்படும் ஒறுப்பளவுச் சங்கங்களும் நாணய சங்கங்களும் சிறந்த சாதனங்களாம். இன்னும், விவசாயிகள் இன்று தம் விளைபொருள்களுக்கு மிகவும் குறைந்த விலையினையே பெறுகிறார்கள். இதிலும்பார்க்க நல்ல விலையை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க கூட்டுறவு விற்பனைச் சங்கம் உதவும். எனவே மிகப்பிரதானமான தேசோத்தாரண கைங்கரியங்களில், கூட்டுறவு இயக்கமும் ஒன்று: அதனை அகில இலங்கையிலும் பரப்பவேண்டும் என்பது இப்போது நன்கு உணரப்பட்டிருக்கிறது.



இலங்கையிலே கூட்டுறவு இயக்கம் 1913-ம் ஆண்டில் ஆரம்பமாகி 1936-ம் ஆண்டுவரை விவசாயப் பகுதியின் ஓர் அங்கமாக இருந்தது. நாட்டுப்புறங்களில் வசித்த மக்கள் கடன் சுமையினால் தவித்தனர். அவர்கள் அச்சுமையிலிருந்து விடுதலை பெறுதற்கு அரசாங்கத்தின் உதவியும் புத்திமதியும் ஆவசியகமாக இருந்தன. இதன் பொருட்டுப்போலும் இவ்வியக்கம் விவசாயப் பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது. 1930-ம் ஆண்டில் தனியாக ஓர் கூட்டுறவுப் பகுதி அமைக்கப்படலாயிற்று. டொனமூர் அரசியலமைப்பு இலங்கையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட காலத்தில் 600 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் கூட்டுறவு நாணய சங்கங்களே பெரும்பான்மையின. இக்கூட்டுறவுச் சங்கங்களில் 2000 அங்கத்தவர்கள் இருந்தனர். தொழில் முதற் பணமாக 20 லட்சம் ரூபா இருந்தது. பொருளாதார விஷயமாக

இலங்கை ஓரளவுக்காவது சுதந்திரம் அடைய வேண்டுமானால் கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தியாக்கப்படல் வேண்டும் என்பதை, இலங்கையில் இருந்த முந்திய அரசாங்கங்கள் நினைக்காத அளவுக்குஅரசாங்கசபை நினைத்தது. இதன்பயனாக இவ்வியக்கத்தை நன்கு விஸ்தரிக்க அக்கால விவசாய மந்திரியின் தலைமையில் பெரும்முயற்சி ஆரம்பமானது. இதன் காரணமாக 4 வருட காலத்தில் (1931) சங்கங்களின் தொகை 1000 ஆகவும், அங்கத்தவர்கள் தொகை 39,000 ஆகவும் தொழில் நடப்பு முதல் தொகை 30 லட்சம் ரூபா ஆகவும் உயர்ந்தது. இதன்பின் இந்த அபிவிருத்தி தளராது இன்னும் முன்னேறியது. 1940-ம் ஆண்டில் 70 லட்சம் ரூபா தொழில் முதலைக் கொண்டு 70,000 அங்கத்தவர்களுடன் 1660 சங்கங்கள் இருந்தன.

இரண்டாவது உலக மகாயுத்தமும் அதன் விளைவாக ஏற்பட்ட உணவுப் பங்கீட்டு முறையும் கூட்டுறவு இயக்கம் இன்னும்அபிவிருத்தி எய்தத் துணைசெய்தன. கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களை எல்லா மக்களுக்கும் பங்கீடு செய்தற்குக்கூட்டுறவு முறையே சிறந்த சாதனம் எனக்கண்ட அரசாங்கம் ஜனங்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன் இலங்கை முழுவதிலும் கூட்டுறவுக் கடைகளை ஆரம்பித்தது. 37½ லட்சம் ஜனங்களுக்குச் சேவை புரிந்த 4000 கூட்டுறவுக் கடைகள் 1945-ம் ஆண்டில் இருந்தன. இவற்றுடன் கூட்டுறவுக் கடைகளின் யூனியன்கள் 93 இருந்தன. இவையே கூட்டுறவுக் கடைகளுக்குப்பொருள்களை விநியோகிக்கும்மொத்தவியாபார ஸ்தலங்களாம். இனி இவைக்குப் பொருள்கள் வழங்க அரசாங்கப் பொறுப்பில் கூட்டுறவு மொத்த வியாபார



ஸ்தாபனம்[1] என்ற ஓர் ஸ்தாபனம் இருந்தது. இந்தஸ்தாபனம் யூனியன்களுக்கும் தனிப்பட்ட கூட்டுறவுக் கடைகளுக்கும் மொத்தமாகப் பொருள்களை விற்பனை செய்தது. இக்கூட்டுறவு ஸ்தாபனங்கள் எல்லாமாகச் சேர்ந்து 32 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்திருக்கின்றன. இலங்கையில் உபயோகிக்கப்பட்ட உணவுப் பொருள்களில் ஏறக்குறைய முழுவதையும் இந்த ஸ்தாபனங்களே கையாண்டன எனலாம்.

கூட்டுறவு இயக்கத்தினால் இலங்கைக்குப் பல அநுகூலங்கள் நேர்ந்திருக்கின்றன. இவ்வநுகூலங்களைக் கூட்டுறவு இயக்கத்தின்மூலம் தொடர்ந்து பெறவேண்டும் என்பதை அரசாங்கம் எப்போதாவது மறந்துவிடவில்லை. கூட்டுறவு முறையை மேன்மேலும் இலங்கையில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்றநோக்கத்துடனேயே அரசாங்கம் கருமம் ஆற்றிவருகிறது. உணவு விஷயத்துக்கும் கூட்டுறவு அபிவிருத்திக்குமென ஓர் மந்திரி இப்போது (1950) இருக்கிறார். கூட்டுறவுத் தொண்டர்களுக்குத் தக்க பயிற்சியளிக்க ஓர் பயிற்சிக்கல்லூரி இப்போது சில காலமாக இருந்து வருகிறது. பரஸ்பரம் ஒற்றுமையினாலும், தற்பாதுகாப்பினாலுமேதான் செழிப்புடன் வாழலாம் என்ற உண்மையை மக்களுக்குத் தெருட்ட எல்லாவித முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இந்திய விவசாயத்தைப்பற்றி அறிக்கைவிட நியமிக்கப்பட்ட கொமிஷன் ஒன்று தனது அறிக்கையில் கூட்டுறவு விஷய

---

1 இந்த ஸ்தாபனம் 1950-ம் ஆண்டில் அரசாங்க நிருவாகத்திலிருந்தும் நீக்கப்பட்டு ஓர் அதிகார சபையின் பரிபாலனத்தில் விடப்பட்டிருக்கிறது.

மாகக் கூறியதை ஈண்டு அநுவதித்துக்காட்டல் பொருத்தமுடைத்தாகும். அது கூறுவதாவது: "நாட்டுப்புறங்களில் வாழும் பெருந்தொகையினரான மக்கள் இன்று கடன் சுமையால் தவித்துத் தத்தளிக்கிறார்கள். நல்ல முறையில், தக்கவாறு அமைக்கப்படும் கூட்டுறவு இயக்கம் வளர்ந்து பரவுவதில்தான் அவர்களுடைய மீட்சி தங்கியிருக்கிறது. கிராம மக்களுக்குக் கூட்டுறவு முறையில் அவதானமாகப் போதனை யளிக்கப்பட வேண்டும். போதனையுடன் கூட்டுறவு விஷயமாகத் தக்க பயிற்சியும் கொடுக்கப்படல் வேண்டும். கிராமவாசிகளின் கூட்டுறவுக் கல்வியறிவு, கூட்டுறவுப் பயிற்சி என்பவற்றையே கூட்டுறவு இயக்கம் தனது உறுதியான ஆதாரமாகக் கொள்ளல் வேண்டும்."

## வினாக்கள்.

1. 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் இலங்கையிற் கல்வி அபிவிருத்தியடைந்த விதத்தைச் சுருக்கமாகக் கிரமப்படி கூறுக. இலங்கையிலே காலந்தோறும் ஏற்பட்ட கல்வி முறைகளின் குறைபாடுகளைக் காட்டுக.


2. இலங்கைக்கேற்ற விதமாகக் கல்விமுறையை வகுக்க வேண்டும் என்ற கொள்கை உருவாகி வளர்ந்ததைக் கிரமப்படி எடுத்துக்காட்டுக.



3. 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் சுகாதார வைத்திய சேவைகள் அபிவிருத்தியடைந்த விதத்தைக் காட்டுக.

4. கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியுற்ற விதத்தை கிரமப் பிரகாரம் காட்டி, தேச மக்களது வாழ்க்கையிலே இவ்வியக்கம் முக்கியத்துவம் பெறவேண்டும் என்பதற்கான காரணங்களைத் தருக.

5. 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் சமுதாய க்ஷேமாபிவிருத்தியைப்பற்றி ஓர் கட்டுரை எழுதுக.




கி. பி. 1500-ல் ஐரோப்பாவின் நிலைமை.

விரைவில் வெளிவரும் !

விரைவில் வெளிவ

இலங்கைச் சரித்திரமும்

உலக சரித்திரமும்

இரண்டாம் பாகம்

# உலக சரித்திரம்

(அச்சில்)

நூலாசிரியர்: எஸ். எவ். டி சில்வா